கணையாழியின் கடைசிப் பக்கங்கள்

சுஜாதா

விசா பப்ளிகேஷன்ஸ்

கணையாழியின் கடைசிப் பக்கங்கள்

சுஜாதா

1

- அக்டோபர் 1972

சென்ற கணையாழி இதழில் இந்தப் பகுதியில் என் புனர் பிரவேசத்தை விமரிசித்து ஒரு கடிதம் வெளியாகி இருந்தது. என்னதான் ராயப்பேட்டை பாலு என்கிற பெயருக்குள் ஒளிந்து கொண்டு, அற்ப சுத்திக்காக ஒதுங்கும் இடங்களின் சுவர்களில் காணப்படும் பிரத்தியேக பாஷையை உபயோகித்து எழுதினாலும் அந்தக் கடிதத்தை எழுதியவர், எழுத வைத்தவர் யார் யார் என்பதெல்லாம் சுலபமாக எனக்குத் தெரிந்து விடுகிறது. சிரிப்புத்தான் வருகிறது.

❑

புதுக்கவிதை பற்றி சற்றுப் பேசலாம். புதுக் கவிதை தற்போது ஒரு rash போல் நம்மிடம் பரவி இருக்கிறது. ''அடிக்கடி கட்சிமாறும் அரசியல்வாதிக்கு அடுத்த தேர்தலில் குரங்கைச் சின்னமாய்க் கொடுத்தால் என்ன''

என்கிற வாக்கியத்தை ஐந்தாகப் பிரித்து கவிதையாகப் பதிப்பித்திருந்தார்கள்.

என்னய்யா விளையாடுகிறீர்களா?

❑

நான் புதுக் கவிதையை எதிர்ப்பவனில்லை. யாப்பு வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பவனில்லை. ஆனால் இந்தப் புதுக் கவிஞர்கள் எல்லோருக்கும் அமிதசாகரர் இயற்றிய யாப்பருங் கலக்காரிகையில் இரண்டு மூன்று பாடங்கள் நடத்த எனக்கு விருப்பமாக இருக்கிறது. மீறுவதற்கு முன் சில தளைகளை... சந்தத்தை.

"பொன்னைக் கொண்டு உரைகல் மீதே நிறமெழ
உரைத்தாற்போல்
உன்னைக் கொண்டு என் நாவகம்பால் மாற்றின்றி
உரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்
என்னையும் உன்னிவிட்டேன்
என் அப்பா..."

போன்ற அபாரமான வரிகளின் மரபை!

❑

சந்தம் என்பது மனித வாழ்க்கையில் அடிப்படையான ஒரு விஷயம். அது நம் இதயத் துடிப்பில் இருக்கிறது. இயற்கையின் மாறுதல்களில் நம் சங்கீதத்தில்... யாவற்றிலும் வியாபித்திருக்கிறது.

ஞானக்கூத்தன், சி. மணி இருவருக்கும் யாப்பைப் பற்றித் தெரிந்திருக்கிறது. பல நவீன விஷயங்களைச் சிலர் யாப்புடன் சொல்லக் கூடியவர்கள், சொல்லும் விஷயத்தை யாப்பு மறைக்க முற்படும்போது மீறுகிறார்கள். மீறலாம். காமராசனிடம் Form இருக்கிறது. அது அமையாதபோது சுதந்திரமாக உரைநடைக்குச் சென்று விடுகிறார்.

யாப்புடன் எழுதுவது மிகச் சுலபமான விஷயம். எதை வேண்டுமானாலும் யாப்புடன் சொல்லலாம். பார்க்கலாமா?

எல்லோரும் பாட்டெழுத நான் ஏன் விதிவிலக்கா?
எல்லோரும் என்பதுடன் (யோசி) எதுகைக்கு
எல்லோரா! எப்படி? ஈஸி, கவிஎழுத
வல்லோரில் நான்ஒருவன் என்பதைக் காட்ட
அடுத்த கவிதைக்கு வந்துவிட்டேன் மேலே
தொடுத்து அமைப்பதில் தொந்தரவு இல்லை
படுத்துக் களைத்திருக்கும் பத்மாவைப் பாச்சா
கடித்த✱ கதைபற்றிச் சொல்ல நினைத்தவன்
பாயை விரித்துப் படுத்தவளைப் பாச்சா
வாயைத் திறந்து ...' வரைக்கும் வந்துவிட்டேன்
மாயச் சுழலிது, மேலே முடிச்சவிழ்க்க
ராயப்பேட்டை பாலு! வா!

இஃது பன்னிரண்டடியான் வந்த பல விகற்பப் பஃறொடை வெண்பா.

2

- நவம்பர் 1972

பொதுவாகவே இந்த விமரிசகர்கள், விமரிசனம் செய்யப்படும் புத்தகத்தையோ அல்லது திரைப் படத்தையோ பற்றிக் கவலைப்படுவதில்லை. அவர்களுக்கெல்லாம் முக்கியம் தத்தம் சொந்த அறிவுகளின். விஸ்தாரத்தைக் காண்பிப்பதே. விமரிசனம் எதற்குத் தேவைப்படுகிறது? பார்ப்பவர்களின் அல்லது படிப்பவர்களின் ரசனையை உயர்த்துவதற்காக என்று கொள்ளலாமா?

பார்ப்பவர்கள் அல்லது ப்டிப்பவர்கள் யார்? இந்த

✱ கெடுத்த என்றும் பாடம்

விமரிசகர்களின் இருபது அல்லது முப்பது நண்பர்களைத் தவிர மற்றவர்கள் 'ராணி'அல்லது 'ஆனந்தவிகடன்' தொடர்கதை வாரந்தவறாமல் படித்துவிட்டு, ''விமலாவின் தியாகம் என் கண்களில் நீர் வரவழைத்துவிட்டது'' என்று ஆசிரியருக்கு கடிதம் எழுதும் ஜாதி. அல்லது கே.பாலச்சந்தர் உலகிலேயே தலைசிறந்த டைரக்டர், சிவாஜி உலகப் பெரும் நடிகர் என்று 'தலைசிறந்தவர்' (-) களைச் சேவிக்கும் ஜாதி. சங்கராச்சாரியார் அல்லது சோவின் நாடகம், அல்லது ராசியின் புதிய சில்க் புட்டா, டிசம்பர் மாதத்து சீஸன் கச்சேரி, அச்சாணி போன்ற நாடகங்கள்... இப்படி எத்தனை பெண்கள், பாட்டிகள், ஆபீஸ் அவசரக்காரர்கள், அல்லது 'நான் தமிழ் படிப்பதில்லை' என்று பெருமைப்படும் தலைகலைந்த பம்பாய்ப் பக்கம் மூக்கை நீட்டிக் கொண்டிருக்கும் மாணவர்கள் -மாணவிகள். இவர்கள்தான் மிகப் பெரும்பாலானவர்கள். இவர்களை இந்த விமரிசகர்கள் எப்படி அடையப் போகிறார்கள்?

எல்லா விமர்சனங்களும் கால விரயம், பேப்பர் விரயம் என்று படித்தது ஞாபகம் வருகிறது. சாதாரணமாக ஜனங்கள் விமர்சனத்தால் பாதிக்கப்பட்டு, ஒரு புத்தகத்தையோ அல்லது சினிமாவையோ தவிர்ப்பதோ தவிர்க்காமல் இருப்பதோ இல்லை என்று நினைக்கிறேன். அவர்கள் முன்னால் தீர்மானித்து விடுகிறார்கள். அவர்கள் சினிமா பார்ப்பதும் படிப்பதும் ஏதோ கலை உணர்ச்சியைப் பொறுத்து நிகழ்வதில்லை என்று நினைக்கிறார்கள். அவர்கள் கையில் இருக்கும் பணம், கடன் வாங்கும் திறமை, அவர்கள் நேர நிலைமை இவைகளைப் பொறுத்ததுதான். சினிமா கதைகள் எல்லாம் பொழுது போக்கு மட்டும் அல்ல, ஒரு கலை வடிவம் என்று அவர்களுக்குக் காட்டுவதற்கு நம்மிடம் உதாரணங்களும் இல்லை. இதுதான் இதில் சோகம்.

எனவே இவர்களின் பழக்கத்தை விமர்சனங்களால் மாற்ற முடியாது. அதுவும் இந்த விமர்சகர்களால் நிச்சயம்

முடியாது. இவர்கள் தெரியப்படுத்துவதெல்லாம் தத்தம் மேதாவித்தனங்களையே. படிக்காமல் கேட்காமல் பார்க்காமல் எழுதுவது இவர்களுக்குக் கைவந்த கலை. ஸ்டீபன் பாட்டரின் 'ரெவ்யூ மன்ஷிப்'பின் வழிகளை இயல்பாகக் கடைப்பிடிப்பவர்கள். இவர்களை ஒதுக்கிவிடுவது நல்லது.

மற்றொரு வகை ஹிந்துவின் ஞாயிற்றுக்கிழமை வகை This book is vellum bound in calf leather, contain 384pp ... இப்படி.

இந்த இரண்டு வகை விமரிசகர்களுக்கும் நடுவே சில விமரிசகர்கள் நமக்கு இன்னும் தேவை.

3

- டிசம்பர் 1972

உரைநடையை எளிதாக எழுதுவதற்கு ஒரு கழகம் ஆரம்பித்தால் அதற்கு நான் உடனே ஆயுள் சந்தா அனுப்புவேன். தற்போது தமிழில் கொஞ்சம் தீவிரமாகச் சிந்திப்பவர்கள் மிகச் சிக்கலாக எழுதுகிறார்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்கு திரும்பத் திரும்பப் படித்து படம் வரைந்து பாகங்களைக் குறிக்க வேண்டியிருக்கிறது. என்னைச் சராசரிக்குச் சற்று மேற்பட்ட வாசகனாகக் கொள்ளலாம். எனக்குப் புரியவில்லை என்றால், புரிவது கஷ்டமாக இருக்கிறது என்றால் இது யார் தவறு?

உதாரணம் சொல்கிறேன்.

''இலக்கியத்தில் நேற்று இல்லாதிருந்து இன்று இக்கணம் புதிதாக நிகழ்ந்து சாத்தியமாகி உள்ள ஒரு பரிமாண விஸ்தாரம் புகைப்படக்கலை அல்லது தியேட்டரைச் சார்ந்துள்ள எல்லைகளிலிருந்து பிய்த்து எடுக்கப்பட்டதனாலும் விஸ்தாரம் சாத்தியமாகிவிட்ட இக்கணமீதிலிருந்து அது இலக்கியத்தைச் சார்ந்த

எல்லையாகி விடுகிறது.''

இந்த வாக்கியம் ஒரு தீவிரமான பத்திரிகையில் சமீபத்தில் வெளியானது. அதை எழுதியவர் தீவிரமான ஒன்றைச் சொல்ல முயன்றிருக்கிறார். ஆனால் விஷயம் பஞ்சு படிந்து வாக்கியச் சிக்கலில் தன்னைத் தானே சுருட்டிக் கொண்டு இருக்கிறது. நத்தைபோல் தொட்டால் உள்ளே போய்விடுகிறது.

'கம்யூனிகேஷன்' என்று ஒன்று இருப்பதை தற்போது பலர் மறந்து விடுகிறார்கள். இது இங்கிலீஷ் இலக்கியத்தி லிருந்து நேராக இறக்குமதியாகிவிட்ட பாபம். ஸாம்வெல் பெக்கெட், கமா, புல்ஸ்டாப் போடாமல் ஒரு நாவல் முழுக்க பாரா இல்லாமல் எழுதி இருக்கிறார். இது புரியவில்லை, படித்தால் முதுகு வலிக்கிறது என்றால் அடிக்க வருகிறார்கள். ஏனெனில் பெக்கெட் நோபெல் பரிசு வாங்கி இருக்கிறார். இதுபோல் ஃபாக்னரும் மிகக் கஷ்டமான எழுத்தாளர்.

நாவல் அல்லது சிறுகதைகளில் ஓரளவுக்கு இந்த involved writingஐ அனுமதிக்கலாம். நாவல், சிறுகதைகள் எழுதுபவனின் தனித்தன்மையை, மனத்தை, மன விகாரங்களைப் பிரதிபலிப்பவை. ஆனால் கட்டுரைகளில் சொல்ல வந்த விஷயம் படிப்பவரை அடைய வேண்டிய கடமை இருக்கிறது. 'நான் என் பாட்டுக்கு எழுதிக் கொண்டே போவேன், நீ புரிந்து கொண்டால் புரிந்து கொள். இல்லாவிட்டால் சொரிந்து கொண்டு போ' என்கிற மனப்பான்மை நல்லதல்ல.

இந்தத் தீவிர எழுத்தாளர்களைவிட ''அடேய் பக்கெட் சாம்பார்!'' என்று நேர்முகமாகத் தாக்கும் 'சவுக்கடி' போன்ற பத்திரிகைகளின் வசன நடை மேல் என்று தோன்றுகிறது.

4

- ஜனவரி 1973

குறிப்பிட வேண்டிய இரண்டு சமீபத்திய புத்தகங்கள் பார்வை-3ன் 'நான் ஏன் எழுதுகிறேன்' (மறுபதிவு), 'புள்ளி' என்னும் கைக்கடங்கிய கச்சிதமான கவிதைத் தொகுப்பு.

செல்லப்பா அவர்களை நன்றி மறந்து தாக்குகிறார்கள். செல்லப்பாவை மறுக்க முடியாத சில விஷயங்கள் இருக்கின்றன. ('வாடி வாசல்' நிச்சயம் அதில் ஒன்று) அவர்தான் எல்லாவற்றையும் ஆரம்பித்தார் - சார்புகள் இல்லாமல் விமர்சனத்துக்கும் புதிய விஷயங்களுக்கும் என்றே பத்திரிகை ஒன்றை ஆரம்பித்துப் பிடிவாதமாக அந்த வருஷங்களில் அதைச் செலுத்தியதை மறந்தவர்களுக்கு அடுத்த வேளைச் சோறு கிடைக்காது. செல்லப்பாவிடம் idiosyncracies சில இருக்கின்றன. யாரிடம்தான் இல்லை. ஆனால் 'எழுத்து'வின் சரித்திர மதிப்பைக் கணிக்க வேண்டியவர்கள் நாமில்லை. Its too early.

இந்தத் தாக்குதல்களில் இரு தரப்பிலும் ஒரு வேடிக்கையான அமைப்பு இருக்கிறது. கறை படிந்த கடிதங்களை எல்லாம் பிரசுரித்து நீ அப்போது அப்படிச் சொன்னாயே இப்போது இப்படிச் சொல்கிறாயே உனக்கு விவஸ்தை கிடையாதா... என்கிறார்கள். இது ஒரு வாதமா? மாறுவது மனிதனின் ஆதார சுதந்திரங்களில் ஒன்று, நீங்கள் இதைப் படித்துக் கொண்டிருக்கும்போதே உங்கள் ஸெல்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது ஸாமர்ஸெட் மாம் போன்ற எழுத்தாளர் உலகிலேயே இல்லை என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.. இப்போது அப்படி நினைப்பதில்லை. Consistency is no virtue.

'புள்ளி' என்கிற புத்தகத்தில் சில நல்ல கதைகள் இருக்கின்றன. நீலமணி, சுப்ரமணியன், பாலகுமாரன், கலாப்ரியா இவர்களைக் குறிப்பிடலாம். புதுக்கவிதை

இப்போது இயக்க ரூபத்துக்கு வந்துவிட்டது. 'கணையாழி' ஆசிரியர் ஒரு வருஷத்துக்கு கவிதை சேர்ந்து விட்டது என்னும்போது சற்று பயமாகக்கூட இருக்கிறது. அதற்கு ஒரு காரணம் தபால் கார்டு... சட்டென்று பத்து பைசா கொடுத்து வாங்கி,

''தமிழக அரசு
ரூட் நம்பர் 21ல்
அவளை பார்த்தபோது
அவள் உதட்டின் மேல் மெலிதான மீசை''

என்று அந்த பஸ்ஸிலேயே எழுதிவிட்டு அருகில் உள்ள தபால்பெட்டியில் சேர்த்துவிடும் சௌகரியம் அதில் இருக்கிறது.

5

- பிப்ரவரி 1973

ஒரிஜினல் ஹிப்பிகள் யார் என்று யாராவது ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஞானக்கோவை என வழங்கும் சித்தர் பாடல்களைப் படிக்கும்போது ஹிப்பி நாகரிகத்தில் புதிதாக ஒன்றுமில்லை என்று தோன்றுகிறது. எல்லாவற்றையும் இந்தச் சித்தர்கள் செய்திருக்கிறார்கள்: சொல்லி இருக்கிறார்கள்.

கஞ்சா அபினியுடன் கள்ளுண்டு வாடுவதாக ஒப்புக்கொள்ளும் பத்திரகிரியார் மெய்ஞானப் புலம்பலில் சில சைக்கெடெலிக் வரிகள் இருக்கின்றன.

''மனதை ஒரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி எனதறிவை அம்பாக்கி எய்வது இனி எக்காலம்.''

''ஓடாமல் ஓடி உலகை வலம் வந்து சுற்றித் தேடாமல். அத்தன் இருப்பிடத்தை ஆராய்ந்து பார்த்து நிதம் செத்த சவம்போல் திரிய வேண்டுமாம்.''

''பற்றற்று நீரில் படர் தாமரை இலைபோல் சுற்றத்தை நீக்கி மனம் தூர நிக்க வேண்டுமாம்.''

''இனம் மாண்டு, சேர்ந்திருந்தோர் எல்லோரும் தான் மாண்டு சினம் மாண்டு போக அருள் வேண்டுமாம்.''

இந்த வரிகளைப் பாருங்கள்.

'கடலில் ஒளிந்திருந்த கனல் எழுந்து வந்தாற்போல்
உடலில் ஒளித்த சிவம் ஒளி செய்வது எக்காலம்'

கடந்த சமீபத்திய நூற்றாண்டுகளில் வாழ்ந்த இந்த சித்தர்கள் கோபமாகப் பாடி இருக்கிறார்கள்.

சிவவாக்கியர் வெடிக்கிறார்.

''பறைச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா
இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கம் இட்டு இருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பணத்தி போகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுந்து பாரும் உம்முளே!''

என்னும் இவர் அந்தணர்களைச் சாடுகிறார்: ''சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே! வேர்த்திரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ?''

ஆனால் சிவவாக்கியர் நாஸ்திகரல்ல. அவர் தேடுவது சடங்குகளுக்கும் சாஸ்திரங்களுக்கும் அப்பாற்பட்ட எங்கும் வியாபித்த சிவாயம்,

''பச்சை மாலம் ஈசனும் பரந்ததே சிவாயமே...''

இவரை மேலே படிக்கப்படிக்க உதாரணங்கள் காட்டும் ஆசை குறைவதில்லை. 'அரியும் அல்ல அயனும் அல்ல அப்புறத்தில் அப்பவும் கருமை செம்மை வெண்மையைக் கடந்து நின்ற காரணம் பெரியதல்ல சிறியதல்ல பற்றுமின்கள் பற்றுமின்கள் துரியமும் கடந்து நின்ற தூர தூர தூரமே.'' இதுதான் சிவவாக்கியரின் கடவுள்.

சித்தர் பாடல்களில் இருக்கும் பெண்களைப் பற்றிய விஷயங்களை மற்றொரு சமயம் எழுதுகிறேன்.

6

-மார்ச் 1973

பல புத்தகங்கள் பத்திரிகைகள் எனக்கு வருகின்றன. சனாதன சங்கத்தின் பதினாறாம் ஆண்டு விழா மலர், ஆர்.எஸ்.எஸ். குருஜி அவர்களின் சொற்பொழிவுகள் இப்படி விதம் விதமாக வருகின்றன. சமீபத்தில் நான் பெற்ற தமிழ்ப் புத்தகங்கள் சில்வற்றில் 'வெள்ளம்' என்கிற (சசி) கலாப்ரியாவின் சின்ன கவிதைத் தொகுப்பையும் 'ஆக்டோபஸ்ஸும் நீர்ப் பூவும்' என்கிற தலைப்பில் சில புதிய கவிஞர்களின் சிவப்புக் கோபங்களையும் குறிப்பிடலாம்.

❑

அசோகமித்திரனின் 'இன்னும் சில நாட்களில்' மேல் உறையின் உள் பக்கத்தில் அசோகமித்திரனைக் கடுமையாக விமர்சித்திருப்பவர்களையும் பிரசுரித்திருப்பது இது முதல் தடவை என்று நினைக்கிறேன். Gamesmanship உத்தி இது. எதிர்ப்பவனையே பதிப்பிப்பதில் எதிர்ப்பின் பிரகாசம் போய்விடுகிறது.

❑

நம் விமர்சக நண்பர்கள் இப்பொழுது எல்லாம் தமிழை விட்டுவிட்டு இங்கிலீஷில் திட்டிக் கொள்கிறார்கள் என்று நண்பர் சங்கமித்திரன் மூலம் தெரிந்து கொண்டேன். Thought பத்திரிகையில் சமீபத்தில் தற்காலத் தமிழ் இலக்கியம் பற்றி தாட்டு தாட்டு என்று தாட்டி ரத்தக்களறியாம். நடுவே ஒருவர் 'இவர்களுக்கெல்லாம் மூலவியாதி, ரப்பர் டயர் மேல் உட்கார்ந்து கொண்டு என்னவோ செய்கிறார்கள்'' என்று ஒரு கவிதைகூட எழுதி இருக்கிறார். இலக்கிய விமரிசனம் மிக முன்னேறி இருக்கிறது... அடுத்து The influence of interior and exterior piles and other forms of haemorhoids on modern Tamil writing என்று Indian medical

Journalல் ஒரு வியாசம் வெளிவரும் என்று எதிர் பார்க்கிறேன்.

7

- ஏப்ரல் 1973

புட்டண்ண கனகால் என்பரின் நாகரெ ஹாவு என்னும் கன்னடப் படத்தைப் பார்த்தேன். ராமாச்சாரி, வரதன், ஜலீல், மார்க்கரெட் என்று ஒரு மீடியம் சைஸ் டவுனில் ஆதாரமான ஜாதி அமைப்பினால் நாம் சுலபமாகச் சந்திக்கக் கூடிய பெயர்கள். கதாநாயகனை வஞ்சம் மறக்காத நாகப்பாம்புக்கு ஒப்பிட்டு இந்த உவமை கடைசி வரை கொண்டு செல்லப்படுகிறது. இந்தப்படத்தில் ஐயங்கார் பையன் சிகரெட்டின் மேல் தன் தங்கையை சத்தியம் பண்ணிக் கொடுக்கிறான், 'பிரியாணி என் ஸ்பெஷாலிட்டி' என்கிறான். ராமாச்சாரி அலமேலுவிடம் 'நான் உன்மேல் பிரியம் வைத்திருக்கிறேன்' என்று சொல்லி கையைத் தொட்டு அமுக்கிவிட்டு ஒரே ஓட்டம் ஓடிவிடுகிறான். கதை முழுவதும் சித்ர துர்கா கோட்டையில் வெளிப்புறத்தில் திறமையான வர்ணத்தில் படம் எடுக்கப் பட்டிருக்கிறது. கதை இளைஞர்களைப் பற்றியது. இளைஞர்களே நடிக்கிறார்கள்.

பல கன்னடப் படங்கள் ''மலைப்புலி'' ''பஸ்திபுல்புல்'' ''தங்கக் கள்ளன்'' என்று வருகின்றன. அதன் நடுவே கிரிஷ் கர்னாட் போன்றவர்களின் பாதிப்பினால் சில நல்ல படங்களும் வருகின்றன. இங்கே படம் எடுப்பதற்கு ஒரு லட்சம் ரூபாய் இருந்தால் போதும். படம் வெளி வந்தவுடன் ராஜ்ய சர்க்கார் ஐம்பதாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். உயிர் வாழும் எழுத்தாளர்களின் நாவல்களைப் படம் எடுக்கிறார்கள்.

சமீபத்தில் 'கல்கி' இதழில் மொழி பெயர்ப்பில் ஒரு பஞ்சாபி சிறு கதை 'விஷக்கடி வேளை' எனக்குப்

பிடித்திருக்கிறது. மானசீகமாக ஒரு சிறு கதைத் தொகுப்பு வெளியிட இருக்கிறேன். தமிழ்ச் சிறுகதைகள்தான். அதற்காக இருபத்தைந்து கதைகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். இருபத்தைந்து தேறவில்லை கு.ப. ராவின் ஒரு கதை இருக்கிறது. புதுமைப்பித்தன் (ரொம்ப யோசனைக்குப் பிறகு) ஜானகிராமன், சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன், அசோகமித்திரன், கிருஷ்ண மூர்த்தி, முத்துசாமி, ராஜநாராயணன், ராஜேந்திர சோழன், சார்வாசன், சுப்ரமண்ய ராஜு, இந்திரா பார்த்தசாரதி, ஆதவன் என்று பிரத்தியேகமாகப் பதினைந்து கதைகள் சேர்த்திருக்கிறேன். பதினைந்தும், வார, மாத, வருஷ அவசரங்களை மீறி 1985 ஆம் வருஷம் படித்தால் கூட அப்பொழுதும் அதற்கு relevance இருக்க வேண்டும். இது தான் நான் தேர்ந்தெடுப்பதற்கு முக்கிய விதி. இன்றைய பல கதைகளை நான் மிஸ் பண்ணி இருக்கலாம். நான் மேற்சொன்ன விதிப்படி (1985) தகுதி உள்ள கதைகள் என்று நீங்கள் நினைப்பதை எனக்குக் குறிப்பிடலாம். படித்துப் பார்க்கிறேன்.

8

- மே 1973

'ராஜ ராஜ சோழன்' சிவாஜி கணேசன் நடிக்கும் தமிழ்ப் படத்தில் எத்தனையோ செலவழித்து மெட்ராஸில் தஞ்சைக் கோயிலையும் நந்தியையும் அட்டையில் செட் அமைத்துப் பிடித்திருக்கிறார்களாம். இதைவிட...த்தனமான காரியம் இருக்க முடியாது. மேனாட்டில் சரித்திரப் படம் எடுப்பவர்கள் ஆயிரம் மைல் கடந்து சரித்திரம் நடந்த இடத்திற்குச் சென்று பிடிப்பார்கள். இருநூறு மைலில் இருக்கும் தஞ்சாவூர், அங்கே செல்லவில்லை. அதற்குக் காரணம் தஞ்சைக் கோயிலில் இன்று இருக்கும் எலக்ட்ரிக் கம்பங்களும் கம்பிகளும் நியான் விளக்குகளும் என்று

சொல்லப்படுகிறது. செட் அமைக்கச் செலவிட்ட பணத்தில் பத்தில் ஒரு பங்கு செலவழித்து அந்த உறுத்தும் விளக்குகளையும் கம்பங்களையும் அகற்றிவிட்டுப் படம் எடுத்து விட்டு மறுபடி அவற்றை அமைத்திருக்கலாம்.

வர்ணப்படம் என்றால் ஃப்ரேமுக்கு ஃப்ரேம் ஏழு வர்ணங்களும் கசிந்தாக வேண்டும் என்று நினைப்பவர்களைத் திருத்துவது கடினம். தமிழ் சினிமா ஒரு ஸ்ட்ரெட்ச் கேஸ். நான் சமீபத்தில் படம் எடுப்பதாக இல்லை.

சென்ற இதழில் இந்தப் பக்கம் சில கோபமான கடிதங்களைக் கிளப்பி இருக்கிறது என அறிந்து கொண்டேன். அவற்றை நான் இன்னும் படிக்கவில்லை. படித்துவிட்டு மன்னிக்கிறேன்.

எத்தனையோ புதுமைகளைச் செய்கிறீர்கள். தமிழில் தேவையாக இருக்கும் நான்கு சப்தங்களுக்கு எழுத்து அமைக்க மாட்டீர்களா? டாக் என்று எழுதினால் அது Talk, Dog, Dock எல்லாவற்றிற்கும் பொதுவாகிறதே. கனமான க, ட, த, ப சப்தங்களுக்கு நான்கே நான்கு எழுத்துக்கள் அல்லது குறியீடுகள் தேவை. இரண்டு சுழி, ன ஒரு உபரி எழுத்து. அதை நீக்கி விட்டால் நாந்கே நாந்கு 'எழுத்து'வில் அரை மனதாக இந்தக் கன எழுத்துக்களுக்கு வடிவம் கொடுக்கப் பிரயத்தனப்பட்டார்கள் என்று ஞாபகம்.

9

- ஜூன் 1973

ராட்சச வினியோகமாகும் நம் பத்திரிகைகளில் நான் ரசித்துப் படிப்பது விளம்பரங்களை. அழகில்லாதவர்களை அழகாக்கி டென்னிஸ்கோர்ட் மார்பைப் பதினைந்து நாட்களில் மிளிப் பிதுங்க வைக்க money back காரண்டி வழங்கும் இந்த விளம்பரக்காரர்களின் வார்த்தைகளில் நாம் இருப்பது செயற்கை சாதனங்களின் சொர்க்கத்தில். வாலிப வயோதிக அன்பர்களே என்று திடுக்கிட வைத்து

அழைக்கும் இழந்த சக்தி லேகிய விளம்பரங்களை நம் நாடெங்கும் நான் பலப்பல பாஷைகளில் பார்த்திருக்கிறேன். இந்த இழந்த சக்தி நம் தேசிய குணங்களில் ஒன்றென்று தெரிந்து டில்லியில் ஏஜி ஆபீஸ் வாசலில் மத்யானத்தில் கூட்டம் கூட்டி சாண்டே கா தேல் (Sande Ka Tel) விற்பவன் (உடும்புத் தைலம் என்று நினைக்கிறேன்) அதை உபயோகிப்பவர்களுக்கு - எதிரே எலக்ட்ரிக் கம்பத்தைக் காட்டி அதுபோல நிற்கும் என்று சத்தியம் செய்கிறான் - பத்திரிகைகளிலும் எத்தனை பழனி லேகியங்களும் மஸ்தானா நைட் பில்ஸ்களும் பார்க்கிறேன்! இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தந்து தேக புஸ்டியை (ஆம்! புஸ்டி) ஊக்குவித்து புஜபல பராக்கிரமத்தை உண்டாக்கப் பெரிதும் உதவும் இந்த ஒரிஜினல் சித்த வைத்திய தயாரிப்பில்தான் நம் வாழ்க்கையின் மறுமலர்ச்சி இருக்கிறதாம்.

அதைவிட இந்த வரி விளம்பரத்தைப் பாருங்கள் (ஆதாரம் சித்ராலயா)

''கற்பு என்ற நியூவேவ் செக்ஸ் திரைக்கதை உள்ளன. நல்ல கருத்துக் கதை; இளைஞர்களைக் கவரும் கவர்ச்சிக் கதை; கலைஞர்களின் திறமையைக் காட்டும் உன்னதக் கதை; A சர்டிபிகேட் வாங்கும் நல்ல செக்ஸ் கதை; ரசிகர்களும், மக்களும் பாராட்டும் அற்புதக் கதை; திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வெற்றியைத் தேடித் தரும் வெற்றிப் படக்கதை. இந்தக் கதைக்குத் தகுந்த பாடல்களும் உள்ளன. மற்றும் திரைப்படப் பாடல்களும் உள்ளன. கதை, பாடல்கள் தேவைக்கு எழுதுங்கள், சித்ராலயா, தபால் பெட்டி எண் 231. சென்னை - 7''

யார் சொன்னார்கள் நம் பத்திரிகைகளில் சுவாரஸ்யம் இல்லை என்று?

10

-ஜுலை 1973

பல தினங்களுக்குப் பின் மறுபடி டில்லிக்கு வருகிறேன். விமானத்தில் உச்சந்தலையில் சொட்டையுடன் நான்கு மாதம் கர்ப்பமாக இருக்கும் கனவான்கள் அவர்கள் மனைவி போல் இருக்கும் ஹோஸ்டஸைக் கண்டு ஏமாற்றி கை நிறைய பிஸ்கட் அள்ளிக் கொள்கிறார்கள். 'லாக்-அவுட்' காரணமாக விமானம் சமயத்தில் புறப்பட்டு சமயத்தில் சேர்கிறது. பாலம் விமான நிலையம் காலியாக இருக்கிறது. நிலையத்தை விட்டு வெளியே வரும்போது டில்லி போலீஸ் என் பெயர் கேட்கிறது. டாக்சிக்காரன் 'ஜனாப் ஜனாப்' என்று என்னை மரியாதை செய்கிறான் (பிற்பாடு இருபது ரூபாய் கேட்கப் போகிறான்.)

உட்லண்ட்ஸ் ஹோட்டலில் மாலி புல்லாங்குழல் ஊத இடியாப்பத்தை அரங்கேற்றி ரூ. 4-50 சார்ஜ் பண்ணு கிறார்கள். செய்தித்தாளில் ஐந்து லட்சம் கொள்ளையடித்த இளைஞர்களைக் கைது செய்த போலீஸ்காரர்கள் மாலை அணிந்து சிரிக்கிறார்கள். ஒரு மனைவியைப் பதினைந்து தடவை கொன்ற டாக்டர் ஜெய்ன் புன்முறுவல் செய்கிறான்.

குளிர்

ஜன்பத்

தங்கப் பல் வெள்ளைக்காரர்கள் அலங்கரிக்கப்பட்ட குப்பைகளை வாங்குகிறார்கள். ஹிப்பிகள் கணேஷ் பீடி குடித்துக் கொண்டு ஒரு கையில் சத்ய சாய்பாபாவின் வாழ்க்கை வரலாறு மறு கையில் கட்வாலிப் பாவாடை அணிந்த வெள் பெண்ணுடன் அலைகிறார்கள். 'பாபி' பார்த்துவிட்டதில் ஜென்ம சாபல்யம் அடைந்து விட்ட பஞ்சாபி இளைஞர்கள் வாயில் விரல்விட்டு சப்பிக் கொண்டே நடக்கிறார்கள். நகரெங்கும் சிவப்பு அம்பர் பச்சை ஜன்சங்கத்தின் நீரூற்றுக்கள் சுவரொட்டிகளில் சென்ற மாத ஹீரோ காம்ரேட் ப்ரெஷ்னெவ் புன்னகைக்க

முற்படுகிறார்.

அரசாங்கக் கட்டிடங்களில் உட்காரும் நாற்காலிகள் கூட 'ஆப் கி மர்ஜி ஹை ஸாப்' என்று லஞ்சம் கேட்கிறது. பைல்களைப் பிரித்துப் பார்த்தால் இளைஞர்கள் ஹௌஸ் ரெண்ட் அலவன்ஸ் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் - காண்டீனில் சிவசுப்பிரமண்யமும் கன்னாவும் மசால் தோசையின் மகத்துவம் பற்றி அளவளாவுகிறார்கள். சோப்ராக்களும் ஆபீஸ் நேரத்தில் டேபிள் டென்னிஸ் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். வெளியே கடலைக்கொட்டை உரித்துத் தின்று கொண்டிருக்கிறார்கள் அல்லது சான்டேகாதேலின் மகத்துவம் பற்றியோ கிருஷ்ண பகவானின் சீர்வரிசைகள் பற்றியோ வெளியே கூட்டங்களில் கேட்கிறார்கள்.

சிவப்பு விளக்குக்கு டாக்ஸி தயங்கி நின்றபோது விதவிதமான கார்களும் ஆட்டோக்களும் சூழ்ந்த அந்த வினோத வரிசையின் ஊடே பதறிப் பதறி ஒரு தமிழ்ப்பெண் வருகிறாள். ஒரு கையில் குழந்தை மற்றொரு கையில் ''ஈவினிங் நியூஸ் வாங்குங்கள் வாங்குங்கள்'' என்று ஒவ்வொரு காராக நின்று கெஞ்சிக் கெஞ்சி...

டில்லி மாறவில்லை.

11

- ஆகஸ்ட் 1973

'கணையாழி'யில் எழுதும் நண்பர்கள் விதி விலக்காக இருக்கலாம் - ஆனால் பெரும்பாலும் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுபவர்களிடம் ஒரு பொதுத் தன்மை இருக்கிறது. சின்ன விஷயங்களைப் பற்றி அலட்டிக் கொள்வது. சமீபத்தில் 'எக்ஸ்பிரஸ்' செய்தித்தாளில் வந்த ஒரு கடிதத்தில் தபால் கார்டில் 'பின்கோடு' எண்களுக்காக கட்டங்கள் இருக்கவேண்டும் என்று ஆந்திர பிரதேஷ் மாசேர்லாவி லிருந்து எழுதுகிறார் ஒரு ராஜு. ராஜு காருவுக்குத் தபால்

கார்டில் இந்த கட்டங்கள் ஏற்படுவதில் ஜென்ம சாபல்யம் கிடைத்து விடுகிறது.

இந்த சிறு விஷயங்களை மன்றாடுவதற்காகவே பிறந்து வளர்ந்து இறந்த ஸ்ரீ நாகராஜ சர்மாவின் ஞாபகம் வருகிறது. சர்மா கும்பகோணத்துக்குப் போனால் வீட்டுக்குக் கடிதம் எழுதுவதற்கு முன் 'ஹிந்து'வுக்குத்தான் எழுதுவாராம். சர்மா ஒலிபெருக்கி இரைச்சல்களையும், நம்பர் 5 டௌன் பாஸஞ்சர் திட்டகுடியில் நிற்கவேண்டியதன் அவசியங்களையும், இன்ன பிற விஷயங்களையும் தன் வாழ்நாள் முழுவதும் 'ஹிந்து'வுக்கு கடிதங்கள் எழுதி ஒரு வித உப அமரத்வம் பெற்றார். இறந்தபின் கூட Sir The conditions in the cremation grounds at Kannamapet are anything but ... என்று துவங்கி ஒரு கடிதம் வந்திருந்தால், 'ஹிந்து'வோ வாசகர்களோ ஆச்சரியப்பட்டிருக்க மாட்டார்கள்.

பிரமிளாவுக்கு நகத்தைக் கடிக்கும் பழக்கம் உண்டு என்று ஒரு பத்திரிகை கட்டத்துக்குள் பதிப்பிக்கிறது. பிரமிளாவுக்கு நகம் கடிக்கும் பழக்கம் இருந்தால் என்ன, வேறு எவளுக்கோ தொடையில் மச்சம் இருந்தால் நமக்கு என்ன என்று ஒருவரும் கேட்பதில்லை. கேள்வி கேட்காமல் இந்த Trivia அனைத்தையும் உட்கார்ந்து கொண்டு படித்துக் கொண்டிருக்கிறோம். இதைவிட அதிகமாக ஒரு ஜனக் கூட்டத்தை எவனும் அவமானப்படுத்த முடியாது என எண்ணுகிறேன்.

Loneseo வின் Rhinocerros என்கிற நாடகத்தில் ஒரு காட்சி ஞாபகம் வருகிறது. நாடக பாத்திரங்கள் ஒரு பொது இடத்தில் பேசிக் கொண்டிருக்கும்போது முழுசாக ஒரு காண்டா மிருகம் குறுக்கே திடும் திடும் என்று புழுதியைக் கிளப்பிக் கொண்டு அவர்கள் எதிரே ஓடி மறைகிறது. இந்தக் காட்சியின் incongruity யும் அபத்தமும் அவர்களைப் பாதிப்பதில்லை. ஓடின மிருகம் ஆசிய வகையா ஆப்ரிக்க வகையா என்று சர்ச்சையில் தீவிரமாக இறங்கி

விடுகிறார்கள். நம் தின வாழ்க்கையில் எத்தனை காண்டாமிருகங்கள்!

12

-செப்டம்பர் 1973

கசடதபற நின்று போனதில் நாம் எல்லோரும் கொஞ்சம் இழந்திருக்கிறோம். இந்தச் சிறிய பத்திரிகை இருந்தவரை, ஒரு தனிப்பட்ட தன்மையும் வேகமும் இருந்திருக்கிறது. மீண்டும் வர வேண்டும்.

❑

செல்லப்பாவின் 'புதுக் குரல்கள்' தொகுப்பு இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. முதல் பதிப்பிலிருந்து சில கவிதைகளை நீக்கி இப்பதிப்பில் சிலவற்றைச் சேர்த்திருப்பதைத் தவிர்த்திருக்கலாம். ஸர்க்கா 1963லா?... அப்போது வெளியான புத்தகம் என்கிற மதிப்பு இம்மாதிரி மாறுதல்களால் கெட்டு விடுகிறது. மற்றொரு செய்தி இந்தப் புத்தகம் மதுரைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. வகுப்புக்குப் பாடப் புத்தகமாக இருந்ததாம். கீழ்க்காணும் வினாக்களில் எஃதேனும் ஐந்திற்கு விடை நவிலுக என்று துவங்கி 'புதுக்' குரல்களுக்கு ஒரு வினாத்தாள் தயாரிப்பது ஒரு சுவாரஸ்யமான பொழுது போக்காக இருக்கும். புத்தகத்தைப் படித்த நம் வாசகர்கள் முயன்று பார்க்கலாம்.

❑

'ஸங்கல்ப' என்கிற கன்னடப் படம் (எழுதித் தயாரித்தவர் நஞ்ஜராஜ் அர்ஸ்) சத்ய சாய்பாபா மாதிரி மைனர் அதிசயங்கள் நிகழ்த்தும் ஒரு பாபாவுக்கும் அவர் தங்கி இருக்கும் வீட்டில் பகுத்தறிவு வாதம் செய்யும் ஒரு மனோதத்துவ தம்பதிகளுக்கும் ஏற்படும் எதிர்ப்பைச்

சித்தரிக்கிறது. இரண்டு கட்சியையுமே கிண்டல் செய்யாமல் எடுத்திருப்பதும் இன்ஸ்டிட்யூட் மாணவர் ராமச் சந்திராவின் காமிரா வேலையும் ஃப்ளாஷ்பாக் காட்சிகளை மௌனத்தில் காண்பிப்பதும் சிறப்பான அம்சங்கள். கன்னடத்தில் இம்மாதிரிப் படங்கள் நாலைந்து வந்து விட்டதற்கு ஒரு முக்கிய காரணம் மாநில அரசாங்கத்தின் உதவிப்பணம் தரும் தைரியம்.

❑

சமீபத்தில் கண்ணதாசன் பத்திரிகையில் ஒரு குறு நாவலில் சரளமான பிராந்தியத் தமிழ் உபயோகப்படுத்தப் பட்டிருந்ததை ரசித்தேன். 'தாயோளி' என்கிற வார்த்தை இந்த உண்மையான Dialect-ன் பின்னணியில் அதன் விபரீத அர்த்தத்தை இழந்து ஒரு சாதாரண அளபெடையாக மாறுகிறது. தத்தம் பிராந்தியத் தமிழை உன்னிப்பாக கேட்டு சிறப்பாகக் கையாளக்கூடிய இளைஞர்கள் தற்போது அதிகமாகி இருக்கிறார்கள்.

13

-அக்டோபர் 1973

அழகாகப் பதிப்பிக்கப்பட்ட 'அன்று வேறு கிழமை'யில் ஞானக்கூத்தனின் திறமையை முழுமையாகப் பார்க்க வாய்ப்புக் கிடைக்கிறது.

ஞானக்கூத்தனின் கவிதைகள் யாப்புடன் அமைந்தவை: (மேலாகப் பார்த்தால் இது தெரியாது) எண்சீர், அறுசீர், கலிவிருத்தங்களில் அமைந்தவை. இஷ்டத்திற்குச் சில வேளைகளில், விஷயம் தெரிந்த ஒருவரின் உயர் நிலையிலிருந்து, சந்தங்களைக் கலக்கிறார். கிடைப்பது ஞானக்கூத்தனுக்கே உரித்தான ஓர் அமைப்பு. ஆனால் யாப்புடன் இன்றைய தின நவீன விஷயங்களைச் சொல்ல முடியும் என்பதை மறுபடி மறுபடி

நிரூபித்திருக்கிறார். இதன்மூலம் யாப்பை மீறிப் புதுக்கவிதை எழுதும் முதல் தகுதியை இவர் சுலபமாகப் பெறுகிறார். இது இவர் துருப்புச் சீட்டு. வைத்திருக்கிறார். இன்னும் உபயோகிக்கவில்லை.

'கால வழு அமைதி' என்கிற கவிதையைத் தொகுப்பில் சிறந்த கவிதையாக நான் சொல்வேன். இந்தக் கவிதையை துல்யமாக எண்சீர் விருத்தமாகப் படிக்கலாம்; அதைவிட ஒலிபெருக்கி அலறும் பொதுக்கூட்ட இரைச்சலின் பின்னணியில் ஒரு அரசியல்வாதியின் கயமை நிறைந்த கட்டைக் குரலில் படிக்கலாம். படிக்க வேண்டும்.

ஞானக்கூத்தனின் உவமைகளில் ஆச்சரியங்கள் இருக்கின்றன. எது எதற்கு உவமையாகப் போகிறது என்கிற ஆச்சரியம். உதாரணங்கள்: மணி அறியாப் பள்ளிகளில் மணியாக உதவும் தண்டவாளத்துண்டு - பாரதி இல்லாத நாட்டில் லோகல் கவிஞன், எழுதக் குவிந்த கை - குன்று (மணிக்கட்டுப் பக்கம் சகதி) தையற்காரன் புறக்கணித்த துணித் துண்டுகள் - பூக்கள், ஸ்டேஷன் மாஸ்டர் கொடி - நீலம்.

இவர் சொல்லும் விஷயங்களிலும் இதே எதிர்பார்க்க முடியாத ஆச்சரியங்கள், தாலாட்டின் முதல் வரிக்கே தூங்கி விடும் குழந்தை; சங்க கால அரசாங்கத்தில் தூங்கிய மோசிகீரனார்: தொடர் சங்கிலியாய்க் குரைக்கும் நாய்கள்; 'இத்துடன் என் திருவிளையாடல் முற்றும்' என்று அப்பீலை அனுமதிக்காத சிவபெருமான்; அம்மா சொல்லும் கவி ததும்பும் பொய்கள் (முறத் தவிட்டுக்காக உன்னை வாங்கினேன்); உட்கார்ந்தால் ஆள் மறையும் முந்திரிக் கொல்லை (உட்கார்கிறார்கள் நாட்டாண்மைக்காரனும் செங்கமலமும்); வகுப்புக்கு வரும் எலும்புக் கூடு (மன்னார் சாமி! ஆணியிலே அதைப் பொருத்து.)

மெலிதாகப் புன்னகைக்க வைக்கும் கவிதைகளின் நடுவில் திடீரென்று ஒரு காஃப்கா படித்த சித்தர் போல மாறுகிறார் ('தொழு நோயாளிகள்' 'தவளைகள்'.)

யாப்புடன் எழுதுவதால் சில சமயங்களில் வரிகள் அனாவசியமாக நீண்டு விடுகின்ற உதாரணமாக, 'யெதிரெதிர் உலகங்க'ளில் (பதினெட்டு வரிகள்) கடைசி மூன்று வரிகளில் தான் விஷயத்திற்கு வருகிறார். ஆனால் பெரும்பாலும் சொற்களும், சொல் அமைப்புகளும் சிக்கனமாகவே இருக்கின்றன.

ஞானக்கூத்தனைப் பாகுபடுத்துவது கஷ்டம். அவர் வரிகளை ரசிப்பதும், அவற்றில் நம்மையே கண்டு பிடிப்பதும் சுலபம்.

பிடிப்

14

-நவம்பர் 1973

சமீபத்தில் மதுரை சென்றிருந்தேன். நண்பர் ஜயபாஸ்கரனைச் சந்தித்தேன். ஜயபாஸ்கரன் மதுரைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம்.ஏ. படித்தவர். படித்திருந்தும் தப்பித்தவர். தன் பெயரை இன்னும் தமிழ் படுத்திக் கொள்ளாமல் இருக்கிறார் - வென்றி ஞாயிறு? - நவீன இலக்கியங்களையும் புதுக் கவிதைகளையும் 'பார்ப்பன விடலைகள்' தற்போது எழுதிக் கொண்டிருக்கும் சிறுகதைகளையும் ரசிக்கிறார். 'இக்கால இலக்கியம்' என்கிற பாடத்தில் எம்.ஏ. பரீட்சையின் வினாத் தாளை எனக்குக் காட்டினார். அதிலிருந்து உதாரண வினாக்கள்.

கல்கியின் சிவகாமியின் சபதம் ஓர் உரைநடைக் காவியம் என்ற உண்மையை நிறுவுக.

(அல்லது)

கதை மாந்தர் படைப்பில் அகிலன் தனித்திறன் கொண்டவர் என்ற உண்மையைக் 'கயல்விழி'யில் வரும் ஏதேனும் ஒரு கதை மாந்தரைக் கொண்டு நிறுவுக. *(15)*

சமுதாயத்தைப் பற்றிய தெரிநிலை விழிப்பு அறிஞர் அண்ணாவிடம் அமைந்திருந்தது என்பதை அவர்தம்

சிறுகதைகளைக் கொண்டு நிறுவுக

டாக்டர் மு.வ. அவர்களின் சிறுகதைகளில் சிறந்து காணப்படுவது கலைத்திறனா, கருத்து வளமா? ஆராய்க.

மேற்கூறிய நான்கு வினாக்களுக்கும் என் பதில் ''ம்ஹூம் மாட்டேன் போ!''

❑

ஆனால் ம.ப.க.வுக்கு ப்ளஸ் பாயிண்டாகவும் சில வினாக்கள் இருந்தன. வட்டார நாவல்களைப் பற்றி, சோதனைப் படைப்புகள் பற்றி.

❑

மதுரையில் தமிழ்ப் புத்தகக் கடைகளில் மேய்ந்தபோது 'தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு' என்ற அரிய புத்தகத்தைப் பிடித்தேன். அது 'தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்' வெளியிட்ட நல்ல தமிழில் பேசவும், எழுதவும் கற்பிக்கும் நூல். உம் மகள் பூப்பு எய்தினால் அதன் நன்னீராட்டு விழாவுக்கு தீந்தமிழில் அழைப்பிதழ் எப்படி எழுதுவது என்பது தெரியுமா உனக்கு? இந்நூல் உதவுகிறது. மற்றும் நீத்தார் கடன், பல்வகை சொற்புணர்ச்சிகள். ஐயகோ! சென்ற எழுநூறு ஆண்டுகளில் நம் தாய் மொழியாம் செந்தமிழ் சீரிய மொழியில் வந்துவிட்ட ஏராளமான வட சொற்களில் அகர வரிசைச் சுருக்கம் தமிழர் இல்லங்கட்கு செந்தமிழ்ப் பெயர்கள் (நல்லந்துவனார்) ஆடவர் பெயர் (நாங்கூர்ச் சோழன்) மகளிர் பெயர் (பிச்சிவடிவு) இன்ன பிற விஷயங்களும் -மன்னிக்கவும் நுதலிய பொருட்களும் - உள்ள இந்நூலில் உகஉ பக்கங்களையும் மிகவும் ரசித்தேன் - சே! சுவைத்தேன்.

15

- டிசம்பர் 1973

'தாகம்' என்கிற தமிழ்ப் படத்துக்கு சென்னையில் தியேட்டர் கிடைக்கவில்லையாம். இந்தப் படத்தை சமீபத்தில் பங்களூரில் ஒரு விழாவில் பார்த்தேன். ஃபிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷனின் ஆதரவில் எடுக்கப்பட்ட முதல் தமிழ்ப்படம். காந்தி ஆசிரமத்தில் வேலை செய்யும் ஒரு பெண் சாதாரணமான கல்யாண வாய்ப்பை ஒதுக்கி கண் தெரியாதவனைக் கல்யாணம் செய்து கொண்டு அவனுடன் சென்னைக்கு வந்து பிழைக்க முயன்று சென்னையின் பார்வைகளையும் சந்தேகங்களையும் சமாளிக்க முடியாமல் திரும்ப காந்தி கிராமத்துக்கு வந்துவிடுவது கதை. கதை இந்த இடத்தில் முடிந்து விடுவதாக நான் நினைக்கிறேன். அப்புறம் அவளைச் சாகடித்து சின்னப் பையனுக்கு கண்தானம் செய்வது வரை நீட்டி இருக்க வேண்டாம்.

சென்னை ஃபிலிம் இன்ஸ்டிட்யூட் சரக்கு இந்தப் படம். பாபுநந்தன்கோடு டைரக்டர். கதையை நேராகச் சொல்லி இருக்கிறார். சென்னையின் கயமையை ஏழ்மையை ஒரு சில ஆச்சர்யமான ஃப்ரேம்களில் நிறுத்திக் காட்டி இருக்கிறார். உதாரணத்துக்கு ஒரு காட்சி: வீட்டுக்கு வீடு காப்பிப்பொடி விற்கும் நந்திதா ஒரு கதவைத் தட்டுகிறாள். ஜில் என்று தலை கலைந்த ஒரு முரட்டு இளைஞன் பெட்ரூம் பார்வையுடன் நிற்கிறான். பயந்து 'வீட்டிலே பொம்பளைகள் யாரும் இல்லையா' என்று கேட்கிறாள். 'பொம்பளையா' என்று உள்ளே கூப்பிடுகிறான். வருவது சிக்கனமாக பாடி பாவாடை மட்டும் அணிந்த ஒருத்தி.

காமிரா துரையிடம் திறமை நிச்சயம் இருக்கிறது. பஸ்ஸுக்குள் நந்திதாவின் விலகின ஸாரியைப் பார்வைகள் வருடுவதும் முத்துராமனும் நந்திதாவும் நடந்து இயல்பாக தெருவில் செல்லும்போது ... Zoom முறையில் எடுத்ததால் மற்ற ஜனங்கள் மிக இயற்கையாக இருப்பதும், கழைக்

கூத்தாடி, காகிதம் பொறுக்கும் சிறுவர்கள், தொழு நோயாளிகள், சைக்கிள் ரிக்ஷா... தமிழ்ப்படத்தில் சாதாரணமாக சந்திக்க முடியாத யதார்த்த உலகைக் காமிரா காட்டுகிறது. இவ்விருவரும் எடுக்கும் அடுத்த படங்களில் நிச்சயம் முன்னேற்றம் இருக்கும்.

முத்துராமன் கண் தெரியாதவனாக இயல்பாக நடித்திருக்கிறார். த. சினிமா நடிப்பை மறந்துவிட்டு கொஞ்சம் Underplay செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. நந்திதா தமிழ் வாக்கியங்களை தப்பான இடங்களில் நிறுத்திப் பேசுவதற்கு ஏற்ப பின் குரல் கொடுத்தவர் கஷ்டப்பட்டிருக்கிறார். எம்.பி. சீனிவாசன் (சங்கீதம்) தாள வாத்தியங்களையும் கர்நாடக ராகங்களையும் புதிய முறையில் பயன்படுத்தி இருக்கிறார்.

காந்தி என்பது இப்போது கெட்ட வார்த்தையாக இருக்கும்போது காந்தியையும் பாரதியின் ஆதர்ச வரிகளையும் (தனி ஒருவனுக்கு and all that) காந்தி கிராமத்தையும் வைத்துக் கொண்டு கதை எழுதிப் படம் பிடிக்கத் தைரியம் வேண்டும்.

16

- ஏப்ரல் 1974

புறநானூறை சற்று ஆழமாகப் படித்தேன். எனக்கு நிறையச் சந்தேகங்கள் எழுந்தன. அவை இவை. ஏன் நானூறு? காலம் என்ன? திணை துறைப்படுத்தியவர் யார்? ஏன் பெரும்பாலான பாட்டுகளின் அரசர்களை இரவலர்கள் பிய்த்துப் பிடுங்குகிறார்கள்? 'உன்னைப்போல உண்டா நீ தருவாய். தராமலா இருப்பாய். எவ்வளவோ தந்தவனாச்சே நீ'' என்று சோப்பு வைத்து ''என்னைப் பார். நெடுந்தூரம் வந்திருக்கிறேன். வயிறு ஒட்டியிருக்கிறது. எலும்பு தெரிகிறது. எனக்குத் தெரியும் உன்னை புகழாமலேயே நீ

கொடுப்பாய். நீ பெரிய ஆள்'' என்ற பாடல்கள் நிறைந்த புறநானூற்றுக் காலம் பஞ்ச காலமா?

இன்னும் சில விஷயங்களும் தெரிகின்றன. ஈசல், முயல், இறைச்சி, மான் இறைச்சி இதெல்லாம் ரசித்துச் சாப்பிட்டிருக்கிறார்கள். சகுனம் பார்த்திருக்கிறார்கள். பரிசு கேட்கப் போகுமுன் கள்ளுண்டிருக்கிறார்கள். வடக்கிருந் திருக்கிறார்கள். பரிசு கொடுக்க தாமதித்தால் 'போடா நீயும் உன் பரிசிலும்' என்று திட்டுவதிலும் புலவர்கள் தயங்கவில்லை. எல்லாப் பாடல்களும் இருக்கும் நேரிசை ஆசிரியம். பொதுவான உணர்ச்சி கலக்காத தன்மை - போரில் இறந்துபோன கணவனுக்கு ஒப்பாரிப் பாட்டிலும் இயற்கை வர்ணனை - சில திரும்பத் திரும்ப வரும் சொற்றொடர்கள், இவைகளை எல்லாம் பார்க்கையில் ஒரே ஆளே முழுவதையும் எழுதியிருக்கலாம் என்று சந்தேகம் தோன்றுகிறது. உதாரணம் ஒரு நல்ல பாட்டு.

காவற் பெண்டின் பாட்டு. சோழன் போர்வைக் கோப்பெருநந் கிள்ளியின் தாயார் பாடிய தாகப் பாட்டாம் இது.

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ? என வினவுதி; என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன்; ஒரும்
புலி சேர்ந்து போகிய கல் அளை போல
ஈன்ற வயிறே இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே!

புரிகிறது என்று நினைக்கிறேன். புலி கிடந்து வெளியே போன மலைக்குகைபோல என் வயிறு. அவன் எங்கே என்று தெரியாது. போர்க்களத்திற்கு நிச்சயம் வருவான் என் மகன், அங்கே போய்ப் பார் என்றாளாம் தாய்.

ஆனால் இதை யார் எழுதியிருக்க முடியும் என்று யோசித்துப் பாருங்கள். தாயா? கேள்வியையும் கேட்டுக் கொண்டு பதிலையும் சொல்வாளா?

புறநானூறின் ஆச்சரியம் அதன் காலத்தில் தான் புராதனத்தில்தான் இருக்கிறது. அதில், சொல்லப்படும் வீரம் இன்று எழுதப்பட்டால் ராணியில் கூட எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அன்று எழுதப்பட்டதுதான் இதன் முக்கியம் மற்றும் சிக்கலான வரிகளின் நடுவே பளிச்சிடும் சில கவிதை வரிகள் - 'ஏற்றுக உலையே! ஆக்குக சோறே! போன்ற வரிகளின் Lustiness 'பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே' போன்ற வரிகளின் self confidence 'வேந்தர் எம் குன்றும் கொண்டார்? யாம் எந்தையும் இலமே' போன்ற வரிகளின் சிக்கனத்தில் ததும்பும் சோகம் - என்று எழுதப்பட்டவை இவை?

17

- ஜூலை 1974

துரை சீனிச்சாமியின் அந்தி என்கிற கவிதைத் தொகுப்பு வரப்பெற்றேன். நீலப்பட்டின் மேல் சீனிக்கற்கண்டுப் புள்ளி மீன்களை பார்வை விரிந்த வாயால் இரவெல்லாம் தின்னும் இந்தக் கவிஞர். சோசலிசக் கோபங்களுக்கு உள்ளாகையில் விழுந்து விடுகிறார். புதுக் கவிதையின் நோக்கம் சமூக சீர்திருத்தமா என்பது விவாதத்துக்குரிய விஷயம்.

ரேடியோ சிலோனில் ஒலிபரப்பாகும் கிறித்தவ நிகழ்ச்சிகளை சிலசமயம் அவற்றின் விநோதமான தமிழுக்காகக் கேட்கிறேன். ரட்சிக்கப்பட்டும், விசுவாசிக்கப் பட்டும், நேசிக்கப்பட்டும், வேறு வேறு விதமான செயப்படும் பொருள்களிலேயே உலவும் இந்தச் சுவிசேஷம் திடீரென்று ஜொலிக்கிறது. ''என் ராஜாவே எம் எல்லோரையும் உம் இரக்கத்தால் மூடும் சாவமி.''

❑

என்னதான் ஆனார்கள் இந்த பீட்டில்ஸ் இளைஞர்கள். பிரிந்து போன பின் அவர்களைப் பற்றிப் பேச்சே இல்லை. ஒரு காலத்தில் அவர்கள் வருமானம் பிரிட்டனில் டிஃபென்ஸ் பட்ஜெட்டைவிட அதிகமாக இருந்தது. இப்போது எல்லாம் ஓய்ந்த பிறகு அவர்களின் ஒரே ஒரு 'லாங் ப்ளே' இசைத் தட்டு, நிச்சயம் இந்த நூற்றாண்டின் இறுதிவரை கூட நிலைத்து நிற்கும் என நினைக்கிறேன். அதை பாப் யுகத்தின் தேசிய கீதம் என்று சொல்லலாம். 'ஸார்ஜெண்ட் பெப்பர்ட்ஸ் லோன்லி ஹார்ட்ஸ்கிளப்' என்ற சிக்கலான பெயர் கொண்ட இந்த இசைத்தட்டில் பதிந்த பாடல்களின் இசை இந்திய சித்தாரிலிருந்து ஆப்ரிக்க நாட்டுப் பாடல்கள், ஸ்காண்டிநேவிய கீதங்கள், பரீட்சார்த்தமான ஆர்கன் எலக்ட்ரானிக்கல், ட்ராஃபிக் சப்தங்கள் எல்லாவற்றையும் இணைத்த ஒருவிதமான ஓவியம். A Day in the life என்கிற ஒரு பாட்டில் I am turning myself on என்பதுடன் புறப்படும் வயலின் பின்னல்கள் ஒரு எல்.எஸ்.டி. அனுபவம். அவர்கள் எங்கிருந்தாலும் வாழ்க.

❑

டாக்டர் கலைஞர் கருணாநிதியை ஒரு பொதுக் கூட்டத்தில் கேட்டேன். கருணாநிதிக்கு ஒரு instinctive sense of timing இருக்கிறது Demogogue என்பதற்குச் சரியான உதாரணம் அவர். கூட்டம் பங்களூர் தமிழ்ச் சங்கக் கூட்டம். சாகுந்தலத்திலிருந்து மேற்கோள் காட்டினார். (பக்கத்தில் - மாஸ்தி வெங்கடேச அய்யங்கார்...) சங்கத்தினர் அவரை ஜோடித்துத் திகட்டத் திகட்டப் புகழ்ந்தனர். 'நீங்கள் எதற்காகப் புகழ்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்' என்று நேராகச் சொல்லிவிட்டு, தன் உரையின் கடைசி வாக்கியமாக ஐம்பதினாயிரம் ரூபாயை நன்கொடையாக அலட்சியமாக அறிவித்தார்.

18

- ஆகஸ்டு 1974

மறுபடி புறநானூறுக்கு அழைக்கிறது சென்ற இதழில் வந்த ஒரு கடிதம். ''எழுதினால் பிரசுரிக்க ஆள் இருக்கிறது என்று எதையும் எழுதும்'' சலுகை, கடிதம் எழுதி னவருக்கும் கிடைத்திருப்பதால் புன்னகையுடன் மன்னிப்போம்.

தமிழ்த் தாத்தாவின் சிலையை நீக்கி அங்கு நின்று கொள்ளும் உத்தேசம் எனக்கு இல்லை. ஆராய்ச்சி செய்யவோ, பி. எச்டி. வாங்கவோ முயற்சி செய்யும் திராணி எனக்கு இல்லை. புறநானூற்றைப் பற்றி நான் சொன்ன விஷயங்கள் யாவும் என் சொந்த அபிப்பிராயங் களும் சந்தேகங்களுமே. பண்டிதத்தனத்துக்கு அப்பாற்பட்டு இம்மாதிரி சில கேள்விகள் இருப்பதை சகித்துக் கொள்ள முடியாத இந்த நிலை கூட தமிழன் தலைவிதிகளில் ஒன்று. மற்றொன்று புறநானூற்றுக்கு சப்போர்ட்டாக 'தீபம்' 70 செப்டம்பரில் வந்த சிறு கதையைக் கூப்பிடும் Anachronism.

எல்லாப் பாடல்களும் நேரிசை ஆசிரியம் என்று சொன்னது தவறு; ஒப்புக் கொள்கிறேன். மொத்தம் நானூற்றுக்குச் சற்றுக் குறைவான பாடல்களில் நான்கு பாடல்கள் தான் நேரிசை ஆசிரியத்தில் இல்லை என்று அவரால் குறிப்பிட முடிகிறது. இன்னும் சில தேடினால் அகப்படலாம். ஒத்த சிந்தனை கவிஞர்களுக்கு ஏற்படாது என்று சொல்ல முடியாது. ஆனால் ஒரே மாதிரி சொற்றொடர்கள் திரும்பத் திரும்ப வருவது வேறு விஷயம். ஷேக்ஸ்பியர் எழுதியது தானா என்று சந்தேகமாக இருக்கும் சில நூல்களை authenticate செய்வதற்கு திரும்பத் திரும்ப வரும் சொற்றொடர்களின் statistical distibutionஐ அலசி ஆராய்ச்சி செய்கிறார்கள். விஞ்ஞானப்படி ஒப்புக் கொள்ளப்பட்ட முறை இது.

'அவன் எப்படித் தப்பித்தான்னு கேக்கறயா சொல்றேன் கேளு' என்று பாட்டியோ தாத்தாவோ கேட்க மாட்டார்களா என்று கேட்கிறார். நிச்சயம் கேட்பார்கள். ஆனால் ''என் சிறிய வீட்டின் தல்ல தூணைப் பிடித்துக் கொண்டு அவன் எப்படித் தப்பித்தான்னு கேக்கறயா? சொல்றேன் கேளு'' என்று எந்தப் பாட்டி கேட்பாள்!

நான் சொல்ல வந்த விஷயம் அவருக்குப் புரியவில்லை. அதிகமான உணர்ச்சிகளைப் பற்றிச் சொல்லும்போதுகூட புறநானூறுப் பாடல்களில் இயற்கை வருணனை, நேரிசை ஆசிரியத்தின் இலக்கணக் கட்டாயங்கள், 'ஒரும்', 'மாதோ' போன்ற அசைச் சீர்கள் குறுக்கிடுகின்றன.

'ஆனந்தப்பையுள்' ஒப்பாரியில் அடங்காது என்று தமிழ் வாத்தியார் போல் சொல்கிறார் சரி. கையறு நிலைதான் ஒப்பாரி என்கிறார். சரி. கையறு நிலைப்பாடங்களில் இயற்கை வருணனை அதிகமில்லை என்கிறார். தப்பு அவர் குறிப்பிடும் 230 -242 பாடல்கள் அவருக்கு சௌகரியமான பாடல்கள். கையறு நிலையில் பல பாடல்கள் உள்ளன. அவைகளில் ஒன்று சொல்கிறேன். பாடல் 116 கபிலர், இறந்த பாரியை நினைந்த கையறு நிலை.

''பயில் பூஞ்சோலை மயில் எழுந்து ஆலவும்
பயில் இருஞ்சிலம்பிற் கலை பாய்ந்து உகளவும்
கலையும் கொள்ளாவாகப் பலவும்
காலம் அன்றியும் மரம் பயம் பகரும்.''

மயில்கள் சோலையில் ஆட குரங்கினம் மலை முகடுகளில் தாவி விளையாட அவைகள் சாப்பிட்டு முடிந்தும் தீராத கனிவகைகள் நிறைந்த வளமான மலை .... ஒப்பாரியா அய்யா இது?

'போடா நீயும் உன் பரிசிலும்' என்றவரிடையே முரசு கட்டிலில் தூங்கிய மோசிகீரனார் ஒரு 'ஜெண்டில் மன்' என்கிறார். மறக்கவில்லை. ''வாயிலோயே வாயிலோயே''

என்று காவற்காரனிடம் அதிகமாகத் தூற்றிவிட்டுப் போன புலவரும் ஒருவர் இருந்திருக்கிறார். யார் தெரியுமா? ஔவையார்.

19

-செப்டம்பர் 1974

"பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கி வைத்தாள் வைத்ததன்றி
என்னுள் புகுந்தான்..."

திருப்பாணாழ்வார் (8-ஆம் நூற்றாண்டு) பாடல்களில் ஒன்றில் முதல் இரண்டு அடிகள் இவை. இதில் ''வாரமாக்கி வைத்தான்'' என்கிற சொற்றொடர் என்னைச் சற்றுக் குழப்பியது. 'வாரம்' என்ற சொல்லுக்கு அகராதி தரும் அர்த்தங்கள் இவை. பக்கம், இசைப்பாட்டு, கிழமை, குடியிறை, அன்பு, பட்சபாதம், நடை, வரம்பு, பின்பாட்டு, மாகூற் பங்கு, மலைச்சாரல்.

இதில் எந்த அர்த்தத்தைக் கொள்வது? அன்பு என்பது கிட்டக்கிட்ட வருகிறது. தன்னிடத்தில் அன்புடையவனாகப் பண்ணி வைத்தான் என்று சொல்லலாம் மேல் வாரம் குடிவாரம் என்று இப்பொழுதும் வழக்கில் இருக்கும் சொற்றொடர்கள். நிலச் சொந்தக்காரர்களையும் குத்தகை கொடுப்பவர்களையும் குறிப்பிடுகின்றன. கடவுள் சொந்தக்காரன், நான் அவனுக்கு குத்தகைப்பட்டவன் என்கிற அர்த்தம் இன்னும் கவர்ச்சி மிக்கதாக இருக்கிறது.

இந்த உதாரணத்தை நான் தருவதற்கு வேறு ஒரு காரணம் இருக்கிறது; ஒரு சொல்லுக்கு எத்தனை அர்த்தங்கள் பாருங்கள்? மலைச்சாரல் எங்கே மகசூற்பங்கு எங்கே? ஃப்ராங்களின் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த போது மேற்கத்தியப் பார்வையிலிருந்து தமிழை ஆராய்பவர்களுக்கு இம்மாதிரி ஒரே சொல்லுக்கு etymologi-

வி ஆகச் சம்பந்தப்படுத்த முடியாத பல அர்த்தங்கள் இருப்பது தமிழில் ஒரு பெரிய தடங்கல் (வாரம்) என்றார். ஏன் இப்படி என்று தெரிந்தவர்கள் சொல்லலாம்.

மசால் தோசைக்குக் காத்திருப்பவன் சிந்தனையும், கவிதைகளைக் கிழித்துப் போட்டு விட்டு நானே தூது வரவா என்று கேட்கும் காதலனும் (சென்ற இதழ்) புதுக் கவிதையின் ஒரு முக்கிய அம்சத்தை எடுத்துக் காட்டுகின்றன. அது விஷயத்தின் ஸர்வ வியாபகம். ரோடு இன்ஜின் சக்கரத்தில் கரிக்கோட்டில் எழுதப்பட்ட பெயரைப் பற்றி ஞானக்கூத்தனின் (பிரசுரிக்கப்படாத) கவிதை ஒன்று சொல்கிறது என ஞாபகம். இயற்கை வருணனைகளையும் இந்தப் புதுக் கவிஞர்கள் விட்டு வைக்கவில்லை. வர்ணனைகளை கொஞ்சம் நவீனமாகச் செய்கிறார்கள்.

எதைப்பற்றி வேண்டுமானாலும் எப்படி வேண்டு மானாலும் எழுதும் இந்த Instant கவிஞர்களின் முன்னோடி காளமேகப் புலவர் எனச் சொல்லத் தோன்றுகிறது. மோர்க்காரி, தென்னைமரம், தேவடியாள் என்று வர்ஜ்யா வர்ஜ்யமில்லாமல் டிஸ்ட்ரிக்ட் லைப்ரரியின் ஒரு அலமாரி நிறைய இருக்கும் தனிப்பாடல்களில் (தனிப் பாடற்றிரட்டு) காளமேகத்தைக் காணலாம்.

புதுக்கவிதையை அந்தத் தனிப்பாடல்களுக்கு ஒப்பிடவில்லை நான். ஒரு விதமான liberated verse என்றுதான் சொல்கிறேன். ஏகப்பட்ட லிபரேஷன் நூற்றுக்கணக்காகச் சேர்ந்துபோன இந்தக் கவிதைகளில் எனக்கே எனக்காக பிரத்தியேகமாக ஒரு சின்ன சின்னத் தொகுப்பு கொண்டு வர உத்தேசித்திருக்கிறேன். ரூபாய் எவ்வளவு ஆகும்?

20

- அக்டோபர் 1974

புத்தகங்கள் கொள்ளை விலை விற்கும் இந்த தினங்களில் நான் புதிய ஊருக்குச் செல்லும்போது எப்போதும் பழைய புத்தகக் கடைகளை நாடுவேன். ப.பு. கடைகளில் முன் போல் ரத்தினங்கள் கிடைப்பதில்லை. சினிமா பாட்டுப் புத்தகங்கள் தான் ஏராளமாக இருக்கின்றன. அறிஞர் அண்ணாவின் புத்தகங்கள் நிறையக் கிடக்கின்றன. சாண்டில்யன் நாவல்களின் இரண்டாம், மூன்றாம் பாகங்கள் கிடைக்கின்றன. 2000 வார்த்தைக்கு உட்பட்ட அமெரிக்க பிரசார புத்தகங்கள் கிடைக்கின்றன. அப்புறம் 'முல்லையின் தொல்லை' போன்ற கவிதைத் தொகுப்புக்கள் கருத்தட்டாங்குடியிலிருந்து கவிஞரே சொந்த செலவில் வெளியிட்டது. சகட்டு மேனிக்குக் கிடைக்கிறது. உடல் உறவு பற்றி ஆப்டோன் படங்களடங்கிய சரக்கு ஏராளம்.

இந்தக் குப்பையில் திடீரென்று ஒரு மாணிக்கம் மிளிரும் சமீபத்தில் நான் கண்டெடுத்த மாணிக்கங்களில் ஒன்று தொட்டால் பொடிப்பொடியாகிவிடக் கூடிய சூடாமணி வசனம். உதாரணம் ''ஈதிப்படியிருக்க மேருமலைச் சாரலில் விஞ்சையருலகு எனப்படும் மலையொன்றுண்டு. அது எக்காலத்தும் சந்திரப் பிரகாசத்தை வீசுவது. அம்மலை கடலைத் தீண்டி மேலுயர்ந்து போய் வானையளாவிப் பரிதி தன் கிரணம் பரவும் திசையெலாம் விளங்கும் பண்பினையுடையது. அதன் சிகரங்கள் நவரத்தின சகிதமாய் நாற்புறமும் ஒளி பரப்பும். அம்மலைக் குகைகடோறும் சோலையிடமெங்கும் வித்தியாதரர் தம்மகளிருடன் களித்து விளையாடி பலவித இன்பமும் அனுபவிப்பார்கள். சிகரங்களினின்று 'இழும்' எனும் ஒலியொடும் இழிந்தோடி வரும் அருவிகள் இயல்பாகவேயோ அன்றி விஞ்சையர், மகளிர் துளைந்தாடுவதனாலேயோ எக்காலத்துக்கும் சாதி மல்லிகையின் நறுமணம் கமழா நிற்கும்.''

நிஜமாகவே வாசனையடிக்கிற வசன நடைமற்றொன்று நாற்பது ஸம்ஸ்காரங்கள். 2, 4, 6 போன்ற இரட்டைப்பட்ட தினங்களானால் ஆண் சிசுவும் 1,3, 5 போன்ற ஒற்றைப்பட்ட தினங்களானால் பெண் குழந்தையும் உண்டாகும். இந்த 16 நாட்களிலும் முதல் நாலு தினங்களிலும் அமாவாஸ்யை, பௌர்ணமி, அஷ்டமி, சதுர்தசி, ஏகாதசி, துவாதசி, ஸங்க்ரமணம், ஜன்ம நட்சத்திரம் ஆகிய நாட்களிலும் ஸ்திரீ புருஷ ஸங்கமம் கூடாது. ரஜஸ்வஸயான முதல்நாள் சண்டாளி; இரண்டாம் நாள் ப்ரும்மஹத்தி செய்தவள்; மூன்றாம் நாள் வண்ணாத்தி; நான்காவது நாள் ரஜஸ்வி ஸம்பந்தம் இருக்குமாகையால் ஸத்புத்ரனை விரும்புவோர், அந்த 4 தினங்களையும் விலக்க வேண்டும். 4வது தினத்தில் உண்டாகும் சிசு அல்பாயுஸ்? 5ல் புத்ரீ 6ல் மத்யமமான புத்ரன், 7ல் புத்ரனில்லாப் பெண் 8ல் அடக்கி ஆளும் புத்ரன், 9ல் நல்ல புத்ரீ, 10 நல்ல புத்ரன் 11ல் அதர்மம் செய்யும் பெண் 12ல் சிறந்த புத்திரன், 13ல் விபச்சாரம் செய்யும் பெண், 15ல் நல்ல இடத்தில் வாழ்க்கைப் படும் பெண், 16ல் ஸகல நற்குணமுள்ள புத்ரன்! உங்கள் தினம் எது?

21

- நவம்பர் 1974

ஜீ. நாகராஜனின் ''நாளை மற்றுமொரு நாளே' என்கிற நாவலின் ஆரம்பத்தில் சிலை சிரிக்கிறது. கந்தனின் அம்மாவின் முகத்தை ஞாபகப்படுத்துகிறது. அதன் மார்பிலிருந்து ஏதோ ஒரு விழுந்த மறுகணம் அதே ஒலி 'கேப்' போல அவன் காதில் வெடிக்கிறது.

இந்த ஆரம்பத்தின் மெலிதான சர்ரியலிஸம் கதை முழுவதும் விரவி வருகிறது. கந்தன் என்கிற அக் கதாநாயகன் ஒருவிதமான ooiJob ஈஸ. அவன் ஒரு நாளைய சம்பவங்களை சித்தரிக்கிறது புத்தகம். பெரும்பாலும் சாராயம் நனைந்த கணங்களில் அவன் தன்சென்றகால

சம்பவங்களை நினைக்கிறபோது, அவன் வீட்டை விற்று பெண்டாட்டியை விலைக்கு வாங்கியது, அவளைக் கூட்டிக் கொடுப்பது, அவன் பெண் இறந்துபோனது, பையன் தொலைந்துபோனது போன்ற இதர விஷயங்கள் நமக்குத் தெரிகின்றன. இந்த 'ஃப்ளாஷ் பாக்' உலகத்தில் அக்கிரகாரத்தில் இறைச்சி விற்கிறார்கள். கோயில் நிலத்தில் லாட்ஜு கட்டி வேறு விதமான உற்சவம் நடத்துகிறார்கள். ஆயிசா பீபீ, ஜரின், சரோஜா, என்று ஜாதிக்கு ஜாதி பெண்கள் சோரம் போகிறார்கள். அவர்களைப் பிள்ளைமார்களும் முதலியார்களும் தேவர்களும் பார்ப்பனர்களும் பேருக்குப்பேர் வைப்பாட்டிகளாக வைத்துக் கொண்டி ருக்கிறார்கள். ஆங்கிலோ - இந்தியப் பெண் ஒப்பந்தம் எழுதி வாங்கிக் கொண்டு ஷரத்துப்படி விஸ்கி கேட்கிறாள்.

கந்தனின் சொந்த வேதாந்தம் என்று ஏதாவது சொல்லப்போனால் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதைத் தவிர வேறு எதுவும் ஸ்திரமாகவோ எதிர்பார்க்கக் கூடியதாகவோ இல்லை. இவனை திடகாத்திரனாகக் கொள்ளலாம். நூறு நூறு மில்லியாக நிறையக் குடிக்கிறான்...க்கிறான். தின்கிறான். திரிகிறான் பார்பர் ஷாப் போகிறான் (நேச்சராக இருக்கும் படங்கள் சிவுக் சிவுக் என்று புலம்பும் கத்திரிக்கோல்) சினிமாத் தியேட்டரில் ஒரு 'கைம்பெண்டாட்டி' கிராக்கியுடன் பூ வாங்கிக் கொடுத்து அவள் குழந்தையை வாங்கிக் கொண்டு அவளை அழைத்துச் செல்கிறான், குதிரை வண்டியில் செய்தித்தாள் படிக்கக் கேட்கிறான். (மூன்றாவது பெண்டாட்டி... குழந்தை கொலைவழக்கு) லாட்ஜில் ஒரு ஆளைப் பயப்படுத்தி பணம் பிடுங்குகிறான். குறுக்கு வழியில் டவுனுக்குச் செல்லும் போது அன்னக்கிளியைப் பார்த்துவிட்டு, ஒரு ஆள் கொலை செய்யப்படுவதையும் பார்த்து விட்டு போலீசுக்கு சொல்லிவிட்டு லாக்கப்பில் இரவைக் கழிக்கிறான்.

இந்த நாவலின் முன் பகுதிகளில் இருக்கும் எக்ஸிஸ் டென்ஷியலிஸம் பின்பகுதியில் விடுபட்டுப்போகிறது.

இந்த நாவலை நல்ல நாவல் அல்லது மோசமான நாவல் என்கிற தெரிந்த வார்த்தைகளில் விமர்சிப்பது பொருந்தாது என்று நினைக்கிறேன். (கவிதையிலிருந்து கழிசடை வரை எல்லாம் இருக்கிறது.) இதில் இருக்கும் நகைச்சுவையை Black humour வகையில் சேர்க்கலாம். Donleavyயை ரசிப்பவர்கள் இந்த நாவலை மிகவும் ரசிக்கலாம். ஆனால் நாகராஜனின் நாவலில் ஆரம்பம், முடிவு, கதை அமைப்பு போன்ற சம்பிரதாய விஷயங்களைத் தேடுபவர்கள் காக்காக் கடையில் ஒரு பிளேடு ரத்தப் பொரியல் சாப்பிட்டு விட்டு, ''அது மார்க்க மில்லாதது... அபாதா. அது வரம்பில்லாதது அனந்தோகாரா...'' என்று நூறு தடவை சொல்லிப் பார்க்கலாம்.

22

- ஜனவரி 1975

ரஷ்யாவிலிருந்து வெளியான Semiotics பற்றிய ஒரு புத்தகத்தில் தமிழ் பற்றி எழுதி இருப்பது இது (Semiotics என்பது குறியீடுகளைப் பற்றிய இயல்.)

''தென்னிந்தியாவின் தமிழர்களிடம் கட்டுப்பாடான ஜாதிப்பிரிவு இருந்தது. மேல் ஜாதியினர் பிராமணர்கள் (புரோகிதர்கள்); அவர்களுக்குக் கீழ் க்ஷத்திரியர்கள் (அரசாங்க ராணுவத் தொழில்கள்). இன்னும் கீழ் வைசியர்கள் (வியாபார விவசாயத் தொழில்கள்); எல்லாவற்றிற்கும் கீழே சூத்திரர்கள் (சம்பிரதாயப்படி அடிமைத் தொழில் கொடுக்கப்பட்டவர்கள்) இந்த ஜாதி அமைப்பு தமிழ் மொழியிலும் பிரதிபலித்தது பிராமணர்கள் ஒரு ஒலிக்குறிப்பை (Phoneme) 'ஷ' போலவும் வைசியர்களும் க்ஷத்திரியர்களும் அதை 'ச' போலவும் சூத்திரர்கள் 'ஸ' போலவும் உச்சரித்தார்கள்.''

காம்ரேட் கோண்ட்ரடோவுக்கு எங்கிருந்து இந்தத் தகவல் கிடைத்திருக்கும்!

இம்மாதிரி மேல் நாட்டுப் புத்தகங்கள் பலவற்றில் பலர் தமிழைப்பற்றி ரீல் விட்டிருக்கிறார்கள்.

❑

கதை நாவல்களை எழுதும் முறை பற்றி சற்று அதிகமாகக் கவலைப்படுபவன் நான். இதைப் பற்றிக் கவலையே பட வேண்டாம் என்னும் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அவர்களைப் பசித்த புலி தின்னட்டும். தற்போது எழுதப்படும் கதைகளில் கீழ்க்காணும் அம்சம் ஒன்றைப் பார்க்கிறேன். அதை ஒரு மானசீக உதாரணத்தின் மூலம் விளக்குகிறேன். உண்மையான உதாரணங்கள் பல கொடுக்கலாம். ஆனால் சம்பந்தப்பட்ட படைப்பாளிகள் கோபித்துக் கொள்ளுகிறார்கள். எனக்கு இந்த அனுபவம் முன்பு நிறைய ஏற்பட்டிருப்பதால் ஒரு மானசீக உதாரணமே தருகிறேன்.

"இவன் மனத்தின் அடித்தளத்தில் சுரங்கள் ஜதிபிரிந்து பூரித்து உவந்து எழுந்தன. சிறுவயதில் அவளைக் கண்டபோது மலர்ந்த முதல் எண்ணங்கள் மீண்டும் மலர்ந்தன. இன்ப நிலைகள் அழுத்தின. அந்தக் கணத்தின் விகசிதத்தில் தோன்றிய கால மாற்றம் அதற்காக அதன் ஒரு வாழ்நாளைக்கூட வீணடிக்க முடியும் என்றே தோன்றியது. அவளை அவன் கேட்க விரும்பவில்லை. அந்த இளமைக் கணத்தின் அவளாகவே அவளை நினைக்க விரும்பினான். இருந்தும் அவ்வளைக் கேட்டு விடுவோம் என்கிற எண்ணத்தின் உந்துதலும் அதிகமாகவே இருந்தது போல் தோன்றியது இவனுக்கு. கேட்டுவிட்டான். "இன்னாம்மே நம்ம கைலேயே 'ராங்' பண்ட்டியே."

இது ஒரு gross parody தான். இருந்தும் மனத்தின் நினைவுகளுக்கும் அந்த நினைவுகளின் தொடர்ச்சியாய் வரும் பேச்சுக்கும் லெவலில் இவ்வளவு வித்தியாசம் இருப்பதை நான் பல தடவை பார்க்கிறேன். இது சரி தானா

என்பது சர்ச்சைக்குரிய விஷயம் (யோசு இருப்பதைப் போலவும் தோன்றியது இவனுக்கு.)

□

க்ரியா வெளியீடுகள் மூன்றையும் பார்த்ததில் அழகாகப் பதிப்பதற்கு சில புதிய பாடங்கள் கிடைக்கின்றன. சி.மணியின் கவிதைத் தொகுப்பு மிக அழகாகவே பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. 'கூட்டுப்புழுக்கள்,' ஞானக் கூத்தனின் 'அன்று வேறு கிழமை' போன்றவைகளும் அச்சுத்தரத்திலும் கட்டிடத்திலும் உயர்ந்து நிற்கின்றன. 'வானம்பாடி' என்று எனக்கு வந்த கவிதை இதழ்களில் துல்யமான காகிதத்தில் சுதந்திரமாகப் பறவைகள் பறக்கின்றன. இந்த நட்பு மிகுந்த கோஷ்டிப் போட்டி ஒரு நல்ல ஆரம்பமே. ஒருவரை ஒருவர் அழுக்கு நியூஸ் பிரிண்ட்டில் திட்டிக் கொண்டாலும் வெளியிடும் புத்தகங்கள் அழகாக இருப்பதை நான் மிகவும் வர வேற்கிறேன்.

23

- ஏப்ரல் 1975

ரேடியோவில் சில சமயம் சில ரத்தினங்கள் எனக்குக் கிடைக்கின்றன. ஒரு வியாழக்கிழமை இரவு என நினைக்கிறேன். தேசிய நாடகம், சர்வ மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு, இன்ச்சுக்கு இன்ச் வேறு வேறு ரூபங்களில் அலறும் நாடகம். திலீபன், பிரதாபன் போன்ற பெயர் கொண்ட பாத்திரங்கள் சுத்தத் தமிழில் பேசுகிறார்கள். கதை கச்சா முச்சா என்று போகிறது. நாடகத்தை என்னால் மூன்று நான்கு நிமிஷங்களுக்கு மேல் கேட்க முடியவில்லை. அதற்குள் ஒரு ரத்தினம் "நான் நீதிக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என் தந்தை ஒரு நீதிபதி என் தாய் ஒரு நீதிபதியின் மனைவி!"

ரேடியோ நாடகங்களே ஒரு தனிப்பட்ட ஜாதி. அவற்றை எழுதுபவர்கள் நிறையப் படிக்க வேண்டும். நிறையக் கேட்கவேண்டும். 'Sorry wrong Number' என்கிற ஒரு பதினைந்து நிமிஷ ரேடியோ நாடகம் அமெரிக்காவையே கலக்கியது. நூற்றுக்கணக்கான தடவை அது ஒலி பரப்பப்பட்டது.

பின் மேடையேற்றப்பட்டது. பின் சினிமாவாகக்கூட எடுக்கப்பட்டது. நாடகத்தில் ஒரே ஒரு பெண். ஒரு டெலிபோன், அவ்வளவுதான். படிக்க ஆரம்பித்தால் முடிக்கும்வரை நம் உடலும் உள்ளமும் பதறும். ஆல் இண்டியா ரேடியோவில் நாடகம் எழுதுபவர்கள் இந்த நாடகத்தைப் படிப்பது நலம். படித்தால் பலர் தொழிலை விட்டுவிட வாய்ப்பு இருக்கிறது.

கணையாழியின் சர்க்குலேஷன் எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. குறைவாகத்தான் இருக்க வேண்டும், ஆனால் இதைப் படிப்பவர்கள் நிறையப்பேர். நிச்சயம் பல பத்தாயிரத்துக்கு மேல் இருப்பார்கள் என நினைக்கிறேன். அகஸ்மாத்தாகச் சந்திப்பவர்கள் எல்லாம் இந்தக் கடைசிப் பக்கத்தைக் குறிப்பிடுகிறார்கள். நீர் **கணையாழி** வாங்குகிறீரா என்று கேட்டால் பெரும்பாலும் 'வாங்க வில்லை, பார்த்தேன்' என்கிறார்கள். இந்தப் பார்க்கிற ரகம் எப்படி என யோசிக்கிறேன். எட்டு மைல் சைக்கிளில் போய் டிஸ்ட்ரிக்ட் லைப்ரரியில் ஒரு நைந்து போன பிரதியைப் படித்து வருகிறார்கள் போலும். படித்து, தான் எழுதி அனுப்பி இருந்த கவிதையோ கடிதமோ வந்திருப்பதால் பிரதி வாங்குவார்கள் போலும். என் இலக்கிய நண்பர்கள் பலர் என்னிடம் **கணையாழியின்** சென்ற வருஷ இதழ்களைக் கேட்கிறார்கள். அனுபவிக்கிறார்கள் அவர்களை 'நீர் ஏன் வாங்குவதில்லை' என்று கேட்டு விடலாம். கேட்டாலும் உடனே சந்தா அனுப்பப் போகிறேன் என்று தான் சொல்வார்கள். அனுப்ப மாட்டார்கள். ரத்தத்தில் ஊறிய சமாச்சாரம் இது.

அமெரிக்காவில் இந்த மாதிரி ஒரு சிறிய பத்திரிகை ஆசிரியர் ஒரு வாசகரிடம் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். 'நீர் சந்தா கொடும். ஒரு வருஷம் படித்துப்பாரும். பத்திரிகை நன்றாக இல்லை என்றால் வந்து சொல்லும். உடனே உன் பணம் வாபஸ்' என்றார்: ஒப்புக்கொண்டு சந்தா செலுத்திய வாசகர் ஒரு வருஷம் இதழ்களைப் படித்துவிட்டு, ஆசிரியரிடம் 'வந்து படித்துப் பார்த்தேன். நன்றாக இல்லை' என்றார். ஆசிரியர் ஒப்பந்தத்தை மீறாமல் பர்ஸிலிருந்து பணம் எடுக்கும்போது வாசகர், 'எனக்குப் பணமாக வேண்டாம். அதற்குப் பதில் இன்னொரு வருஷம் எனக்குப் பத்திரிகை அனுப்பி விடுங்கள்' என்றாராம்.

எனவே எல்லா நாடுகளிலும் கணையாழி போன்ற பத்திரிகைகளும் இருக்கின்றன. இம்மாதிரி வாசகர்களும் இருக்கிறார்கள்.

24

- மே 1975

சென்ற இதழில் தமிழ் வாசக குணங்களைப் பற்றி எழுதி இருந்தேன். எனக்கும் அவற்றில் சில இருப்பதால் தான் என்னால் அதை எழுத முடிந்தது.

❑

டாக்டர் சாமிநாத அய்யரின் 'என் சரித்திரம்' படிக்க ஆரம்பித்தேன். முதலிலேயே என்னைக் கவர்ந்தது அவர் எளிய நடைதான். சாமிநாத அய்யரைப் பற்றிப் பக்கம் முழுவதும் எழுதுவதாக இருக்கிறேன். அதற்கு முன் அவர் சுயசரித்திரத்தைப் படித்து முடிப்பதாக உத்தேசம் அதற்கு முன் அயல்நாட்டு விவகாரம்.

❑

கிட்டத்தட்ட ஒரு ஃபுட்பால் மைதானம் அளவுக்கு இருக்கும் போயிங் 747-ல் என் அருகில் பிரயாணம் செய்த சர்தார்ஜிக்கு 74 வயது. கண் சரியாகத் தெரியவில்லை. இங்கிலீஷ் ஒரு வார்த்தை தெரியாது. பஞ்சாபி நனைந்த ஹிந்தியில் ஸர்தாருடன் பேசிய போது அவருக்கு குருதாஸ்பூர் அருகில் நிலம் இருக்கிறது. இரண்டு எருமை மாடுகள் இருக்கின்றன. உகாண்டாவிலிருந்து விரட்டப்பட்ட குடும்பம், பிரிட்டிஷ் பிரஜை, கார்டிஃப் அருகே கூலிவேலை செய்யும் மகன், மருமகள்... இந்தியாவுக்கு ஒரு நஷ்ட ஈடு கேஸுக்காக போயிங்கில் வந்து போகும் அளவுக்கு செல்வாக்கு இருக்கிறது. பேசாமல் குருதாஸ்பூரிலேயே ஆள் உயர டம்ளரில் பால் குடித்துக் கொண்டு சுகமாக இருக்கலாம். ஏன் இங்கிலாந்துக் குளிரை நோக்கி ஓடுகிறார்... புரியவில்லை.

❑

ஹீத்ரோ விமான நிலையத்தில் பாத்ரூம் அலம்புவதிலிருந்து சிகரெட் துண்டுகளைப் பொறுக்குவது, தரை சுத்தம் செய்வது இதெல்லாம் யார் இந்தியர்கள்! பஞ்சாபிப் பெண்கள்! வருத்தமாக இருந்தது. அவர்களுக்குக் கிடைக்கும் பிரிட்டிஷ் பவுண்டுகளைப் பதினெட்டால் பெருக்கிப் பார்த்தால் நிச்சயம் இந்தியாவில் ஒரு என்ஜினியருக்குக் கிடைக்கும் சம்பளத்திலும் அதிகமாவே இருக்கலாம்.... இருந்தும், அதற்காக இப்படியா பொறுக்கி வாழ வேண்டும். புரியவில்லை.

❑

ஒரு சதுர கஜம் நீலவானத்துக்கு ஏங்கும் நகரங்கள் மெலிதான மழையின் ஆயத்தம் எப்போதும் இருக்கிறது. விமான நிலையத்தில் பெட்டி படுக்கைகளுடன் குழந்தைகளையும் தள்ளு வண்டியில் செலுத்திக் கொண்டு செல்லுகிறார்கள்.

அந்தக் குழந்தைகளின் ஆரோக்யமும் கன்னத்தின் ஆப்பிள் சிவப்பும் எனக்கு கட்டிடங்களையும் கண்ணைப் பறிக்கும் கடைகளையும் விடக் கவர்ச்சியாக இருக்கின்றன. பொதுவாகவே யோக்கியமும் சுத்தமும் இந்திய சராசரிக்கு (மிக) அதிகமாக இருப்பதை உடனே, உடனே உணர முடிகிறது.

25

- ஆகஸ்ட் 1975

I have a lover's quarrel with the world"

கவிதையின் குறிக்கோள்களின் ஒன்று படிப்பவரை மகிழ்விப்பது என்று கொண்டால் நிச்சயம் ராபர்ட் ஃப்ராஸ்ட் படிக்கலாம். மெலிதான சந்தம் மிகுந்த வரிகளில் ராபர்ட் ஃப்ராஸ்ட் தின வாழ்க்கையின் இயக்கங்களை யதார்த்தத்துடன் அழகாகக் கவிதைகளில் எழுதி இருக்கிறார்.

நான் ஒரு கவிஞனில்லை. கவிதையை மொழி பெயர்ப்பது எனக்குச் சிறிது துணிச்சலான காரியமாகவே படுகிறது. இருந்தும் ஃப்ராஸ்டின் கவிதைகளைப் படிக்காதவர்களை ஃப்ராஸ்ட்டுக்கு அழைக்க இந்த இரண்டு மொழி பெயர்ப்புகளும் உதவும் என நம்புகிறேன்.

1. புல்வெளியை சுத்தம் செய்யச் செல்கிறேன்
இலைகளை மட்டும் பெருக்கிவிட்டு வந்து விடுவேன்
சில வேளை ஜலம் வடிவதைப் பார்த்துவிட்டு வருவேன்
அதிக நேரமாகாது நீயும் வாயேன்

* * *

கன்றுக்குட்டியைக் கொண்டுவரப் போகிறேன் அதன்
அம்மாவின் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறது
ரொம்பச் சின்னது

அம்மா அதை நக்கிக் கொடுக்கும்போது தடுக்கிவிழுகிறது
அதிக நேரம் ஆகாது நீயும் வாயேன்

2. டெலிபோன்

''முடிந்தவரை அதிக தூரம் நடந்தேன்
இங்கிருந்து இன்று
எல்லாம் நிசப்தமாக இருந்த நேரம் அங்கே
ஒரு மலரின் இதழின்மேல் காதை வைத்து
அதில் நீ பேசுவதைக் கேட்டேன் -
இல்லை என்று சொல்லாதே நான் உன்
குரலைக் கேட்டேன்
அதோ பார் அந்த ஜன்னலில் இருக்கிறதே
அந்த மலர் வழியாகத்தான் நீ பேசியிருக்க வேண்டும்
என்ன சொன்னாய் ஞாபகமிருக்கிறதா?''
''நான் என்ன சொன்னதாக நீ நினைத்துக் கொண்டாய்?
அதைச் சொல் முதலில்''
''மலரைப் பார்த்தேனா?
அதிலிருந்து தேனீயை விரட்டி விட்டு
என் தலையைச் சாய்த்து
மலரின் காம்பைப் பிடித்துக் கொண்டு
கவனித்துக் கேட்டேன்
நிச்சயம் கேட்டேன்''
''என்ன அது என் பெயரா?''
இல்லை 'வா' என்று நீயோ
வேறு யாரோ சொன்னமாதிரி இருந்தது''
''நான் அப்படி நினைத்திருக்கலாம் ஆனால்
இரைந்து சொல்லவில்லை''
''எனவே வந்து விட்டேன்''

யார் யாருடன் பேசுகிறார்கள் என்கிற கற்பனையை வாசகருக்கு விட்டுவிடும் இந்த இரண்டு கவிதைகளில் உங்களுக்கு ஃப்ராஸ்ட் பிடித்திருந்தால் அவருடைய Death of a Hired Hand என்கிற நீண்ட கவிதைச் சிறுகதையைப் படிக்கலாம்.

26

-செப்டம்பர் 1975

'கணையாழி'க்குப் பத்து வருஷம் நிரம்பியது போல் இந்தப் பகுதிக்கும் ஒன்பது வருஷம் பதினோரு மாதம் நிரம்பிவிட்டது. இரண்டாவது இதழில் 'நீர்க்குமிழிகள்' என்று தலைப்பைக் கொடுத்து ஸ்ரீரங்கம் எஸ்.ஆர் என்று பெயரையும் கொடுத்து என்னை ஆரம்பித்து வைத்தார் கஸ்தூரிரங்கன். அவ்வப்போது அம்பேல் வாங்கிக் கொண்டாலும் சுமார் 80 பக்கங்கள் எழுதி விட்டேன் என நினைக்கிறேன். இந்தப் பகுதிக்காகவே 'கணையாழி'யின் பிரதிகளைச் சேர்த்து வைத்திருக்கும் பிரகிருதிகள் உண்டு என்பது எனக்குத் தெரியும். அவர்களுக்கு சகல ஐசுவரியங்களும் கிட்டும். உடல் நலம் ஓங்கும், வாகனங்களால் இன்பம் கிட்டும். சுடிதத் தொடர்பால் உத்தியோக உயர்வு. ஒப்பந்த வியாபாரங்களில் மிகுந்த லாபம். சிறு பயண பலிதம் இவை ஏற்படும்.

❑

இந்தப் பக்கத்தின் சென்ற பகுதிகளில் பல தடவை அப்புறம் சொல்கிறேன், அப்புறம் எழுதுகிறேன் என்று சில விஷயங்களை ஒத்திப்போட்டு வைத்திருக்கிறேன் என்பது இப்போது குற்ற உணர்ச்சியுடன் ஞாபகம் வருகிறது. அவற்றை ஒவ்வொன்றாகத் தீர்த்துவிட உத்தேசம். முதலில் சாமிநாத அய்யரின் உரைநடை.

1940-ல் டாக்டர் சாமிநாத அய்யர் தன் சுயசரித்திரம் எழுதி இருக்கிறார். அதற்கு முன் ஒரு ஜுர வேகத்துடன், பழைய தமிழ் நூல்களை எல்லாம் சேகரித்துப் படித்துப் புரிந்து கொண்டு, திருத்தி, விளக்கம் கொடுத்து, பணம் தேடிப் பதிப்பித்திருக்கிறார். உக்கிரமான தமிழாசிரியர் களிடம் பாடம் கேட்டிருக்கிறார். நச்சினார்க்கினியாரையும்

மற்ற உரையாசிரியர்களையும் பிரித்துப் பார்த்திருக்கிறார். இந்தச் சூழ்நிலையில் அவர் தமிழ் நடை எவ்வளவு எளிமையாக இருக்கிறது பாருங்கள்; ''இது தான் எங்கள் ஊர். இப்பொழுது உள்ள உத்தமதானபுரத்துக்கும் 'எங்கள் ஊர்' என்று பெருமையோடு நான் எண்ணும் உத்தமதானபுரத்துக்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. என் இளமைக் காலத்தில் இருந்த எங்கள் ஊர்தான் என் மனத்தில் இடங் கொண்டிருக்கிறது. இந்தக் காலத்தில் உள்ள பல சௌகரியமான அமைப்புக்கள் அந்தக் காலத்தில் இல்லை. ரோடுகள் இல்லை; கடைகள் இல்லை; உத்தியோகஸ்தர்கள் இல்லை; ரெயிலின் சப்தம் இல்லை. ஆனாலும், அழகு இருந்தது; அமைதி இருந்தது; ஜனங்களிடம் திருப்தி இருந்தது; பக்தி இருந்தது. அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி நிலவியது; வீடுகளில் லக்ஷ்மிகரம் விளங்கியது.

❑



விஞோகட்

ஆரம்ப காலத்தில் சில படங்களும் வரைந்து கொண்டிருந்தேன். சிங்கம் ஞாபகம் இருக்கலாம். இந்த இதழுக்காகத் தனிப்பட்ட முறையில் ஒரு விஞோகட் செய்தேன். பார்க்க... இதை என் நண்பரும் சிறந்த ஆர்ட் க்ரிட்டிக்குமான பாஸ்கர சத்யாவிடம் காட்டியபோது ஒரு பதினைந்து நிமிஷம் அதையே உற்றுப் பார்த்துவிட்டு ''பாத்ரூம் எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார்.

அவ்வப்போது தெறிந்துக் கொண்டிருந்த தெறிகள் சமீபத்தில் காலாண்டு இதழாக மாறி மிக கனமாக வந்திருக்கிறது. வரவேற்கிறேன். சம்பத்தின் குறுநாவல் கலாப்பிரியாவின் குறுங்காவியம், சாமிநாதனின் கட்டுரை, புதுக் கவிதைகள் - இவை இருக்கின்றன.

❑

For Private Circulation only என்று போட்டு வரும் பல பத்திரிகைகளில் ஒரு சௌகரியம் தேதி கீதி எதுவும் போட வேண்டாம். அவ்வப்போது நண்பர்களிடமிருந்து காசு சேர்ந்தால் அச்சடிக்கலாம். இஷ்டத்திற்குப் புதுக்கவிதை இருக்கிறது. இந்தப் பத்திரிகைகள் ஆரம்பித்த உடனேயே வாழ்த்து அனுப்பி விஷய தானமும் ரெடியாகச் செய்யும் ஒரு கோஷ்டியே இருக்கிறது. நாகர்கோயிலிலோ அல்லது கருங்காட்டாங்குடியிலோ. எங்கே ஒரு சிறு பத்திரிகை ஆரம்பித்தாலும் உடனே தெரிந்துபோய் விடுகிறது. இந்தா புதுக்கவிதை... இந்தா கட்டுரை... இந்தா சிறு கதை... நல்ல ஆர்வமுள்ள கோஷ்டி, இவர்கள் பரவட்டும்.

27

- நவம்பர் 1975

ஷியாம் பெனகலின் 'நிஷாந்த் (இரவின் முடிவு) அவர் முந்தைய படமான 'அங்குர்' போலவே சுதந்திரத்திற்கு முற்பட்ட ஃப்யூடலிஸ்டிக் அமைப்பைப் பின்னணியாகக் கொண்டிருக்கிறது. பெரும்பாலும் அதே நடிகர்கள், அதே ஹைதராபாத் பிரதேசம். கிரிஷ் கர்னாட் இதில் சேர்ந்திருப்பதில் இதற்கு ஒரு புதிய பரிமாணம் கிடைக்கிறது. 'அங்குரை'விட இது அதிகம் வெளி நோக்கும் படம். ஒரு ஜாகிர்தார் குடும்பம், நான்கு சகோதரர்கள், மூத்தவன் (அம்ரேஷ் பூரி) குடும்பத்தின் அநியாய சட்ட திட்டங்களை அமைக்கிறவன். தம்பிமார்கள் நடத்துகிறார்கள். குடித்து

விட்டுக் கிராமத்தில் போய் கொஞ்சம் பார்க்க சுமாராக ஏதாவது பெண் இருந்தால் 'ராத்திரி வா' என்று விரல் சொடுக்கி ஆணையிடுகிறவர்கள். அந்தச் சூழ்நிலையில் புதிதாக வரும் ஒரு எலிமெண்டரி ஸ்கூல் மாஸ்டரும் (கர்னாட்) அவரின் அழகான மனைவியும் (ஷப்னா ஆஸ்மி) சிக்கிக் கொள்கிறார்கள். ஜாகிர்தாரின் கடைசி (மணமான) தம்பி ஷப்னாவின் மேல் ஆசைப்படுகிறான்.

வாத்தியார் கண்ணுக்கு முன்னாலேயே அவர் மனைவியைக் கவர்ந்து சென்று ரூமில் அடைத்து வைப்பாக ஆக்கிக் கொள்கிறார்கள். கிராமம் மௌனமாகப் பார்த்துக் கொண்டு நிற்கிறது. கையாலாகாத வாத்தியார் போலீசுக்குச் சொல்கிறார். வக்கீலைப் பார்க்கிறார். காங்கிரஸ்காரனைப் பார்க்கிறார். கலெக்டருக்கு புகார் எழுதிக் கொடுக்கிறார். அத்தனையையும் ஊடுருவிக் கரையான் போல் அரித்திருக்கும் அந்தச் சமுதாய அமைப்பில் அவருக்கு நியாயம் கிடைப்பதில்லை. (கிடைக்கக் கூடிய நியாயம் எவ்வாறாக இருக்க வேண்டும் என்பது யோசிப்பதற்குரியது) கோயில் அர்ச்சகரின் உதவியால் கிராமத்தில் ஒவ்வொருவருடனும் பேசி கிராமத்தின் கோபத்தை மெதுவாக உசுப்பி எதிர்ப்பை விதைக்கிறார். ஒரு திருவிழாவின் போது ஜாகிர்தாரின் குடும்பத்தை அடித்துக் கொன்று போடுகிறார்கள். வாத்தியாரின் மனைவியும் பலியாகிறாள்.

டைரக்டர் ஷியாம் பெனகல் இந்தக் கதையை நேராகச் சொல்லியிருக்கிறார். மிக யதார்த்தமான காமிராவும், ஹைதராபாத் கொச்சை மிகுந்த சிக்கனமான வசனமும் நல்ல நடிப்பும் லோகேஷனும் அவருக்கு உதவுகிறது. பெனகலை சத்யஜித் ராய்க்கு ஈடாக இன்னமும் சொல்ல முடியாது. ஆனால் ரிஷிகேஷ் முகர்ஜி போன்றவர்களின் லெவலுக்கு மேற்பட்ட டைரக்டர் என்று நிச்சயமாகச் சொல்லலாம். அவருடைய 'நிஷாந்த்'தைக் கொஞ்சம் நிதானமாகவே விமர்சிக்க வேண்டும். 'கணையாழி'யில் அவருடைய 'அங்குர்' சில மாதங்களுக்கு முன் விமர்சிக்கப் பட்டது

ஞாபகத்துக்கு வருகிறது. 'ஐராவதம்' போன்ற திறமையுள்ள விமர்சகர்கள் 'நிஷாந்த்'தை எடுத்துக் கொள்ளலாம். அப்போது என் சில சந்தேகங்களையும் கவனிக்கலாம்.

○ ஃப்யூடலிஸம் என்பது தற்காலத்தில் சோசலிச சர்க்கார் வந்து எல்லாவற்றையும் தேய்த்துவிட்ட சூழ்நிலையில் எவ்வளவு தூரம் relevant?

○ பெனகல் ஃப்யூடலிஸத்தை எதிர்க்கிறாரா அல்லது ஸப்கான்ஷியஸாக அதில் லேசாக ஈடுபடுகிறாரா? (நிச்சயம் கம்யூனிஸப் பார்வையில் எடுத்த படம் என்று இதைச் சொல்ல முடியாது).

○ இந்தக் கதையின் முடிவு எனக்கு குழப்பம் தருகிறது. ஷப்னாவின் குணச்சித்திரத்தில் முரண்பாடு இருக்கிறது. ஒரு சில முனகல்களைத் தவிர வேறு எதும் எதிர்ப்பு இல்லாமல் அவளைக் கவர்ந்து சென்று வீட்டில் வைத்துக் கொள்ளும் சகோதரர்களுக்குப் பணிகிறாள். கடைசியில் இளைய சகோதரன் கையைப் பிடித்துக் கொண்டு தப்பித்து ஓடப் பார்க்கிறாள். ஏன்?

28

(டிசம்பர், 1965)
-டிசம்பர் 1975

தீபாவளி என்றால் தீபாவளி மலர்கள் வரும் தினம் 'ந்ருஸிம்ஹப்ரியா' உட்பட எல்லாப் பத்திரிகைகளும் மலர்கள் போடுகின்றன. விளம்பரங்கள் நிறையப் போட்டு குண்டாகச் சில பத்திரிகைகள்... மற்றவையெல்லாம் சோனி மலர்கள்.

குண்டு மலர்களைப் பார்வையிட்டதில் ஒரே மாதிரியான Pattern தெரிகிறது.

அட்டையில் ஒயிலாகப் படம்.

பார்வதி பரமேச்வரா படமானாலும் கவர்ச்சியாக இருப்பது முக்கியம்.

முகப்புப் படமாக சங்கராச்சாரியார் அல்லது சங்கராச்சாரியார் அவரைப் பற்றி எதிர்ப்பக்கத்தில் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், அப்புறம் கதைகள், கதைகள் இன்னும் கதைகள்.

டிஷ்யு பேப்பர் விளக்கங்களுடன் டாப்லெஸ் நாயகிகளின் ஓவியங்கள்.

மாமனார் மாப்பிள்ளை அசட்டுக் கேலிப் படங்கள்...

'கலைமகள்' தீபாவளி மலர் சைஸ் மாறியிருக்கிறது. வேறு மாற்றங்கள் இல்லை.

முதல் தர எழுத்தாளர்களை அவசரப்படுத்தி எழுதச் சொல்லி கதைகளை நிரப்பியிருக்கிறார்கள் 'சுதேச மித்திரன்' மலரில்.

'ஆனந்த விகடனும்' 'கல்கியும்' ஒன்றையொன்று மிஞ்சுகின்றன. எடை போட்டுப் பார்த்ததில் கல்கி தீபாவளி மலருக்குத்தான் பரிசு. எட்டு அவுன்ஸ் அதிகம்.

❑

லா.ச. ராவின் ''பாற்கடல்'' என்ற கதையைப் படித்துப் பாருங்கள். அதற்கு ஈடான கதை இதுவரை எழுதப்படவில்லை.

❑

கவிதை எழுதுகிறவர்கள் நிறையக் கிளம்பியிருக் கிறார்கள். அன்று என் நண்பரும் கவிஞருமான 'கீகீ'யை (அவருடைய புனைப் பெயர்) பார்த்ததும் சரேலென்று சந்தில் மறைந்தேன். அவர் என்னைத் துரத்தி ஒரு மூலையில் மடக்கி பைக்குள்ளிருந்து ஒரு காகிதத்தை எடுத்து ஒரே நேரிசை வெண்பா எழுதியிருப்பதாகச் சொல்லி அதைக் கணையாழியில் பதிப்பிக்குமாறு சொன்னார். ஆசிரியர்

கி. க. மறுத்து விட்டார். அதனால் அதை இப்பகுதியில் நுழைத்திருக்கிறேன்.

விண்ணெடுகப் பரவி பாரீஸ் வனிகைகள் போல்
கண்ணடிக்கும் தாரகைகளின் கணக்கை எண்ணி வைத்த
முட்டாள் ஒருத்தர் இருக்கார் அவர் நமக்கு
எட்டாத கடவுளப்பா

(அடிக்க வராதீர்கள். 'கிகி' தான் எழுதினார், நான் எழுதவில்லை)

எண்ணிக்கையில் கவிஞர்களைவிட அதிகமாக வழங்குவது தமிழில் கவிதை வகைகள். சீனத்து ஆக்கிரமிப்பைப் பற்றி வஞ்சி விருத்தம், பாகிஸ்தான் சண்டை பற்றி தரவு கொச்சக கலிப்பா என்றெல்லாம் எழுதுகிறார்கள். கஷ்டப்பட விரும்பாதவர்கள்.

சீப்பு

சோப்பு

கண்ணாடி

என்று புதுக்கவிதை எழுதுகிறார்கள்.

❑

இந்த விசித்திரக் கோடுகள்(?) ஒரு மருந்தின் ரசாயன அமைப்பைக் குறிக்கின்றன. மருந்தின் பெயர் எல்.எஸ்.டி. நம்நாட்டு கஞ்சா அபின் போன்ற அல்கலாய்ட் வகையைச் சேர்ந்தது. இதைச் சாப்பிட்டால் அல்லது ஊசி குத்திக் கொண்டால் மனதில் சிலிர்ப்பு ஏற்பட்டு வினோதக் காட்சிகள் தெரிகின்றதாம். சாப்பிட்டவர்கள் கண்டு தெரிவித்தவை:

வர்ணக் கம்பளங்கள், முத்துக்கள், நவரத்தினங்கள், ரதங்கள், புத்தர் முகம், இயேசு கிறிஸ்து உருவம், சொர்க்கம்!

❑

கானட்ப்ளேஸ் கம்பெனி ஒன்றில் மிஸ்... டைபிஸ்ட்டாகச் சேர்ந்தாள். மானேஜர் முதல் மாதச் சம்பளத்துடன் ஒரு புடவையையும் அவளுக்குப் பரிசாகக் கொடுத்தார். அடுத்த மாதம் முதல் அவளிடமிருந்து சம்பளம் பெற்றார் மானேஜர்.

29

- ஜனவரி 1976

பத்து வருஷத்துக்கு முன் நான் எழுதியதை எல்லாம் பிரசுரித்துப் பழி வாங்குகிறார் ஆசிரியர். ஒரு வேளை அப்போது எழுதினதுக்கு இன்னும் கொஞ்சம் சாஸ்வதம் இருக்கிறது போலும். சென்ற இதழில் வந்த 'ஜோக்' தப்பாக வெளிவந்திருப்பதைக் கொஞ்சம் லேட்டாக உணருகிறேன்... முதல் மாதம் மிஸ்..க்கு சம்பளத்திற்கு பதில் ஒரு புடவை கிடைத்தது. மறுமாதம் அவள் சம்பளம் உயர்ந்தது. இதுதான் நான் அப்போது எழுதி (யிருக்க வேண்டி)யது. ஆதாரம் ப்ளேபாய்.

❑

முஸ்தபா என்கிற இனிய விமர்சகர் (சத்தியமாக அது நானில்லை) என் சில காரியங்களைத் தரமாக மற்றைய பக்கங்களில் செய்வதால் நான் ஒரு குட்டிக் கதை சொல்கிறேன். சொன்னவர் ராமகிருஷ்ணர்.

எல்லாவற்றையும் துற என்று ஒரு குரு சொல்லக் கேட்டு ஒரு சிஷ்யன் ஒரே ஒரு தவிர்க்க முடியாத கோவணத்துடன் ஊருக்கு வெளியே வாழ்ந்து வந்தானாம். அந்தக் கோவணத்தை அடிக்கடி எலி கடித்துவிட்டது. ஊரார் என்ன இது இவ்வாறு கந்தலாகக் கோவணம் கட்டியிருக்கிறாயே என்று கேட்க 'எலி' என்று பதில் சொன்னானாம் துறந்தவன். அதற்காக ஒரே ஒரு பூனை வளர் என்றார்கள். அவன் பூனை வளர்க்கத் தொடங்கினான். பூனைக்குப் பால் தேவையாக இருந்தது... இல்லாவிடில்

அது எலியைக் கடிக்க மறுத்தது. பாலுக்காக ஊரில் பிச்சை எடுக்க ஆரம்பித்தான், ஊரார் ஒரே ஒரு மாடு தருகிறோம். தினம் தினம் இங்கே வராதே என்று பசு மாட்டை தானமாக அளித்தார்கள். மாடு வந்தது. புல் தேவையாக இருந்தது. புல்லுக்காக தினம் ஊருக்குச் செல்ல ஆரம்பித்தான். இதற்காகவா இங்கு வருகிறாய், ஒரு கால் ஏக்கரா நிலம் வைத்துக் கொண்டு புல் பயிரிடேன் என்று புறம்போக்காக நிலத்தைக் கொடுத்தார்கள். நிலத்துக்கு வேலி, பால் கறக்க ஓர் இடையன், அவனுக்குச் சோறு, அதற்காகக் குடும்பம்... குரு மறுபடி சிஷ்யனை வந்து பார்த்த போது அவனைச் சுற்றி ஒரு பண்ணையே செழித்திருந்தது. மனைவி, மக்கள், சுற்றம், ஆட்கள், நிலம், மாடு, மனை என்று குரு வினவினார்: ''எதற்காக அப்பனே இதெல்லாம்?'' என்றார். ''சுவாமி எல்லாம் ஒரு கோவணத்துக்காக,'' என்றான் சிஷ்யன்...

பகவான் ராமகிருஷ்ணரிடம் சில எளிய கருத்துக்களை ஆணித்தரமாக வெளியிடும் திறமை இருந்தது. அவரின் சில கதைகள் நான்கு நான்கு வரிகள் தாம் இருக்கும். புரியும்.

30

- பிப்ரவரி 1976

இருவதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய ஆசிரியர்களின் படைப்பிலக்கியங்களை மதுரைப் பல்கலைக்கழகத்தார் வருஷா வருஷம் ஒவ்வொருவராக ஆராய்ந்து மதிப்பிடுகிறார்கள். சென்ற வருஷம் அகிலன். இந்த வருஷம் டாக்டர் மு.வ.

இந்த ரேட்டில் ஸ்ரீரங்கம் எஸ். ஆரின் டர்ன் வருவதற்கு 1999 ஆகிவிடும் போல இருக்கிறது. எவ்வளவு பேர் பாக்கி இருக்கிறார்கள்! சாண்டில்யன், பாரதிதாசன், ரத்தின சபாபதி, சோமு, அ.சா.ஞா., நா.பா., எழில் முதல்வன், மணியன், தண்டாயுதம்...

கருத்தரங்குத் தொடரின் அழைப்பிதழே ஒரு சிறிய புத்தக அளவுக்கு இருந்தது. டாக்டர் மு.வ. அவர்களின் ''குரட்டை ஒலி''யிலிருந்து மு.வ. வின் புதினங்களில் பொது உடைமைக் கருத்துக்கள் வரை பத்து டாக்டர்களும் முப்பது பிறர்களும் ஜனவரித் திங்களின் நான்கு தினங்களில் விஸ்தாரமாக ஆராய்ந்திருக்கிறார்கள். என் மதுரை நண்பர் ஜயபாஸ்கரன் இந்தத் தொடருக்குச் சென்றிருந்தால் (இவருக்கு இதெல்லாம் பிடிக்கும்) இது பற்றி எழுதலாம். *(எழுதியிருக்கிறார் - ஆசிரியர்).*

இந்தக் கருத்தரங்கத்துக்கு இறை வணக்கப் பாடலாக திருத்தக்க தேவரின்,

''மூவா முதலா உலகமொரு மூன்று ஏத்த...''

பொருத்தமாக இருந்திருக்கும்.

□

டாக்டர் மு.வ. அவர்கள் ஒரு காலகட்டத்தில் வருஷத்திற்கு இரண்டு காவியங்களாக எழுதித் தள்ளி இருக்கிறார். என் காலேஜ் தினங்களில் 'கள்ளோ காவியமோ', 'விடுதலையா', 'அல்லி' போன்ற காவியங்களை எல்லாம் படித்திருக்கிறேன். அப்போதே மு.வ.வின் பாத்திரங்கள் கொஞ்சம் உலர்ந்து தோன்றினர். கதை மாந்தர்கள் தரைக்கு ஓர் அடி மேலேயே மிதந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது.

□

மு.வ.வின் முக்கியமான புத்தகங்கள் 'திருக்குறள் தெளிவுரை'யும் 'மொழி நூல்'ம் என்பது என் அபி. முன்னதைப்போல் அவ்வளவு சுருக்கமாக தெளிவாகத் திருக்குறளைச் சொன்னவர்கள் இல்லை. பின்னதை மு.வ. வின் அதீதத் தமிழ்ப் பற்று சில இடங்களில் மாசு படுத்துவதையும் Bloomfield போன்ற தற்போது

நிராகரிக்கப்பட்ட அறிஞர்களிடம் அதிக ஈடுபாடு காட்டுவதையும் மறந்து விட்டால் ஒரு மிக நல்ல ஆராய்ச்சி நூல்.

□

அப்புச்சா சாகக் கிடக்கிறார். படுக்கையைச் சுற்றிலும் ஒரு கூட்டம். ''அப்பாடி ஏதாவது சொத்து சேர்த்து வெச்சிருக்கிறாயா? எங்கே வெச்சிருக்கே?''

''நிறைய இருக்கவேண்டும்! எங்கே வெச்சே செவிட்டு எழவே சொல்லித் தொலையேன்!''

''சொல்லு! சொல்லு! சொல்லு!''

கிழம் வாயைத் திறக்கவில்லை. அதற்கு வேளை வந்து விட்டது. சொல்ல முடியாமல் மறதி, எல்லோரும் காத்திருக்கிறார்கள். ம்ஹூம் மறந்துபோய்விட்டது. வாயைத் திறக்கவில்லை.

இது ஏதோ 'கணையாழி'க் கதையில் வருவது இல்லை. பெரியாழ்வாரின் பாடல் ஒன்றில் வருகிறது இந்தக் காட்சி.

''சோர்வினால் பொருள் வைத்தது உண்டாகில்
சொல்லு சொல்லு என்று சுற்றுமிருந்து
ஆர்வினாவினாலும் வாய் திறவாதே
அந்தக் காலம் அடைவதன் முன்னம்''

(சோர்வு - மறதி)

31

- மார்ச் 1976

தமிழில் போர்னோகிராஃபி இருக்கிறதா என்ன? சமீபத்தில் சென்னை சென்றிருந்தபோது கடைகளில் தொங்கிய முத்தம், பருவம், தில்குஷ் மோகினி போன்ற முன்பக்கமும் ஸ்டேப்பிள் அடித்த பத்திரிகைகளில்

சிலவற்றை ஆராய்ந்தேன். ம்ஹூம்! ஜாக்கெட்டின் பட்டன்களை அவிழ்ப்பதுடன் போர்னோ நின்றுவிடுகிறது. உண்மையான போர்னோ எழுதுவதற்கு ஒரு திறமை வேண்டும்... அமெரிக்கர்களை இதில் மிஞ்ச முடியாது - ஃபிலிப் ராத், வானர்கட் போன்றவர்களைத் தனிப்பட்டுக் குறிப்பிடலாம்.

தமிழில் ஆதியிலிருந்தே பார்த்தால் சங்கப்பாடல்கள் செக்ஸ் உணர்ச்சியற்று இருக்கின்றன. சில களவுப்பாடல்களில் உள்ள கலவையைப் பதம் பிரிப்பதற்குள் உயிர் போய் விடுகிறது. திருக்குறளில் காமத்துப் பாலில் சிலவரிகள் பளிச்சிடுகின்றன. இருந்தும் வள்ளுவரின் காமத்தில் உண்மையான காமம் கொஞ்சமே. மற்றவை பெருமூச்சுக்கள், ஊடல், வளை கழல்வது இன்ன பிறவே. தமிழில் ஏகமாகப் பரவிக் கிடக்கிற காவியங்களிலும் பிரபந்தங்களிலும் அவ்வப்போது தோன்றும் பெண்கள் யாவரும் (out of proportion) கொங்கைகளில் ஈர்க்கிடை போகாதாம். இல்லையென்றால் மலைக் குன்றுகளாம். இடை இல்லவே இல்லையாம் (உலோபியின் தருமம்); சமாளிக்கச் சிரமமான பரிமாணங்கள்; அருணகிரிநாதர் சில சமயங்களில் Pure Porno.

அருக்கு மங்கையர் மலரடி வருடியும்
கருத்தறிந்து பின் அரைதனில் உடைதனை
அவிழ்த்தும் அங்குள...

மேலே 'திருப்புகழில்' தேடிக்கொள்ளவும்.

சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பதங்கள் என்று தேவதாசிக்களுக்கான நடனப் பாடல்கள் ராகதாளத்துடன் நிறைய எழுதப்பட்டன. இவற்றில் எல்லாம் கண்ணனின் லீலைகளை விஸ்தாரமாக வர்ணித்து அவன் இப்படிச் செய்தான். இங்கே கடித்தான் சகியே அவனைக் கூட்டிவா... பசலை! என்ற ரீதியில்

எழுதப்பட்ட அந்தப் பாடல்களை எவரும் பாடியதாகத் தெரியவில்லை. சில அந்தரங்க சபைகளிலே நடனமாடியிருக்கலாம். பக்தியும் போர்னோவும் கலக்கும் விநோதம் இந்திய இலக்கியத்தின் தனிப்பட்ட அம்சம்.

இந்த நூற்றாண்டின் தமிழ் எழுத்திலும் அதிகம் போர்னோ கிடையாது; பாரதியார் இதைத் தொடவில்லை. பாரதிதாசனின் ஓடைக் குளிர் மலர்ப் பார்வைகள் தான் உண்ணத் தலைப்பட்டன. உடல்கள் இல்லை. புதுமைப் பித்தன், கு.ப.ரா. போன்றவர்கள் தலைவைத்துப் படுக்கவில்லை. ஏன் நம் புதுக்கவிஞர்களும் புது எழுத்தாளர்களும் கூட இந்த விஷயத்தில் ஜகா வாங்கியிருக்கிறார்கள். (தமிழ் நாடனின் 'காமரூபம்' சற்று வேறு ஜாதி) எடுத்துக் கொண்ட செக்ஸை நேராகச் சொல்வதில் எல்லோருக்குமே தயக்கம் இருந்திருக்கிறது. மார்பகம் விம்மித் தணியும், அதற்கப்புறம் என்னடா என்றால் இருவரும் இருளில் மறைந்தார்கள்? ஏன் மறைய வேண்டும்?

''எழுபது வயதான டாக்டர் காப்ரேகர் இந்தியாவில் தேவலாலியில் (Deolai) இருக்கிறார். கணிதத்தில், நம்பர் தியரியில் சில வசீகரமான விஷயங்களைப் பற்றி உடைந்த இங்கிலீஷில் சிறிய புத்தகங்கள் எழுதி இருக்கிறார். இந்தியாவுக்கு வெளியே இவர். 1948-ம் வருஷம் கண்டு பிடித்த 'காப்ரேகர்ஸ் கான்ஸ்டண்ட்' பிரபலமானது...''

நம் விஞ்ஞானிகளைப் பற்றித் தெரிந்துகொள்ள அமெரிக்கப் பத்திரிகை - ஸைண்டிஃபிக் அமெரிக்கன் - தேவையாக இருக்கிறது.

32

- ஏப்ரல் 1976

பரிச்சயமில்லாதவர்களிடமிருந்து எனக்கு வரும் கடிதங்களைப் பெரும்பாலும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. உங்கள் கதைகளை ரசித்துப் படிக்கிறேன். உங்கள் கையெழுத்திட்ட போட்டோ ஒன்று அனுப்புவீர்களா?

2. உங்கள் கதைகளை ரசித்துப் படிக்கிறேன். நான் எழுதியுள்ள கள்ளும் முள்ளும் என்கிற காவியத்தை உங்கள் மேலான பார்வைக்கு அனுப்ப விரும்புகிறேன் அனுப்பலாமா?

3. உங்கள் கதைகளை ரசித்துப் படிக்கிறேன். நான் ஆண்டிப்பட்டி இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டியுட்டில் ஃபிட்டர் தொழில் பரீட்சை பாஸ் பண்ணவிட்டு வேலையில்லாமல் இருக்கிறேன். உங்கள் தொழிற்சாலையில்...

பரிச்சயமில்லாதவர்கள் நேரில் வந்து சந்திக்கும்போது அவர்கள் கேட்கும் கேள்விகளும் பெரும்பாலும் மூன்று வகைப்படும்.

1. உங்களுக்கு எல்லாம் எப்படி ஸார் டயம் கிடைக்கிறது எழுதுவதற்கு?

2. இதுக்கெல்லாம் எவ்வளவு கொடுப்பான் உங்களுக்கு?

3. நான் படிக்கறதில்லை. என் ஒய்ஃப்தான் படிப்பாள், இதெல்லாம்...

உண்மையான ரசிகர்கள் கடிதம் எழுதுவது அல்லது நேரில் வந்து சந்திக்கிற ஜாதியில்லை.

❑

லாபியர் ('நள்ளிரவில் சுதந்திரம்') சமீபத்தில் பங்களூர் வந்திருந்தபோது சொன்ன தவல்களை சென்ற இதழ் முஸ்தபாவின் குறிப்புகளுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

லாபியரும் காலின்ஸும் தங்கள் வேட்டையில் பம்பாயில் ஓர் ஆஸ்பத்திரியில் பழைய ரிகார்டுகளை எல்லாம் தேடித் தூசி தட்டி ஜின்னாவின் செஸ்ட் எக்ஸ்ரே ஒன்றைக் கண்டெடுத்தார்களாம். அந்த எக்ஸ்ரேயை நிபுணர்களிடம் காட்டியபோது ஜின்னா மிக சமீபத்தில் இறந்து போகப் போவது இதில் தெளிவாகத் தெரிந்ததாம். லாபியர் இதை ஒரு சமயம் மௌண்ட்பாட்டனிடம் குறிப்பிட்டபோது அவர் முகம் வெளிறிப் போயிற்றாம். "எனக்கு அது தெரிந்திருந்தால் பிரிவினை தினத்தை ஒத்திப் போட்டிருப்பேன்."

லாபியரும் காலின்ஸும் கோபால் கோட்ஸேயையும் மற்றொரு காந்தி சதி ஆசாமியையும் டில்லிக்கு அழைத்துச் சென்று பிர்லா மாளிகையும் சுற்றுப்புறங்களையும் சதித் திட்டம் நடந்த இடங்களையும் காட்டச் சொன்னார்களாம். பிர்லா மாளிகையில் அவர்களைப் பெரிய கூட்டம் சூழ்ந்து கொண்டதைப் பார்த்து சற்று பயந்து விட்டார் லாபியர். பயப்பட்டிருக்க வேண்டாம். அவர்கள் வந்தது கோபால் கோட்ஸேயிடம் ஆட்டோகிராஃப் வாங்குவதற்காக!

❑

சென்னை வானொலியில் விரும்பிக் கேட்டவை நிகழ்ச்சிகளில் நான் விரும்பிக் கேட்பவை விரும்பிக் கேட்ட பெயர்களை.

திருவாளப்புத்தூர் தீனதயாளன் நாயுடு, கொண்டித் தோப்பு தமிழரசி, ஏழுகிணறு சந்திரசேகர், மணிமாறன் மொட்டை, துவரங்காடு சந்திரமோகன், மங்கலம்பேட்டை ஷகீபுதின், ஆயிஷா பீபி, ஜமால், பூமிக்குப்பம் தேவநேசன், வியாசர்பாடி ராஜா, தாம்பரம் சுப்பு அம்மாள்...

சட்சட்டென்று பெயர் மாறும்போது அவர்கள் எப்படி இருப்பார்கள் என்று யோசிப்பேன். தாம்பரம் சுப்பு அம்மாள் இரட்டைப் பின்னலா வைத்திருப்பார்? ம்ஹூம்! ஆனால் கொண்டித் தோப்பு தமிழரசி?

33

- மே 1975

மூஸ்தபாவுக்கு ஆதா வர்ஸே கூறிச் சென்ற இதழில் அவர் பக்கம் தாண்டிப் பாய்ந்த விஷயம் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன். தமிழ் இலக்கியத்தில் போர்னோ என்று நான் தேடுவது முலைகளைப் பற்றிய பாடல்களை இல்லை. ஐம்பெருங்காப்பியங்களிலும் அகத்திலும் புறத்திலும் ஆழ்வார்களிலும் குங்குமம் கழுவின கொங்கைகளுக்குப் பஞ்சமே இல்லை என்பது எனக்குத் தெரியும். நான் தேடுவது இன்னும் கொஞ்சம் Subtle ஆன விஷயம். ஆழ்வார் பாடலிலிருந்தே உதாரணம் சொல்கிறேன்.

"மையார் கண் மடலாய்ச்சியர் மக்களை
மையன்மை செய்து அவர் பின்போய்
கொய்யார் பூந்துகில் பற்றித் தனிநின்று
குற்றம் பலபல செய்தாய்"

என்பது ஆண்டாள் வரிகளை விட better porno!

❑

ஆம், தக்ஷிணாமூர்த்தியின் 'திவ்யதரிசனம்' எனக்கு கொஞ்சம் முன்னே கிடைத்திருந்தால் என் லிஸ்ட்டில் அதைக் குறிப்பிட்டிருப்பேன். தக்ஷிணாமூர்த்தியின் கவிதைத் தொகுதியில் அல்குல் தடாகங்களில் பல பல சரங்குகள் மிதக்கின்றன.

உ-ம்

"கற்றதனாலாய பயனென்கொல் கற்றவனைக்
கட்டி அணைக்கா விடின்"

"தனக்குரிமை இல்லாதாள் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றலரிது"

"தக்ஷிணாமூர்த்திக் கொரு நாளையின்பம் அஃதல்லால்
பார்த்தார்க் கென்றென்றும் இன்பம்"

தக்ஷிணாமூர்த்திக்கு என்று நான் மாற்றியிருக்கும் வார்த்தை எஃது என்பதை எதுகையிலின்றும் அறிந்து கொள்க.

❑

பி.வி. காரந்த்தின் 'சோமன துடி' என்கிற கன்னடப் படம் மற்றொரு காரந்த்தின் நாவலின் அடிப்படையில் எடுக்கப்பட்ட Bonded labour, Proselytisation போன்ற ஆதாரமான, இன்றும் மங்களூர்ப் பகுதியில் இருக்கிறதாகச் சொல்லப்படும் விஷயங்களை உன்னதமாக சினிமாப் பார்வையில் காட்டுகிறது.

சோமன் என்னும் மரமேறி, உழவன், கீழ்ச் சாதியினன், நான்கு பையன்கள், ஒரு பெண், பிராமண நில சொந்தக் காரன். சோமனின் ஒரே ஆசை கையகலத்துக்குக் கொஞ்சம் நிலம். அவனைக் கிறிஸ்தவனாக்க முயலும் பாதிரி. அவன் மகன் மணக்கும் மேரி. அவன் சிறிய மகன் முழுகும் நதிச் சுழல். அவன் மகளைக் கற்பழிக்கும் எஸ்டேட் வெள்ளைக்காரனும் மேஸ்திரியும், அவன் குடிக்கும் கள், ஆவேசத்தின் போது, சந்தோஷத்தின்போது, துக்கத்தின் போதுஅவன் அடிக்கும் உடுக்கு (துடி) இதன் லயம் படம் பூராவும் விரவியிருக்கிறது.

காரந்த் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் பெரும்பாலும் மௌனங்களிலேயே இந்தச் சிக்கலான கதையைச் சொல்கிறார். வசனங்கள் சிக்கனமாக இருக்கின்றன. "கிறிஸ்தவனானால் உனக்கு நிலம் கிடைக்கும்; செத்த பின்

சொர்க்கத்துக்குப் போவாய்.'' படப்பிடிப்பு தேவைக்கு உட்பட்டு இருக்கிறது. சங்கீதம் (காரந்த்) மிக மெலிதாக இருக்கிறது. பிரதேச மொழிகளில் ஒன்றான கன்னடத்தில் இந்த மாதிரி சினிமா எடுக்கப்பட்டு அது கமர்ஷியலாகக் கூடச் சுமாராக ஓடியிருக்கிறது. எனக்கு ஏக்கப் பெருமூச்சு வருகிறது.

34

- ஜூன் 1976

திருச்சி :- செமி ஃபைனல் விட்ட கூட்டம் மெயின் கார்டு கேட்டில் மயிர் சிலிர்க்க வைக்கிறது. கோல் கீப்பர் தாயோளியைத் திட்டிவிட்டு, பத்மாவின் காப்பி சாப்பிட்டுவிட்டு, ஏதாவது நோஞ்சலான பெண் அகப்பட்டால் சைட் அடித்துவிட்டு வீட்டுக்கு அல்லது 'ஷோலே' பார்க்கச் செல்லும் எத்தனையோ இளைஞர்களைப் போலக் கங்கை கொண்டான். அம்ஷன்குமார், சாமிநாதன் போன்றவர்களும் தோன்றுகிறார்கள். ஆனால் இவர்கள் ஒரு காலாண்டு இலக்கிய இதழ் கொண்டு வரப்போகிறார்கள். அயானெஸ்கோவை தேவர் ஹாலில் நடித்துக் காட்ட விரும்புகிறார்கள். காஜா மலை காலனியிலிருந்து ஸ்ரீரங்கம் வரை வீடுவீடாகச் சென்று இலக்கிய வாசகத் தன்மைக்கு அன்பளிப்புக் கேட்டிருக்கிறார்கள். (பெரும்பாலும் கிடைத்த பதில் ''பெரிய பாக்கெட்டா சின்ன பாக்கெட்டா?'') இவர்களுக்கு நான் தந்த இலக்கியத் தரமான அறிவுரை ''வேலையை விட்டு விடாதீர்கள்.''

□

சென்னை - 200 மைல் தூரத்திலிருந்து அவ்வப்போது வந்து போனால் சென்னையின் படிப்படியான கலாச்சார முன்னேற்றத்தை உணர முடிகிறது. இந்தத் தடவை

உதாரணங்கள் : ராஜகோபால சுவாமி சம்ப்ரோக்ஷண உற்சவத்திற்கு ஏவி ரமணனின் ம்யுசியானோ: 'இன்பபுரியிலிருந்து சொர்க்கம் வரை...' பழைய இந்திப் படத்தின் புதிய தமிழ் தலைப்பு; "இந்தியன் எஸ்தர் வில்லியம்ஸ் சாய்ரா பானு 18 ஜெர்மனிய அழகிகளுடன் நீச்சல் உடையில் பாய்ச்சல் அழகு காட்டும் ஜில் ஜில் கலர் படம்-" சுவரொட்டி; வரதட்சிணையும் அனாச்சாரத்தையும் எதிர்க்கும் பத்திரிகை 'முஸ்லிம் குரல்' விளம்பரம்.

To preserve and propagate the Vedas, the Sanatana Dharma and ancient Hindu Culture, The work is commendable for its literary merit and devotional flavour -'ஹிந்து'வில் புத்தக விமரிசனம்.

Enter the Dragon என்ற படத்திற்கு திருட்டு டிக்கெட் 34 ரூபாவாம்! படத்தில் என்னதான் இருக்கிறது என்று (நண்பர் ரஜத் உதவ) போய்ப் பார்த்தேன். செமைப் படம் கராட்டே, குங் ஃபூ சண்டை, அடி உதை வெட்டு, கொஞ்சம் டைலாக்குகள், வெட்டு உதை அடி எஸ்பிரஸ்ஸோ மெஷின் மாதிரி சப்தமிட்டுக் கொண்டு ஓடி வந்து ஒரு குதி குதித்து கால்களால் எதிராளி கொட்டையில் உதைக்கிறான் ப்ருஸ்லீ! இன்னமும் வலிக்கிறது... என் தோள்களிலும் புஜங்களிலும் வீரம் ஏறியது.. பக்கத்தில் வத்தலாக யாராவது இருந்தால் அவனை ஒரு வெட்டு வெட்டலாம் என்று தோன்றியது... ஹ ர்ர்ர்ர்ர்ர்!

□

இந்த வருமான ப்ராக்கெட்டில் இருக்கும் தமிழர்கள் தமிழ் பேச மாட்டார்கள். lost touch என்பார்கள். படிப்பீர்களா என்றால் ஆனந்தவிஹடன்லே ஜோக்ஸ் படிப்பேன் பெரிய்ய லெட்டர்ஸ்லே இருந்தா என்பார்கள், கிருஷ்ணன் (U.S.I.S) அப்படி இல்லை சிறிய இலக்கியப் பத்திரிகைகளை எல்லாம் படித்தும் கணிசமாக ஆதரித்தும் வருகிறார். விநோத ரச மஞ்சரி, சாமிநாத அய்யரிலிருந்து

நாளைய புதுக்கவிஞர்கள் வரை நிறைய தமிழில் படித்திருக்கிறார். இங்கிலீஷில் கவிதை எழுதுகிறார். நான் கேள்விப்பட்டு இராத பல ஆங்கில எழுத்தாளர்களைக் குறிப்பிடுகிறார். மிருனால்சென்னைத் தூக்கி எறிகிறார்... ப்ரகாசமான கண்களுடைய அவர் பெண் இந்த மனிதரின் வசீகரமான அபிப்பிராய வட்டத்திலிருந்து வெளிப்பட்ட சில கருத்துக்களைத் தெரிவித்ததையும் வியந்தேன்.

□

இந்தத் தடவை கவிஞர்களின் முன்னுரையிலிருந்து தப்பித்துவிட்ட மூன்றாவது சிறுகதைத் தொகுதியில் ('காலமும் 5 குழந்தைகளும்') இருக்கும் வழி, கடன், புலிக் கலைஞன் போன்ற அற்புதங்களை அசோகமித்திரன் ஒரே வருஷத்தில் எழுதியிருக்கிறார். பிரமிக்கிறேன்.

35

- ஜுலை 1976

சமீபத்திய கோழிச் சண்டைகளில் ஞானக் கூத்தனை மூலையில் நிறுத்திக் கை தூக்க வைக்கப் பல பிரயத்தனங்களைப் பார்க்கிறேன். அவரும் காட்டடடியாக ஒண்டியாகச் சமாளிக்கிறார்.

இந்தச் சர்ச்சைகளில் கவிதையைப் பலவிதமாகப் பாகுபாடு செய்கிறார்கள். யாப்புக் கவிதை, மரபுக் கவிதை, புதுக் கவிதை என்கிறார்கள். சண்டையே வேண்டாம் என்றால் கவிதையை ஏன் இப்படிப் பாகுபடுத்தக் கூடாது! நல்ல கவிதை, செய்யுள், தீர்ந்தது விஷயம்.

புவியரசு நல்ல கவிதை எழுதக் கூடியவர் செய்யுளும் எழுதக் கூடியவர் என்பதை அவருடைய 'இதுதான்' என்கிற அழகாகப் பிரசுரிக்கப்பட்ட கவிதைத் தொகுப்பு தெரிவிக்கிறது. புவியரசுவின் கவிதைச் சிறகுகளை அடிக்கடி தடைப்படுத்துவது சிவப்பு சிந்தனை... ஒழுங்காக

எழுதிக் கொண்டிருப்பவர் திடீர் என்று ரத்த ஆற்றுக்கும் புரட்சிக்கனலுக்கும் இறங்கி விடுகிறார். பிரச்சாரம் கவிதையில் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி எனக்குத் தற்போது கவலையில்லை. ஆனால் பிரச்சாரத்தையே செய்யுளில் கவிதையில் நல்ல கவிதையில் சொல்லமுடியும் என்பதற்குப் புவியரசுவின் புத்தகத்திலேயே உதாரணங்கள் கிடைக்கிறன.

செய்யுள் :

கண்ணீரைத் துடைத்து விட்டுக்
கடுகி வாருங்கள்
கண்களிலே கனல் பறக்கக்
கிளர்ந்து வாருங்கள்... இந்த
ரீதியிலே வரலாற்றின் பொன் சுவடு, நெருப்பாறு...
இத்யாதி

கவிதை :

கன்னே கண்மணியே
கறுப்பா நீ கண்ணுறங்கு...
கண்விழித்துப் பார்த்தாலோ
காரணங்கள் புரிந்துவிடும்...

என ஒரு 'தூங்காத தாலாட்டின்' பல வரிகள்.

நல்ல கவிதை :

கனத்த
படிம ஆடை
அணி அலங்கார
ஒப்பனைகளுடன்
அரங்கேறிய உங்கள்
அடையாளம் தெரியவில்லை
எனக்கு
மேடையின் பின்னே
ஒப்பனை அறையின்
எளிய வாயிலில்
காத்திருக்கிறேன்
முகம் பார்க்க

புவியரசு பல இளைஞர்களின் சிந்தனைகளைப் பாதிக்கிறவர் என்பது எனக்குத் தெரியும். அவருடைய வானம்பாடி ''வரம்பிலா வானில் சிறகு விரித்து அகண்ட வெளியைத் தழுவி உயர்ந்து உயர்ந்து... பறந்து விட்டு இதயக் கூட்டை நோக்கி நேராக மீளலாம்..'' வழியில் ''அலங்கார மாளிகைகளில் எச்சமிட வேண்டாம்'' என்று தோன்றுகின்றது.

□

மலேசிய 'தமிழ் நேசன்' பத்திரிகையின் ராசி பலன் என்னைக் கவர்ந்தது.

உ-ம். ''என்னயிருந்தாலும் இந்தப் பொறாமை மட்டும் இருக்கக் கூடாதுங்க மனுஷனுக்கு. நம்மைச் சுற்றியிருப் பவர்களைத் தான் சொல்றேன். சுமாராக நீங்கள் தலையெடுத்தால் போச்சு வயிற்றெரிச்சல். அட ஒண்ணும் இல்லைன்னாலும் கேலிக்கும் கிண்டலுக்கும் குறை யில்லை. ஆனா ஒண்ணு. உங்களுக்கிருக்கிற கிரக நிலவரத்தைக் கண்ட ஒரு பயலும் வாலையாட்ட மாட்டான். மூன்றில் செவ்வாய், சனின்னா என்ன சும்மாவா? அடேயப்பா...''

36

- ஆகஸ்ட் 1976

வயது, விதம், நியதி, தருணம், சுகம், ஞாபகம், கேலி, அற்புதம், அவதூறு, சதுரம், சித்திரம், பாத்திரம், பயம், பைத்தியம், வாசனை, வேகம்.

மேற்கண்ட சொற்களில் வடமொழியிலிருந்து வந்த சொற்கள் எவை என கூற முடியுமா உங்களால்?

பதினாறாம் நூற்றாண்டிலிருந்து பெரும்பாலும் போதகர்களாகவே வந்து தமிழ் கற்றுக் கொண்ட

ஸீகன்பால்கு ஐயர், இரேனியுஸ் ஐயர், உ.வின்ஸ்லோ ஐயர், கிளார்க் ஐயர் போன்ற பற்பல ஐரோப்பியர்களில் (இவர்களுக்கெல்லாம் ஐயர் பட்டம் யார் கொடுத்தார்கள்) போப் ஐயரும் கால்டுவெல் ஐயரும் குறிப்பிடத்தக்கவர்கள். முன்னவர் அவர்தம் திருவாசக மொழி பெயர்ப்புக்கு, பின்னவர் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்துக்கு...

போப் திருவாசகத்தையும் மற்ற சில நூல்களையும் ஆங்கிலத்தில் ஐயாம்பிக் பெண்ட்டா மீட்டரில் மொழி பெயர்த்திருக்கிறார். மொழி பெயர்ப்பை மறந்துவிடலாம். ஆனால் அவர் முன்னுரைகளை மறக்க முடியாது... சைவத்தைப் பற்றி அவ்வளவு தெளிவாக ஆழமாக ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார் இந்த கிறித்தவர். மேலும் தமிழ் யாப்பைப் பற்றி ஒரு சுலபமான அறிமுகம் ஆங்கிலத்தில் தேவையென்றால் போப்பை நாடலாம்.

கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் திராவிட மொழிகளைப் பற்றி ஹெரோடோட்டஸ், தெஸின்னாஸ்? கிரேக்க ரோம நில நூல் ஆசிரியர்களிலிருந்தெல்லாம் எடுத்துக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. அதன் சில முடிவுகள் தற்கால நவீன ஆராய்ச்சி வெளிச்சத்தில் தவறானாவை... கால்டுவெல் பார்ப்பன ஆதிக்கக் கொள்கைக்கு வித்திட்டவர். வடமொழியின் ஆக்கிர, மணத்தைப் பற்றிப் பேசுகையில் அவர் தாம் ஒரு மொழி ஆராய்ச்சியாளர் என்பதை மறந்து உணர்ச்சி வசப்பட்டு விடுகிறார்.

மத போதகர்கள் தமிழ் கற்று தமிழை உயர்த்திப் பேசியதில் வேறு நோக்கங்கள் இருந்தாலும் சென்ற நூற்றாண்டுகளில் ஆராய்ச்சி என்று வகை சொல்லும் படியான சில நூல்கள் தமிழில் தோன்றியதற்கு இவர்கள் தான் காரணம். இதை நாம் மறக்க முடியாது.

கால்டுவெல் 'தமிழ் மொழி தன் மாட்டுள்ள வட சொற்கள் முழுவதையும் நீக்கிவிட்டு தக்க தமிழ் சொற்களைப் பெய்து கொள்ளலாம். அவ்வாறு நீக்குவதால்

அதனங தூய்மை மற்றும் செம்மைப் பண்பும் உயர்ந்து ஒளிரும்' என்று தன் ஒப்பிலக்கணத்தில் கூறியிருக்கிறார். ஒப்பிலக்கணத்தை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். அவர் தமிழ் உரை நடைக்கு ஒரு உதாரணம் தருகிறேன்.

''கர்த்தருடைய இராப் போஜனத்தைச் சேர்ந்தவர்களும் அதற்கு ஆயத்தமாகிறவர்களும் தங்களை சோதித்தறிந்து செபத் தியானஞ் செய்து சேரவேண்டிய ஒழுங்கிருக்க கிறிஸ்தவர்களில் அநேகர் வேத வசனத்தை நன்றாய் அறியாதவர்களாயும் தேவ பக்தியில் தேறாதவர்களாயும் தியானம் பண்ணிகிறதில் வழக்கப்படாதவர்களாயும் இருப்பதனாலே... தருணத்திலும் வாசிக்கத்தக்க செபத் தியானங்களுள்ள புஸ்தகங்கள் அவர்களுக்கு அவசியம் தேவையாயிருக்கிறது.''

கேள்விக்குப் பதில் -அனைத்தும் வட சொற்களே!

37

- செப்டம்பர் 1976

சென்ற இதழில் கிறித்தவ மத போதகர்களைப் பற்றி எழுதியதற்குப் பின்னிணைப்பாக வீரமாமுனிவரைக் குறிப்பிட்டு அவருக்குத் தனியாக ஒரு சபாஷ் சொல்ல வேண்டும்.

வீரமா முனிவர் காலம் வரை தமிழில் எகர ஒகர உயிர் எழுத்துக்களின் மேலும் உயிர்மெய் எழுத்துக்களின் மேலும் குறில் ஓசைக்குப் புள்ளி வைத்துக் கொண்டிருந்தார்கள். அவைகளின் நெடில் ஓசைக்குப் புள்ளி வைக்காமல் விட்டார்கள். உதாரணம் ; கெ, பெ, செ. இவைகள் கொம்பின் மேல் புள்ளி வைத்தால் குற்றெழுத்துக்கள். கெ, பெ, செ, எனப் புள்ளி வைக்காமல் எழுதப்பட்டால் அவை நெட்டெழுத்துக்கள். கே, பே, சே என்று உச்சரிக்கப் பட்டன.

இதனால் வரும் குழப்பங்களை அவர்களே சிலேடைப் பாட்டுகளாக இயற்றினார்கள் (ஓதி என்றால் ஓதிய மரம். ஓதி என்றால் கூந்தல், எரி என்றால் நெருப்பு, ஏரி என்றால் ஏரி...)

"நேரிழையார் கூந்திலினோர் புள்ளி பெற நீள் மரமாம்
நீர்நிலையோர் புள்ளிபெற நெருப்பாம்..."

என்று துவங்கும் வெண்பாக்கள் பல இருக்கின்றன.

தொல்காப்பிய காலத்திலிருந்து வழங்கி வந்த இந்தப் பழைய முறையை 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வீரமா முனிவர் மாற்றி நெட்டெழுத்துக் கொம்பை மேலே சுழித்தெழுதும் வழக்கத்தை உண்டாக்கினார். இது தெளிவான சீர்திருத்தம், நாம் முழுவதும் ஏற்றுக் கொண்டு விட்டோம்.

இம்மாதிரி இன்னும் இரண்டு அல்லது மூன்று எழுத்துச் சீர்திருத்தங்கள் கொண்டு வந்து விட்டால் இந்தத் தமிழ் மொழியை 'பீட்' பண்ண முடியாது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் தமிழில் மிக நல்ல மொழி ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவருவதைக் காண சந்தர்ப்பம் ஏற்பட்டது. மதுரைப் பல்கலைக் கழகத்திலும் நவீனத் தமிழ் பற்றி நிறைய சிரத்தை காட்டுகிறார்கள். எவ்வளவோ விஷயம் தெரிந்த எம்.ஓ. எல்.களும் பிஎச்.டிக்களும் இருக்கிறார்கள். இந்த Talk, Dog இரண்டிற்கும் டாக் என்று எழுத வேண்டிய கட்டாயத்திலிருந்து விடுதலை கொடுங்களேன். டாக்டர் அகஸ்தியலிங்கம் போன்றவர்கள் மனது வைக்கலாம்.

ஆர்.ஜி. பதி கம்பெனி பதிப்பித்துள்ள ரூ 3-50 விலையுள்ள மாயா ஜால மர்மங்கள் என்கிற நான்கு பாகங்கள் அடங்கிய புத்தகத்தில் யாவரும் பிரமிக்கத்தக்க பல ஜாலங்கள், பல சித்துக்கள், விளையாடும் மைவகைகள், சிங்கி வித்தை, சொக்குப் பொடி குக்ஷி, அஷ்ட கர்ம கருமை முனிவர்கள், வாராகி, ஜாலாக்கள், குட்டிச் சாத்தான்,

யக்ஷிணி, அனுமான், மாடன், பகவதி, இருளி, காட்டேரி, வசியங்களும், கோகர்ண கஜகர்ண இந்திர மகேந்திர ஜாலங்களும், குழந்தைகளின் சகல தோஷங்களுக்கும் விபூதி பிடித்தல், வேப்பிலை அடித்தல், பேய் பிசாசுகளை ஓட்டுதல், பில்லி சூனியங்களை அகற்றல், சதிபதிகள் பிரியாதிருத்தல் ஈடு மருந்தை முறித்தல், பாம்பு, தேள், நாய், பூனை, எலி கடி விஷங்களை ஒழித்தல், ஜாலாக்களின் ஜெகஜ்ஜால வித்தைகள், முள் மீது படுத்தல், நெருப்பை கையில் அள்ளுதல், மிதித்தல், சட்டி ஏந்துதல், மடியில் கட்டுதல், ஜலத்தின் மீது படுத்தல், உட்காருதல், வயிற்றில் ஈட்டி பாய்ச்சுதல், போன்ற எண்ணற்றவைகளுடன் எல்லாவற்றிற்கும் சிகரமாக ஆட்டு மந்தையை மாட்டு மந்தையாக்குதல் வரை விவரமாக இதில் அடங்கியுள்ளன.

விலாசம் : 4 வெங்கட்ராமய்யர் தெரு சென்னை -1.

1976-ல் எல்லாரும் வைத்திருக்க வேண்டிய புஸ்தகம்.

38

- அக்டோபர் 1976

கமலஹாசனுடன் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்ததில் அவருடைய off-screen personolity சுவாரஸ்யமாக வெளிப்பட்டது. இருபத்து மூன்று வயது. ஒரு மலையாளப் படப்பிடிப்பிலிருந்து வந்திருந்தார். பஞ்சு மிட்டாய் வர்ணத்தில் ஜிப்பா, ஜரிகை வேஷ்டி.

அவர் அறையில் ஆடம்பரங்கள் எதுவும் இல்லை, ஏர்க் கண்டிஷனிரின் சௌகரியத்தை தவிர. ஒரே ஒரு படம் இருந்தது. உக்கிரமாக முறைக்கும் ப்ரூஸ்லீ அமெரிக்க சினிமா சரித்திரத்தைப் பற்றியும் Sound in Cinema பற்றியும் புத்தகங்கள் தென்பட்டன. படிக்கிறார். இங்கிலீஷ் பண்பட்டு இருக்கிறது. 'கணையாழி போன்ற பத்திரிகைகளையும் புதுக் கவிதைகளையும் ரசிக்கிறார். தன் தொழிலில் உள்ள

சிரிப்பான விஷயங்களை இயல்பாக எடுத்துச் சொல்கிறார். போலன்ஸ்கி, கோடார்ட் போன்ற ஐரோப்பிய டைரக்டர்களைப் பற்றி அவருக்குத் தெரிந்திருக்கிறது. ஆல்ஃப்ரட் ஹிட்ச்காச்சின் Frenzy என்ற படத்தில் ஒரு ஷாட்டைப் பற்றி உற்சாகமாகப் பத்து நிமிஷம் அவருடன் அலச முடிகிறது. ''மலையாளப் படங்கள் இப்போது பரவாயில்லை போலிருக்கிறதே'' என்றேன். அவர் ''அதெல்லாம் அந்தக் காலம் இப்போது மலையாளப் படங்கள் பின்னோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன.'' தன் சட்டையைக் காட்டி 'மலையாளப் படம்' என்றார்.

''எனக்கு அழ வரவில்லை அழு அழு என்கிறார்கள். ஒரு சமீபத்திய தமிழ்ப்படத்திற்கு மூன்று பாட்டில் கிளிஸரின் ஆயிற்று.''

''பாடலைப் படமெடுக்கும்போது கதாநாயகிக்குக் கூந்தல் விரிந்திருப்பது ஒரு சௌகரியம். உதட்டசைவு மறந்துவிட்டால்! சட்டென்று கூந்தலைப் பிரித்து அதில் மறைந்து கொள்ளலாம்.''

''டேய் முத்து, மாடசாமி, பிடிடா'' என்று கிராமத்தில் குடிசையில் வின்சென்டர் ரைஃபிள்களை விநியோகிக்கும் கர்ணன் படங்களையும் படுத்துக்கொண்டே படமெடுக்கும் காமிராக் கோணங்களையும் (imagine ஜோதிலட்சுமி) அம்மாக்களையும், தியாகங்களையும் மிகவும் ரசித்து அவருடன் விமரிசித்துக் கொண்டிருந்ததில் எனக்கு நேரம் போனது தெரியவில்லை. படப்பிடிப்பு காத்திருந்தது. ஆப்பிள் ஜூஸ் கொடுத்து அனுப்பி விட்டார்.

உரக்கப் பேசும் உரக்க நடிக்கும் தமிழ் சினிமாவில் சற்று மென்மையாக, கற்பனையுடன், நம்பும்படி நடக்கும் கமலஹாசனிடம் தமிழில் நவசினிமாவில் உதயத்தை எதிர் பார்க்கிறேன்.

சங்கீத டைரக்டர் எம். பி. ஸ்ரீனிவாசன் யேசுதாசுடன் ஒரு பாடலை ஒத்திகை பார்க்கும் போது கேட்கும் சந்தர்ப்பம்

எனக்கு ஏற்பட்டது. ஸ்ரீனிவாசன் ஒரு இனிய மார்க்ஸிய வாதி. கார்ப்பரேஷன் பள்ளிகளின் நூற்றுக்கணக்கான குழந்தைகளை ஆல் இண்டியா ரேடியோவின் காம்பவுண்டிக்குள் ஒரே குரலில் ஒரே சுருதியில் பள்ளுப்பாட வைத்த சாதனையைப் பற்றி அவர் நிச்சயம் பெருமைப்படலாம். சுப பந்துவராளியில் அவர் ஒத்திகை பார்த்த பாடல் இரண்டு ஜீனியஸ்களை எனக்குக் காட்டின. முன்னவர் ஸ்ரீனிவாசன். அவர் மேடைப் பேச்சைக் கேட்பவர்கள் இவருக்கு இதற்கு மேலும் திறமை இருக்குமா என்று சந்தேகப்படுவார்கள். இருக்கிறது. சங்கீதத்தில். சுரங்களில் விளையாடுகிறார். காம்போதிப் பின்னணியில் அவர் ''தாகம்'' படத்திற்கு அமைத்திருந்த பின்னணி சங்கீதம் ஞாபகத்திற்கு வந்தது. இத்தனை திறமை உள்ளவரை தமிழ் சினிமா நிராகரித்திருப்பதற்குக் காரணம் இவரது மார்க்ஸிய வாதமும் யூனியனிசமும் இருக்கலாம். இவர் அது பற்றிக் கவலைப்படவில்லை. "I always have my jingles ஆஸ்பரோ கால்கேட் விளம்பரங்கள் இல்லையா? I can survive."

மற்றொரு விற்பன்னர் யேசுதாஸ்! இளைஞர்! வசீகரமாகச் சிரிக்கிறார். மலையாளம் நனைந்த தமிழில் ஹாஸ்யமாகப் பேசுகிறார். பாட ஆரம்பித்ததும்தான் அவர் குரலின் விஸ்தாரங்களையும் வர்ண வீச்சுக்களையும் உணர முடிகிறது. கீழ் ஸ்தாயியில் அவர் இன்பமாகப் புறப்படும் போது குறுகுறு என்கிறது.

39

- டிசம்பர் 1976

காலேஜ் மாகஸின் போலப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் ஜ்வாலாவின் விசேஷ வெளியீட்டில் எஸ்.டி. பாஸ்கரனின் விஸ்தாரமான கட்டுரையில் 1935-ம் வருஷ சினிமாப் பத்திரிகைகளிலிருந்து இரண்டு உதாரண விமர்சனங்கள்

கொடுக்கப்பட்டிருக்கின்றன.

''வயல்களிலிருந்த செழித்த நெற்கதிர்கள் ஒன்றோடொன்று முத்தமிடுவது போல் 5, 6 டிஸால்வ்களில் காண்பித்திருப்பது இப்படத்தை டைரக்ட் செய்தவருடைய அனுபோகத்தையும் படம் பிடிப்பவருடைய பழக்கத்தையும் தெள்ளென விளக்கிக் காட்டுகிறது.''

''ஸ்ரீமதி சிவபாக்கியத்தின் சாரீரம் மிக இனிமையாக இருக்கிறது. சுருசி வேஷத்தில் இவர் அடாணா மோகனம் சாரங்க ராகங்களில் பாடும் பாடல்கள் மிக முடுக்கமாகவும் சொகுசாகவும் இருக்கின்றன.''

இதழில் இருக்கும் மற்ற சொகுசான கட்டுரைகள் ஒன்றில் அசோகமித்திரன் 'சிரிக்காதே,' 'அசட்டு அம்மாஞ்சி' போன்ற படங்களை தூசி தட்டி எடுத்துக் காட்டுகிறார்.

மாதர் காதல் மென்மையானது. இதில் உரிமை, தனிமை, வழிபாடு, பிரிவு, கொடுமை, இன்பம், வியப்பு, கனவு, உவப்பு எல்லாம் உண்டு.

இந்த இரண்டு வரிகளை நான்தான் எழுதியிருக்கிறேன். ஆனால் வரிகளில் உபயோகப்பட்டிருக்கும் வார்த்தைகள் அத்தனையும் தொல்காப்பியத்திலிருந்து எடுக்கப்பட்டவை. வியப்பும் உவப்பும் கலந்த சமாச்சாரம் இது. இரண்டாயிரம் (?) வருஷங்களுக்கு முந்தைய வார்த்தைகளை இன்று சுலபமாக உபயோகிக்க முடிகிறது. தொல்காப்பியம் ஒரு அபாரமான நூல்.

தமிழ் மொழியின் எழுத்துக்களை சுத்தமாக வருணிக்கிறது. நுட்பமாக மொழியின் விதிகளைச் சொல்கிறது. திணைவகைகளையும் ஆண்பாற் பெண்பாற் சொற்களையும் பட்டியலிடுகிறது. யாப்பின் பல வகைகளைத் தொடுகிறது. பொருள் அதிகாரத்தில் புணர்ச்சியின் பல்வகைக் குறிகள், தலைவன், தலைவி, தாய், செவிலி, தோழி, பாங்கன், பார்ப்பனர், பரத்தை, காமக்கிழத்தியர் என்று பலர் உலவும் வற்றாத ஆச்சரியங்கள்

கொண்ட நூல் அது.

தொல்காப்பியத்தின் காலத்தைப் பற்றிச் சரியாக ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா?

பனம்பாரனாரின் சிறப்புப் பாயிரத்தில் 'நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து' என்கிற ஒரே ஒரு வரி அதன் காலத்தைச் சுட்டிக் காட்டுகிறது உண்மை. அதிலிருந்து பஃறுளியாறு, கபாடபுரம், தலைச்சங்கத்தின் இறுதிக்காலம் என்று நூல் விட்டிருக்கிறார்கள்.

இதைவிட வியங்கோட் கிளவியைப் பற்றிய தொல்காப்பிய விதியை ஆதாரமாகக் கொண்டு புறநானூற்றுப் பாடல் ஒன்றில் வியங்கோட் கிளவியின் பிரயோகத்தை ஒப்பிட்டு அப்பாடலுக்கு மிகவும் முற்பட்டது தொல்காப்பியம் என்று சொல்லும் முடிவு வசீகரமாக இருக்கிறது. அந்தப் பாடலின் நாயகன் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் (What names!). எனவே அவனுக்கு மிகவும் முற்பட்டது தொல்காப்பியம் என்பது வரை ஆராய்ச்சி விஞ்ஞான முறைப்படி வருகிறது. பெருஞ்சோற்று என்றால் துவாபர யுகத்தில் பாரதப் போரில் இரண்டு படைக்கும் பெருஞ்சோறு வழங்கியவனாம். தொல்காப்பியர் துவார யுகத்திற்கு மிகவும் முற்பட்டதாம். சரித்திரத்தின் இம்பர் புராணம்!

40

- ஜனவரி 1977

மிருணாள்சென்னின் 'ம்ருகாயா' பிரிட்டிஷ் இந்தியாவின் பின்னணியில் ஓர் ஆதிவாசி இளைஞனின் கதையைச் சொல்கிறது. அந்த சந்தாள் இளைஞன் வேட்டையில் கெட்டிக்காரன். வெள்ளைக்காரக் கமிஷனர் அவன் வேட்டையாடிப் பிடித்து வரும் அல்லது கொன்று வரும் மிருகங்களுக்கு பக்ஷீஸ் தருகிறார். பாராட்டுகிறார். தட்டிக்

கொடுக்கிறார். சந்தாள் இளைஞன் தன் மனைவியை மூர்க்கத்தனமாகக் கடத்திக் கொண்டு சென்றவனைத் துரத்தி வேட்டையாடிக் கொன்று போடுகிறான். கமிஷனரிடம் வந்து மற்றொரு மிருகத்தை வேட்டையாடிக் கொன்று விட்டேன் என்கிறான். அதற்காக அவனுக்கு பக்ஷீஸ் தராமல் கைது செய்து கூண்டில் அடைத்துக் குற்றம் சாட்டி... இது ஏன் என்று அவன் ஆதிமனத்திற்குப் புரியவே இல்லை. இளைஞன் தூக்கிலிடப்படுகிறான் Powerful theme.

இதை சினிமாவில் காட்டும்போது சென் பல இடங்களில் ஜொலிக்கிறார். சில இடங்களில் தடுமாறுகிறார். ஜொலிக்கும் இடங்கள் ... கமிஷனர் பங்களாவின் புல்வெளியில் வெள்ளைக்காரனுக்கும் ஆதி மனிதனுக்கும் குறி பார்ப்பதில் (துப்பாக்கி - வில்) போட்டி.

மேம்ஸாஹப் அந்த சந்தாள் இளைஞனையும் மனைவியையும் மரத்தடியில் நிறுத்தி வைத்து ஸ்கெட்ச் பண்ணுவது (பின்னணியில் பியானோவில் வால்ட்ஸ் நீண்ட நேரம் நிற்க முடியாமல் அந்தப் பெண் தனது காலைச் சொறிந்து கொள்வது) குற்றவாளி முழுக்கூண்டில் அந்த இளைஞன் அடைபட்ட மிருகம் போலவே உலவுவது...

கதையை முடிக்கும் போது சென் தடுமாறியிருக்கிறார். தூக்கு தண்டனை வாசிக்கப்பட்டதுமே கதை முடிந்து விடுகிறது. அதன்பின் melodrama! சந்தாள் கிராமத்தினர் சூரியோதயத்தைப் பார்ப்பது தூக்கு தண்டனை அளிப்பதைக் காட்டுவது....

சென் சத்யஜித் ரேயினின்றும் வேறுபட்ட டைரக்டர். ஒவ்வொரு காட்சியையும் ஒரு 50 அடி அதிகமாகவே நிறுத்தி நிதானமாகக் காட்டுகிறார். ஆனால் காட்சி மாற்றங்களை மிகவும் [illegible] ஆக நிகழ்த்துகிறார். நடிகர்களிடம் கொஞ்சம் நாடக பாணியை அனுமதிக்கிறார்.

மஹாஜனின் காமிரா உதவுவதுபோல சலில் சௌத்ரியின் பின்னணி இசை உதவவில்லை. சில

எலக்ட்ரானிக் வாத்யங்கள் பிரிட்டிஷ் காலக் கதையில் உறுத்துகின்றன. இருந்தும் முக்கியமான படம் இது.

❑

டாக்டர் கோவூரின் பகுத்தறிவுக் கூட்டம் ஒன்றிற்கு அழைத்ததால் சென்றிருந்தேன். சுமார் 80 வயதுள்ள டாக்டர் கோவூர் துல்யமான வெள்ளை சூட் அணிந்து மேடைக்குத் தாமதமாகக் கொண்டு வரப்பட்டார். (ஜுரமாம்) மெதுவாக மலையாள உச்சரிப்புக் கலந்த ஆங்கிலத்தில் கடவுள் இல்லை என்பதற்குச் சம்பிரதாயமான வாதங்களைப் பேசினார். பங்களாதேஷில் இந்தியப் பெண்கள் கற்பழிக்கப் பட்டபோது கிருஷ்ணர் ஏன் வரவில்லை என்று கேட்டார், ஏசு கிறிஸ்து இன்றிருந்தால் துப்பாக்கியால் அவரை யூதர்கள் சுட்டிருப்பார்கள். சிலுவைக்கு பதில் துப்பாக்கி சின்னமாகி இருக்கும் என்றார்.

திராவிடக் கழகத்தினர் பலர் இப்போது கோவூருக்குப் பின் அலைகிறார்கள். குடியாத்தம் குண்டர் ஒருவர் சாயிபாபா வித்தைகள் பெரும்பாலானவற்றை கடவுள் இல்லவே இல்லை என்று விவரித்துக் கொண்டே செய்து காட்டினார். ஒரு மலையாள இளைஞர் ஹிப்னாடிஸ வித்தைகள் செய்து காட்டி சபையில் சிலரைக் குழந்தைகளாக்கிப் பால் குடிக்க வைத்தார்.

கோவூருக்கும் சாயிபாபாவுக்கும் ஒற்றுமைகள் சில இருக்கின்றன. இருவருக்கும் நிறையக் கூட்டம். இருவருக்கும் காணிக்கை செலுத்த வேண்டும். (கோவூர் கூட்டங்களுக்கு டிக்கெட் பணம் வசூலிக்கிறார்கள்) இருவர் கூட்டத்தின் வாசலிலும் புத்தகங்கள் விற்கிறார்கள். இருவர் கூட்டத்திலும் மாயாஜால வித்தை செய்து காட்டுகிறார்கள். இருவரும் கடவுளைப் பற்றித்தான் பேசுகிறார்கள்.

எனக்கென்னவோ கோவூர் கூட்டத்திற்கு வந்திருந்த வரில் எண்பது சதவிகிதம் வைஃட்பீல்டுக்கும் செல்வார்கள் எனத் தோன்றியது.

ஜெயபாரதியின் 'இரண்டு பேர் வானத்தைப் பார்க்கிறார்கள்' பங்களூரில் நாடகமாக நடிக்கப்பட்டது. நடிக்கப்பட்ட கதையில் சினிமா அம்சங்களைச் சற்றுத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதாக இருந்தது. பங்களூருக்கு அருகில் ஒரு கிராமத்தில் இடம் பார்த்து location shooting பண்ணப் போகிறார்கள் என்றும் கமலஹாசன் நடிக்கப் போவதாகவும், அசோகமித்திரனும் இதன் திரைக்கதைக்கு கொஞ்சம் treatment கொடுத்திருக்கிறார் என்றும் தெரிந்து கொண்டேன்.

41

- பிப்ரவரி 1977

அ. மாதவையாவின் 'கிளாரிந்தா' என்கிற ஆங்கில நாவலைத் தேடி எடுத்து மொழி பெயர்த்து (சரோஜினி பாக்கியமுத்து) சிறப்பாக வெளியிட்டிருக்கிறது கிறிஸ்துவ இலக்கிய சங்கம். தஞ்சாவூர் மராட்டிய பிராமணப் பெண் கிளாரிருந்த பாய் உடன் கட்டையிலிருந்து வெள்ளைக்காரன் லிட்டில்டனால் காப்பாற்றப்பட்டு அவனுடன் பாவத்தில் வாழ்ந்து ஞானஸ்னானம் பெற்று கிளாரிந்தாவாகி கிறிஸ்துவ சமூக சேவையில் ஈடுபட்டு பாளையங்கோட்டையில் ஒரு சிறிய புனிதக் கோயில் எழுப்பிய வரலாற்று நிகழ்ச்சியின் அடிப்படையில் மாதவையா பின்னியிருக்கும் கதை மிகவும் சுவாரஸ்யமானது. பாக்கியமுத்துவின் மொழி பெயர்ப்பு சரளமாக இருக்கிறது. இருந்தாலும் ''சாப்பாட்டுக்கும் தானத்துக்கும் கணக்கா வந்திருக்கே. பிராமணனுக்கு சொல்லியா தரணும்'' போன்ற வரிகளின் மூலத்தைப் பார்க்கத் தோன்றுகிறது. கிளாரிந்தாவை ஒரு நல்ல Period Piece ஆக சினிமா எடுக்கலாம். சினிமா அம்சங்கள் நிறைய இருக்கின்றன. 'கணையாழி'யில் இந்த நாவல் சுருக்கப்பட்டு வரலாம் எனக் கேள்விப்படுகிறேன்.

மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' படித்துவிட்டு அவரை ராஜமையருடன் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் முக்கியமான தமிழ் நாவலாசிரியர்களில் ஒருவராக நிச்சயம் சொல்லலாம். 1923-25ல் அவர் இரண்டு வருஷம் நடத்திய 'பஞ்சாமிர்தம்' என்கிற பத்திரிக்கையைப் பார்க்க ஆவலாக இருக்கிறது.

❑

அதுபோல் சென்ற நூற்றாண்டில் எத்தனை தமிழ் பத்திரிகைகள் வெளிவந்திருக்கின்றன தெரியுமா? நூற்றுக்குமேலே! 1831-இல் வெளிவந்த 'தமிழ்ப்பத்திரிகை' என்கிற திங்கள் இதழ்தான் முதல். கிறிஸ்தவ மிஷன்களுடன் சம்பந்தப்பட்டுப் பல இதழ்கள் வெளிவந்தன. சுவிசேஷ பிரபாவ விளக்கம்,' 'திருச்சபை பத்திரிகை' 'சத்திய வேதானுசாரம்,' 'தென் திருவாங்கூர் கிறிஸ்துவ தூதன்' என்றெல்லாம் சினேகமான பெயர்கள் கொண்ட பத்திரிகைகளும் நிறைய வந்திருக்கின்றன. 'ஜன சினேகன்,' 'பாலியர் நேசன்,' 'தென் இந்திய மித்திரன்,' 'திராவிட ரஞ்சினி' போன்ற பத்திரிகைகளை செட்டியார்களும் நாயுடுக்களும் அப்பு முதலிக்களும் அவரவர் சொந்த திருப்திக்கு வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் பத்திரிகைகளில் நூற்றாண்டைக் கடந்துவந்த ஒரே ஒரு பத்திரிகை சுதேசமித்திரன் (1880).

❑

தமிழ் சினிமாவில் எல். ஆர். ஈஸ்வரி போன்றவர்களுக்காக எழுதப்பட்ட கிளப் டான்ஸ் பாடல்களை யாராவது தொகுப்பாக வெளியிடலாம் என்று தோன்றுகிறது. சமீபத்திய ஒரு ஜெம்.

"இரவு முழுதும் விருந்து வைக்கின்றேன்
இதயம் முழுதும் திறந்து வைக்கின்றேன்
இதற்கு முன்னாலே நீ பார்த்த பெண் போலே
இந்த உடம்பு பழையதல்லவே!"

42

- மார்ச் 1977

ஏறக்குறைய பதினொரு வருஷங்களுக்கு அப்புறம் பம்பாய் சென்றேன். ஒரு வாரம் இருந்தேன். பம்பாய் வானத்தை வருட ஏகப்பட்ட விரல்களை வளர்த்துக் கொண்டிருந்தது. கொலாபா, நாரிமன் பாயிண்ட் தேப்பியன் ஸி பகுதிகளில் எல்லாம் மேல்நாட்டு நகரத்தின் சாயல் தெரிகிறது.

தினம் ஒரு பாட்டில் ஷிவாஸ் ரீகல் குடிப்பவர்களும் ஏறக்குறைய ஹிந்தி சினிமா செட் போல அசிங்கமான அலங்காரங்கள், நீச்சல் குளம், Blue films என்று வாழ்பவர்கள் இருக்கிறார்கள். தெருவில் பேப்பர் துண்டுகள் பொறுக்கி அதை தினம் 3 ரூபாய்க்கு விற்று, 'பட்டாட்டா வடா' வை உண்டு பிளாட்பாரத்தில் தூங்கும் ஜனங்களும் இருக்கிறார்கள். ஏன் என்ற கேள்வி பம்பாயில் இறந்து விட்டது. மொய்னிஹன் சொன்னதில் தப்பில்லை.

❑

பம்பாயில் நான் பார்த்த படம் சத்யஜித் ராயின் 'ஜனஆரண்ய', 'பிரதித்வந்தி'யைப் போல அவ்வளவு பாலிஷ் இல்லாவிட்டாலும் ஒரு தூய்மையான இளைஞனை மெல்ல மெல்ல மாசுபடுத்தி அவனிடம் கொஞ்ச நஞ்சம் மிச்சமிருக்கும் பிரக்ஞையை எல்லாம் கழற்றிவிடும் நகரத்தின் அசுர குணங்களைத் திறமையாகக் காட்டியிருக்கிறார் ராய்.

நன்றாகப் படிக்கக் கூடிய பையன். ஹானர்ஸ் பரிட்சைத் தாளில் பொடியான கையெழுத்தில் எழுதப்பட்ட அவன் விடைகளைப் படிக்க திருத்துபவருக்கு மூக்குக் கண்ணாடி கிடைக்காததால் தட்டுத் தடுமாறி பாஸ் பண்ணி விட்டு வேலை கிடைக்காமல் தெருத் தெருவாக அலைகிறான். உத்பல் தத் எறிந்த வாழைப்பழத் தோலில் சறுக்கி விழுந்த அவனிடம் நகரத்தில் பிழைப்பது பற்றி உபதேசம் பெறுகிறான். ஒரு தலாலாகிறான். Middle man

பண்டங்களை ஒரு இடத்தில் வாங்கி மற்றொரு இடத்தில் விற்க வேண்டியது. முதலில் Stationery, காகிதங்கள் சோப்பு optical brightener .... கொஞ்சம் கொஞ்சமாக அவன் பிஸினஸ் பெருகி குட்டிகளைக் கூட்டிக் கொடுக்க வேண்டியதும் அவன் தொழிலின் அம்சமாகி தன் நண்பனின் தங்கையையே ஹோட்டல் ரூமுக்கு அழைத்துச் செல்லும் போது அவன் தோல்வி முற்றுப் பெறுகிறது. வசனங்களை சத்யஜித்ராயே எழுதியிருக்கிறார். இரண்டு உதாரணங்கள்:

வேலையற்ற நண்பர்கள் இருவரும் ஃபவுண்டன் அருகில் உட்கார்ந்து கொண்டு கால்பந்து மைதானத்தி லிருந்து வெளிவரும் ஆயிரக்கணக்கான ஜனங்களை ஒவ்வொருத்தராக விமரிசிக்கிறார்கள். அதில் ஒருத்தனை ''தாதா'' என்று உரக்கக் கூப்பிட அவன் திரும்ப ''நீ ஹானர்ஸில் ஃபர்ஸ்ட் கிளாஸில் பாஸ் செய்தாயா? '' என்று இங்கிருந்து கத்துகிறான். புரியாத அவன் பதிலுக்கு அங்கிருந்து ''மோஹன் பாகான்'' என்று கத்துகிறான்.

அனுபவமுள்ள நண்பனுடன் ஒரு பெண்ணைக் கூட்டிவர ஒரு இடத்திற்குச் செல்கிறான். அங்கே அவர்கள் வீட்டு நாய் அவன் மூஞ்சி மேல் ஏறி நக்குகிறது.

''இந்த மாதிரி நாயை வைத்துக் கொண்டால் உன் பிஸினஸ் என்ன ஆவது?''

43

- ஏப்ரல் 1977

தமிழ் நாவல் பற்றி திருச்சி வானொலியில் பேசுவதற் காகப் பொதுவாக நாவல் பற்றி நிறையப் படித்தேன். அதில் என்னைக் கவர்ந்தது ப்ரெஞ்சு விமரிசகர் ஒருவர் நாவல் என்பது "Fiction in prose of a certain extent" என்றது. அசுரகணம், பார்த்திபன் கனவு, ஒரு புளிய மரத்தின் கதை, சித்திரப்பாவை போன்ற வெவ்வேறு நாவல்களை நினைத்துப் பாருங்கள். அவைகள் அனைத்தையும் ஒரே

வாக்கியத்தில் அறுதியிடுவது எப்படி?' நாவல் என்பது ஓர் அளவுள்ள உரை நடைக் கதை.

வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரத்தை முதல் தமிழ் நாவலாகக் கொண்டால் 1978 தமிழ் நாவலின் நூற்றாண்டு வருஷமாகிறது. யாராவது Fiction in prose of a certain extent ஏதாவது செய்ய வேண்டாம்?

துணைக் கண்டத்தில் நாவல் தயாரிப்பவர்கள் ஒன்று கூடி ஒரு பிளேட் பஜ்ஜி சாப்பிடலாம். அப்புறம் நான் ஏன் நாவல் எழுதினேன் என்று ஒரு பட்டிமன்றம் நடத்தி எல்லோரும் பேசி, பேசியதை அச்சடித்து பைண்டு பண்ணி மற்றொரு விழாவில் விற்கலாம். இந்த விழாவின் இலக்கியத்துடன் ஸ்னானப் பிராப்தி இல்லாத ஒரு குண்டரை கூப்பிட்டு அவரிடமிருந்து யாராவது புஸ்தகத்தை வாங்கிக் கொள்ள பளிச் பளிச் என்று இரண்டு காமிராக்காரர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கலாம். ஏதாவது செய்ய வேண்டும்.

எனக்கு வேண்டிய எழுத்தாளர் ஒருவர் ஒரு பெண் காணாமற்போன உண்மை நிகழ்ச்சியை எனக்கு எழுதியிருந்தார். நான் எழுதும் த்ரில்லர்களை எல்லாம் தூக்கி சாப்பிடும்படியாக வினோதமான நிகழ்ச்சிகள்.... நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகள். பயங்கர நிகழ்ச்சிகள். கடைசியில் பெண்ணைக் காணவில்லை. என்னை அபிப்ராயம் கேட்டிருந்தார். கதையாக எழுதுவதில் ஒரு சௌகரியம். இஷ்டப்பட்ட அத்தியாயத்தில் கதாநாயகியை மீட்கலாம்... நிஜ வாழ்க்கையின் அத்தியாயங்கள் அவ்வளவுச் சுலபமாக இருப்பதில்லை. தேர்ந்த எழுத்தாள நண்பர் அவர். விதவிதமான குற்றங்களைப் பற்றி எழுதுகிறவன் நான்... இருவரும் ஒன்றும் செய்ய முடியாது. காரணம் பெண் நிஜம், போலீஸ் நிஜம்.

44

-மே 1977

மற்றவர்கள் எப்படியோ எனக்கு 'எழுத்தாளர்களைச் சந்தியுங்கள்' என்றால் எப்போதும் அலர்ஜி. சமீபத்தில் அடுத்தடுத்து இரண்டு கூட்டங்களில் கலந்து கொள்ளும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. திருச்சி வானொலி ஏற்படுத்தியிருந்த நாவல் கருத்தரங்கக் கூட்டம், கிவா.ஜ. அகிலன், கி. ராஜநாராயணனுடன் தனியாகப் பின் வரிசையில் ஒதுங்கி விட்டேன். கருத்தரங்கின் விஷயம் கனமாக இருந்ததால் எழுதிக்கொண்டு வந்து வாசித்து விட்டேன். கொஞ்சம் சுமாரான கட்டுரை எழுதியிருந்தேன். ஒரு ரசிகர் அருகில் வந்து 'கொஞ்சம் அந்த ஸ்கிரிப்ட்டைக் கொடுங்கள். பார்த்துவிட்டுத் தருகிறேன்' என்று என் மூஞ்சி முன்னாலேயே அதைப் பிடுங்கிக் கொண்டு காணாமற் போய்விட்டார்.

அடுத்த கூட்டம் சென்னையில், இலக்கியச் சோலையின் இலக்கியமாலை, நேருக்கு நேர் என்னைச் சந்தித்து கேள்விக் கணைகளைத் தொடுங்கள் என்று வாசகர்கள் பலருடன் அழைக்கப்பட்ட போட்டா போட்டி காட்டா குஸ்திக் கூட்டம். இந்த மாதிரி கூட்டங்களில் கேள்வி கேட்கிறவர்களின் சைக்காலஜி ஒரு வழியாக எனக்குப் பிடிபட்டது. கேள்வி கேட்பதுதான் அவர்களுக்கு முக்கியம், கேள்வி கேட்கப் பட்டவுடனேயே நிறைவு பெற்றுவிடுகிறது. பதில் தற்செயலானது தான். கேட்ட கேள்விக்கு நான் முக்கி முனகி பதில் சொல்லிக் கொண்டிருக்கையில் கேள்வி கேட்டவர் அடுத்த கேள்வியை யோசித்துக் கொண்டிருக்கிறார். இன்னும் கொஞ்சம் ஆழமாகப் பார்த்தால், கேள்வி கேட்பதே தன்னுடைய குரலைக் கொஞ்ச நேரம் சுகமாகக் கேட்டுக் கொண்டிருப்பதற்கு மட்டும் தானோ என்று சந்தேகம் கூட எனக்கு அன்று பல தடவை ஏற்பட்டது.

பிரபலத்திற்கு கொடுக்க வேண்டிய பலப்பல விலைகளில் ஒன்று ஒருவிதமான சுதந்திர இழப்பு என்பதை போனவாரம் பங்களூர் வந்திருந்த கமலஹாஸனுடன் பிருந்தாவன் ஓட்டலில் சாப்பிடச் சென்றிருந்த போது உணர்ந்து கொண்டேன். கமலஹாஸனை அடையாளம் கண்டு கொண்ட உடன் எல்லோரும் எங்கள் மேஜையைச் சூழ்ந்து கொள்ள... வெறுமனே இருபது பேர் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்க... Parallel cinema பற்றிப் பேசுவது, ஏன் சாப்பிடுவதுகூட எனக்கு சிரமமாக இருந்தது. கமலஹாஸன், ''You have to get used to this''

45

-ஜூன் 1977

கி. ராஜநாராயணனுடன் பேசுவது போலிருக்கிறது. அவரது 'கோபல்ல' கிராமத்தைப் படிக்கும் போது. அந்த வயசாளிகளும்... சம்சாரிகளும் நாயக்கர்களும் நிறைய நெய்யும் பாலும் உண்டு ஒவ்வொருவரும் உயிர்பெற்று... நடமாடுகிறார்கள். நாவலைப் படிக்கும் போது இதை எழுத முடிந்த சாத்தியமும் என்னை பிரமிக்க வைக்கிறது. ராஜநாராயணனுக்கு தென் திருநெல்வேலிக் கரிசல் நிலம் அவ்வளவு அத்துபடியாகத் தெரிந்து இருக்கிறது. நிலத்துடன் அங்கே உள்ள குருவிகள், கால்நடைகள் அந்த நிலத்து ஜனங்கள். அந்த நிலத்து நம்பிக்கையில் Folklore பார்வை, பூர்விகம், சரித்திரம் எல்லாமே மிகத் திறமையாக எழுதப்பட்டிருக்கின்றன.

கோபல்ல கிராமம் சம்பிரதாய நாவல்களின் வடிவத்தில் இல்லை. இஷ்டப்பட்ட போது சரித்திரம் தொடர்கிறது. சளைக்காமல் ஏறக்குறைய பட்டியல்போல் ஒவ்வொரு நாயக்கரும் அறிமுகம் ஆகிறார்கள். 'இந்த ஆள் தானய்யா, இந்தக் கதையின் நாயகன்' என்று சொல்ல முடியவில்லை. சரித்திரம் கர்ண பரம்பரைக் கதை, மாட்டு,

வாகடம், தயிர் தோய்க்கும் முறை, நாட்டு வைத்தியம், வினோத ஜந்துக்களை உண்ணும் முறைகள்... என்று எத்தனையோ சமாசாரங்கள் கலந்து இஷ்டப்பட்ட வரிசையில் வந்தாலும் கோபல்ல கிராமம் ஒரு மிக அருமையான நாவல் என்று சொல்வேன். காரணம் அதை எழுதியவர் எழுதிய விஷயத்தின் மேல் கொண்டிருக்கும் பற்று, இசை, ஏன் காதல்...

தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டு, துலுக்கர்கள் தொந்தரவினால் தென்னிந்தியாவின் ஆழத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன் வந்து சேர்ந்து இந்தக் கலாசாரத்தில் ஒன்றுபட்டு விட்டுக்குள் தனிப்பட்ட தெலுங்கு பேசிக் கொள்ளும் ஒரு தனிப்பட்ட இனத்தினரின் வசீகரமான கதை இது.

ஓர் எழுத்தாளன், வாசகன் என்கிற இரண்டு தகுதிகளிலிருந்தும் கோபல்ல கிராமத்தை ஒரு பிரமாதமான நாவல் என்கிறேன்.

46

- செப்டம்பர் 1977

'கரம் ஹவா' எம். எஸ்.ஸத்யுவின் 'கன்னேச்வர ராமா' அனந்த் நாக், ஷபானா ஆஸ்மி, அமோல் பாலெக்கர், பிவி, காரந்த் நடித்த அதே காரந்த் இசை அமைத்து எடுக்கப்பட்ட கன்னட வர்ணச் சித்திரம்.

எஸ்.கே. நாரிக் என்பவர் நாட்டுப் பாடல்களின் ஆதாரத்தில் எழுதியிருக்கும் நாவல் பிரிட்டிஷ் காலத்தில் தார்வார் பிரதேசத்தில் ஒரு கொள்ளைக்காரனைப் பற்றியது. திரையில் அதை ஸத்யூ Stylised ஆகச் சொல்லியிருக்கும், முரட்டுச் சுபாவம் கொண்ட ராமன் கொள்ளைக்காரனாக மாறும் ஆரம்ப கட்டங்கள் விறுவிறுப்பாகச் செல்கின்றன. கிராமத்துப் பெரியதனக்காரருடன் மோதி அடிபட்டு

அடைபட்டு தப்பித்துக் கொள்ளைத் தலைவன் காரந்திடம் சரணடைந்து அவன் வைப்பாட்டி (ஷபானா)வைக் கண்டு பிரமித்து-''இந்தக் கூட்டத்தில் எல்லா சொத்தும் பொது, இவளைத் தவிர,''-ஷபானா புதிதாக வந்த ராமன் மேல் மோகம் கொண்டாலும் தலைவன் இறக்கும் தருவாயில் ராமனைத் தன் வாரிசாக நியமித்துச் சென்றாலும், அவன் இராமனிடம் இருக்க ஆசைப்படாமல் இறந்தவன் இரகசியமாகப் பள்ளம் தோண்டிப் புதைத்து வைத்திருந்த நகைகளுடன் இரவோடு இரவாக ஓடிப்போய்விடுவது கதையில் எதிர்பாராத ஆச்சரியம் தருகிறது.

ஒரு Ballad பாணியில் Flashback களில் கதை சொல்லும் ஸத்யு முக்கியமான இந்திய டைரக்டர்களின் சின்ன வரிசையில் சேருகிறார். காமிரா எப்படியோ அந்தப் பழைய பிரிட்டிஷ் காலத்தைத் தெரிவித்து விடுகிறது, (மெலிதான Defocussing. மெலிதான கலர்,) நடுராத்திரியில் ஏரிக்கரையில் ஒரு கிராமமே எரிவதைக் காட்டும் காட்சி இடுக்கிட வைக்கிறது. காமிராக்கார அஷோக் குஞ்சல்-இன்ஷான் ஆர்யா மேற்பார்வை - நிச்சயம் முன்னேறப் போகிறார்.

காரந்தின் சங்கீதம் சில புதிய உத்திகளைக் கையாளுகிறது. உதாரணம் சோக கட்டங்களில் சுருதி சேராத தம்புராவை உபயோகிப்பது. பின்னணி சங்கீதம் அளவாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. வெள்ளைக்காரர்கள் நிஜமாக இருக்கிறார்கள்.

இவ்வளவு கவனமாக சாமர்த்தியமாக எடுக்கப்பட்ட படம் முழுவதும் மனநிறைவு தரவில்லை. காரணம் கதாநாயகனை பித்தளைப் பாத்திர நகை திருட்டு கொள்ளைக்காரன் லெவலுக்குமேல் உயர்த்தாமல் காட்டி விட்டு சாகும் தருவாயில் அவனிடம் ஏகப்பட்ட உன்னத குணங்களைக் காட்டும் போது அவன்மேல் அனுதாபம் பிறப்பதில்லை.

இருந்தும் கன்னடம் தமிழ் சினிமாவிலிருந்து எவ்வளவு முன்னேறி இருக்கிறது என்பதற்கு மற்றொரு உதாரணம் 'ராமா'

47

- டிசம்பர் 1977

கிரீஷ் காஸர வள்ளியின் 'கடஷ்ரார்த்தா' மற்றொரு கன்னடப் பட மைல்கல் என்று சற்றுத் தயக்கத்துடன் சொல்லலாம்.

வேத பாடசாலை நடக்கும் வீட்டில் இருக்கும் இளம் பிராமண விதவை ஸ்கூல் வாத்தியாரான சூத்திரனுடன் கள்ளத் தொடர்பு கொண்டு கர்ப்பமானதை அறிந்து பிராமண சமூகம் அவளை ஜாதிப்ரஷ்டம் செய்து அவள் உயிருடன் இருக்கும் போதே அவளுக்குப் பானையை உடைத்து சிரார்த்தம் செய்து, மொட்டையடித்து விடுவது கதையின் சுருக்கம்.

சினிமாவில் இதைப் பெரும்பாலும் வேத பாடசாலைக்குப் படிக்க வந்திருக்கும் ஒரு சின்னப் பையனின் கோணத்திலிருந்தே காட்டியிருக்கிறார்கள். அந்தப் பையனை மிகத் திறமையாக டைரக்ட் செய்திருக்கிறார் கிரீஷ். அவனுடைய அறியாமை, அனாதைத்தனம், ஆர்வம், விளையாட்டு, துக்கம். பெரிய பையன்கள் அவனை வேறு வேறு விதத்தில் துன்புறுத்துவது, பயமுறுத்துவது, இரவில் அவனைத் தடவிப் பார்ப்பது... எல்லாவற்றையும் மென்மையாக அழுத்தமாகக் காட்டியிருக்கிறார்கள்.

யூ.ஆர். அனந்த மூர்த்தியின் கதை. காரந்தின் இசை இளைஞர்களான ராமச்சந்திர, குல்கர்ணியின் காமிரா, படத் தொகுப்பு காஸர வள்ளியின் திரைக்கதை டைரக்ஷனில் ஸத்யஜித்ரேயின் பாதிப்பு இருக்கிறது. ஒரு சில இடங்களில்

இதுதான் டைரக்ஷன் என்று கட்டாயப்படுத்தி சில காட்சிகளில் காட்டுவதில் கொஞ்சம் அமெச்சூர்த்தனம் தென்படுகிறது. ராமச்சந்திராவை பாலு மகேந்திரா (கோகிலா) வுடன் சிறந்த காமிராக்கார இளைஞர்களின் பட்டியலில் சேர்க்கலாம்.

Bigotry என்பது எல்லா சமூகத்திலும் இருக்கிறது. ஆனால் சமீபத்தில் வெளிவந்த கன்னட புதிய அலைப் படங்கள் அத்தனையும் பிராமண சமூகத்தை மட்டும் குறிப்பாகத் தாக்குகின்றன. இந்தப் படத்தில் வேதம் படிக்கும் குடுமி வைத்த பிராமணச் சிறுவர்கள் பீடி பிடிப்பதையும் அனாவசியமாக Shock value வுக்காகக் காட்டுகிறார்கள். மற்ற சமூகத்தைப்பற்றி இப்படிக் காட்டினால் நிச்சயம் தியேட்டரைக் கொளுத்தி விடுவார்கள் பிராமணர்கள் ''எஷ்டு சென்னாக மாடுத்தாளே'' என்று ரசிப்பார்கள்.

படம் பொதுவாக Morbid ஆக இருக்கிறது. ரேயின் பார்வையில் இருக்கும் Sympathy humanism இதில் இல்லவே இல்லை.

48

-ஜனவரி 1978

இந்திரா பார்த்தசாரதிக்குப் பரிசு கிடைத்திருக்கிறது. அகாடமியை சென்ற வருஷங்களில் நாராகக் கிழித்தவர்கள் இந்த வருஷம் அதைப் போற்ற வேண்டும். மாட்டார்கள். சும்மா இருப்பார்கள். நான் சொல்லுகிறேன் well done academy! பார்த்தசாரதியின் இலக்கியப் படைப்புகளைத் திருப்பிப் பார்ப்பதற்கு இது தக்க தருணம். பார்த்தசாரதியின் கதை மாந்தர்கள் பலர் கோழைகளாக இருப்பார்கள். உண்மையைச் சந்திக்கத் தயங்குவார்கள். அவர்கள் பேச்சில் புத்திசாலித்தனம் நிறைய இருக்கும். பார்த்தசாரதியின் உரைநடையில் சம்பாஷணைகள் மிக அழுத்தமாக இருக்கும்.

வருணனைகளில் சற்று அவசரம் காட்டி விட்டு சீக்கிரமே உரையாடலுக்குள் நுழைந்துவிடுவார். எல்லாப் பாத்திரங்களுக்குள்ளும் கொஞ்சம் இருப்பார். நம் தின வாழ்க்கையில் ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிக் கொள்வதிலும் பழகிக்கொள்வதிலும் உள்ள பாசங்குளையும் மெலிதான அபத்தங்களையும் மிகத் திறமையாகச் சுட்டிக் காட்டக் கூடியவர்.

அவர் சிறுகதைகளில் எனக்குப் பிடித்தது 'பிரயாணம்' (அம்மா இறந்ததும் குடும்பத்தினரை பாதிக்கும் விதங்களை வர்ணிக்கும் கதை) குறு நாவல்களில் 'ஊனம்', நாவல்களில் 'தந்திர பூமி', நாடகங்களில் 'மழை'.

❑

CLERIHEW என்பது ஒருவித வேடிக்கைப் பாட்டு J.C.Bentley என்கிற எழுத்தாளர் பிரபலமானவர்களின் பெயர்களை அமைத்து எழுதிய பாட்டுகளில் சிறந்தது ஸெண்ட் பால் தேவாலயத்தை நிர்மாணித்த ஸர் கிரிஸ்டோஃபர் ரென் பற்றியது.

''Sir Coristopher wren
Said Im dining with some men
If any one calls
Say Im designing St. Pauls.''

நம் நேரிசை வெண்பாவில் இந்த மாதிரிப் பாட்டுக்களை முயற்சிக்கலாம் என்று தோன்றுகிறது.

இரண்டு உதாரணங்கள்.

✓ வள்ளுவர் வீட்டில் இருக்கையில் வாசுகியார்
மெள்ள நடக்கிறார் ஏனென்றால்- உள்ளே
திருக்குறட் பாவெழுதிக் கொண்டிருக்கும்போது
குறுக்கிட்டால் கோபம் வரும்.

✓ 'மீசா' மறைந்து 'எமர்ஜென்ஸி' விட்டுப் போய்
தேசாயின் ஆட்சியில் சந்தோஷம்-பேசாமல்

பாத்திரம் ஒன்றை எடுத்துக் கொண்டெல்லோரும்
... ... குடிக்க வாரும்!

49

- பிப்ரவரி 1, 1978

ஃபிலிம் உற்சவத்தின் ஜுரத்தின் போது சென்னையில் நான்கு தினங்கள் இருந்தேன். எந்தப் படத்தில் எத்தனை அவிழ்த்துக் காட்டுகிறார்கள் என்றுதான் பெரும்பாலும் பேச்சு அடிபட்டது. சில படங்களில் 'செக்ஸ்' எதுவும் இல்லாமல் பேசிப் பேசிப் பேசி மாய்ந்ததால் ரசிகர்கள் நாற்காலிகளை உடைத்து தியேட்டரை சேதப்படுத்திவிட்டு வெளியே சென்றார்களாம்.

இங்கிலாந்தில் நான் பார்த்த படங்கள் நினைவுக்கு வருகின்றன. முதலில் அந்தப் படங்களின் அப்பட்டமான செக்ஸ் என்னைத் தாக்கியது. இரண்டு மூன்று படங்களுக்கு அப்புறம் அலுத்துப் போய் வால்ட் டிஸ்னி படங்களே தேவலாம் என்றாகிவிட்டது. ஜெர்மனியில் பிள்ளைகள் எல்லாம் தூங்கிவிட்டார்களா' என்று கேட்டுவிட்டு இரவில் டெலிவிஷனில் கூட இந்த எக்ஸ் படங்களைப் போட்டுக் காட்டுகிறார்கள். செக்ஸ் சாதனங்களையும் புத்தகங்களையும் பஜாரில் புன்முறுவலுடன் விற்கிறார்கள். நாடகங்களில் நிர்வாணம் சகஜமாக இருக்கிறது. தெருவில் போகும் போதுகூடப் பெண்கள் தத்தம் அங்கங்களைத் தெரிவிப்பதில் தயக்கமில்லாமல் இருக்கிறார்கள்.

எல்லாம் சேர்ந்து செக்ஸில் இருக்கும் ஆதாரமான கவர்ச்சியை அழித்து விடுகின்றன. ஒரு துப்பறியும் நாவலின் முடிவை முதலிலேயே சொல்லி விடுவதுபோல் ஆகிவிடுகிறது.

❑

பூர்ணம் விசுவநாதன் அவர்கள் என் ஓரங்க நாடகங்கள் இரண்டை பிப்ரவரியில் நடத்தப்போகிறார். ஒத்திகையைப் பார்த்தேன். சென்னையில் வெவ்வேறு தூரங்களிலிருந்து வந்து அமைதியாக காத்திருந்த குழுவினர் ஒவ்வொருவரும் ஆரம்பித்த உடன் மிகுந்த ஆர்வத்துடன் தத்தம் பாகங்களைச் செய்திருக்கிறார்கள். இரண்டும் ஒரு சிறுகதை எழுத்தாளன் முயன்று எழுதிப் பார்த்த நாடகங்கள். இவற்றை நடிப்பதில் ஏற்படும் சிரமங்கள் எனக்குப் புரிந்தன. குறிப்பாக இரண்டாம் நாடகத்தில் Cue என்பதே இல்லாமல் இஷ்டத்திற்கு எழுதியிருக்கிறேன். எழுதப்பட்ட நாடகம் மொத்த முயற்சியில கால் பங்குதான் என்று தெரிகிறது. அது நடிக்கப்படும் போது பூர்ணம் போன்றவர்களின் திறமை யினால் வரிகளில் தொனியும் மெருகும் கூடி ஏற்படும் பரிணாமத்தைப் பார்த்தால் ஒழுங்காக ஒரு நாடகம் எழுதிக் கொடுத்திருக்கலாமே என்று தோன்றுகிறது. இந்த நாடகங் கள் வெற்றிபெற்றால் அது பூர்ணம் அவர்களையே சாரும். தோற்றால் உடனே என்னைச் சுட்டிக் காட்டலாம்.

❑

'குங்குமம்' இதழினர் திடீரென்று நடிகை சுஜாதாவைச் சந்திக்க அழைத்துச் சென்றனர். நடிகைக்கும் எனக்கும் பெயரைத் தவிர வேறு எந்தவித பிராப்தியும் இல்லை. இருந்தும் அந்த பேட்டி சுவாரஸ்யமாகவே இருந்தது. சில படங்களில், சில வருஷங்களில் புகழின் உச்ச கட்டத்தை அடைந்து விட்ட அந்த நடிகையின் sincerity-யும் முணுக்கென்றால் உணர்ச்சி வசப்படும் தன்மையும், நாம் பேசிக் கொண்டிருக்கும்போது பேச்சின் வின்யாசங்களுக்கு ஏற்ப மாறும் முகபாவத்தின் சலனமும் கணவர் திரு. ஜெயகரின் சில ஆதாரமான பிரச்னைகளுக்கு அந்தப் பேட்டியின் பத்திரிகை வடிவத்தில் வராது.

❑

டைரக்டர் திரு.பாலசந்தருக்கு ஒரு திரைக்கதை எழுதிக் கொடுக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. பாலசந்தர் இத்தனை படங்கள் எடுத்தும் தமிழ் சினிமா ரசிகரின் குணவிசேஷங்கள் இன்னும் பிடிபடவில்லை என்கிறார். தற்போது பிரபலமாயிருக்கும் நடிகர் நடிகையரின் பெரும்பாலோர் அவரால் அறிமுகப்படுத்தப்பட்டவர்கள். Are they grateful? என்று கேட்டேன். ''முதல் தீபாவளிக்கு வந்து சேவிச்சுட்டுப் போவாங்க. அடுத்த தீபாவளிக்கு டெலிபோன்ல இருக்காரன்னு கேட்பாங்க. மூணாவது தீபாவளிக்கு மறந்து போய்டுவாங்க'' என்றார்.

50

- பிப்ரவரி - 15, 1978

ஈணையாழியின் பழைய இதழ்களைப் புரட்டிக் கொண்டிருந்தேன். ஒரு தடவை Radio Carbon Dating பற்றிக் குறிப்பிட்டு அப்புறம் அதைப் பற்றி சொல்கிறேன் என்று எழுதியிருக்கிறேன். இப்போது சொல்கிறேன். கொஞ்சம் கவனமாகப் படிக்க வேண்டுகிறேன்.

நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்று வெளியை சூரிய ஒளி மட்டுமல்லாமல் அதற்கு அப்பாலிருந்து வரும் காஸ்மிக் கதிர்களும் தினசரி தாக்குகின்றன. காஸ்மிக் கதிர்களின் தாக்குதலினால் நம் காற்றிலிருக்கும் சில நைட்ரஜன் அணுக்கள் அதிகப்படி நியூட்ரான்களை சேர்த்துக் கொள்வதினால் கார்பன் அணுக்களாக வேஷம் மாறுகின்றன. இவற்றை கார்பன் - 14 ஐஸோடோப்புகள் என்று சொல்கிறார்கள். இந்தப் பாசாங்கு அணுக்கள், ரசாயன சேர்க்கைகளில் கார்பன் அணுக்களைப் போலவே செயல் படுகின்றன. இவைகளும் பிராணவாயுவுடன் சேர்ந்து கார்பன்டையாக்ஸைடாக மாறி உயிரினங்கள், மரம் செடி கொடிகளின் தினசரி காலத்திலும் அவைகளின் ஆதார

அமைப்பிலும் பங்கு பெறுகின்றன. இந்த நியதி பூமியின் ஆரம்ப காலத்திலிருந்தே இருந்து வருகிறது.

கார்பன் - 14க்கு ஒரே ஒரு விசேஷ குணம் உண்டு. அது கொஞ்சம் அலட்டிக் கொள்ளும். அதனிடம் கதிரியக்கம் - ரேடியோ ஆக்டிவிட்டி உண்டு. மிகக் குறைவான இந்த கதிரியக்கத்தின் அளவை அறுதியிட கெய்கர் கவுண்ட்டர் போன்ற விசேஷ சாதனங்கள் இருக்கின்றன. அந்த கதிரியக்க வெளிப்பரப்பில் ஒரு தப்ப முடியாத இயற்கை நியதி இருக்கிறது. ஆரம்ப காலத்திலிருக்கும் ரேடியோ கார்பனின் கதிர் இயக்க அளவு பாதியாவதற்குச் சரியாக 5568 வருஷங்கள் ஆகும். அதிலிருந்து பாதியாவதற்கு இன்னும் ஒரு 5568 வருஷங்கள் ஆகும். இதைப் பாதி வாழ்க்கை (Half life) என்பர்.

உயிரினங்களும் தாவரங்களும் இறந்த உடனே தம்முள் கார்பன் சேர்த்துக் கொள்வதை நிறுத்திக் கொண்டு விடுகின்றன. 17 ஆயிரம் வருஷத்துக்கு முன் வெட்டப்பட்ட ஒரு மரத்துண்டு இருக்கிறது என்றால் அதிலிருந்து இன்று வெளிப்படும் ரேடியோ கார்பன் கதிரியக்கத்தின் அளவு இன்றைய நவீன மரத்துண்டின் கதிரியக்கத்தின் அளவில் சுமார் எட்டின் ஒரு பங்குதான் இருக்கும். இந்த முறைப்படி தொல்பொருள்களின் மெலிய கதிரியக்க அளவை அளந்து அவைகளின் சரியான காலத்தை நிர்ணயிக்கிறார்கள்.

'லிபி' என்கிற விஞ்ஞானி இந்த ரேடியோ கார்பன் முறையை உன்னதமாக்கியிருக்கிறார். மேலும் Tree Ring Calibration என்று இந்த முறையில் ஏற்படும் பிழைகளைத் திருத்தியிருக்கிறார்கள். பல்வாயிரக்கணக்கான வருஷங்கள் தொன்மையான பொருள்களின் காலத்தை ஏறத்தாழ 50 வருஷங்களுக்கு மேல் பிழை அதிகமாகாமல் அறுதி யிட்டிருக்கிறார்கள்.

❑

பொதுவாகவே நம் தமிழ் ஆராய்ச்சியாளர்களிடம் விஞ்ஞான முறைப்படி காலத்தை அறுதியிடுவதில் தயக்கம் இருந்திருக்கிறது. வையாபுரிப் பிள்ளை தமிழ் இலக்கியங்களின் காலத்தை சற்று நவீனமாக்கிவிட்டு மிகவும் திட்டப்பட்டார். மொஹஞ்சதாரோ நாகரிகத்தின் சித்திர எழுத்துக்களை கம்ப்யூட்டரில் கொடுத்து அலசி சில ரஷ்ய ஸ்வீடிஷ் விஞ்ஞானிகள் அவை திராவிட மொழியாக இருக்கலாம் என்று சொன்னது இங்கு பிரபலமாகவில்லை.

அதுபோல் லெமூரியாவைப்பற்றி நிறையத் தமிழர்கள் சரடு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். சமுத்திர இயல் ஆராய்ச்சியாளர்கள் லெமூரியாவைப் பற்றிக் கண்டு பிடித்திருக்கும் விஷயங்கள் எத்தனை பேருக்குத் தெரியும்!

சமயம் வரும்போது அதையும் சொல்கிறேன்.

51

- மார்ச் 1, 1978

சென்ற இதழின் குட்டிலேயே லெமூரியாவைப் பற்றியும் சொல்லி விடுகிறேன்.

திராவிட நாகரிகம் எங்கிருந்து புறப்பட்டது என்பது பற்றி இன்றும் சர்ச்சை இருக்கிறது. நம் பழைய நூல் குறிப்புகளிலும் மிகச் சில சரித்திரக் குறிப்புகளிலும் தமிழர்களின் நாவலந் தீவைப் பற்றி சொல்லியிருக்கி றார்கள். பூமத்திய ரேகைக்கு அருகில் இருந்த தீவு நாவலம் என்றும் லெமூரியா என்கிற அழுந்திப்போன கண்டம் இந்த நாவலத்தின் பகுதி என்றும் நினைக்கிறார்கள்.

லெமூரியா என்பதே கொந்வானா லாண்ட் என்கிற மிகப்பெரிய நிலப்பரப்பின் வடக்குப்பகுதி என்று சொல்கிறார்கள். நாவலம், லெமூரியா, கொந்வானா லாண்ட் யாவையும் இந்து மகா சமுத்திரத்தில் அமிழ்ந்து விட்டன என்று நம்புகிறார்கள்.

நில இயல், சமுத்திர இயல், விலங்கியல் ஆதாரங்களின்படி கொந்வானா லாண்ட் என்கிற பெரிய நிலப்பகுதி தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, இந்தியா, ஏன் ஆஸ்திரேலியா எல்லாவற்றையும் இணைத்திருக்க வேண்டும் என்பதற்கு மிகப் பல சான்றுகள் உள்ளனவாம். ஒரே வகை மண்புழுக்கள் ஆச்சரியகரமாக இந்தியா இலங்கை ஆஸ்திரேலியா மூன்று இடங்களிலும் காணக் கிடைக்கின்றன. (மண்புழுக்கள் கடல் கடந்திருக்க சந்தர்ப்பமில்லை) மார்ஸுபியல் என்று சொல்லப்படும் கங்காரு வகை மிருகங்கள் பல தென் அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் பொதுவாகத் தென்படுகின்றன. எனவே தென் அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியா வரை ஒரு தொடர்ந்த நிலப் பகுதியாக பல லட்சம் வருஷங்களுக்கு முன்பு இருந்த கொந்வானா லாண்ட் பின்பு கடலால் பிரிக்கப்பட்டு சிதறியிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி யாளர்கள் பரவலாக நம்புகிறார்கள்.

ஆங்கில விலங்கியல் ஆராய்ச்சியாளர் பிலிப்ஸ் காவ்டர் என்பவர் இந்தியா, இலங்கை, மடகாஸ்கர் செஷில்ஸ் போன்ற சில தீவுகள் இவைகளில் எல்லாம் பறவை விலங்கினங்களின் வகை ஒற்றுமையை ஆராய்ந்து ஆப்பிரிக்காவையும் இந்தியத் துணைக் கண்டத்தையும் இணைத்த ஒரு நிலப்பகுதி, கொந்வானாலாண்ட் சிதறிப்போய்ப் பல லட்சக்கணக்கான வருஷங்களுக்கு அப்புறமும் இருந்திருக்க வேண்டும் என்று சொன்னார். இதைத்தான் லெமூரியா என்கிறார்கள். லெமூரியா பகுதியில்தான் ஆதிமனிதன் குரங்குகளிலிருந்து புறப்பட்டான் என்று நம்பவும் சான்றுகள் இருக்கின்றன. பழைய தமிழகம், நாவலம், தென் மதுரை, தலைச்சங்க நூல்கள் தோன்றிய இடம் இவையெல்லாம் லெமூரியா என்று நம்ப இடம் இருக்கிறது. இருந்தும் திராவிட நாகரிகத்தின் ஆரம்ப ஸ்தலம்பற்றி பல சந்தேகங்கள் இருக்கின்றன. அவை இவை:

சிந்துவெளி நாகரிகத்தில் திராவிட மொழிகளின் சாயல். எங்கெங்கோ திராவிட வகை மொழிகள் தென்படுவது, வட இந்தியாவில் வழங்கும் ப்ருஹாய் மொழி திராவிட மொழியாம்.

மத்தியக் கிழக்கு மெஸபடோமிய யூப்ரடிஸ் டைக்ரிஸ் நதிகளுக்கு இடையில் சுமேரியா நாகரிகத்திற்கு முற்பட்ட உபாயத் என்கிற மொழியில் பல தமிழ் வார்த்தைகள் தென்படுகின்றன. அந்த மொழியில் பட்டணங்களுக்குப் பெயர்கள் ஊர் என்கிற விகுதியில் முடிகின்றன. ஊர் என்றே ஒரு பட்டணம் இருக்கிறது. 'வேலைக்காரன்' 'காவல்காரன்' என்பது போல் தொழில் சம்பந்தப்பட்ட 'காரன்' என்கிற 'கார்' என்கிற இணைப்புகள் அம்மொழியிலும் உள்ளன.

தென் மண்டலத்தின் மிகப் பழைய குடி மக்களான மலைவாழ் தோடர்களின் நாட்டுப் பாடல்களில் 'கப்பல்' பற்றிய குறிப்புகள் உள்ளன.

திராவிட நாகரிகம் கடல் கடந்து வந்ததா, எங்கிருந்து வந்தது என்று இந்துமகா சமுத்திரத்திலிருந்து மத்தியக் கிழக்கு நாடுகள் வரை தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

52

- ஜூன் 1, 1978

ஹொகேனக்கல் நீர் வீழ்ச்சியில் குளித்தபோது நான்கைந்து பேர் பலமாக ஆனால் விரோதமில்லாமல் உடம்பு பிடித்து விடுகிற மாதிரி இருந்தது அருவி ஸ்நானம்.

டூரிஸ்ட் பங்களாவில் இருக்கும் மேனேஜர் தமிழ் சிறுகதைகள், பத்திரிகைகள் படிக்கிறவராக இருந்து விட்டால் இன்னும் சிலாக்கியம். எழுத்தாளனுக்கு ஒரு எதிர்பாராத போனஸ் ரசிகர்கள்; எனக்கு சினிமா, ரெயில், ப்ளேன் டிக்கெட் வாங்கித் தரவும் பால், பழம்,

ஆரஞ்சுகளை, பால்பாயிண்ட் பேனா, இளநீர், பேனா, லெட்டர் பேட், ரப்பர் ஸ்டாம்பு இன்னும் பிற சாமான்களை அளிக்க முன் வர இருக்கும் ரசிகர்களின் அபரிமிதச் சலுகைகளை உபயோகப்படுத்திக் கொள்ள அடிக்கடி கூச்சப்படுகிறேன்.

அதேபோல் தமிழ்நாட்டில் சந்து பொந்துகளில் எல்லாம் கவிஞர்களும் இருக்கிறார்கள். அதற்கு சான்று நான் வழியில் சாலையில் பார்த்த சில அறிவிப்புக்கள். ''வேற்றுப் பாதையில் மாற்றிச் செல்லவும்'' ''கரம் சிரம் புறம் நீட்டாதீர்'' ''கொம்பொலித்தால் வம்பில்லை'' (ஹாரன்.)

❑

எலக்ட்ரானிக்ஸ் புத்தகத்தை முடித்தே தீருவது என்று எழுதத் துவங்கி ஏறக்குறைய முடிவுக்கு அருகில் வந்து விட்டோம். வாசகர் வட்டத்தினர் இன்னமும் எங்களிடம் நம்பிக்கை இழக்கவில்லை என்று எதிர்பார்க்கிறோம்.

ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' படமாவது பற்றி அறிந்து சந்தோஷப்பட்டேன். பாலசந்தரிடம் அனந்துவிடமும் பேசிக் கொண்டிருக்கும்போது மோக முள்ளை அவர்கள் எடுக்க விரும்புவதாக அறிந்து கொண்டேன். வண்ண நிலவனின் ''கடல்புரத்தில்'' நாவலை பாலு மகேந்திரா (கோகிலா) எடுக்க விரும்புவதாகக் கேள்விப் பட்டேன்.

சில நல்ல தமிழ்ப் படங்கள் வர இருக்கின்றன.

53

- ஜனவரி 1976

வையாபுரிப் பிள்ளையின் சில புத்தகங்களை (தமிழ்ப்புத்தகாலயம்) விரும்பிப் படித்தேன், பிள்ளைய வர்கள் நம் பழைய தமிழ் நூல்கள், காலத்தில் சற்று பிற்பட்டவை என்று சொல்லி திட்டு வாங்கிக் கொண்டது பிரசித்தம். அப்படி அவர் சொன்னதற்கு ஆதாரங்களைத்

தேடினேன். சிலப்பதிகாரம் சங்க காலத்திற்குப் பிற்பட்ட நூல் என்று சொல்வதற்கு அவர் காட்டும் காரணங்களில் ஒன்று அவர் நம் விஞ்ஞான முறை அணுகலைக் காட்டுகிறது.

❑

'யான்' என்கிற தன்மை ஒருமைப் பதப்பிரயோகம் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 'நான்' என்கிற வழக்கு அதில் இல்லை. 'நான்' என்பது பிற்பட்ட வழக்கு. சங்க நூல்களில் 'யான்' தான் வருகிறது. மாறாக சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் 'நான்' என்பது உபயோகிக்கப் படுவதைக் குறிப்பிட்டிருக்கிறார் வையாபுரிப் பிள்ளை. பாடபேதமாக இருக்கமுடியாது என்பதற்குச் சான்றாக சில சிலப்பதிக்கார வரியில் 'நான்' என்கிற பிரயோகம் எதுகை அமைப்பில் பங்கு பெற்றிருப்பதையும் காட்டுகிறார். திறமையான ஆணித் தரமான சான்று.

❑

ஜென் (Zen) பற்றிப் படித்துக் கொண்டிருக்கும்போது கிடைத்த ஒரு வசீகரமான பாரா.

பிரபலமான ஜப்பானியக் கவிஞர் ஒருவரை சைனீஸ் (Chinese) கவிதை எழுதுவது எப்படி என்று கேட்டபோது அவர் ''சாதாரணமாக சைனீஸ் கவிதைக்கு நான்கு வரிகள் உண்டு. முதல் வரி கவிதையைத் தொடங்குகிறது. இரண்டாம் வரி கவிதையைத் தொடர்கிறது. மூன்றாவது வரி ஒரு புதிய கருத்தை ஆரம்பிக்கிறது. நான்காவது வரி முதல் மூன்று வரிகளையும் ஒன்று சேர்க்கிறது'' என்றாராம். ஒரு பிரபலமான ஜப்பானியக் கவிதையை உதாரணமாகச் சொல்லலாம்.

கியோட்டோவைச் சேர்ந்த சில்க் வியாபாரிக்கு
இரண்டு பெண்கள்.

மூத்தவளுக்கு இருபது வயது. இளையவள்
பதினெட்டு.
ஒரு படைவீரன் கத்தியால் கொல்கிறான்.
ஆனால் இந்தப் பெண்கள் ஆண்களை தத்தம்
கண்களால் கொல்கிறார்கள்.

நாமும் ஒரு சைனீஸ் கவிதை எழுதிப் பார்க்கலாமே என்று தோன்ற:

மன்னாரு மெதுவாக வந்து சேர்ந்தான்.
மணி பார்த்தான். உட்கார்ந்தான். படுத்துக் கொண்டான்
சென்னை விட்டுத் திருச்சி போகும் ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரஸ்
சீக்கிரமே அவ்விடத்தில் கடந்து செல்லும்!

என் சிநேகிதர்கள், கவிஞர்கள் இதைவிட நன்றாக சைனீஸ், ஜப்பான் வகைக் கவிதை எழுத முடியும்; எழுதலாம்.

'டைம்' பத்திரிகையில் Andy Warhol-ன் இந்த 'அருள் வாக்கு' என்னைச் சித்திக்க வைத்தது,

In the future everybody will be famous for at least fifteen minutes.

54

- மார்ச் 1989

சமீபத்தில் நான் பார்த்த கன்னடப் படங்கள் (ஸ்பந்தனா, பரஸங்கத கெண்டே திம்மா, காடு குதுரே) மூன்றிற்கும் பொதுவான அம்சம் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவு. தற்போது கன்னட ரசிகர்களின் சினிமா முன்னேற்றத்தை இது காண்பிக்கிறது. தமிழ், தெலுங்குப் படங்களில் இவ்வளவு ஒப்பனாகச் சோரம் போவதைக் காட்ட அனுமதிக்க மாட்டார்கள். அதற்கு Sociological ஆக காரணங்கள் இருக்கலாம். இருந்தும் அந்த மூன்று

படங்களும் எவ்வளவுதான் கலையம்சம் கொண்டிருந்தாலும் கதையில் இருக்கும் அதிர்ச்சிக்காக தமிழில் ஓடா. கன்னடத்தில் மூன்றில் இரண்டு, வெற்றிப் படம் என்றே கொள்ளும்படிக்கு ஓடின.

ஸ்பந்தனா (துடிப்புகள்) டூரிஸ்ட் பஸ்ஸில் உல்லாசப் பயணம் செல்லும், ஒரு சிலரைப் பற்றிய படம். குறிப்பாக ஒரு கணவன் மனைவி, ஒரு இளம் டாக்டர். கணவன் இங்கே கூட ஆபீஸ் ஃபைலை எடுத்துக் கொண்டு வந்து அல்லாட, மனைவி அவனுடன் வாழ்ந்த வாழ்க்கையின் அதீதத் தனிமையும், தப்பவிட்ட சந்தோஷங்களும் அற்புதமான சின்ன சின்ன ஃப்ளாஷ்பாக்களில் சொல்லப்படுகின்றன. பயணத்தின் இறுதியில் இரவில் உடன் வந்து சிரித்துப் பேசும் டாக்டருக்கு தன்னை இழக்கிறாள். அந்தப் பாவத்திற்குக் காரணம் விரிவாகச் சொல்லப்படுகிறது அவள் தனிமை.

ஸ்பேஸ் ரிசர்ச்சில் இருக்கும் ஒரு இன்ஜினியர் நண்பர்களுடன் கைக்காசை செலவழித்து தானே கதை எழுதி நடித்து எடுத்த முதல் படம். மிகவும் உணர்வுடன் சினிமா மீடியத்தை முழுவதும் அறிந்து எடுத்திருக்கிறார். கடைசியில் அவர் அவர்களுடைய சின்னப்பெண் (செவிட்டு ஊமை) காணாமற் போய்விடுவதை மனைவியின் பாவத்திற்குத் தண்டனையாகக் காட்டியிருப்பதிலும், அந்தப் பெண்ணின் பெயர் ஷீலா: சீலம் நற்பண்பு. போன்ற அனாவசிய சிம்பாலிஸத்தை தவிர்த்திருந்தால் மிகச் சிறப்பான படம்.

'கெண்டே திம்மா' என்னும் படம் கிராமத்தில் ஒரு சின்ன வியாபாரி, அப்பாவி. ஒரு அழகான நகரப் பெண்ணை கல்யாணம் கட்டிக் கொண்டு, அவள் ஸ்கூல் வாத்தியாருடன் சிநேகம் வைத்திருப்பதைக் கண்டு தற்கொலை செய்து கொள்ளும் சுருக்கென்ற கதை. இது கமர்ஷியல், ஆர்ட் ஃபிலிம் இரண்டிலும் கொஞ்சம் கால் வைத்திருந்தாலும் லோகேஷின் சிறப்பான, நம்பக்கூடிய

நடிப்பினால் வெற்றி பெற்றது. மூன்றாவது 'காடு குதூரே' (காட்டுக் குதிரை) டாக்டர் சந்திரசேகர் கம்பார் எழுதியது. நவீன கன்னட இலக்கியத்தில் பிரசித்தி பெற்ற கவிஞர், - நாடக ஆசிரியரின் முதல் சினிமா முயற்சி, கம்பார் (ஜோகுமார சுவாமி) தன் நாடகங்களில் விதவிதமான ஆண்மைக் குறியீடுகளையும் (துப்பாக்கி, வெள்ளரிக்காய், குதிரை) Folk ஐயும் கலப்பவர். கதாநாயகனை ஒரு காட்டுக் குதிரைக்கு ஒப்பிட்டு அதை அவன் அடக்கி அக்காளைத் தப்பாக மணம் செய்து தங்கைக்காக வாடி நடுவே இருப்பவளுடன் கலந்து சில வேளை சிரிப்பாக இருக்கிறது. எழுத்தாளர் சினிமா எடுக்கக்கூடாது. கம்பாரின் மனதில் காட்டுக் குதிரை. சினிமாவில் கிடைப்பதோ ஜட்கா வண்டிக் குதிரை.

55

- மே 1979

இன்ஜினியர்களுக்கு என்று சிறு பத்திரிகைகள் பல உண்டு. அவைகளிலிருந்து சில கேள்விகள் தந்திருக்கிறேன். விடை தெரியவில்லை என்றால் கடைசியில் பார்க்கலாம்.

1. சராசரி மனிதனுக்கு எத்தனை பிறந்த தினம்?

2. முப்பதைப் பாதியால் வகுத்துப் பத்தைக் கூட்டினால் எத்தனை?

3. என்னிடம் இரண்டு நாணயங்கள் இருக்கின்றன. அவைகளின் மொத்த மதிப்பு 30 பைசா ஆனால் அதில் ஒரு நாணயம் 25 பைசா அல்ல. இது எப்படி சாத்தியம்?

4. நீண்ட சதுர வடிவில் வீடு கட்டினேன். வீட்டில் இரண்டு பக்கங்களும் தெற்கு நோக்கின. ஒரு கரடி வந்தது. அதன் நிறம் என்ன?

5. காவேரிக்கு வடபுறம் வசிப்பவனை ஏன் தஞ்சாவூரில் புதைக்க முடியாது?

6. காலை ஒன்பது மணிக்கு அடிக்கும்படியாக ராத்திரி எட்டு மணிக்கு அலாரம் வைத்தால் எத்தனை மணி நேரம் தூங்க முடியும்?

ஆறு கேள்விகளுக்குப் பதில் தர lateral thinking வேண்டும். பிரச்னையைப் பற்றி சிந்திப்பதற்கு இருப்பது ஒரு வழி மட்டும் அல்ல. எத்தனையோ சாத்தியங்கள் உள்ளன. அவைகள் எல்லாவற்றையும் அலசிப் பார்ப்பது தான் 'லாட்டரல் திங்கிங்,' சம்பிரதாய சிந்தனைகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் புதிய கண்டுபிடிப்புகள் ஏற்பட முடியும் என்று நம்புகிற சித்தாந்தம் அது.

❑

புதுக் கவிதையில் நகைச்சுவை என்று யாராவது நீண்ட கட்டுரை எழுதலாம். பெரும்பாலான புதுக்கவிதைகள் நம்மை மெலிதாகப் புன்னகைக்க வைக்கின்றன. சில வாய் விட்டுச் சிரிக்கச் செய்கின்றன. சக்திக்கனலின் இந்தக் கவிதை என்னை அப்படிச் சிரிக்க வைத்தது:

திருமணங்கள்
சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படுகின்றனவாம்
அப்படியானால்
என் கண்ணே
நம் திருமணம் மட்டும்
ஏன்
செட்டிபாளையத்தில்
நிச்சயிக்கப்பட்டது?

இந்தச் சந்தர்ப்பத்தில் புத்தகங்களை சிறப்பாக வெளியிடும் க்ரியா, அன்னம் போன்ற பதிப்பகங்களுடன் அகரத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

விடைகள் :

1. ஒன்றே ஒன்று 2. 70. 3. 25, 5. ஒரு நாணயம் தான் 25 பைசா இல்லை. மற்றது. 4. வெள்ளை. வட துருவத்தில் தான் இது சாத்தியம். 5. அவர் உயிருடன் இருப்பதால். 6. ஒரு மணிதான். அலாரத்துக்குக் காலையாவது, மாலையாவது!

56

- ஜூன் 1979

திரு. ஐராவதம் மகாதேவனின் திறமையான கட்டுரைக்கு (சென்ற இதழ்) சில பிற்சேர்க்கை தர விரும்புகிறேன்.

தொல்காப்பியக் காலத்தின் தமிழ் எழுத்து முறைகள் சில இன்று இல்லை. உயிர், மெய் எழுத்துக்களுடன் சார்பெழுத்துக்கள் மூன்று சேர்ந்து முப்பத்து மூன்று எழுத்துக்கள் இருந்தன. இந்தச் சார்பெழுத்துக்களாவன: குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தவெழுத்து. மூன்றில் ஆய்தவெழுத்து மட்டும் தான் பிழைத்திருக்கிறது. அதுவும் வெளியே போகிற நிலையில் தான் இருக்கிறது. எஃகு அஃது என்று பிடிவாதமாக ஒன்றிரண்டு வார்த்தைகளில் மிஞ்சி இருக்கும் ஆய்த எழுத்து ஆஃப்கானிஸ்தான் போன்ற புதிய பிரயோகங்களில் தான் பிழைத்துக் கொள்ள முடியும் என்று தோன்றுகிறது.

குற்றியலிகரம் குற்றியலுகரம் இரண்டும் 'இ' 'உ'வுக்கு மேல் புள்ளி வைத்து இந்த எழுத்துக்களின் குறுகிய சப்தங்களைக் குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள். அதேபோல் எகர ஒகரங்களுக்கு மேல் (ஏனோ) புள்ளி வைக்கும் வழக்கத்தை தொல்காப்பியம் சொல்கிறது. 'ப'வின் வயிற்றுக்குள் புள்ளி வைத்தால் அது அந்த காலத்து ம.

இவை எல்லாம் இப்போது இல்லை. ஏன்? குற்றியலிகரம் ஏறக்குறைய அடிபட்டுப் போய்விட்டது. ''கேண்மியா'' ''குழலினிதியாழினிது...'' போன்ற செய்யுள் வரிகளில் சற்றுக் காதைத் தீட்டிக் கொண்டு கேட்டால் இகரத்தின் மாத்திரை சற்றுக் குறுகியிருப்பதைக் கேட்கலாம். இரண்டு இகரங்களுக்குத் தேவையில்லாமல் குற்றியலிகரம் வழக்கொழிந்தது.

குற்றியலுகரத்தின் கதை வேறு. தமிழில் இப்போது எல்லா உகரங்களும் குற்றியலுகரங்கள் ஆகிவிட்டன என்று நினைக்கிறேன். பட்டு, பாட்டு, உப்பு, மாடு, பொலிவு என்று எந்தத் தமிழ் வார்த்தை எடுத்துக் கொண்டாலும் அதன் உகரம் முழுவதும் ஒலிப்பதில்லை. தொல்காப்பியம் சொல்லும் முற்றியலுகரத்தைக் கேட்க நாம் இப்போது தெலுங்கு அல்லது கன்னடத்தை நாட வேண்டும். (பாட்டியாலா கிழக்கு பஞ்சாப் ஐக்கிய மாகாணங்களை PEPSU என்று குறிப்பிட்டு வந்த சுதந்திர ஆரம்ப காலங்களில் U.P.S.C.யில் what is PEPSU என்று ஒரு கன்னட இளைஞனைக் கேட்டபோது "a kind of throat lozanges Sir" என்றானாம்; கன்னடத்தில் முற்றியலுகரம் அதிகம்.)

ப வின் வயிறுப்புள்ளி அருகே உள்ள கோட்டுடன் சேர்ந்து கொண்டு ம வாகி விட்டது. எ, ஒ எழுத்துக்களுக்கு தொல்காப்பியம் வைத்த புள்ளி, தேவையற்றுப் போய் பிற்காலத்தில் மறைந்துவிட்டது.

மகாதேவன் அவர்களின் கட்டுரையில் அவர் பரிந்துரைக்கும் மாற்றங்களை ஒரு சாயங்காலம் பண்டிதர்கள் உட்கார்ந்து நிறைவேற்றிவிட முடியாது. தடக்கித் தடுக்கித் தான், நம்மையறியாமல் தான் ஒவ்வொரு மாறுதலாக ஏற்படும். நான்கைந்து புள்ளிகள் மறைவதற்கும் ஒன்றிரண்டு கொம்புகள் சேர்வதற்கும் ஒரு சில வடமொழி ஓசைகள் நுழைந்ததற்கும் இரண்டாயிரம் வருஷமாகியிருக்கிறது. அது ஒரு evolutionary process. தமிழில் எழுத்துகளைப்

பற்றியும் மொழித் தூய்மை பற்றியும் இவ்வளவு உணர்ச்சி வசப்படுகிறார். அதனால்தான் ரொம்ப நாளாகும் என்று கவலை. சென்ற இருபது முப்பது வருஷங்களில் ஜப்பானியர்கள் மேலிருந்து கீழாக எழுதும் முறையை நவீன காலத்துக்கு சரிபட்டு வராது என்று இடமிருந்து வலமாக மாற்றிக் கொண்டார்கள். Ideogram ஆக இருந்த தம் மிகப் பழைய மொழியை புதிய katakana முறைப்படி எளிதாக்கினார்கள். நவீன எலக்ட்ரானிக்ஸ் கம்ப்யூட்டர் இயல் முழுவதையும், ஒரு வார்த்தை இங்கிலீஷ் தெரியாமல் ஜப்பானிய மொழியிலேயே கற்றுக் கொள்ள புஸ்தகங்கள் அவர்களிடம் இருக்கின்றன. நாம்? நாம் மாறமாட்டோம்.மொழியை கன்னி, தாய் என்று கொஞ்சுகிற பிஸினஸ்ஸை விட்டொழித்தால் தான் நமக்கு விடிவு காலம்.

57

-ஜூலை 1979

கோவை வேலாயுதம் ஒரு வித்தியாசமான வாசகர், பதிப்பாளர்; பலசரக்கு ஸ்டேஷனரி கடை வைத்திருப்பவர். புதுக் கவிதையிலும் புத்தகங்கள் விற்பதிலும் அதிகம் ஆர்வம் காட்டுகிறார். தன் கைக்காசை தாராளமாக செலவழித்து வாசகர் விழா என்று அமர்க்களமாக நடத்தி டவுன்ஹால் நிறைய தமிழ்ப் புத்தகங்களாக அடுக்கித் தள்ளி, லவுட் ஸ்பீக்கர் வைத்து வாசகர்களை அழைத்து, எழுத்தாளர்களை அழைத்து, வாசகர் கேள்விகளுக்குப் பதிலளிக்க வைத்து - தொன்று தொட்ட பதிப்பாளர்கள் கூடச் செய்யத் தயக்கம் காட்டிய செயலை ஒரு மனிதர் சிறப்பாகச் செய்து இந்த விழாவை நடத்திக் காட்டி விட்டார்.

வேலாயுதத்திற்கு எல்லா வர்க்கங்களிலிருந்தும் கிடைத்த உதவி கோவையின் ஆச்சரியங்களில் ஒன்று. வானம்பாடிக் கவிஞர்களான செக்கச்சிவந்த சிந்தனை

யாளர்கள் புவியரசு, மு. மேத்தா, சக்திக்கனல் போன்றவர்களிலிருந்து தொழிலதிபர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் வரை பல்வேறு மனிதர்களின் ஆதரவும் சகாயமும் அவருக்குக் கிடைத்திருந்தது இந்த விழாவின் வெற்றிக்குக் காரணம்.

கோவையில் ஒரு நாளில் பற்பல ஆச்சரியங்களை சந்தித்தேன். கல்லூரி தமிழ்ப் பேராசிரியர்கள் தத்தம் தொல்காப்பியர்களையும், இடக்கர் அடக்கல்களையும், அணிகளையும் மறந்து புதுக்கவிதை செய்கிறார்கள். ஆடிட்டராகப் பணிபுரியும் சக்திக்கனல் அண்ணன்மார் சுவாமிகதை என்கிற நீண்ட நாட்டுப்புறப் பாடலை அழகான புத்தகமாகப் பதிப்பிக்கிறார். பள்ளி ஆசிரியர் புவியரசு நவீன நாடங்களைப் பற்றியும் சிறுகதைகளை சினிமா எடுப்பது பற்றியும் மக்கள் தியேட்டர் பற்றியும் நிறையத் திட்டங்கள் வைத்துச் செயல்படுத்துகிறார். கண்ணீர்ப் பூக்கள் என்ற மென்மையான புதுக்கவிதை எழுதும் மு. மேத்தா ஆவேசத்துடன் மேடைப் பேச்சில் அடுப்பில் எரியும் நெருப்பைச் சிவப்புக் கொடிக்கு ஒப்பிடுகிறார். டெக்னாலஜி மாணவர்கள் சிறுகதை எழுத, வேளாண்மைப் பேராசிரியர் நாவல் எழுத, ஒண்டிப்புத்தூரிலிருந்து பஸ் பிடித்து என்னைப் பார்க்க வந்திருக்கும் மில் தொழிலாளி ரேடியோ நாடகங்கள் எழுத, எல்லோரும் புதுக்கவிதை எழுத, அய்யா! எழுத்தில்தான் எத்தனை ஆர்வம் கோவைக்கு.

கொங்கு வேளாள இன மக்களிடையே பிரசித்தமாக இருக்கும் நாட்டுப்புறப் பாடல் 'அண்ணன்மார் சுவாமி கதை'. உடுக்கு அடித்து மிகவும் வீராவேசத்துடன் இன்றைக்கும் பாடப்படுகிற இந்த நாடோடி இலக்கியத்திற்கு பற்பல உருவங்கள் உள்ளனவாம். கனடாவைச் சேர்ந்த பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகத்துப் பேராசிரியை திருமதி பிரெண்டா பெக் என்பவர் இந்தப் பாட்டில் ஆராய்ச்சி செய்திருப்பதாகத் தெரிகிறது. கவிஞர் சக்திக்கனல் இதை பொறுமையுடன் பரிசோதித்து திருத்தி

அழகாக வெளியிட்டிருக்கிறார். 15, 16ம் நூற்றாண்டுக் காலங்களில் கொங்கு நாட்டில் அதிகாரிகளுக்கும் வேளாண்மை குடி மக்களுக்கும் ஏற்பட்ட பூசல்கள் இந்தப் பாடலின் ஆதார நிகழ்ச்சி எனத் தோன்றுகிறது. கதையின் மாந்தர்கள் சாதாரண மக்கள் தாயாதி பங்காளி சண்டை போடுகிறவர்கள். அண்ணன் தங்கை வாத்ஸல்யம், கொப்பளங்கள் சோழராஜாவிடம் பூமி கேட்பது, பங்காளியிடம் விதைச் சோளம் கேட்பது என்று பற்பல தினசரி நிகழ்ச்சிகள், வினோதமான கிராமக் கடவுள்களுடன் சேர்ந்து விரவி மிக எளிய ஆயிரக்கணக்கான பாடல் வரிகளாக விரிந்திருக்கும் இந்த நூல் கொங்கு நாட்டின் மிகப் பெரிய ஆச்சர்யம். உதாரண வரிகள் பிள்ளையில்லாக் குறையில் ஒருத்தியின் ஆதங்கம்.

கூலி குறைத்தோமோ குறை மரக்கால் அளந்தோமோ
பிச்சைக்கு வந்தவனைப் பின்னே வரச் சொன்னோமோ
அன்ன மென்று வந்தவரை அடித்துத் துரத்தினோமோ
ஆண்டியை அடித்தோமா! அநியாயம் செய்தோமா
பார்ப்பாரை அடித்தோமா! பால் பசுவைக் கொன்றோமா?
பங்காளி வயல்பரப்பை பாதி வெட்டிப் போட்டோமா?

58

சமீபத்திய ★ துக்கத்தின் காரணமாக சென்ற சில இதழ்களில் எழுத முடியவில்லை. சுஜாதா எழுதாமல் இருந்ததில் அப்படி ஒன்றும் பிரளயம் ஏற்பட்டு விடவில்லை என்பதை அறிந்து கொள்வதில் கொஞ்சம் ஸ்திரப்பட்டுக் கொள்கிறேன்.

பூரணம் விசுவநாதன் குறுகிய காலத்தில் என் ஓரங்க நாடகங்களை ஏறக்குறைய 50 தடவை நடித்துக் காட்டி விட்டார். இதே இரண்டு நாடகங்கள் முன்பு பெங்களூர் கோஷ்டி ஒன்று சென்னையில் போட்டுக் காட்ட விரும்பியபோது அனுமதி கிடைக்கவில்லை. இதில் ஏதோ

ஒரு செய்தி இருக்கிறது. சென்னையில் சபாச் சுற்றுலாவில் ஒரு நாடகத்தின் பிரபலம் வாய்வார்த்தை மூலமாகப் பரவுகிறது என்கிறார் பூர்ணம். என் நாடகங்கள் குறிப்பாக எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலும் குமுதம் 'அரசு' பதில் ஒன்றிலும் சிலாக்கியம் பெற்று திடுதிப்பென்று உச்ச கட்டத்தை அடைந்தன. எக்ஸ்பிரஸ் விமர்சகர் (கோபாலி என்று நினைக்கிறேன்) திறமையாக குறை நிறைகளை விமர்சித்திருந்தார். அரசு நாடகங்களை ரசித்தார் மற்றவர் விமர்சனங்களில் எல்லாம் தியேட்டரைப் பற்றி ஒரு வார்த்தை இல்லை. கதைச் சுருக்கம் இன்னின்னார் - நன்றாக - நடித்தார்கள் - syndrome லிருந்து நாம் எப்போது விடுபடப் போகிறோமோ அப்போதுதான் மறுமலர்ச்சி என்று தோன்றுகிறது. அடுத்த நாடகம் எழுதத் துணிவதற்குமுன் தியேட்டரைப் பற்றி நிறையப் படிக்கத் தோன்றுகிறது.

பாலசந்தருக்கு நான் எழுதிக் கொண்டிருக்கும் திரைக்கதையின் Discussionல் அவர் 'என் பிரபலமும் உங்கள் பிரபலமும் இந்தப் படத்தில் ஒருவிதமான liability' என்றது உண்மை என்று பட்டது. நானும் நவ சினிமாவைப் பற்றி ஓஹோ என்று பேசுகிறேன். அவரும் புதிய முறைகளைக் கையாள்கிறார். இருவரும் சேரும் படத்தில் ரசிகர்களின் எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கும். அதைத் தாக்குப் பிடிக்க முடியாது என்று தான் தோன்றுகிறது. இந்தக் கதை மலேசியா, கலர், பிரபல நடிகர்கள், புதிய நடிகை, பாட்டு என்ற அம்சங்களுடன் எடுக்கப் படுகிறது. இவைகளை வைத்துக் கொண்டு Emotion Packed என பிழியப் பிழிய அழவைத்தால் எதற்கு மலேசியா போய் அழவேண்டும் மெட்றாஸிலேயே அழலாம் என்பார்கள். light ஆக எடுத்தால் இதுக்குப்போய் இவ்வளவு செலவழித்து எடுக்கலாமா என்பார்கள். Art film மாதிரி எடுத்தால் அதைப் பத்தி புகழ்வார்கள். சில்லரை புரளாது. சிக்கல்.

சந்தோஷம் நிறைந்த படம் எடுப்பது என்று முடிவு செய்தோம். கதையை புத்திசாலித்தனமாக சொல்வது என்று

முடிவு செய்தோம். எப்படிப்பட்ட படம் என்பதை முன்பே விளம்பரங்களில் சொல்லிவிட்டால் இந்த 'எதிர் பார்ப்பு' சமாசாரம் கொஞ்சம் கான்ஸல் ஆகும் என்று தோன்றியது. பாக்கியை வெள்ளித் திரையில் காண்க.

பி. குறிப்பு: ஒரு டிஸ்ட்டிரிபியூட்டருடன் சம்பாஷணை!

அறிமுகம்: இவர் தாங்க 'சுஜாதா' நம்ம படத்துக்கு கதை எழுதறார்.

டிஸ்ட் : அப்படியா சந்தோஷம். கதை எதில் வந்திருக்கு? குமுதத்திலயா?

நான் : இல்லிங்க. எதிலும் வரலை. புதுசா எழுதுகிறேன்.

டிஸ்ட் : (வேறுவிதமான) அப்படியா? அப்ப ஒன்னு செய்யுங்க, படம் ரிலிஸ் ஆவதற்குள் கதையை எதிலயாவது போட்டுடுங்க ஏன்னா இன்னி தேதிக்கு பத்திரிகையில் வந்த கதைகள் தான் ஓடுது.

நான் : (அந்த இடத்தை விட்டு ஓடுகிறேன்.)

59

பத்திரிகையில் ''இன்னாருக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அந்த இன்னாருடன் தொடர்பு வைத்துக் கொள்கிறவர்கள் அவர்களுடைய சொந்தப் பொறுப்பில்தான்'' என்று விளம்பரம் செய்கிறார்களே அதுபோல் நான் ''இது எப்படி இருக்கு'' என்கிற திரைப்படத்தைப் பற்றி விளம்பரம் கொடுக்க வேண்டும் என்று தோன்றுகிறது Horrible.

சமீபத்தில் நான் படித்த அமெரிக்க பெண் எழுத்தாளர் களில் Erica jong என்னைக் கவர்ந்தாள். பெண்களுக்கே உரித்தான கோபமும் உத்வேகமும் கிண்டலும் அலட்சியமும் படிப்பும் அவளுடைய கவிதைகளில் ஜொலிக்கின்றன.

The Teacher stands before the class.
She's talking of Chaucer.
But the students aren't hungry for Chaucer.
They want to devour her.
They are eating her knees, her toes, her breasts, her eyes and
spitting out her words
What do they want with words?
They want a real lesson!

நம் பெண் எழுத்தாளர்கள் இவருடைய Fear for Flying என்கிற நாவலை நிச்சயம் படிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டிருப்பது The Teacher என்கிற அவள் கவிதையின் முதல்வரிகள் தொடர்ந்து.

She is naked before them.
Psalms are written on her thighs.
When she walks sonnets divide
into octaves & sestets.
Couplets fall into place
when her fingers nervously toy
with the chalks...

என்று சொல்லும் கவிதையின் கடைசி வரி?

Eat this poem!

❑

தமிழக அரசு வெளியிட்டிருக்கும் (1975) தமிழ் நாட்டு வரலாறு 'தொல் பழங்காலம்' என்கிற புத்தகத்தில் பல அறிஞர்கள் சிரமப்பட்டு மனிதகுல ஆரம்பத்திலிருந்து நம் பிரதேச வரலாற்றைச் சொல்லியிருக்கிறார்கள்; பாராட்டுக்கள். ஆனால் திராவிடர்களின் ஆரம்பங்களைப் பற்றிப் பேசும்போது மட்டும் எங்கிருந்தோ உபரியான உணர்ச்சிகள் கலந்து சரித்திர நோக்கை மறைத்து விடுகின்றன. மேற்கு ஆசியாவிலும் வட இந்தியாவிலும் திராவிட நாகரிகம்

தென்படுவதற்கு இவர்கள் விளக்கம் கற்பனைவளம் பொருந்தியதாக இருக்கிறது. தமிழகத்திலேதான் தோன்றிய திராவிடர்கள் கி.மு. 5000 வாக்கில் கடல் கடந்து மேற்காசிய நாடுகளுக்குச் சென்று அங்கே settle ஆகி அங்கே சுமேரியர்களோ யாரோ தொந்தரவு செய்ய அங்கிருந்து புறப்பட்டு இரான், வடமேற்கு இந்தியா வழியாக வட இந்தியாவில் வந்து மறுபடி மேற்குக் கரையோரமாகக் கடலில் வந்து தென்னாட்டுக்கு வந்து ஒரிஜினல் திராவிடர்களுடன் சந்தோஷமாகக் கலந்து கொண்டார்களாம். சரியான ரீல்.

60

- ஜனவரி, 1980.

ஒவ்வொரு வருஷமும் டில்லி மாறுகிறது. அதிகாலை புகைப்படலம் அதிகமாகி இருக்கிறது. கட்டடங்கள் உயர்ந்திருக்கின்றன. முன்பெல்லாம் குளிரில் பிளாட்பாரத்தில் சேலத்து சிறுமிகள் தூங்குவார்கள். இப்போது அவர்கள் தங்கைகளும் உடன் தூங்குகிறார்கள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை முற்பகல் டில்லி இலக்கிய வாசகர் கூட்டத்தில் 'ரைட்டிங் ஃபார் கமர்ஷியல் மாகஸின்ஸ்' (writing for commercial Magazines) என்பது பற்றி டில்லி இலக்கியக் கூட்ட மணிப்பிரவாளத்தில் பேசினேன். ஆரம்பத்திலிருந்து ஆரம்பித்தேன். எத்தனை நேரம் இப்படி பேசப் போகிறார் என்று ஆதவன் கவலைப்பட்டார். குறுக்கீட்டுக்கு வந்தனித்து விவாதத்தைத் துவக்கி வைத்தேன். எழுத்தாளன் ஒரு இரண்டாயிரம் இன்டலெக்சுவல் (intellectual) வாசகர்களுக்கா லட்சக்கணக்கான சாதாரண வாசகர்களுக்கா எழுதுகிறான் என்று நான் துவக்கியதும் அந்த இரண்டாயிரம் எப்படி கணக்கு என்று கவலையாக ஒருவரும் இந்தத் தரமான வாசகர் கூட்டத்தைக் கொச்சைப்படுத்தாதே என்று

ஆதவனும் கோபப்பட கூட்டம் சூடுபிடித்தது(வெயில்). இந்திரா பார்த்தசாரதி கிரிக்கெட் ஸ்கோர் என்ன என்று கேட்டார். என்.எஸ்.ஜே. எனக்கு 'விஷன்' இருக்கிறதா என்று கேட்டார். வாசந்தி நீங்கள் கணேஷ் வசந்த் கதை கணையாழிக்கு எழுதுவீர்களா என்றார். மனைவிகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மற்றவர் அடிக்கடி கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருக்க நண்பர் ஜெயராமன் தன் ஒரு வயது பையனுக்கு 'தோபார்ஞ' 'இன்டலக்சுவல்' என்று வேடிக்கை காட்டம் கூட்டம் தொடர்ந்தது.

'நீ பிரபலமாயிருக்கிறாய். அதனால் உன்னால் இலக்கியம் படைக்க முடியாது.' இப்படிச் சித்தாந்தத்தை நான் அடிக்கடி சந்தித்து விட்டேன். பிரபலத்தை உடனே தாக்குவதும் சம்பிரதாய சந்தோஷங்களில் ஒன்று. டில்லி பண்டிதர்கள் விதி விலக்கல்ல என்பது தெரிந்தது. ராமநாதனின் சில கேள்விகள் என்னைக் கவர்ந்தன. 'கதை எழுதும்போது பத்திரிகையை நான் நினைவில் வைப்பதில்லை' என்று நான் சொன்னதை அவர் நம்ப மறுத்தார். 'நம்ப விரும்புகிறேன்' என்றார். 'குருபிரசாதை நான் விகடனில் வெளியிட்டிருக்க முடியும்; ஆனால் ஒன்றிரண்டு வாக்கியங்கள் நிச்சயம் நீக்கப்பட்டிருக்கும் என்பது எனக்குத் தெரியும். அந்த நீக்கத்தால் கதை பாதிக்கப்படும் என்று நான் நினைத்ததால் கணையாழிக்கு அனுப்பினேன். ஆரம்பத்திலேயேஅது கணையாழிக் கதை என்று பிரத்யேகமாக முனைந்து எழுதவில்லை' என்றேன். எழுதின பின் எந்தப் பத்திரிகை என்று தீர்மானிக்கலாம். பாலசுப்பிரமணியன், 'எதிர்காலத்துக்கு எழுத தீர்மானிக்க வேண்டாமா நீங்கள்' என்றார். அதையும் எழுதும்போது தீர்மானிக்க முடியாது, கூடாது. இந்தத் தருணத்தில் சாகாத இலக்கியம் படைக்கப் போகிறேன் என்று கெடிகாரத்தை பார்த்துக் கொண்டு எழுத முடியாது என்றும் சொன்னேன்.

மற்றொரு நாள். மாலை தில்லித் தமிழ் எழுத்தாளர்

சங்கக் கூட்டம். மறுபடி என்.எஸ்.ஜே.யின் கேள்விகள். மற்ற எழுத்தாளர்கள் சிலரே விவாதத்தில் பங்கு பெற்றார்கள். காரணம் தலைப்பும் குளிரும் என்று நினைத்தேன். முன்னது 'எழுத்தின் நோக்கம்.' நோக்கம் இருக்க வேண்டும் என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது என்று நான் ஆரம்பித்ததே விவாதத்தின் வீச்சை வெட்டிவிட்டது. கூட்டம் முடிந்தது ஒரு இளைஞர் 'சிலப்பதிகாரம் இன்றைக்கும் பேசப்படுகிறது என்றால் அதற்கு என்ன காரணம்' என்றார். காரணம் யோசிப்பதற்குள் கஸ்தூரி ரங்கன் காரைக் கிளப்பிவிட்டார்.

குளிர் எலும்பைத் தொடுகிறது. ஆரம்பத்தில் குறிப்பிட்ட புகைப்படலம் நகரத்தைக் கவ்வுகிறது. அந்தச் சேலத்துச் சிறுமி சாக்குப் பையைத் தன்மேல் சுற்றிக் கொண்டு தன் தங்கச்சியையும் அணைத்துக் கொண்டு மரத்தடியில் தூங்குவதற்கு ஆயத்தம் செய்கிறாள். இலக்கியம் என்பதே ஒரு தேவையில்லாத சமாச்சாரமாகப் படுகிறது அப்போது. எல்லாக் கதைகளையும் கவிதைகளையும் எரித்து அவளைச் சூடு பண்ண வேண்டும் போலிருக்கிறது.

61

- மே, 1980

பேராசிரியர் நா. வானமாமலையின் திடீர் மறைவு என்னை கலக்கி விட்டது. அவருடன் ஓரிரு முறை கடிதத் தொடர்பு கொண்டிருக்கிறேன். நேரில் சந்தித்ததில்லை. பல புத்தகங்களில் இலக்கியம், வரலாறு, மானிடவியல் சொல்வாக்கம், நாட்டுப்பாடல்கள் ஆய்வுக்காக அவர் நடத்திய 'ஆராய்ச்சி' காலாண்டு இதழ் மூலமாகவும் அவருடன் நிறையப் பரிச்சயம் எனக்கு உண்டு. நாட்டுப்புறப் பாடல்களிலும் அறிவியல் முறை ஆராய்ச்சியிலும் அவருக்கு இருந்த ஈடுபாடு எனக்குப்

புலப்பட்டு அவர் புத்தகங்களை எல்லாம் தேடிப்பிடித்தேன். தமிழர் நாட்டுப் பாடல்களில் அவர் தொகுப்பு இன்றைக்கும் சிறந்தது.

பெர்க்லி பல்கலைக் கழக இளம் ஆய்வாளர் ஒருவர் தமிழ் நாட்டுப் பாடல்களில் ஆய்வில் ஈடுபட்டு 'ஆராய்ச்சி'யின் ஆய்வு முறைகளை அறிந்து கொள்ள வானமாமலையை முடிவில் வந்து சந்தித்திருக்கிறார். பாரிஸின் ஸார்பாங் பல்கலைக்கழக இந்திய இயல் பிரிவில் ஒரு துறையில் பேராசிரியராக இருந்த பெண்மணி தமிழ் நாட்டு ஆசாரி இனங்களின் பழக்க வழக்கங்களை ஆராய நெல்லை மாவட்டத்திற்கு வந்து வானமாமலையை நாடியிருக்கிறார். ரஷ்யாவிலும் அவர் புகழ் பரவியிருக்கிறது.

அவர் நடத்திய 'ஆராய்ச்சி' பத்திரிகையின் ஒரு இதழின் பொருளடக்கத்தைத் தருகிறேன்: பாரதியின் கலை இலக்கிய கோட்பாடு; ஜெயகாந்தனின் படைப்புகளில் சார்பு நோக்கும் சார்பற்ற நோக்கும்; கு.ப.ரா.வின் பெண் பாத்திரப் படைப்பு முறை. இராஜராஜன் தியாகசீலனா? குடகு நாடும் கொடவர்களும், தாலாட்டு. ஓர் சமுதாய மதிப்பீடு; நாட்டுப் பாடல்கள் காட்டும் உழவர் வாழ்வு; இலங்கை இந்திய தமிழ் கலைச் சொல் ஆக்க முறைகளும் அடிப்படை வேறுபாடுகளும்; நடந்தாய் வா காவேரி விமரிசனம்.

வானமாமலை அவர்கள் சாகித்ய அகாதமியின் பார்வையில் சிக்காதது எனக்கு மிகுந்த ஆச்சரியம் அளிக்கிறது. அதற்கு அவருடைய இடதுசாரிச் சிந்தனைகள் காரணமாக இருக்கலாம் என்றால் அந்த ஆச்சரியம் வெறுப்பாக மாறுகிறது.

ஒரு மிகப்பெரிய ஆராய்ச்சியாளரை இழந்து விட்டோம்.

கணையாழியின் கடைசிப் பக்கங்கள் புத்தகமாக வெளிவருவது உங்களில் சிலருக்குத் தெரிந்திருக்கலாம்.

அவ்வப்போது விட்டுவிட்டு எழுதினாலும் இந்தப் பக்கங்களுடன் என் தொடர்பை நான் விடுவதாக இல்லை. இதை எழுதுவதற்கு திரு. கஸ்தூரி ரங்கன் எனக்கு அளித்திருக்கும் கருத்து சுதந்திரம் மகத்தானது; அது எனக்குக் கிடைத்த அதிர்ஷ்டம். டில்லியில் கரோல் பாக் வீட்டு மாடியில் கஸ்தூரிரங்கன் கணையாழியின் துவக்கத்தைப் பற்றி ஆர்வமாகப் பேசியது எனக்குப் பளிச்சென்று ஞாபகம் வருகிறது. பிடிவாதமாக இத்தனை வருஷங்கள் தொடர்ந்து நடந்து வருகிற சிறு பத்திரிகை கணையாழி ஒன்று மட்டும் தான் என்பதே ஒரு சிறப்பல்லவா?

62

- ஜனவரி, 1982

மதராஸ் புத்தகச் சந்தைக்கு ஒரு நாள் சென்று பனியனைக் கழற்றிக் கொடுக்கிற வரைக்கும் புத்தகங்கள் வாங்கினேன். மழையாக இருந்தாலும் உற்சாகம் குறையாமல் புத்தகங்கள் விற்கும் கிரியா ராமகிருஷ்ணனின் ஆர்வத்திலிருந்து கொஞ்சம் கடன் வாங்கிக் கொள்ள வேண்டும் போல இருந்தது. பெரும்பாலும் ராம கிருஷ்ணனிடத்திலும் சிறுபாலும் மற்ற புத்தகக் கடைகளிலும் (கழகம், பாரி நிலையம், எக்ஸிபிஎச், ஆக்ஸ்ஃபோர்டு) வாங்கின புத்தகங்களைப் பற்றி இந்தப் பகுதிகளில் தொடர்ந்து எழுத உத்தேசித்திருக்கிறேன். நான் எழுதப் போவது விமர்சனமில்லை. அந்தப் புத்தகங்கள் நல்ல புத்தகங்களா மோசமான புத்தகங்களா என்கிற சர்ச்சையல்ல. அவைகளை நான் என்னுடைய சொந்த சந்தோஷத்துக்காக தேர்ந்தெடுத்ததிலிருந்தே என்னை பொருத்தவரையில் அவை நல்ல புத்தகங்களே. எனக்கு அந்த சந்தையில் கிடைத்த ஒரு ஆச்சரியம் தமிழில் இத்தனை புத்தகங்கள் இத்தனை வேறுபட்ட விஷயங்களைப் பற்றிக் கிடைத்ததே. டாக்டர்

ஆறு அழகப்பன் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) ஐநூறு தாலாட்டுப் பாடல்களை தமிழகம், மற்றும் தமிழர்கள் வசிக்கும் வேறு மாநிலங்கள், வேறு நாடுகளிலிருந்து சேகரித்து வெளியிட்டிருக்கிறார்.

''பச்சரிசிச் சோறும்
பாதிநாள் பட்டினியும்
லஜ்ஜை கெட்டு வாழுறப்போ
லெட்சுமணன் வந்து பிறந்தாயோ''

என்று படிக்கும் போது கண்ணில் நீர் ததும்புகிறது. 'வனாந்தரப் பூக்கள்' என்று செங்கோ அவர்கள் கோவை இருளர்களைப் பற்றி சமூகவியல் பார்வையில் புத்தகம் எழுதியிருக்கின்றார்.

''ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் வழக்கமாக பறைக்குளித்தல் நடைபெறும். பூசாரி அன்று சாயங்காரம் குளித்துவிட்டு இரவில் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினி இருப்பார். ஊர் அடங்கிய நேரத்தில் பூசாரியும் ஒரு பெண்ணும் சாமி அறைக்குள் போய் தேங்காய், பழம் மற்ற பொருள்களையும் வைத்துக் கும்பிடுவார்கள். சாமி கேட்க வருகிறவர்கள் சாமி அறைக்கு வெளியே உட்கார்ந்து கொள்கிறார்கள். பூசை முடிந்ததும் விளக்குகள் அணைக்கப்பட்டு அந்தப் பகுதி இருட்டாக்கப்படுகிறது. ஊதுபத்தியைக் கூட அணைத்து விடுகிறார்கள். பூசாரி ஒரு பிரம்பையும் முறத்தையும் எடுத்துக் கொள்கிறார். முறத்துடன் ஒரு இரும்புச் சங்கிலி இணைக்கப் பட்டிருக்கும். இந்த முறமும் சங்கிலியும் சேர்ந்த அமைப்புக்கு மூச்சுப் பெட்டி என்பது பெயர். சங்கிலியால் முறத்தை தடதடவென்று பூசாரி அடிப்பார். அங்குள்ள பெண் தன் கையில் காய்ந்து, உலர்ந்த சுரை புரடைக்குள் குன்று மணிகளைப் போட்டு அடைத்த அமைப்பை 'ஜலக் ஜலக்' என்று ஆட்டுகிறாள். சற்று நேரத்தில் பூசாரிக்கு சாமி, அதாவது அருள் வருகிறது.''

'உரைநடை வளர்ச்சி' என்னும் பேராசிரியர் வானமாமலையின் புத்தகத்தில் தமிழ் உரைநடை பற்றிய முதற் சான்றுகள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் செதுக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகள் தான் என்றும் இலக்கியத்தில் உரைநடையின் முதல் எடுத்துக் காட்டுகள் சங்க இலக்கிய செய்யுள்களில் அடிக்குறிப்புகள் என்றும் தெரிகிறது. ஆரம்ப கால உரைநடைக்கு ஒரு உதாரணம். ''பொருள் வயிற் பிரிந்த தலைவன் பருவம் உணர்ந்த நெஞ்சிற்கு உரைத்தது'' இப்போது கூட சிலர் இப்படித்தான் உரைநடை எழுதிக் கொண்டிருப்பது வசீகரமான விஷயம். 'காகிதத்தில் ஒரு கோடு' போடும் ஆத்மாநாம் கண்ணாடிச் சிறைக்குள் கண்ணாடிச் சிறையிலிருந்து 'என் கால்கள், என் நடை, என் சதுரம்' என்று முதுகைத் திருப்பிக் கொள்கிறார்.

ஞா.தேவநேயனின் 'வேர்ச்சொற்' கட்டுரைகளில் ரகரம் றகரம் இரண்டிலும் காலத்தால் முந்தியது ரகரமே என்றும், 'அர்' என்கிற வேர்சொல் அறுத்தல், வெட்டுதல், என்கிற பொருளிலிருந்து அரங்கு என்கிற வார்த்தை, அறுக்கப்பட்ட அல்லது தனியாகப் பிரித்து அமைக்கப்பட்ட கட்டடப் பகுதிக்கும் அதிலிருந்து அரங்கம் என்கிற சொல் ஆற்றிலிடையிலிருக்கும் தீவுக்கும் (ஆற்றிடைக்குறை) சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டு ('ஆற்று வியரங்கத்து' சிலப் 10:156) அதிலிருந்து சிறப்புப் பெயராக ஆற்று நீரால் அறுக்கப்பட்ட திட்டாகிய எங்களூருக்கு பெயர் வந்தது. (திருவரங்கம்) என்று படித்த போது சந்தோஷமாகயிருந்தது.

''வெளியிடுவதற்காக நான் தேர்ந்தெடுத்திருக்கும் நூல்களில் பெரும்பாலானவை உரை நடையிலான கதைகள். நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் பான்மை வாய்ந்தவை. தெள்ளிய இனிய நடையில் அமைந்தவை. ஜனங்களுக்குப் பிடித்தமான நடையழகும் சொல்லழகும் கொண்டவை. அதே சமயம் பரிஸுத்தமானவை. காவிய ரஸனை பொருந்தியவை. எக்காலத்திலும் இருக்கக் கூடியவை... வசன நூல்கள் ஒவ்வொன்றும் எட்டணா :விகிதமும் விலை

வைக்க உத்தேசித்திருக்கிறேன்...'' ''ஆகையால் தயவு செய்து அச்சுச் செலவு வகைகளுக்காக உங்கள் முடிந்த ஒரு தொகையை கடனாக அனுப்புங்கள். நான் பெறும் தொகைகளுக்கு ஸ்டாம்பு ஒட்டின புரோ நோட்டு கொடுக்கிறேன்.. மாதத்திற்கு இரண்டு சதவிகிதம் தாராள வட்டி கொடுக்கிறேன்...'' சீனி விசுவநாதன் தொகுத்திருக்கும் ''பாரதியின் பெயர் கோவை'' புத்தகத்தில் வெளியாகியிருக்கும் இந்தக் கடிதப் பகுதி மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 1920-ல் மதுரை ஸ்ரீனிவாச வரதாச்சாரியாருக்கு எழுதிய ஆங்கிலக் கடிதத்தின் மொழி பெயர்ப்பு.

63

- செப்டம்பர், 1988

சென்ற இதழில் இந்தப் பகுதியில் இருந்த ஏழு அச்சுப் பிழைகளில் பெரும்பாலானவற்றை வாசகர்களே அறிந்து திருத்தியிருக்கலாம். கணையாழி வாசகர்களுக்கு அந்தப் பழக்கம் உண்டு என்பது எனக்குத் தெரியும், இருந்தும் ஒரு திருத்தத்தை நான் குறிப்பிட்டே ஆக வேண்டும். சிறந்த மறுபரிசீலனைக் கவிதை ஞானக்கூத்தன் என்று எழுதி ப்ராக்கெட்டில் கவிதையின் தலைப்பான (பரிசில் வாழ்க்கை) எனக் கொடுத்திருந்தேன். அது 'பலரின் வாழ்க்கை' என அச்சாகியிருந்தது. ஸாரி திரு ஞானக்கூத்தன் அவர்களே, சமீபத்தில் எழுதிய 'ஒட்டைகள்' பற்றிய கவிதையை ரசித்தேன்.

சென்ற இதழ் அச்சுப் பிழைகளுக்கு நான் தான் காரணம். இப்போதெல்லாம் நான் தமிழை எழுதுவது கம்ப்யூட்டர் மூலம் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். சென்ற முறை சென்னை வந்திருந்தபோது அவசரமாக கையெழுத்தில் எழுதிக் கொடுத்தேன், அதுதான் காரணம், ஒன்றரை வருஷத்தில் என் கையெழுத்து இத்தனை

மோசமாயிருக்கிறது. எழுத்து மோசமாகவில்லை என்று நம்பிக்கை.

இன்றைய நாட்களில் தமிழ் கம்ப்யூட்டருக்கு எத்தனை தோதான மொழி என்பது சட்டென்று பல கம்ப்யூட்டர் வியாபாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டு பல வேர் தமிழ் சொற்தொகுப்பு 'சாப்ட்வேர்' தருகிறார்கள். அதில் சிறந்தது திரு முத்துக்கிருஷ்ணனின் 'பாரதி.' டில்லியில் ஒரு நிறுவனம் ஆப்பிள் கம்பெனியின் மக்கின்டோஷ் கம்ப்யூட்டரில் பேஜ்மேக்கிங் என்று அச்சாபிசுகளுக்கு தமிழில் ஒரு ஸாப்ட்வேர் பண்ணி விற்கிறார்கள். அதை இன்று பல முன்னணிப் பத்திரிகைகள் உபயோகிக்கிறார்கள். கணையாழி போன்ற இலக்கியப் பத்திரிகையை 'டெஸ்க்டாப் பப்ளிஷிங்' முறையில் ஒரு நாளில் வடிவமைத்து அச்சுக் கோத்து அனுப்பிவிடலாம். அந்த நிலை சீக்கிமே வர நாமெல்லாம் சந்தா கட்ட வேண்டும். 'என்றுமுள தென்தமிழ்' என்ற சொற்றொடரின் அர்த்தத்தை இன்றைய கம்ப்யூட்டர் நாட்களில் தான் முழுமையாக அறிய முடிகிறது. தமிழில் எழுத்துகள் குறைவாக இருப்பதை நான் உட்பட பலர் நையாண்டி செய்து கொண்டிருந்தது இப்போது வெட்கமாக இருக்கிறது. கம்ப்யூட்டர் விசைப்பலகையின் அப்படியே அடங்கக் கூடிய முதன் இந்திய மொழி தமிழ்தான். மற்ற மொழிகளுக்கெல்லாம் சாப்ட்வேர் சாகசங்கள் பண்ண வேண்டும்.

சுந்தரராமசாமியின் காலாண்டு இதழான 'காலச் சுவடு' கிடைக்கப் பெற்றேன். அதில் அவர் சிறுகதை ஒன்று இருக்கிறது. சுந்தர ராமசாமியின் 'பிரசாதம்' போன்ற ஆரம்ப காலச் சிறுகதையுடன் ஒப்பிட்டால் அவர் நடையிலும் சொல்லும் விஷயத்திலும் ஏற்பட்டிருக்கும் மாறுதல் தெள்ளெனத் தெரிகிறது. இந்த மாறுதல் தவிர்க்க முடியாதது என்றுதான் தோன்றுகிறது. ஒரு எழுத்தாளனுக்கு வயசாக வயசாக அவனுக்கு முக்கியமாகப்படும் விஷயங்கள் மாறுபட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த மாறுதல்

இல்லையெனில் அவன் ரிட்டயர் வாங்கிக் கொண்டு போக வேண்டும். பலபேர் ஒரே கதையை திருப்பித் திருப்பிச் சொல்லும் தகிடுதத்தக்காரர்கள். நல்ல கவிஞர்களிடமும் பார்க்கிறேன். கல்யாண்ஜி இன்றைக்கு அந்த வீடு பெருக்கும் பெண்பிள்ளையைப் பற்றி எழுதியிருப்பாரா என்பது சந்தேகம். மேலும் மிக முக்கியமாக வாசகனும் மாறுகிறான். வாசகனுக்கும் வயதாகிறது. காரண்ட்டியாக நான் என் வாசகர்களை சந்திக்கும்போது என்னிடம் கேட்கப்படும் கேள்வி 'நீங்க எழுதறது முன்னை மாதிரி இல்லை ஸார்.' ஒரு கோஷ்டி நான் 1963-ல் குருக்ஷேத்திரம் தொகுப்பில் எழுதிய 'தனிமை கொண்டு' கதையையே சொல்லிக் கொண்டிருக்கும். 'அதற்கப்புறம் நீங்க எழுதவே இல்லை ஸார்' என்று. இன்றைக்கு நான் அந்த தனிமை கொண்டு கதையை நிச்சயம் எழுத மாட்டேன். ஏனெனில் அதில் உள்ள பாசாங்குகள் எல்லாம் எனக்குத் தெரியும். முதல் காரியமாக அண்ணன் தங்கை கதை அது. எனக்கு தங்கையே கிடையாது. தங்கையைப் பற்றி எழுத ஒரு தங்கை இருந்தாக வேண்டுமா என்பது பட்டிமன்ற விஷயம்.

ராமாயணம் டிவியில் முடிந்து போனதைப் பற்றி நிறைய பேர் நிறைய எழுதி விட்டார்கள். அது எப்படி இந்திய துணைக் கண்டத்தையே ஞாயிறு காலைகளில் பெட்டிப்பாம்பாக வைத்திருந்தது என்று பற்பல 'ஆலஜிஸ்ட்டுகள்' எழுதி விட்டார்கள். எனக்கு என்னவோ ராமாயணம் ரொம்ப குழந்தைத்தனமாக இருந்தது. அதில் வரும் டிஜிட்டல் எஃபெக்ட்ஸ், அம்பு அம்புடன் காலர் கலராக சண்டைபோடுதல் எல்லாம் எலக்ட்ரானிக்ஸ் சமாசாரம். சமுத்திரம் க்ரோமா கீ. அதனால் ராமாயண வேளையில் அவ்வப்போது கம்பராமாயணத்தில் அந்த அந்த வாரப் பகுதிகளை சிலவேளை படித்துப் பார்க்கத் துவங்கினேன். இந்திரஜித்து வதையில் ரமானந்தசாகர் கம்பராமாயணத்தை அப்படியே ஃபாலோ பண்ணியிருந்தது. அது என்னதான் இரைச்சலாக இருந்தாலும் ஆச்சரியம் அளித்தது. கம்ப ராமாயணத்தின் மிகப்புகழ் பெற்ற சில

பாடல்கள் அந்தப் பகுதியில் உள்ளன. அவை ஹிந்தி மொழி பெயர்ப்பாக அப்படியே உபயோகப்படுத்தப்பட்டிருந்தன.

"ஆதலால் அஞ்சினேன் என்று அருளலை ஆசை தான் அச்
சீதைபால் விடுதி ஆயின் அனையவர் சீற்றம் தீர்வர்
போதலும் புரிவர் செய்த தீமையும் பொறுப்பர் உன்மேல்
காதலால் உரைத்தேன்"

- என்று இந்திரஜித்து சொல்ல அதற்கு ராவணன்:

"வென்றிலன் என்ற போதும் வேதம் உள்ளளவும் யானும்
நின்றுளேன் அன்றோ மற்றுஅவ் இராமன் பேர் நிற்குமாயின்"

- என்று பதில் சொல்வது அப்படியே இருந்தது.

64

- நவம்பர், 1988

பை-பாஸ் ஸர்ஜரிக்குப் பிறகு ஏறத்தாழ ஒரு மாத ஓய்வுக்குப் பிறகு இதை எழுதுகிறேன். மனத்திலும் உடலிலும் அலைந்து கொண்டிருந்த ஒரு ஆள் ஒரு அறையில் 24 மணி நேரமும் சும்மா இருப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை அறிந்து கொண்டேன். களைப்பினால் படிக்க முடியாது. முடிந்தாலும் எத்தனை தான் படிப்பது? எதைப் படிப்பது? ஸர்ஜரி என்பது உடலையும் உள்ளத்தையும் உருவிப் போட்டு அலுப்பின் எல்லைக்குத் தள்ளிவிடுகிறது. அதிலிருந்து மீள எனக்கு உதவியவை இவை:-

1. — சரியாய்ப் போய்விடும் என்கிற நம்பிக்கை. இதுவே பாதி சிகிச்சை, குணம்.
2. மிகவும் 'லைட்'டான படிப்பு. பி.ஜி. உட்ஹவுஸ் தான் தகுந்த ஆசிரியர்.
3. சில ஆழ்வார் பாடல்கள்.

4. ரேடியோவில் அதிகாலை உழவர்களுக்கும் ஊக்குநர்களுக்கும் மையங்களுக்கும் ஆன அறிவிப்புகள். தென்னார்க்காடு மாவட்டத்தில் மானாவரி சாகுபடி,(மானாவாரிஎன்ற வார்த்தைக்கு முதன் முதலாக அர்த்தம் தெரிந்து கொண்டேன்.) தஞ்சையில் பூச்சி மருந்து, தர்மபுரியில் கால் நடைக் கருத்தரங்கு என்று எனக்கு எந்தப் பிரயோசனமுமில்லாத செய்திகள் அத்தனையும் சுவாரஸ்யமாக இருந்தன.

5. விவித பாரதியில் எட்டு செகண்டில் என்பது விஷயம் சொல்லும் விளம்பரங்கள். பெரும்பாலும் தீபாவளி ஜவுளி, மிக்ஸர் கிரைண்டர். இதில் கூட 'ஏன்னா' என்ற பிராமண பாஷை. அதட்டும் மனைவி. உடனே ஒப்புக் கொள்ளும் கணவன். இருபத்தைந்து விளம்பரங்களுக்கு ஒரு முறை சினிமாப் பாட்டுகள்.

தமிழ் சினிமாப் பாட்டுகளை இத்தனை கூர்ந்து கேட்க வாய்ப்பு எனக்கு இதுவரை ஏற்பட்டதில்லை. இப்போது அதை சற்று ஆராய்ந்ததில் தமிழ் சினிமா பாடல்கள் அனைத்தையும் ஒரு நூறு வார்த்தை ஒக்கபிலேரிக்குள் அடக்கி விடலாம். (உ-ம்) காமதேவன், காதல் ராச்சியம், தாகம் தீர்க்கவோ, பார்க்கவோ, கேட்கவோ, பூந்தோட்டம், நீங்காத ரீங்காரம், ராஜராகம், சங்கீதம் உன் பேச்சில், நாயகன், நாயகி, மணமாலையை எதிர்பார்க்கும் பூங்கொடி, இதயத்தின் சிறை, சொர்க்கங்கள், சொந்தங்கள், கையோடு கைகள் உறவாட வேண்டும்... இவ்வாறு ஒரு நூறு போதும். இடையிடையே 'ரிப்பாப்பா ரிப்பா' (ஆண்) 'லல்லல்லாலல்லா' (பெண்) ம்ம்ம்ம். ஹஹஹா (ஆண்-பெண்) போன்ற நல்ல தமிழ் வார்த்தைகளையும் செருகிக் கொள்ளலாம். மொத்தத்தில் 96 சதவீதம் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் தான் பாடுகிறார். பாடல் நடுவே ஒரு தடவையாவது நக்கலாக சிரிக்கிறார். எல்லாப் பாடல்களும் கேட்ட மூன்றாவது நிமிஷமே செத்துப் போகின்றன.

மஹா வித்வான் இரா. இராகவையங்கார் அவர்கள்

தலைவனுக்கும் உள்ள நெருக்கத்தை போர் வீரன் வில் பிடித்த கை விரல்களின் இறுக்கத்தோடு ஒப்பிடும் அருமையான உவமை...

65

- டிசம்பர், 1988

"இலங்கை எழுத்துகள் என்றவுடன் வாதட்சணை, ஏகே 47 துப்பாக்கிகள், இனக் கலவரம், நகரத்தில் தீ, தமிழச்சி பாடும் விடுதலை கீதம்... இவையே இந்தியத் தமிழ் வாசகர்களின் மனக்கண்முன் சமீப காலமாக தோற்றமளித்து வந்திருக்கும். ஆனால் எரிமலைக் குழம்பு மட்டுமல்ல, என் விரலின் நகச் சூடும். என் கதைகள் கூறுவதும் அதைத்தான்'' என்று எனக்கு கடிதமெழுதியிருந்த உடையப்பா மாணிக்கம் (உமா) வரதராஜனின் 'உள் மன யாத்திரை' என்கிற சிறுகதைத் தொகுப்பை (அன்னம் வெளியீடு) உடனே எடுத்துப் படித்து ரசித்தேன்.

இலங்கை எழுத்தாளர்களின் சிறுகதைகள், நாவல்கள் நமக்கு சிறிது அந்நியமாகப் படுவதற்குக் காரணம், சற்றே விநோதமான சில வார்த்தைப் பிரயோகங்கள் மட்டும்தான். ''குணரெத்தினத்தின் மனைவி மூக்கால் கதைத்தாள்'' போன்ற வாக்கியங்களை நம் தமிழில் மொழி பெயர்த்துக் கொள்ள சற்று நேரமாகிறது. அதுபோல் எக்கவுண்று, ஸிற் தியாலம், யன்னல், கிற்றார், போன்ற வார்த்தைகள் அவ்வப் போது நம் கவனத்தைக் கலைத்தாலும் உமா வரதராஜனை இன்றைய தமிழ் சிறுகதை எழுத்தாளர்களில் முக்கியமானவராக ஏற்றுக் கொள்வதில் எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை.

''ஊரடங்குச் சட்டம் பற்றி திடீர் என அறிவிப்பு வந்தது. வானொலியிலும் தொலைக் காட்சியிலும் ஒரே

மாதிரி சொன்னார்கள். தொலைக் காட்சியில் இந்த அறிவிப்பை வாசிக்க வந்தவன் வளமையான ஓர் அறிவிப்பாளனுமில்லை, அவன் தப்புத்தப்பாக அறிவிப்பை வாசித்தான். சந்தைக்குப் போயிருக்கக்கூடிய தன் மனைவியைப் பற்றி, இந்த வேளையில் அவனுக்கு ஞாபகம் வந்திருக்கலாம்.''

நகச்சூட்டை வர்ணிப்பதிலேயே எரிமலைக் குழம்பையும் பிரதிபலிக்கிறார் வரதராஜன்.

'ஹைக்கூ பாணியில் சமூகத்தை சாட முடியும் என்பதற்கு உதாரணம் இரு. அவை நாயகனின் 'சூர்யச் செதில்கள்' என்கிற கவிதைத் தொகுப்பு. ஆனால் ஹைக்கூ ஒரு வடிவம் மட்டும் அல்ல, மன ஓடையில் ஏற்படுத்தும் மென்மையான சலசலப்பும் கூட, அதனால்,

''கூந்தல் போர்த்த உடல்
நெய்யும் தறியில்
காஞ்சிப் பட்டு''

போன்றவைகளை பகுதி நேர ஹைக்கூ என்று தான் சொல்ல முடியும். ஆனால் இது-?

''செவிடன் இறந்த போதும்
தலைமாட்டில்
ஒப்பாரி''

அண்ணா பல்கலைக் கழகத்தில் வளர் தமிழ் மன்றம் வெளியிடும் 'களஞ்சியம்' என்ற பத்திரிகையைப் பற்றி உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? அழகாக அச்சிடப் பட்டு இக்காலத் தமிழ் இலக்கணம், கலைச் சொற்களைத் தரம் பிரித்தல் 'செம்மொழிகளின் வரிசையில் தமிழ்' போன்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள், அடிக் குறிப்புகள், நோக்கீட்டு நூல்கள் சகிதமாக வெளிவரும் இவ்வகைப் பத்திரிகைகள் தமிழில் எத்தனை வருகின்றன என்று அறிய ஆவலாக இருக்கிறது.

'வார்த்தைகளுக்கு பொருளாழமும் ஏற்படுகிறது' போன்ற வாக்கியங்களில் புதுமைப்பித்தன் காலத்திலிருந்தே ஏற்பட்ட ஒருமை பன்மை மயக்கம் தற்கால எழுத்தாளர்களுக்கு மிக அதிகமாகவே ஏற்படுவதை, 'தற்காலத் தமிழ் இலக்கணம்' என்கிற கட்டுரையில் உதாரணம் காட்டி, மொழி மாற இலக்கணமும் மாறுகிறது என்பதை நயமாக எழுதியிருக்கிறார் டாக்டர் கி. அரங்கன். அப்பா வந்தா, அம்மா வந்தா என்று நாம் பேசும் போதே நம் விகுதிகள் கழன்று கொண்டிருப்பதையும் இந்த தவிர்க்க முடியாத மாற்றம் நிகழ்ந்து கொண்டிருப்பதையும் கவனிக்கலாம்.

66

- பிப்ரவரி, 1989

சென்ற இதழில் தொலைக் காட்சியில் அவ்வப்போது கிடைக்கும் தேசிய விருதுப் படங்களை குறிப்பிடத் தவறி விட்டேன். தொலைக்காட்சி இல்லாவிட்டால் என்னால் ஜஹாநு பருவாவின் அஸ்ஸாமியப் படத்தைப் பார்த்திருக்க முடியாது. 'ஹலோ தியா சோராயெ போவ்தான் காய்' என்று பெயரை வைத்துக் கொண்டிருக்கும் படம் எப்படி நன்றாக இருக்கப் போகிறது என்று நல்லவேளை அணைக்க வில்லை. கௌஹாத்தி வாசகர் யாராவது இந்த தலைப்புக்கு என்ன அர்த்தம் என்பதை எழுதலாம். படம் என்னை பிரமிக்க வைத்தது. இந்தப் படம் சென்ற வருஷத்து சிறந்த படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. எளிய விவசாயி கொஞ்சம் நிலம் மனைவி மகள் மகன். இவர்களின் கதையை ஆரவாரமில்லாமல் சொல்கிறது. அப்பா நிலத்தின் பேரில் வாங்கின கடனைத் திருப்பிக் கொடுக்கையில் ரசீது பெறாததால் நிலம் அவனிடமிருந்து பிடுங்கப்படுகிறது. ரெவின்யூ அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க மாட்டை விற்று மகனை நிலத்தைப் பறித்த ஜமீன்தாரிடமே எடுபிடி

வேலைக்கு அனுப்ப வேண்டி வந்து எல்லாவற்றையும் இழந்து கடன் வாங்கி, அஸிஸ்டண்ட் கலெக்டருக்கு சாராய பாட்டில் கொண்டு வந்து அதை எப்படி கொடுப்பது என்று திணறுகையில், சட்டென்று எல்லா நம்பிக்கையும் இழந்து சர்க்கார் அதிகாரியின் அறைக்குள் நுழைந்து கதறுகிறான்.

அதிகாரி நிசமாகவே லஞ்சம் வாங்குபவர் இல்லை. சுற்றுப்பட்ட மனிதர்கள் தாம் மோசம். அவன் கேஸைக் கேட்டு சாமர்த்தியமாக அவனுக்கு உதவி செய்து நிலத்தை மீட்டுக் கொடுக்கிறார். மாட்டை விற்று மகனை விற்று எல்லாவற்றையும் இழந்த நிலையில் ஒரு துளி ஆறுதலாக அவன் நிலம் திரும்ப அவனுக்கு கிடைக்கும்போது அந்த மீட்சியில் அவனுக்கு எதும் வெற்றி இல்லை.

பருவாவை, முன்னணி இந்திய இயக்குநர்களின் பட்டியலில் சேர்த்துவிடும் அளவுக்கு தெளிவாக கதை சொல்கிறார். கோடார்டு சொன்ன 'செகண்டுக்கு இருபத்து நான்கு தடவை உண்மை' என்ற சித்தாந்தம் பருவாவின் இந்தப் படத்துக்கு ஒன்றிரண்டு மிகையான காட்சிகளை மறந்து விட்டால் பொருந்தும். அஸ்ஸாமி போன்ற பிராந்திய மொழியில் இத்தனை நவீனமான படம் வெளிவர சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பது சந்தோஷமாகவும், தமிழில் முடியவில்லையே என்று ஏக்கமாகவும் இருக்கிறது.

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியை நேரில் அவருடைய ரேஸ்கோர்ஸ் ரோடு வீட்டில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. செக்யூரிட்டி சிநேகம் நிறைந்த அழுத்தமாக இருந்தது. முதலில் அகலமான ரோடில் பிரதமரின் வீட்டு வாசலை நோக்கி வெஸ்டர்ன் படங்களின் கடைசிக் காட்சி போல தனியாக நடக்க வேண்டும். அவரவர் கையில் வி எச் எஃப் வைத்துக் கொண்டு இங்கே போ அங்கே போ என்று அலைக்கழிக்கிறார்கள். இரண்டு அனுமதி சீட்டு, அப்புறம் மெட்டல் டிடெக்ட்டர் தடவல், அதன்பின் புல்வெளியைக் கடந்து பின்பக்க வராந்தாவில் காத்திருத்தல், சட்டென்று

வந்தார். விட்ட இடத்தில் தொடர்வது போல உடனே கேள்வி கேட்க ஆரம்பித்தார். ஓட்டுப் பதிவு இயந்திரத்தில் டெக்னிக்கலாக சந்தேகங்கள் எல்லாம் கேட்டார். மைக்ரோ கம்ப்யூட்டர் எல்இடி போன்ற எங்கள் பக்கத்து வார்த்தைகள் பிரயோகித்தார். தமிழ்நாடு தேர்தல் முடிவுகள் இன்னும் வரவில்லை. உற்சாகமாக இருந்தார். முதல்தினம் முழுவதும் பிரச்சாரம் செய்த களைப்பு தெரியவில்லை. அரை மணி பேசிக் கொண்டிருந்து விட்டு சட்டென்று புறப்பட்டுப் போய் விட்டார்.

அனந்த பத்மநாபனிடம் சொன்னபோது அப்படியா இன்னிக்கு ராத்திரி டிவில வருமா என்று கேட்டார். டிவிகாரர்கள் வரவில்லை என்றேன். போட்டோவாவது எடுத்தாங்களா என்றார். இல்லை என்றேன். பி.எம்.மையாவது பார்க்கிறதாவது, பொய் என்று சொல்லிட் புறப்பட்டு விட்டார். ராஜீவ் நேரில் டிவியில் போல இல்லாமல் இரானிய சிவப்பாக பளிச்சென்று இருக்கிறார். சுற்றுப்பட்ட சிலரை சுலபமாக நம்பி விடுவார் போலத் தோற்றமளிக்கிறார். டெக்னாலஜிக்காரர்களுடன் புத்திசாலித் தனமாக பேசும் விருப்பம் சுபாவத்தில் தெரிகிறது.

''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று''... ஆயிரம் யாகங்கள் விட ஓர் உயிரைக் கொல்லாமை நல்லது என்று சொல்லும் இந்த ஒரு குறளை வைத்துக் கொண்டு திருக்குறளை ஒரு ஜைன நூல் என்கிறார்கள். 'மலர் மிசை ஏகினான்' என்பதால் வள்ளுவரை வைணவர் என்று கூறுபவர் உளர். திருக்குறளில் பைபிள் கருத்துகள் இருப்பதால் அவரை கிறித்தவர் என்றும், தம்ம பத கருத்துகள் இருப்பதால் பவுத்தர் என்றும், மனுநீதிக்கருத்துகளால் அவரே மனு என்றும் கூறுவோரும் உண்டு. திருக்குறளில் முரண்பாடான கருத்துகள் இருப்பதை யாரும் ஆராய்ச்சி செய்ததாகத் தெரியவில்லை. இரவு என்னும் அதிகாரத்தில் 'இரத்தக்கார் காணின் இரக்க' அதாவது இரந்து கேட்கத் தகுந்தவர்

அகப்பட்டால் அவரிடம் இரக்கலாம் என்பவர், அடுத்த அதிகாரத்தில், ''கரவாது உவந்தியும் கண்ணன்னார் கண்ணும் இரவாமை கோடியுறும்'' என்கிறார். ஒளிக்காமல் கொடுப்பவர்கள் இருந்தாலும் அவர்களிடத்தில் பிச்சை எடுக்காமல் இருப்பது கோடி பெறும் என்கிறார். இதில் எது வள்ளுவர் கருத்து?

67

- மார்ச், 1989

மீராநாயரின் 'சலாம் பாம்பே' கான் திரைவிழாவில் பரிசு பெற்றது. இந்த வருஷ ஆஸ்கருக்கு சிறந்த அயல்நாட்டுப் படமாக நாமகரணம் செய்யப்பட்டிருக்கிறது. பற்பல விழாக்களில் மொத்தம் பத்துப் பரிசுகள் பெற்றிருப்பதாக விளம்பரம் செய்திருக்கிறார்கள். இந்தப்படம் பங்களூரில் ரிலீஸாகி ஆஸ்கர் பரிந்துரைக்குப் பின் கொஞ்சம் கூட்டம் அதிகமாகி மூன்று வாரம் ஓடியது. உள்ளூர் விமரிசகர்கள் இந்தப் படத்தை ஓஹோ என்று புகழ்ந்திருந்தார்கள். மீரா நாயர் டில்லி திரைப்பட விழாவில் ரொம்ப கோடார்டு போல் பேட்டியளித்தார்.

படம் பம்பாயின் சேரிச் சிறுவர்கள் பற்றியது. குறிப்பாக ஸ்டேஷன் டீக்கடையில் வேலை செய்யும் ஒரு சிறுவனின் கோணத்திலிருநுது சொல்லப்படுகுறது. கிராமத்திலிருந்து அம்மாவிடம் ஐநூறு ரூபாய் சேர்த்துக் கொண்டு வருகிறேன் என்று வாக்களித்துவிட்டு பம்பாய்க்கு ஓடி வந்தவன், சிவப்பு விளக்கு பகுதியின் ஓரத்தில் தேவடியாள்களும் கஞ்சாவும் ஏமாற்றும் நிறைந்த பெரியவர்களின் உலகத்தின் 'விளிம்பில்' வசிக்கும் சிறுவர்களுடன் சேர்ந்து கொண்டு, வயசுக்கு அதிகமாகவே பார்ப்பதை இனம் பிரிக்க முடியாமல் ஏற்றுக் கொண்டு சிறுபிள்ளைத் தனத்தையும், அறியாமையையும் கருணையை யும் கைவிட முடியாமல் ஓர் இடைக்காலத்தில் தவிக்கிறான்.

கடத்திக் கொண்டு வரப்பட்டு விற்கப்பட்டு இன்னும் 'லைனுக்கு' வராத இளம்பெண்... மனைவியை இழிதொழிலில் விட்டு சம்பாதிக்கும் கணவன், அம்மா 'கஸ்டமரு'டன் படுத்திருக்க அறை வாசலில் சோழியாடிக் கொண்டிருக்கும் சிறுமி, காஞ்சாவுக்கு அடிமையாகிவிட்ட ப்ளாட்பாரம் பொறுக்கி, இப்படி மக்களின் கதையை சற்றே அமெரிக்க டேஸ்ட்டுக்கு ஏற்ப மிகை தடவி திறமையாக போட்டோ பிடித்து திறமையான சங்கீதம் (எல். சுப்ரமணியம்) பின்னணி ரீரிக்கார்டிங் என்று கொடுத்திருக்கிறார்கள். டி.வி.யில் 'புனியாதி'ல் பொறுப் புள்ள குடும்பத் தலைவியாக நடித்த அனிதா தன்வர்தான் விலைமகள். 'மாஸி ஸாஹப்' புகழ் ரகுவீர் யாதவர் இதில் பிளாட்பாரத்தில் போதைக்காக சின்னப் பையன்களிடம் காசு கெஞ்சுகிறார். கிருஷ்ணா என்கிற பையனாக பம்பாய் சேரிச் சிறுவனையே மிகத் திறமையாக நடிக்க வைத்திருப்பதற்கு டைரக்டரை நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும். மற்ற சிறுவர்களும், ஏன் இந்தப் படத்தில் யாருமே நடிப்பதாகத் தோன்றவில்லை. அத்தனை இயல்பாக ஸாலா, சூத்தியா என்று பேசிக் கொள்கிறார்கள், துப்புகிறார்கள்., ஸ்டேஷனில் ஒன்னுக்கடிக்கிறார்கள், ப்ளாட்பாரத்தில் கட்டிக் கொண்டு படுத்துக் கொள்கிறார்கள். போதாக்குறைக்கு ஒரு நீண்ட முத்தம் வேறு.... அமெரிக்கா வாச இந்திய டைரக்டரின் பாசாங்கு இந்த படத்தில் அவ்வப்போது தலை காட்டுகிறது (உ-ம் 'ஹிந்துஸ்தான் மே ஸப் டீக் ஓ ஜாயேகா' என்று போலீஸ் வண்டியில் போலீஸ்காரன் சிறுவர்களிடம் சொல்லும்போது காமிரா வெளியே சேரித் தொடரை காண்பிப்பது.) இந்த படத்தின் உண்மையான சிறப்பம்சம் ரீரிக்கார்டிங். பம்பாயின் அத்தனை ஓசைகளையும் எலக்ட்ரிக் ரெயில், டாக்ஸிகள், பிள்ளையார் விழா, மழை, ஸ்ரீதேவி டான்ஸ், விவித்பாரதி என்று பம்பாயின் மகத்தான ஓசைகளே படத்தில் ஒருவாறு நடிக்கின்றன. அதே போல் பம்பாய் நகரமும் இந்தப் படத்தின் ஒரு கதாபாத்திரம் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதன் கல்யாணங்களும் விழாக்களும் பாதகத் தெருக்களும் காஞ்சாவும் எல்லாமே இந்திப் படத்தில் நாம் இதுவரை பார்த்திராத ஒரு புதிய பரிமாணத்தை சேர்க்கின்றன. இந்தப் படத்துக்கு ஆஸ்கார் கிடைத்தாலும் கிடைக்கும். அமெரிக்கர்களுக்கு நம் ஏழ்மையில் உள்ள கவிதை ரொம்ப பிடிக்கும். டாலர் ஈட்டும் ஏழ்மை, இந்தப் படத்துக்கு பணம் கொடுத்தது என்.எஃப்.டி.ஸியும் தூர்தர்ஷனும்.

'ராம் லக்கன்' என்கிற படம் எப்படியோ. அதற்கு பேப்பரில் கொடுத்திருந்த விளம்பரம் சுவையானதாக இருந்தது. ''ராம் லக்கனை தியேட்டரில் பார்த்தால் மூன்று மணி ஏழு நிமிஷம், திரையின் அளவு 963 சதுரஅடி. கண்களுக்கு அலுப்பு சைபர் டிகிரி, ஆடியன்ஸ் ஈடுபாடு நூறு சதவிகிதம் கேளிக்கை மதிப்பு நூறு சதவிகிதம்.

''ஆனால் ராம் லக்கனை வீடியோவில் பார்த்தால் நேரம் இரண்டு மணி இருபத்தைந்து நிமிஷம். திரையின் அளவு அஞ்சு சதுர அடி. கண்களுக்கு அலுப்பு நூறு சதவிகிதம். ஆடியன்ஸ் ஈடுபாடு பத்து சதவிகிதம், ஒலி கேட்கும் அளவு இருபது சதம், கேளிக்கை மதிப்பு பத்து சதம். தியேட்டருக்கு விரைந்து வாருங்கள்.''

இவ்வண்ணம் விநோதமான விளம்பரங்கள் பங்களூரில் அதிகம். ஸேல் போடுபவர், 'என் குடும்பம் நாசமாகட்டும்; நான் கடனில் முழுகப் போகிறேன்; இருந்தாலும் விலையைக் குறைத்து விற்பதை தேசத்துக்கு தொண்டாக செய்கிறேன்' என்று ஒரு விளம்பரம் தினம் தவறாமல் தருவார். 'தாய் நாடு' படத்துக்கு 'சத்தியராஜை டைட்டில் கார்டுடன் பாருங்கள்' என்று ஒரு விளம்பரம்! எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்?

'எழுத்தாளர்கள் கையாலாகாதவர்கள்' என்று நான் ஜூனியர் விகடனில் பதில் எழுதியிருந்ததை கோபித்துக் கொண்டு சிவசங்கரி எனக்கு நீண்ட கடிதம் அனுப்பியிருந்தார். ஸாலமன் ரஷ்டியின் 'சாத்தானின் செய்யுள்கள்' எப்படிப்பட்ட புத்தகமோ தெரியாது. ஆனால்

அதன் மேல் ஈரான் கோபித்துக் கொண்டு ரஷ்டிக்கு மரண தண்டனை விதித்ததில் மற்ற பிரபல எழுத்தாளர்களின் நடத்தை என் ஜூ.வி. பதிலை வலியுறுத்துகிறது. ஆர்தர் மில்லர் (Arthur Miller) நார்மன் மெய்லர் (Norman Mailer) போன்றவர்கள் பயந்து கொண்டு டெலிவிஷனில் தோன்றவே மறுத்து விட்டார்களாம். ''மரண தண்டனைக்கு எதிராகப் பேசியவர்களின் எண்ணிக்கையை ஒரு நடுங்கும் கையின் விரல்களில் எண்ணிவிடலாம்'' என்கிறார் ஒரு பதிப்பாளர்.

68

- ஏப்ரல், 1989

எந்த தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எழுத்தாளர்களிடம் சில பொதுக் குணங்கள் இருப்பதை கவனித்திருக்கிறேன். கர்வம், மற்ற எழுத்தாளர்களைப் பற்றிய கவனக் குறைவு. தன்னுடைய எழுத்தைப் பற்றி கவனக்கூர்மை. அண்மையில் தாமஸ் டிஷ் என்கிற அமெரிக்க எழுத்தாளரை பங்களூரில் கவனித்துக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. இவர் ஒரு விதிவிலக்கு. நிறைய மற்ற எழுத்தாளர்களை, ஆர்த்தி முகர்ஜி உட்படப் படித்திருக்கிறார். டிஷ்ஷை பார்த்தால் எழுத்தாளர் என்று சொல்வதே கஷ்டம். காட்டா குஸ்தி பயில்வான் போல வாட்டசாட்டமாக இருக்கிறார். அத்தனை அகிருதிக்கு மெலிசான குரல். மொத்தம் பதினோரு நாவல்கள், நாலு சிறுகதைத் தொகுப்புகள், நிறைய புத்தக, நாடக விமரிசனங்கள், குழந்தைகளுக்கான கதைகள், அப்புறம் 'அம்னிஸியா' என்று கம்ப்யூட்டருடன் ஒத்துழைப்பு புதுமை நாவல், சின்ன சின்னதாக கவிதைகள்.

கதைகளில் பெரும்பாலானவை 'சயன்ஸ் பிக்ஷன்' வகையைச் சேர்ந்ததால் என்னை பங்களூர் வானொலிக் காரர்கள் பேட்டி காணச் சொன்னார்கள்.

சின்னதாக கேள்விகள் கேட்டுவிட்டு அவரைப் பேசவிட்டு சும்மா இருந்தேன். ஒரே ஒரு இடத்தில் மட்டும் குறுக்கிட வேண்டியிருந்தது.

நான்: ''மிஸ்டர் டிஷ், இந்தியாவில் உங்கள் முதல் அனுபவங்கள் எவ்வாறு இருந்தன?''

அவர் : ''இந்தியாவில் முதன் முதல் என்னைக் கவர்ந்தது பம்பாயில் தெருவில் நான் பார்த்த பசுமாடுதான். போக்குவரத்தைப் பற்றிக் கவலையே படாமல் மெதுவாக மென்று கொண்டு அது நடந்து செல்ல அதைப் பின்தொடர்ந்தேன். ஒரு மார்கெட்டை அணுகியது. அங்கே பார்த்தால் அதன் சகாக்கள் ஒரு மந்தையே இருந்தன. சுதந்திரமாகச் சாப்பிட்டுக்கொண்டு... சாதுவாக... ஆஹா நியுயார்க்கில் இப்படி பசுக்கள் உலவினால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

நான் : ''நிச்சயம் அனுப்புகிறோம்.''

மற்றொரு நிகழ்ச்சியில் ஸல்மான் ருஷ்டியை பற்றி தவிர்க்க முடியாத கேள்வி வந்தபோது தாமஸ் டிஷ்ஷின் பதில் மிகவும் சிந்திக்க வைத்தது.

''எந்த புத்தகமும், அது கொஞ்சமாவது நல்ல புத்தகமாக இருந்தால், யாரையாவது அவமதித்தே தீரும்.''

கண்ணாம்பா விஜயகுமாரி போன்றோரையே இதுவரை திரையில் கண்ணகியாகப் பார்த்து வந்திருக்கிறோம். டான்ஸ் டிராமாக்களில் மாமிகள் கண்ணகியாக சிலம்பை வைத்துக் கொண்டு வேர்த்திருக்கிறார்கள். கற்பின் சிகரம் என்ற பட்டம் வேறு. அதனால் கண்ணகி என்கிற பாத்திரத்தைப் பற்றி என் மனசில் ஒருவிதமான அசெப்டிக் பிம்பம்தான் இருந்தது. அண்மையில் 'பாரத் ஏக் கோஜ்' என்னும் தொ.கா.சீரியலில் பல்லவி ஜோஷி என்னும் இனிய இளம் மராட்டியப் பெண்ணை கண்ணகியாக உலவ விட்டு காவியத்தில் இருந்த யதார்த்த அம்சங்களை வலியுறுத்தி ஒரு வித்தியாசமான

சிலப்பதிகாரத்தைப் பார்க்க வைத்திருந்தார் கோவிந்த் நிஹலானி.

''**யா**ண்டு பல ஆகியும் நரையிலன் ஆகுதல் யாங்கு ஆகியர் என வினவுதிர் ஆயின் மீண்டும் மீண்டும் 'டை' அடிப்பதனால்'' என்று சில தருணங்களில் எழுதத் தோன்றினாலும் புறநானூறு எனக்கு அளவிலாத ஆச்சரியம். ஒவ்வொரு முறை அதை எடுத்துப் படிக்கும்போதும் ஒவ்வொரு விதத்தில் வியப்பு ஏற்படும். புறநானூற்றில் அதிக அளவில் பிரயோகிக்கப்படும் சொற்கள் வேல், யாழ், யானை, களிறு, களம், கடல், உலகம், கழல், அருவி... ஒரே ஒரு முறை உபயோகிக்கப்பட்ட சொல் 'ஐயோ' என்பது வன்பரணர் பாடிய பாட்டில் ஒரு முறை வருகிறது.

''ஐயோ எனில் யான் புலி அஞ்சுவலே''

அந்தக் காலத்திலேயே பூ சுற்றியிருக்கிறார்கள்.

ஆடிஸ்ஸி (Odyssey) என்றால் கிரேக்க வீரன் யுலிஸிஸின் (Ulyssis) விஸ்தாரமான தீரச் செயல்கள் தான் ஞாபகத்துக்கு வரும். தற்காலத்தில் இந்த வார்த்தையை விவஸ்தையில்லாமல் பிரயோகிக்கிறார்கள். பெப்ஸி கோலா (Pepsi Cola) கம்பெனியிலிருந்து ஆப்பிள் கம்பெனிக்குத் தாவி அங்கே தீரச் செயல்கள் புரிந்த ஸ்கல்லி (Sculley) என்பவர் புத்தகம் எழுதியிருக்கிறார். அதற்கு ஆடிஸ்ஸி என்று பெயரிட்டிருக்கிறார். தலைப்பை மன்னித்தால், சுவாரஸ்யமான புத்தகம். அமெரிக்க கார்ப்பரேட் சாம்ராஜ்யத்தின் ராட்சச வியாபார நோக்கில் சில மென்மையான விஷயங்கள் அடிபட்டுப் போகின்றன. 'ஆப்பிள்' கம்பெனியின் நிறுவனர்களில் ஒருவர் ஸ்டீவ் ஜாப்ஸ் (Steve Jobs), கம்ப்யூட்டர் உலகத்தில் புரட்சியை, மனித சரித்திரத்திலேயே ஒரு மாறுதலை ஏற்படுத்திய பிஸி (PC) யுகத்தை தோற்றுவித்தவர். ஸ்கல்லி அந்த கம்பெனியில் புதுசாக சேர்ந்து ஸ்டீவ் ஜாப்ஸை துரத்திவிட்டார்!

69

- ஜூன், 1989

கணையாழியில் ஒரு இதழுக்கு பத்துக் கவிதைகளாவது வெளிவருகின்றன. ஏதோ ஒரு விதத்தில் ஏதோ ஒரு வாசகனை ஏதோ ஒரு கவிதை பாதிக்கும் என்கிற நம்பிக்கையில் தான் இவைகள் பதிப்பிக்கப்படுகின்றன. என்னை பாதிக்கும் கவிதைகள் பாசாங்கு இல்லாமல் இருக்கின்றன. கவிதையின் அநுபவத்தோடு எனக்கு ஒரு இசைவு ஏற்படுகிறது. அந்த எண்ணம் எனக்கும் தோன்றியிருக்கும் போது தான் எனக்கு கவிதை பிடிக்கிறது. 'கவிதை ரசனை என்பதே கண்ணாடியில் பார்த்துக் கொள்வது போலத்தான்' என்று படித்திருக்கிறேன்.

இந்த வகையில் வெளியான 'மழையும் நானும்' என்ற கவிதை (உமாமஹேஸ்வரி)யில் ஒரு வரியைத் தவிர மற்ற எல்லா வரிகளுடனும் என்னால் உடன் வாழ முடிந்தது. இதழைத் தேடிப் பார்த்து அந்த வரி என்ன என்று சொல்பவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் தமிழக லாட்டரி சீட்டு பரிசு,

புவியரசு பற்பல துறைகளில் பழகிவிட்டு அவ்வப்போது சொந்தத் துறையான கவிதைக்கு மீண்டும் வரும்போதெல்லாம் ஒரு கவிதைத் தொகுப்பு வெளியிடுவார். அண்மையில் அவர் வெளியிட்ட 'ஒரு முக்கிய அறிவிப்பு' கவிதைத் தொகுப்பில் வணக்கம் என்கிற கவிதை குறிப்பிடத் தகுந்தது.

"கோவை முகப்பில் உங்களை வரவேற்றும்
வாலாங்குளக் கோட்டை மேட்டுப்
பாலத்து முனையின்
கள்ளுக்கடைக்கு வணக்கம்.
அதன் வாசல் புழுதியில் கருப்பன்
காசு கொண்டு வரக் காத்திருக்கும்

நகரசுத்திப் பெண்ணுக்கும்
கள்ளுக்கடை சாராயக்கடை
வைன்ஷாப் முதலாளிக்கும்
கொடைக்கானலில் படிக்கும் அவர் புதல்வர்க்கும்
அவர்களின் புதிய காண்டெஸ்ஸா கார்களுக்கும் வணக்கம்.''

புவியரசுக்கு கவிதைபோல எனக்கும் தாக்க மூலை இருக்கிறது. நாட்டுப்புறப் பாடல், தஞ்சாவூர் சரபோஜியின் சரசுவதி மகால் நூலகத்து வெளியீடாக 'அருணாசலேசர் மீது வண்ணமும் தாது வருஷத்துக் கரிப்புக் கும்மியும்' என்கிற நூலை எனக்கு அனுப்பிய ஏ.எஸ். பரமசிவனின் அட்ரஸ் தேடிக் கொண்டிருக்கிறேன், நன்றி சொல்ல. தமிழகத்தில் 1876ல் நேர்ந்த தாது வருஷப் பஞ்சத்தை ஒயில் கும்மியாகப் பாடப்பட்டிருக்கிறது.

நாட்டுப்புறப்பாடலின் எளிமையும் நேரான நடையும் சிறக்கும் வரிகள் :-

'உண்ணும் கலங்களை விற்பாரும்
உடமைகளையெல்லாம் விற்பாரும் பெண்டு பிள்ளைகளை
விற்பாரும் வீட்டைப் பிரித்து வைக்கலை விற்பாரும்
தாலியை உருவிவிற்பவரும் காலிலிட்ட உருட்டி முதலாய்
கழட்டிக் கடையில் விற்பவரும்...''

இவ்வாறு ஒரு பஞ்சத்தைப் பற்றி ஆனந்தமாக கும்மியடித்துப்பாடும் இந்தப் பாட்டு தமிழக கலாச்சாரத்திலுள்ள லேசான தன்னிரகத்தைக் காட்டுகிறது.

அண்மையில் தொலைக்காட்சியில் கணவன் மனைவிச் சண்டையில் மனைவிமேல் விஸ்கி கொட்டிப் பற்றவைத்த கணவனைப் பற்றிய ஒரு ஃபோகஸ் நிகழ்ச்சியை நீங்கள் பார்த்தீர்களோ? ஜெயிலில் கணவன், ஆஸ்பத்திரியில் மனைவி, அவள் தாய்-தந்தையர் என்று ஒவ்வொருவராகப் பேட்டி கண்ட அந்த நிகழ்ச்சி ஒரு திரில்லரை விட சுவாரஸ்யமாக இருந்தது. உண்மைக்குத் தான் எத்தனை வடிவங்கள். கண்ணுக்கு முன் மக்கள்

மன்றத்தில் அந்தக் குடும்பம் குற்றம் சாட்டப்பட்டு நாமே நீதிபதியாக தீர்ப்புச் சொல்ல சந்தர்ப்பம் கொடுத்த அந்த நிகழ்ச்சி டி.வி. என்னும் சாதனத்தின் மகா சக்தியை பளிச்சென்று காட்டியது. மிகமிக உருக்கமான நிகழ்ச்சி.

நான் அவ்வப்போது கணையாழி முதலான பத்திரிகைகளில் எழுதிய மரபுவழி செய்யுட்களை காவ்யா டாக்டர் சண்முக சுந்தரம் சேர்த்து வைத்திருந்தார். மெல்ல மெல்ல ஒரு ஒல்லியான தொகுப்பு அளவுக்கு இந்தப் பாடல்கள் வளர்ந்து விட்டதற்கு முக்கிய காரணம் வாசகர்கள் ஆரம்பத்திலேயே என் இந்தப் பழக்கத்தை தடுத்து நிறுத்தாததுதான்.

70

- ஜூலை, 1989

ஒரு வாரம் சிங்கப்பூரில். வேறு நாட்டில் இருக்கிறாற் போலவே தோன்றவில்லை. தமிழர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் பத்து சதத்துக்கு கீழ் இருந்தாலும் நிறைய தமிழர்களை சந்திக்க முடிந்தது. முரசு பத்திரிகையின் ஆசிரியர் வி.டி. அரசு, ஜே.எம். சாலி, சிங்கப்பூர் டெக்னாலஜி நிறுவனத்தை சேர்ந்த ராஜகோபால், கண்ணபிரான் (எழுத்தாளர்), பத்மநாபன் (பொது அறிவிப்பாளார்), உலகநாதன் (கவிஞர்) என்று பலரை சந்தித்தேன். தமிழர்கள் சிறப்பான பதவிகளில் இருக்கிறார்கள். இரண்டு தமிழ் மந்திரிகள். பீப்பிள்ஸ் ஆக்ஷன் பார்ட்டியின் மூத்த தலைவர் ராஜரத்தினம், டாக்டர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள் என்று சிறந்திருக்கிறார்கள். சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்களின் கூட்டத்தை சௌகரியமாக செரங்கூன் ப்ளாஸாவின் மாடியிலேயே வைத்துக் கொண்டார், அரசு. எல்லோரும் ஒவ்வொருத்தராக தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டபின் சம்பிரதாயமாக 'புதுக்கவிதை கவிதையல்ல,' எழுத்தால்

சமுதாயத்தை மாற்ற வேண்டும், போன்ற கருத்துகள் வெளிப்பட்டன. சிங்கப்பூர் தமிழர்களுக்கென்று ஒரு அடையாளம், ஒரு வட்டார தமிழ் வழக்கு இருக்கிறதா என்று கேட்டதற்கு சரியான பதில் கிடைக்கவில்லை. கவிஞர்கள் அனைவரும் மரபு எழுத்து எழுதுகிறார்கள். புலவர் முத்து மாணிக்கம் 'தெய்வத்தமிழ் இசை விருந்து' என்று, 'ராகம் யமுனா கல்யாணி, தாளம் ஆதி, திஸ்ர நடை' என்று பாட்டுகள் நிறைந்த புத்தகத்தை அன்பளிப்பாக கொடுத்தார். நான் பார்த்த ஒரே ஒரு புத்தகக் கடையை ஒரு ஈழத் தமிழர் வைத்திருக்கிறார். பக்திப் புத்தகங்கள்தான் நிறையப் போகின்றன. இங்குமா?

சிங்கப்பூரின் அடிநாதத்தை என்னால் ஒரு வாரத்தில் கண்டுபிடிக்க முடியவில்லை. நவீன ஹைடெக் நகரத்தில் பிரம்படி தண்டனை. முஸ்லீம்களின் சம்பளத்தில் கட்டாயமாக பிடிப்பு மாஸ்க் கூட. அதிகம் பேர் பேசாத மாண்டலின் சைனீஸ் தான் அங்கீகாரம் பெற்ற மொழி, தேசிய கீதம் சிறுபான்மை மலாய் மொழியில். ஒருமைப்பாட்டை அடிக்கடி வலியுறுத்தும் அரசாங்கம். ஹிராயின் கடத்தினால் மரண தண்டனை. பொதுவாகவே சுபிட்சத்தில் ஒரு குற்ற உணர்ச்சி இருப்பதாகப்பட்டது. சூழ்ந்துள்ள நாடுகளில் இத்தனை சுபிட்சம் இல்லாததால், எந்த சந்தர்ப்பத்திலும் விழுங்கப்படலாம் என்று ஒரு இஸ்ரேல் தனமான சூழ்நிலையை விரும்பாமல் தற்காப்புக்காக நிறையவே செலவழிக்கிறார்கள். தமிழர்களை மரியாதையுடன் நடத்துகிறார்கள். பெட்டிக் கடையில் ஆரம்பித்து இன்று ப்ரம்மாண்டமாக பரவியிருக்கும் கல்யாண சுந்தரத்தின் கடை தமிழர்களின் உழைப்புக்கு சாட்சி.

அண்மையில் நான் டி.வி.யில் எதிர்பார்த்து காத்திருந்த சினிமா தேசிய அவார்டு வாங்கின 'பிரவி' என்னும் மலையாளப் படம், ஓஹோ என்று எதிர் நோக்க ரொம்ப ஏமாற்றத்தைத் தந்தது. பாதி படம் இருட்டிலேயே

நடந்தது. ஒரு ஆள் சாப்பிடுகிறார் என்றால் ஒரு கவளம் இரண்டு கவளம் வரை தாங்கலாம். முழுக்க சாப்பிட்டு விட்டு புறங்கையை உள்ளங்கையை நக்கும் வரையா காட்டுவார்கள்? ரியலிஸம் என்றால் இத்தனை ஸ்லோவாக இருக்க வேண்டும் என்று எந்த மடையன் சொன்னான். பஸ் வரக்காத்திருந்தார் தாத்தா என்பதைக் காட்ட இருட்டு தாத்தா, காலியான ரோடு, என்று பதினைந்து நிமிஷமா?

அவார்டு ஃபிலிம்காரர்கள் காதில் பூ சுத்த ஆரம்பித்து விட்டார்கள். ஆதுர் கோபால கிருஷ்ணன் டெக்னிக் இது. மலையாளப் படங்க்ளில் இவ்வாறு எடுத்தால் மலையாளம் தெரியாத ஜட்ஜுகள் உத்தரவாதமாக பரிசு கொடுக்கும் இந்த மோசடியை முதலில் உடைக்க வேண்டும்.

மாறாக அருந்ததிராய் என்கிற இளம்பெண் ஸ்க்ரிப்ட் எழுதி அவளே நடித்து ஒரு வெள்ளிக்கிழமை ராத்திரி காட்டினார்களே, அந்தப் படம் பிரமிக்க வைத்தது. ஆர்க்கிடெக்சர் கடைசி வருஷ மாணவர்களின் கடைசி செமஸ்டரை தினம் தினமாக காட்டிய இந்தப் படத்தில் யோக்கியமும் உண்மையும் இருந்தது. ஒவ்வொரு மாணவ மாணவியும் ஒரு தனித் தீவு. அவர்கள் இந்தி- இங்கிலீஷ் பாஷை பாத்ரூம் ஜோக்குகள் அலட்டிக் கொள்ளாத உடைகளில் அழுக்கு. இந்தப் புதிய தலைமுறையையே படம் பிடித்துக் காட்டிய இந்த திரைப்படத்தில் (பெயர் ரொம் நீளமாக இருந்தது) ரோஷன் சேட் (நேரு) ஒரு ப்ரொபஸராக வேறுவிதமாக நடித்திருந்தார். ரகுவீர் யாதவ் (மாஸி ஸாப்) ஒரே ஒரு காட்சியில் வந்து போகிறார்.

தினமணியில் தொடர்ந்து பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அறிவியல் கட்டுரைகள் எழுதி வந்தேன். சமீபத்தில் அதை சட்டென்று நிறுத்தி விட்டேன். பல காரணங்களில் முக்கியமான காரணம் ஒரு அளவுக்கு மேல் அதிலும் Repetition வந்து விடுகிறது. க்வாண்டம் இயற்பியல் கம்ப்யூட்டர், ஸூப்பர், கண்டக்டிவிட்டி என்று எத்தனை தான் சொல்லிக் கொண்டிருக்க முடியும். அறிவியல்

அளவில் சாகரம் தான். ஆனால் அதை எளிமையாக சொல்வதற்கு ஒரு சில விஷயங்கள் தான் தோதுபடுகின்றன. காஸ்மாலஜியில் நிறைய ரீல் விடலாம். அதேபோல் க்வாண்டம் இயற்பியல் ஏறக்குறைய விசிஷ்டாத்வைதம் போல வந்து விட்டது. ஆனால் 'ஃபைனைட் ஆட்டமேட்டா' பற்றியும் ஆப்பரேடிங் சிஸ்டம்களைப் பற்றியும் கர்மார்க்கரின் லீனியர் ப்ரொக்ராம் பற்றியும் எளிய முறையில் எழுதவே முடியாது. அப்படி எழுதினால் எளிமைப்படுத்தும் முயற்சியில் உண்மை அறிவியல் மழுப்பப்பட்டு விடும்.

இந்தியன் எக்ஸ்பிரஸில் யு.ஆர். அனந்த மூர்த்தி (பிரசித்தி பெற்ற கன்னட நாவலாசிரியர்) எழுதிய 'பேஜிங் டயரி' ஐந்து நாட்களாக வந்தது. அனந்த மூர்த்தி போன்ற இந்திய எழுத்தாளர்கள் பூக்கிங்கில் சரியான சமயத்தில் போய் மாட்டிக் கொண்டார்கள். ஒரு புரட்சியின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் பெரும்பாலும் ஓட்டல் அறையை விட்டு நகராமல் அவ்வப்போது கசியும் செய்தித் துணுக்குகளிலிருந்து உணர்ந்திருக்கிறார்கள். அதை எளிய சிக்கனமான ஆங்கில வாக்கியங்களில் தெளிவாக எழுதியிருந்தால், ஒரு தேர்ந்த எழுத்தாளனுக்கு ஒரு புரட்சியை நாடி பிடித்துப் பார்க்க கொஞ்சம் கொடி காட்டினால் கூடப் போதும்.

71

-ஆகஸ்ட், 1989

'முனைப்பு,' 'திசை நான்கு' என்றெல்லாம் பெயர் கொண்ட சிறு பத்திரிகைகள் இருப்பது உங்களுக்குத் தெரியுமா? முனைப்பு இலங்கையிலிருந்தும் திசை நான்கு கோவையிலிருந்தும் வருகிறது. சிறு பத்திரிகைகள் வடிவமைப்பிலும் விஷயத்திலும் ஆயுளிலும் ஒருவிதமான சமரச நிலைக்கு வந்து விட்டன. வருஷத்திற்கு எத்தனை

பத்திரிகைகள். தோன்றுகின்றனவோ அவ்வளவு நின்று போகின்றன. கவிதைகள், மொழி பெயர்ப்புகள், திட்டுதல்கள், புரியாத சிறு கதைகள் தென் அமெரிக்க எழுத்தாளர்களைப் பற்றி நெருக்கமான குறிப்புகள் கொண்ட கட்டுரைகள் இப்படி எதிர்பார்க்கக் கூடிய புதுமைகள் இருப்பினும் சிறு பத்திரிகைகளில் திடீர் திடீர் என்று சில வரிகள் சொலிக்கும். உதாரணத்துக்கு உமா வரதராஜனின் 'ஏக்கத்துக்குரிய கிராமம்' கவிதையிலிருந்து சில வரிகள் : ஆற்றங்கரையில் ஒரு கோயில். அங்கே சிவனோ விஷ்ணுவோ முருகனோ யாராவது சரி உட்கார்ந்து கொள்ளட்டும் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் அங்கிருந்து மாலை வேளைகளில் நாதஸ்வர ஓசை காற்றோடு கலந்து என் காதுகளுக்கு எட்ட வேண்டும்...' சிறு பத்திரிகைகளுக்கு பெயர் வேண்டாம் என்று தோன்றுகிறது. ஏதோ ஒரு பெயரில் குறைந்த பட்சம் அரை டஜன் சிறு பத்திரிகைகள் வந்து வந்து போய்க் கொண்டிருக்கின்றன. பாரதிதாசன், 'பதிவிரதைக்கு இன்னல் வரும் பழையபடி தீரும்' என்று சொன்னது குறிப்பாக ஞாபகத்துக்கு வருகிறது.

சிறு பத்திரிகைகளுக்கு எதிர்மறைச் சொல் எது? வெகு ஜனப் பத்திரிகையா, ராட்சச விநியோக இதழா? எதுவோ 'குங்குமம்' அவைகளில் ஒன்று. அதில் சில வாரங்களுக்கு கேள்வி-பதில் தருகிறேன் என்று ஒப்புக் கொண்டபின்தான் கேள்வி-பதில் என்பது தமிழ்ச் சமுதாயத்தின் பழக்கங்களில் ஒன்று என்பதை அறிந்தேன்.

மொத்தம் ஒரு நாளைக்கு நூறு கார்டு வந்தாலும் பலர் வாராவாரம் தவறாமல் கார்டு அனுப்புகிறார்கள். நாற்பது சதவிகிதத்தினர் ரப்பர் ஸ்டாம்பு வைத்திருக்கிறார்கள். மதநம்பிக்கை போன்ற ஆர்வத்துடன் சளைக்காமல் கேள்வி அனுப்பிக்கொண்டே இருக்கிறார்கள்.

'அலிகள் ஏன் அலிகளாகப் பிறக்கிறார்கள். விளக்குக...' 'ஒரு ரக்பி ஜோக் ப்ளீஸ்.' 'கோழிப்

பண்ணையில் கம்ப்யூட்டர் உபயோகப்படுமா' இப்படி சகட்டு மேனிக்குக் கேட்டுக் கொண்டே இருக்கும் தமிழ் நாட்டிற்கு பொதுவாக சில கேள்விகள் இருப்பதையும் கவனிக்கிறேன்... 'கலைஞரின் ஆட்சிபற்றி என்ன நினைக்கிறீர்கள்...' 'கலைஞரின் இலக்கிய திறமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்...' 'கதை எழுதுவது எப்படி....' 'உங்கள் முதல் கதை வந்த போது உங்கள் மன நிலை எப்படி இருந்தது...' 'எழுத்தாளர்களால் சமுதாயத்துக்கு என்ன பயன்' இந்த மீடியாக்கர் சாகரத்தின் நடுவில் ஒரு முத்து... தெய்வநாயகம் பிள்ளை சந்து செவ்வாய்ப்பேட்டை சேலத்தை சேர்ந்த தம்பித்துரையுடைய கேள்வி 'போஸ்ட் ஆபீசில் மதியம் 2 மணிக்கு உட்கார்ந்து கொண்டு வேலையில்லாமல் இந்தக் கடிதம் எழுதும் என்னைப்பற்றி?'

எனக்குத் தெரிந்து சரித்திரப் பேராசிரியரின் சிபாரிசில் ஆக்ஸ்போர்டு ப்ரஸ்ஸுக்கு எழுதி கடைசியில் நான் பெற்ற புத்தகம் பர்டன் ஸ்டைனின் 'பெஸண்ட் ஸ்டேட் இன் மெடீவல் ஸௌத் இண்டியா.' (Burton stein - 'peasant state in medieval south India')

ஹவாய் பல்கலைக்கழக சரித்திரப் பேராசிரியராக இருக்கும் ஸ்டைன் சோழர் காலத்துக் கல்வெட்டுகள் செப்பேடுகளிலிருந்து முற்றிலும் புதிய முடிவுகளுக்கு வந்திருக்கிறார். அதே கல்வெட்டுகள் தாம்; செப்பேடுகள் தாம்; ஆனால் முடிவுகள் முற்றிலும் வேறுபட்டவை. சோழப் பேரரசு என்பதெல்லாம் ரீல். நாடு கூற்றம் என்ற பிரிவுகளில் விவசாயிகளும் பிராமணர்களும் ஏறக்குறைய தன்னிச்சையாகப் பரிபாலனம் செலுத்தி வந்த நிலப்பகுதிகளில் இறுக்கமற்ற சேர்க்கைதான் சோழ மண்டலம் முழுவதும். சோழ மன்னர்களுக்கு அவர்கள் ஒன்றும் அப்படியே சரண் அடையவில்லை. திரை செலுத்தினாலும் சுதந்திரமாகத்தான் இருந்தார்கள் என்று ஆணித்தரமாகக் காட்டுகிறார்.

அவர் சொல்வது நிசமென்றால் நாம் இதுவரை சோழ ராஜாக்கள் பற்றி எழுதியிருக்கும் சரித்திரக் கதைகள் அனைத்தும் ரீல். எல்லாம் கான்ஸல்... இந்தப் புத்தகத்தைப் பற்றி நம் தமிழறிஞர்கள் எதுவும் கண்டு கொள்ளாதது வியப்பாகவே இருக்கிறது. ஆழமான ஆராய்ச்சியுள்ள புத்தகம். இதில் இருக்கும் அடிக்குறிப்புகளை நோக்கும்போது கலிபோர்னியா, சிகாகோ போன்ற எத்தனையோ அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் சிலம்பிலிருந்தும் சங்கத்திலிருந்தும் மேற்கோள் காட்டி எத்தனை ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன என்பது வியப்பாக இருக்கிறது. மற்ற பேராசிரியர்கள் உண்மையைத் தேடிக் கொண்டிருக்கும்போது இங்கு ஒரு கோஷ்டி லெமூரியா சரடு விட்டுக் கொண்டிருக்கிறது.

மாலன் 'இந்தியா டுடே'யின் தமிழ் எடிஷனுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் முதலாக அவர் அதன் துணையாசிரியர்களுக்காக ஒரு ஸ்டைல் புக் தயாரித்திருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்காது.

எப்படி சிக்கனமாக எழுத வேண்டும்; எப்படி சொல்ல வந்த செய்தி படிப்பவரைப் போய்ச் சேர வேண்டியது கட்டாயம் என்பதற்குப் பல உதாரணங்களுடன் சுவையாக எழுதியிருக்கிறார். எல்லாம் சரிதான். இதைப் படித்துவிட்டு ஒரு ஆசாமி எழுதும் ஸ்டைலை மாற்றிக் கொள்வானா என்பதில்தான் எனக்குச் சந்தேகம் இருக்கிறது. கண்கள் குளமாவதும் நெஞ்சம் கனப்பதும் நம்மை விட்டு ஒழிய இன்னம் இருபது வருஷமாகும்.

72

-அக்டோபர், 1989.

அண்மைக் காலத்தில் வந்த கவிதைத் தொகுப்புகளில் முக்கியமானதாக த.பழமலையின் 'சனங்களின் கதை'யைச் சொல்வேன். இந்தக் கவிஞரின் கவிதைகளை எனக்கு அறிமுகப்படுத்திய எழுத்தாளர் பாவண்ணனுக்கு நன்றி சொல்ல வேண்டும். சில கவிதைகள் பிரமிக்க வைத்தன. இவைகளை கவிதைகள் என்று கூறுவதில் சிலருக்கு தயக்கம் இருக்கலாம். புதுக்கவிதை என்பதே சற்றே விடுபட்டு எழுதப்பட்ட வரிகளாயினும் ஏதோ ஒரு வடிவத்துக்குள் அகப்படும். ஆனால் பழமலை இன்னமும் வடிவ சுதந்திரங்கள் எடுத்துக் கொண்டு ஏறக்குறைய உரைநடைக்கு மிக அருகே கொண்டு வந்து விடுகிறார்.

இருந்தாலும் இந்தப் புத்தகத்தில் இருப்பவை கவிதைகள் தாம் என்று சொல்வதில் எனக்குத் தயக்கமில்லை.

கவிதைக்கு வடிவத்தைவிட 'இவகேஷன்' சொல்லாமல் விட்ட வரிகளைப் பற்றி சிந்திக்க வைப்பது என்பது முக்கியம். மேலும் தேவைப்பட்ட அளவுக்கு மிக சிக்கனமாக கொடி காட்டிவிட்டு கவிதாநுபவத்தை வாசகனுக்கு விட்டு, அவன் 'ஆஹா' என்று ஒரு படிமத்தையும் தன்னுடைய ஞாபகங்களையும் ஒத்துப் பார்க்கும் ஆனந்தம் நல்ல கவிதைகளுக்கு நிச்சயம் உண்டு. தங்கவேல் பழமலை தன் விழுப்புரம் விருத்தாசலம் சூழ்நிலையில் கிராமத்தை விட்டு விலகாமல் தன் குடும்பத்து மனுசர்களையே பெரும்பாலும் வர்ணிக்கிறார். கோதண்ட மாமா, ஆதிமூலம், அத்தை, கிளியப்பட்டு ஆயி என்று தன்னை சுற்றியுள்ளவர்களையே சித்தரிக்கிறார். அவர்கள் எவரையும் நமக்குத் தெரியாது. ஆனால் நம் வீட்டு கோதண்ட மாமாக்களையும், பாட்டிகளையும் அத்தை களையும் அவர்களில் பார்க்க முடிகிறது.

ஆச்சரியகரமான யதார்த்தம். மேலும் சில வரிகள் இதற்குமேல் செட்டாக இத்தனை விஷயங்களை சொல்ல முடியாது என்கிற அளவுக்கு தீட்டப்பட்ட வரிகள்:-

''வவ்வால் எச்சங்களுடன்
வர்ணங்கள் மணந்த
சிவன் கோயில் திருவாதிரையில்
பவள மல்லி பொறுக்கினாய்''

-போன்ற வரிகளில் ஏறக்குறைய ஒரு ஹைக்குவின் அடர்த்தி கிடைத்து விடுகிறது.

'சுடுகாட்டுக்கு எதிர்க்கரையில்
ஓடைப் பாறையில் வேட்டி துவைத்து
இடுப்பு வேட்டி மேல் இறக்கிய துண்டுடன்
தலைக்கு மேல் கைகளை குவிக்கையில்
வெற்றுச் சூரியனுக்குப் பரிமாணங்கள் கூடும்''

என்று கோதண்டன் மாமாவை வர்ணிக்கிற பழமலை தன் தம்பி மகன் ராசா என்கிற புகழேந்தியின் மரணத்தைப் பற்றி எழுதுகையில் நவீன தமிழ்க் கவிதையின் ஒரு உச்சகட்டத்தை தொடுகிறார்.

அண்மையில் ஜப்பானுக்குப் போயிருந்தேன். ஒரு வாரத்தில் அந்த வேறு உலகத்தில் எனக்கு சுத்தமும் ஒழுங்கும் மூச்சுத் திணறியது. ஜப்பானில் ஜப்பானியர்களைத் தவிர வேறு ஒருவரும் தொடர்ந்து வாசம் பண்ண முடியாது. அங்கு சனநாயகமா இல்லை சர்வாதிகாரமா என்று கண்டு பிடிக்க முடியாதபடி அத்தனை மக்களும் தம்மைத்தாமே கட்டுப்படுத்திக் கொண்டு புன்னகை மிஷன்களாக உலவிவரும் இந்த நாட்டின் முன்னேற்றத்தைப் பார்க்க பயமாக இருக்கிறது.

பன்னிரண்டு கோடி மக்களில் ஒன்றரைக் கோடி தொண்டு கிழவர்களும், கிழவியர்களும் செத்துப் போக மாட்டேன் என்கிறார்கள். இவர்களை பராமரிக்க அரசாங்கம்

திணறுகிறது. சுபிட்சத்தை சமாளிக்கவும் திணறுகிறார்கள். பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் பாத்ரூம்களை அலங்கரிப்பதிலும், பத்தாவது மாடியில் அபத்தமாக வீனஸ் டிமிலோ சிலை அமைப்பதிலும் அமெரிக்க பல்கலைக்கழகங்களை விலைக்கு வாங்குவதிலும், அமெரிக்க கம்பெனிகளில் சிறுபான்மை ஷேர்கள் வாங்குவதிலும் செலவு பண்ணுகிறார்கள்.

ஜப்பானில் நான் இருந்த பத்து நாட்களில் மொத்தம் மூன்று போலீஸ்காரர்களைத்தான் பார்த்தேன்.

திரும்பிய போது சென்னைக்கு வெங்கட்ராமன் வரப்போகிறார் என்று விமான நிலையத்திலிருந்து துவங்கி மவுண்ட் ரோடு வரை மரத்துக்கு மரம் போலீஸ்காரர்கள்.

நடன மலர்

'மினி' பயணம்

ஜப்பானுக்குப் போவதற்கு முன் ஒரு சீக்கியத் தீவிரவாதியிடம் பலியாகும் வாய்ப்பை இழந்தேன்.

என் கதைகளில் கிடைப்பது போல சம்பவங்களை நான் அதிகம் தின வாழ்க்கையில் சந்தித்ததில்லை.

ஜப்பானுக்குப் போக ஏர் இண்டியா தயவில் பம்பாய் சென்ட்டார் ஓட்டலில் தங்கியிருந்தபோது அது நிகழ்ந்தது. ராத்திரி என் அறைக் கதவைக் 'கொர... கொர...' என்று யாரோ திறக்க முயலும் சத்தம் கேட்டது.

உள்ளிருந்தே, 'ஹூ இஸ் இட்...? 'கோன் ஹை...' என்று தைரியமாகப் பல பாஷைகளில் கேட்டுப் பார்த்தேன். பதிலுக்கு இன்னும் கொர... கொர...! கதவை அரைக்கால் இன்ச் திறந்து நோக்கியதில் என் ரத்தம் உறைந்தது. ஒரு முரட்டு சர்தார்ஜி பட்டாபட்டி பைஜாமா போட்டுக் கொண்டு கிருஷ்ணர் போல கொண்டை வைத்துக் கொண்டு என் அறைக் கதவை மும்முரமாக முயன்று கொண்டிருந்தார். நிச்சயம் ஆதங்கவாதி. தாடி மீசை. ''க்யா கர் ரஹே பாய்? செக்யூரிடிகோ, போலிஸ்கோ புலாவுங்கா...'' என்று இடை வெளி வழியாக அதட்டினேன். ''எ மேரா கம்ரா'' என்றார்...

நான் லாபி மானேஜருக்கு போன் செய்து அவர் செக்யூரிடியை கொண்டு வர... சற்று தைரியம் பெற்றுக் கதவைத் திறந்தேன். டுமீல் என்று 'ஏ.கே.-47' ஒலிக்கும் என எதிர்பார்த்தேன். ஊஹூம்! சர்தார்ஜி ஹவாய் சப்பல் போட்டுக் கொண்டு பஞ்சாபியில் பேச, செக்யூரிடியில் அழைத்துக் கொண்டு சென்றார்கள். ஒரு தீவிரவாதி யிடமிருந்து தப்பிய திருப்தியுடன் அறை திரும்ப, லாபி மானேஜர் போன் பண்ணி, "ஸாரி, உங்களுக்குச் சிரமத்துக்கு மன்னிக்கவும்.."

"சர்தார்ஜியை போலீஸில் ஒப்படைத்து விட்டீர் களா...? துப்பாக்கி முதலான சமாசாரங்களை அபகரித் தாயிற்றா...?" என வினவினேன்.

"துப்பாக்கியா...? அவரும் உங்களைப் போல பயணி சார்... ட்ரான்ஸிட் பயணி! அறை எண் 317. உங்கள் அறை 327... அதுதான் குழப்பம்..."

"அப்படியா...! பார்த்தால் அப்படி..."

"இந்த துபாய் பயணிகள் எல்லாம் ஒரு மாதிரிதான் இருப்பார்கள். சில கேரளா கார்ப்பெண்டர்களை நீங்கள் பார்க்கவில்லை! இவராவது காலில் செருப்பு போட்டிருந்தார்..."

பாங்காக் விமான நிலையத்தில் கொஞ்ச நேரம் நின்ற போது, இறங்கிக் காலார நடந்து விட்டு வரலாம் என்று நானும் சக இன்ஜினியர் ஷங்கரும் கிளம்பினோம். அது ராத்திரியா, பகலா...? ட்யூட்டி ஃப்ரீ ஷாப்பில் அழகான பொம்மைகள் வைத்திருந்தார்கள். விலை தான் அழகாக இல்லை. வெளிநாடு செல்பவருக்கு முதல் பாடம். ட்யூட்டி ஃப்ரீ கடையில் எதுவும் வாங்காதீர்கள். முகமூடிக் கொள்ளைக்காரர்கள் ஓய்வு நாட்களில் அங்கே வேலை பார்க்கிறார்கள்.

மற்றொரு உபதேசம்... கைக்கடிகாரத்தை மணி மாற்றாதீர்கள். இரவு பகல் எல்லாம் கலந்துகட்டி ஏதோ

மையமாக இருக்கும். ஹோஸ்டஸ் எழுப்பி ஏதாவது தின்னக் கொடுத்துக் கொண்டே இருப்பார். விதி என்று உண்ண வேண்டும்.

ஹோஸ்டஸை 'இருப்பார்' என்று மரியாதையாக நான் குறிப்பிடக் காரணம் இருக்கிறது. எனக்கு வந்த ஹோஸ்டஸ் ஒரு மாமி. ரிடையராகும் வயசு. ரொம்ப தாய்ப்பாசத்துடன் டவல் எல்லாம் கொடுத்தார்.

கடலைக் கொட்டை கேட்டபோது, ''எக்ஸிகியூடிவ் கிளாஸில் வருபவர்கள் எல்லாம் பாதம் பருப்புதான் கேட்பார்கள்'' என்று என்னைப் பார்த்து நக்கலாகச் சிரித்தார் மாமீ... இருக்கட்டும்!

திருடன்
மொட்டை மாடியில் மறைகிறான்
இரவின் குளிர்...

நாரிட்டா ஏர்போர்ட்டில் இறங்கியபோது காலை... ஜப்பானை ஏரோப்ளேன் ஜன்னலுக்கு வெளியே பார்த்த போது தீவு, மலை, கடல் என்று தெரியாதபடி எல்லாமே பச்சை. நாரிட்டா விமான நிலையத்தில் இமிக்ரேஷன் எட்டு க்யூவில். ஒன்றில் நாங்கள் மூவரும் நிற்க, நான் அந்த க்யூ சின்னதாக இருக்கிறது என்று மற்றதில் போய் நின்றேன். விதி! இமிக்ரேஷன் அதிகாரி ஒரு முறைக்கு மேல் என்னைப் பார்க்காமல், ''எதற்காக ஜப்பானுக்கு வந்திருக்கிறாய்...?'' என்றார்.

'பிஸினஸ் விசிட்...''

'இன்விடேஷன் இருக்கிறதா...? டெலிபோன் நம்பராவது இருக்கிறதா...?''

''நண்பர்களிடம் இருக்கிறது...''

''அவர்கள் எங்கே...?''

''அதோ, அந்த க்யூவில்......'' இல்லை!

அவர்கள் அனுமதிக்கப்பட்டுக் கடந்து விட்டார்கள். ''அங்கே இருக்கிறார்கள்... போய் வாங்கிக் கொண்டு வரவா...?''

''அங்கே போக முடியாது...''

''இன்விடேஷன் அவர்களிடம்தான் இருக்கிறது...''

''ஸாரி, அங்கே போக முடியாது!''

''நான் என்ன செய்ய வேண்டும்...?''

''ஜப்பானுக்குள் நுழைய அனுமதி இல்லை... நெக்ஸ்ட்...''

''ஐ ஸே திஸ் இஸ் ரிடிக்யுலஸ்...''

''நெக்ஸ்ட் ப்ரீஸ்...!''

(ஜப்பானியர்களுக்கு 'ல'வே வராது...'ப்ளீஸ்'ஸுக்குப் பதில் ப்ரீஸ்!)

என்னுடன் வந்திருந்த ஷங்கரும், விங் கமாண்டரும் ஜப்பானிய அரசால் அனுமதிக்கப்பட்டு, அந்தப் பக்கம் சப்பை மூஞ்சிக் கூட்டத்தில்.. எங்கே என்று அவர்களைத் தேடுவது!

எனக்குச் சட்டென்று மற்றொரு உத்தி தோன்றியது. இன்னொரு க்யூவில் போய் நின்றேன். அந்த அதிகாரி கேள்வி கேட்காமல் பாஸ்போர்ட்டையும் விசாவையும் பார்த்துவிட்டு விட்டார்.

முத்திரை குத்துவதற்கு முன் என் கருப்புக் கண்ணாடியைக் கழற்றச் சொல்லி முகத்தைப் பார்த்தார். சொந்த தங்கையை ஒப்படைக்கலாம் போன்ற என் மூஞ்சியைப் பார்த்துவிட்டு, ''வெர்கம்'' என்று உள்ளே அனுமதித்து விட்டார். எனக்கு அப்போதுதான் உறைத்தது - என் கருப்புக் கண்ணாடியில் தான் மிஸ்டேக். முதல் அதிகாரிக்கு நான் ஒரு மாதிரி ஸ்மாக்ளானி போல தெரிந்தது - கருப்புக் கண்ணாடியும் திருத்தப்படாத மீசையும்தான் காரணம்.

வெளிநாடு செல்பவர்களுக்கு மூன்றாம் உபதேசம்- இமிக்ரேஷன் அதிகாரியிடம் கருப்புக் கண்ணாடி அணியாதீர்கள். நண்பர்களை விட்டுப் பிரியாதீர்கள். ஜெயிலுக்குப் போனால் கூடமாட, ரம்மியாட நண்பர்கள் வேண்டும்.

நாரிட்டாவில் எங்களை அழைத்துப்போக நோமுரா என்பவர் வரவேண்டியிருந்தது. சொல்லப்பட்ட நோமுராவை எனக்குத் தெரியும். மூஞ்சி தெளிவாக ஞாபகம் இருந்தது. ஒரே ஒரு சிக்கல். நோமுராவை நான் பார்த்தது பெங்களூரில். இங்கே...?

ஜப்பானில் போகிற வருகிற பேர் எல்லோரும் நோமுரா போல இருந்தார்கள். அதோ நோமுரா, இதோ நோமுரா என்று ஒவ்வொருவரையாகக் கைகுலுக்கப் போய், நிஜ நோமுரா கொஞ்சம் லேட்டாக வந்து ''ரொம்ப ஸாரி'' சொல்லி, சற்றுத் தூரத்தில் நின்று இடுப்பை மடக்கி, ஒரு முறை குனிந்துவிட்டுச் சின்னதாக ஒரு பரிசையும் கொடுத்துப் பழுப்பாகச் சிரித்தார். ஜப்பானில் எல்லோரும் ஒரே ஜாடை; நல்ல மஞ்சள் அல்லது வெளுப்பு. ஆனால், பல் அத்தனைபேருக்கும் பழுப்பு. ஏர்போர்ட் அருகிலேயே இரண்டு, மூன்று மணி நேரம் தங்க ஓர் ஓட்டலுக்குப் போனபோது, ஜப்பான் நாட்டின் முதல் தாக்கம் கிடைத்தது.

ஓட்டல் வாசலில் இரண்டு இளம்பெண்கள் புஷ்பம் போல மேற்குறிப்பிட்ட ஹைக்கூ கவிதை போல சிரித்து, எங்களை நோக்கி 'குடு மார்னிங்' என்று குனிந்து வரவேற்றார்கள். ரொம்ப உற்சாகமாக இருந்தது. அந்தப் பெண்களுக்கு வேறு வேலையே இல்லை! ஓட்டலுக்கு வருகிற எல்லோரையும் அவ்வாறு வணங்கி வரவேற்பதுதான் அவர்கள் உத்தியோகம். சும்மா ஒரு சிரிப்பு, ஒரு அரிகாத்தோ (அரிகாத்தோ என்றால் தாங்க்ஸ்!) அவ்வளவுதான். சிரிப்பதற்குக் காசு கொடுக்கிறார்கள் ஜப்பானில் என்பது புலனாயிற்று.

ரூம் சின்னதாக இருந்தாலும் ஒரு டார்ச், ஒரு கிமோனோ, ஒரு ரப்பர் செருப்பு போன்ற உபயோகமுள்ள வஸ்துகள் வைத்திருந்தார்கள். சின்னதான ஃப்ரிஜ், டி.வி. எல்லாம் உழக்கு சைஸில் இருந்தது. கிமோனோவைக் கடத்தி விடலாம் என்று பார்த்தால், அதன்மேல் 'இது உங்களுக்குப் பிடித்தால் மானேஜரிடம் சொல்லுங்கள். விலைக்குத் தருகிறோம்...' என்று குறிப்பு எழுதியிருந்தது.

ஜப்பானில் பெரும்பாலான ஓட்டல் அறைகள் சின்னதாகவே இருக்கின்றன. பாத்டப், கட்டில் எல்லாம் அவர்கள் சைஸுக்குத் தக்கபடி..

எலெக்ட்ரானிக்ஸ் தொழில் துறையில் மிக உயரத்தில் இருக்கும் சின்ன சைஸ் மனிதர்கள்...

ஓட்டல் அறை டி.வி.யின் ரிமோட் கண்ட்ரோலில் 'பே டி.வி' (Pay TV) என்று ஒரு சிவப்பு பொத்தான் இருந்தது.

மரியாதை செலுத்த விரும்பும்போது
பெற்றோர்
இறந்து விட்டனர்.

- *ஜப்பானியக் கவிதை.*

...அதை அழுத்தினால் சானல் மாறி திரையில் நீலப் படம் வருகிறது. இரண்டு ஜப்பானியப் பெண்கள் கெட்ட காரியம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கண்களை உரித்துப் பார்ப்பதற்கு முன் சட்டென்று அந்தப் படம் கரைந்து 'நீங்கள் மேலும் பார்க்க விரும்பினால் சிவப்பு பொத்தானை மறுபடி அழுத்துங்கள்' என்று கேட்டுக் கொள்கிறது திரை. அழுத்தினால் படம் தொடர்கிறது.

இங்கே அழுத்த அழுத்த ஓட்டல் கம்ப்யூட்டரில் கணக்கு விஷமாக ஏறிக் கொண்டே போகிறது. அதுதான் சோகம்.

இருந்தாலும் இந்த ரிமோட் கண்ட்ரோல். 'பே டி.வி.' கம்ப்யூட்டருக்கு இணைப்பு என்பதெல்லாம் எலக்ட்ரானிக்

ஸின் உன்னத சில்லுகள் கொண்ட சாதனங்கள். இத்தனை டெக்னாலஜியை நீலப் படம் காட்ட பயன்படுத்தும் ஜப்பானின் உள் மனச்சேதம் இதன் ஒட்டுமொத்தமான குணங்களில் ஒன்று. மற்றது எதிலும் பர்ஃபெக்ஷன் அது நீலப் படங்களாக இருந்தாலும் சரி - ஓட்டல் அறைகளில் வெளிப்படையாக ஜன்ய பாகங்களைக் காட்டுவதில் தடை இருக்கிறது போலும். அதனால் மற்றொரு டெக்னாலஜி, படத்தைக் கூர்ந்து கவனித்தால் சுவாரஸ்யமான பாகங்கள் மட்டும் பிடிவாதமாக டிஜிட்டல் மொஸேய்க் (Mosaic) என்கிற முறையைக் கொண்டு மழுப்பி விடுகிறார்கள்... மீண்டும் டெக்னாலஜி!

இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் ஓட்டல் அறையில் தவறாமல் படுக்கையடியில் வைத்திருக்கும் புத்தகம் : 'புத்தரின் உபதேசங்கள்!'

இந்த ஓட்டல் அறை சமாசாரம் ஜப்பான் தேசத்தின் ஒரு பொழிப்புரை என்று சொல்லலாம். முதலில் இடக்குறைவு. அதனால் கச்சிதமான... ஆனால் வசதியுள்ள அறை. கன்னாபின்னா சமாசாரத்துக்கெல்லாம் கூட உன்னதமான டெக்னாலஜி!

தேசிய மதமான பௌத்தத்தைப் பற்றிய அலட்சியப் போக்கு. கிட்ஷ் (Kitsch) என்கிற ஓர் ஆங்கில வார்த்தை இருக்கிறது..., அபத்தமாக செல்வச் சிறப்பைக் காட்டும் உரத்த ஆடம்பரம். தமிழ் சினிமா கதாநாயகன் கனவுக் காட்சியில் தங்கத்தில் கோட்டு போட்டுக் கொண்டு வருகிறானே அது 'கிட்ஷ்!' ஜப்பானில் 'கிட்ஷ்' அதிகம் கட்டடங்களில், டாய்லெட்டுகளில். அநாவசிய சித்திர வேலைப்பாடு. எட்டாம் மாடியில் போலி வீனஸ் டிமிலோ சிலைகள், கேக் வடிவத்தில் கட்டடங்கள் என்று பணத்தை வைத்துக் கொண்டு என்ன பண்ணுவது என்று தெரியாமல் முழிக்கிறார்கள்.

பூமிக்கடியில் பாரல் பாரலாக பெட்ரோல் புதைக் கிறார்கள். அமெரிக்கப் பல்கலைக்கழங்கள் பலவற்றை

விலைக்கு வாங்க முயற்சிக்கிறார்கள்.

ஹாலிவுட் ஸ்டுடியோக்கள், எதிர்காலத் திரைக் கதைகள், கம்ப்யூட்டர் கம்பெனிகள், மைனாரிட்டி ஷேர்கள் வாங்கித் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். சுற்றுலாவில் அதிகப்படியாகச் செலவழிப்பவர்கள் ஜப்பானியர்கள்தாம். ஆனால் ஒரு அட்சரம் இங்கிலீஷ் தெரியாது. ஆங்கிலத்தை வைத்துக்கொண்டு ஜப்பானில் பிழைக்க முடியாது. டாய்லெட் கதவுகளில்கூட ஆண் எது பெண் எது என்று தெரியவில்லை.

ஜப்பானிய மொழியில்தான் எழுதியிருக்கிறார்கள். எல்லா எழுத்தும் பூச்சி பூச்சியாக! இந்த எழுத்துகளை வைத்துக் கொண்டு எப்படித்தான் படித்து பாஸ் பண்ணுகிறார்களோ என்று ஆச்சரியமாக இருக்கும். ஒவ்வோர் எழுத்தும் திருப்பதி பெருமாள் மாதிரி அலங்காரமாக இருக்கிறது!

ஜப்பானிய மொழியின் பட எழுத்துகள் 'ஐடியோ கிராம்' என்று சொல்கிறார்கள். சீனா, கொரியா போன்ற அனைத்து கிழக்காசிய மொழிகள் எல்லாமே சீனத்து 'கான்ஜி' என்கிற எழுத்துகளிலிருந்து வந்தவை. கான்ஜி, சீனாவில் தோன்றியது. கி.மு. 14 ஆம் நூற்றாண்டில் என்கிறார்கள். அது கொரியா வழியாக நான்காம், ஐந்தாம் நூற்றாண்டில் ஜப்பானில் வியாபாரிகள் மூலம் பரவியது. 'கன்பூஷியஸின் பொன்மொழிகள்' முதலில் ஜப்பானில் வந்த புத்தகம்.

கான்ஜி ஒவ்வோர் எழுத்தும் ஒரு பொருளை, ஒரு முழு வார்த்தையைக் குறிக்கின்றன. எகிப்திய ஹிரோக்ளிஃபிக்ஸ் போல் இவை மரம், சூரியன், வீடு... இப்படி எளிய சித்திரங்களிலிருந்து இவ்வெழுத்துகள் புறப்பட்டன. தமிழ் போன்ற மொழிகளில் எழுத்துகளுக்குத் தனி அர்த்தம் கிடையாது. ஆனால், கான்ஜி எழுத்துகள் அனைத்துமே வார்த்தைகள்.

நாளடைவில் இந்த எளிய படங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மசாலா சேர்த்துக் கொண்டு சிக்கலாயின.

குழப்பம் போதாதென்று ஜப்பானியர்கள் 'கான்ஜி எழுத்து நவீன விஷயங்களுக்குத் தடையாக இருக்கிறது' என்று பட எழுத்துகளுடன் சில ஒலியன்களையும் சேர்த்துக் கொண்டார்கள். அவற்றை 'ஹிராகானா காட்டாகானா' (Hiragana Katagana) என்று சொல்கிறார்கள். நவீன ஜப்பானிய மொழிப் பட எழுத்துகள் இருவகை ஒலியன்கள் என்று கலந்து இருக்கின்றன.

இவற்றை மூன்று வகையாக எழுதுகிறார்கள். மேலும் சிலசமயம் மேலிருந்து கீழும், சில சமயம் இடமிருந்து வலமாகவும் எழுதுகிறார்கள்.

ஜப்பானிய பத்திரிகைகள் எல்லாமே கணையாழி போல. கடைசிப் பக்கத்திலிருந்து படிக்கிறார்கள். இத்தனை குழப்பங்கள் இருந்தும் எத்தனை முன்னேற்றம்! 'தமிழிலேயே கற்றுக்கொண்டால் நாம் பின்தங்கிவிடுவோம்' என்று இனி யாராவது சொன்னால், அந்த ஆளை உதையுங்கள்.

ஜப்பானில் நாங்கள் இறங்கிய முற்பகலில் இந்தியத் தூதரகத்துக்குப் போய்விட்டு மாலையே குமோ மோட்டோ என்கிற தீவுக்கு ப்ளேன் மூலம் போனோம். ஜப்பானியர்கள் ப்ளேன் செய்வதில்லை. அது ஒன்றைத்தான் விட்டு வைத்திருக்கிறார்கள். 'போயிங்-767' என்கிற ஏர் பஸ் போன்ற விமானத்தில் இவர்கள் சில புதுமைகளை செய்திருக்கிறார்கள். விமானம் டேக் ஆஃப் செய்யும் போது... அதன் மூக்கில் இருக்கும் வீடியோ காமிராவி லிருந்து தெரியும் காட்சியை காபினுக்குள் டிவியில் போடுகிறார் பைலட். நாமே விமானத்தை ஓட்டுவது போன்ற பிரமை ஏற்படுகிறது.

அது முடிந்ததும் விமானம் சுதாரித்துக் கொண்டு சீராகப் பறந்து கொண்டிருக்க... மூன் ஸீட்டில் சின்னப்

பாப்பா ஒன்று எட்டிப் பார்த்தது. பொம்மைப் போல. என்ன ஒரு வயசு இருக்குமா என்று எண்ணிக் கொண்டிருக்கும் போது, அந்தப் பாப்பா ஓர் ஆச்சரியகரமான காரியம் பண்ணியது. வீட்டுக்கு அருகே இருந்த ஹெட்போனைச் சொருகி காதில் மாட்டிக் கொண்டு தானாகவே கையருகில் இருந்த சானல் ஸ்விட்சை ஒன்றொன்றாகத் திருகி, தனக்கு இஷ்டமான பாட்டைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு சமர்த்தாக உட்கார்ந்தது.

பின்னால் நான் இன்னமும் சானல் ஸ்விட்சை தேடிக் கொண்டிருந்தேன். இந்தக் காட்சி என்னை மிகத் தீவிரமாக சிந்திக்க வைத்தது. நீங்களும் யோசித்துப் பாருங்கள்.

சினிமாஸ்கோப் டெலிவிஷன்!

சின்ன வயசிலிருந்தே டெக்னாலஜியின் அறிமுகம். பரிச்சயம் ஜப்பானியர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. விளையாட்டுப் பொம்மைகள் எல்லாம் ரோபாட்கள். பொம்மை வாட்ச்சுக்குப் பதில் ரேடியோ, வாக்கிடாக்கி!

விமானத்தில் நான் பார்த்த பாப்பா சானல் மாற்றியதில் ஆச்சரியமில்லை... நான் ஒருவாறு ஸ்விட்ச்சைத் தேடிப் பிடித்து 'என்ன ஓடிக் கொண்டிருக்கிறது?' என்று கவனித்தால், ஒரு சானலில் ஆங்கிலப் பாடம். விமானத்தில் போகும்போதுகூட அவர்கள் கற்பதை நிறுத்த விரும்பவில்லை. சொந்த மொழியிலேயே அத்தனையும் கற்றுக் கொண்டாலும், ஆங்கிலம் தெரியாதது ஜப்பானியர் களுக்கு ஒரு குறையாக, தடையாக இருக்கிறதைத் தற்போது உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதும் ஆங்கிலத்தில் சில உச்சரிப்புகள் சுட்டுப் போட்டாலும் வருவதில்லை. உதாரணம், 'ல' உச்சரிப்பு.

'புரட்ரெய்ன்' என்று நோமுரா சொன்னதை புல்லட் ட்ரெயின் என்று புரிந்து கொள்ள ரொம்ப நேரமாச்சு.

விமானத்தில் குமோ மோட்டோ என்கிற தீவுக்குப் போனபோது சாயங்காலம்... ஜன்னல் வழியாகப் பச்சை இல்லாத இடம் ஏதாவது தெரிகிறதா என்று தேடிப் பார்க்க வேண்டியிருந்தது.

ஜப்பானியர்கள் சுற்றுச் சூழலை மிகப் பத்திரமாகப் பாதுகாக்கிறார்கள். காடுகளை வெட்டுவதில் ரொம்பக்

கண்டிப்பாக இருக்கிறார்கள். அவர்கள் வீடு கட்ட மரம் வாங்குவது எல்லாம் அண்டை ஏழை நாடுகளிடமிருந்து. சொந்தக் காடுகளை அழிப்பதில்லை! மலேசியாவிலுள்ள சாரவாக் பிரதேசத்தில் இருக்கும் அருமையான ட்ராப்பிக்கல் காடு இன்று அழிந்து கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம் ஜப்பானியப் பணம் தான்.

மலைச்சாரலில் புல்வெளிகள் பட்டுபோல் இருக்க அதில் பனிச்சறுக்கல் போல புல் சறுக்கல் 'க்ராஸ் ஸ்கியிங்' பழகுகிறார்கள். இங்கே உலவும் காட்டுப் பசுக்களுக்கு முதுகில் ரப்பர் ஸ்டாம்பு குத்தி, அவற்றைச் சுதந்திரமாக மலைச்சாரலில் அலைய விட்டிருக்கிறார்கள்.

ஓய்ந்து போன எரிமலை பச்சைக் கிண்ணி போல் இருக்கிறது. மவுண்ட் ஆஸோ என்கிற உயிருள்ள எரிமலையும், அந்த நாட்டின் அபத்திரத்தை நினைவு படுத்தும் வகையில் புகை கக்கிக் கொண்டிருந்தது. எரிமலை பயமும் பூகம்ப அபாயமும் இருப்பினும், ஜப்பானில் பல அணு உலைகள் இருக்கின்றன. பல மாடிக் கட்டடங்களை அமெரிக்கா போல் இல்லாவிட்டாலும் ஓரளவுக்குக் கட்டியிருக்கிறார்கள்.

பசுமையையும் காடுகளையும் பாதுகாக்க வேண்டி யிருப்பதால், வசிக்கும் இடங்கள் படு டிமாண்டில் இருக்கின்றன. டோக்கியோ நகரத்தில் கையகலகம் நிலத்துக்குப் பத்தாயிரம் டாலரோ என்னவோ அபத்தமான ரேட் சொன்னார்கள். வாங்கும் உத்தேசத்தைக் கைவிட்டு விட்டேன். சிமெட்டரிக்கு, புதைக்கும் இடத்துக்கு லாட்டரி டிக்கெட்டுகள் விற்கிறார்கள்.

இட்ஸுமானியா என்ற இடத்தில் இருந்த ரோபாட்டுத் தொழிற்சாலையில் ஹைடெஃபினிஷன் டெலிவிஷன் என்கிற புதுமாதிரி டெலிவிஷனுக்கு உண்டான பல்புகள் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

பெரிய, மிக நூதனமான இயந்திரங்கள் சினிமாஸ்கோப் போல் அகலத் திரை டெலிவிஷன்... இதைத் தயாரிக்கும்

மிகப் பெரிய இயந்திரங்களை அனுப்புவதற்கு முன் வெள்ளோட்டம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நம் ஊரில் இத்தனை பெரிய இயந்திர அமைப்பு, இத்தனை பெரிய ஹாங்கரில் இருந்தால் குறைந்தபட்சம் முந்நூறு பேராவது வேலை செய்து கொண்டிருப்பார்கள். போதாக்குறைக்கு சூப்பர்வைஸர்கள் பின்கையைக் கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்க, ஆபீஸர்கள் இப்படிச் செய்... அப்படிச் செய்... என்று அதிகாரம் பண்ணிக் கொண்டிருக்க, தர்ம சத்திரம் போல் இருக்கும்.

ஜப்பானில் அந்தத் தொழிற் சாலையில் நான் பார்த்தது மொத்த ஐந்து பேர்! அதில் சூப்பர்வைஸர் யார் என்று கேட்டதில், நான்காவதாகச் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கிறாரே அவராம்... ஓட்டல் வாசலில் சும்மா புன்னகை செய்யப் பெண்களைப் பயன்படுத்தும் அதே தேசத்தில், நுட்பமான தொழில்களைக் கவனிக்க அதிகத் திறமை வேலைகளுக்கு அதிக ஆட்களைப் பயன்படுத்துவ தில்லை.

உற்றுப்பார்த்தால் ஒன்று புரிகிறது. திறமை குறைந்த வேலைகளுக்கு ஆள்காரர்களில் தாராளம். டாக்ஸி கூப்பிட, புன்னகைக்க, ஓட்டல்களில் வெய்ட்ட, ரயில்வே நிலையத்தில் டிக்கெட் செக்க... இது போன்றவற்றுக் கெல்லாம் தாராளம்!

ஆனால், திறன் மிகுந்த வேலைகளில் ஆட்டோமெஷன் அதிகம். காரணம் அவர்கள் விலையைக் கட்டுப்படுத்த விரும்புகிறார்கள். அதுவும் ஏற்றுமதி சம்பந்தப்பட்ட சமாசாரங்கள், கம்ப்யூட்டர்கள், கார்கள் எல்லாவற்றுக்கும் உற்பத்திச் செலவைக் குறைக்க இந்த உத்தி... திறமைக்காரர்களுக்குச் சம்பளம் அதிகம். புன்னகைப் பெண்களுக்கு ஒரு கப் காபியும், ஒரு பதில் புன்னகையும், பட்டைச் சாதமும் போதுமோ என்னவோ...

சர்வீஸஸ் என்று சொல்கிறார்களே.... உள்ளூர் சமாசாரங்கள், மின்வாரியம், பஸ், ரயில் எல்லாமே- அதில்

அத்தனை சிரத்தை இல்லை. சுபிட்சம் சார்ந்த ஏற்றுமதி சம்பந்தப்பட்டவற்றில் சிரத்தையாக உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்தி, லாபத்தை அதிகரிக்கிறார்கள்.

ஜப்பான் தனக்கு வேண்டிய அத்தனை மூலப்பொருள்களையும் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. சொந்தமாக அந்த நாட்டில் கிடைக்கக்கூடியது நிறைய தண்ணீர். அவ்வளவுதான்! ஜப்பான் அதன் எண்ணெய், பெட்ரோல் அனைத்தையும் வெளிநாடுகளிலிருந்து வாங்குகிறது. இரும்பு, கனிமங்கள், அரிசியைத் தவிர அத்தனை உணவும் வெளியே இருந்து வரவேண்டியிருக்கிறது. இருந்தும், உலகின் இரண்டாவது பணக்கார நாடாக இருக்கும் இவர்களின் மொத்த ஜனத்தொகை பன்னிரண்டு கோடி பேர். நம் நாட்டில் ஒரு வருஷத்தில் பிறக்கும் மொத்த மக்கள் தொகை, ஜப்பானில் ஜனத்தொகையைவிட அதிகம். எப்படி இத்தனை சுபிட்சம்? காரணம் - ஜப்பானின் சரித்திரத்திலும் இருக்கிறது. அதைப்பற்றிச் சொல்லுமுன் ஆரம்பத்தில் ஒரு ஹைக்கூ எழுதியிருந்தேனே... ஞாபகம் இருக்கிறதா...? மறுபடி சொல்கிறேன்.

'திருடன்
மொட்டைமாடியில் மறைகிறான்...
இரவின் குளிர்...'

இந்தக் கவிதையை நீங்கள் யோசித்துப் பார்த்தீர்களோ? அது உங்கள் மனத்தில் எந்த வடிவத்தை ஏற்படுத்தியது...? பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த புஸான் (Buson) என்கிற ஜப்பானியக் கவிஞரின் ஹைக்கூ இது. சற்றே உன்னிப்பாகப் பார்க்கலாம்.

மொட்டை மாடியில் ராத்திரி திருடன் வரும் சத்தம் கேட்டு விழித்து எல்லோரும் போய்ப் பார்க்கிறார்கள். அவன் ஓடிப்போய் விடுகிறான். திருடனைப் பார்த்த ஆச்சரியம் கலைந்ததும்தான் இரவின் குளிர்காற்று சில்லென்று உறைக்கிறது. மஃப்ளர் போட்டுக் கொள்ளாமல் ஸ்வெட்டர் அணியாமல் வந்திருக்கிறார்கள்!

ஐந்து வார்த்தைகள் தான்... எத்தனை நினைவுகளை எழுப்புகிறது பாருங்கள் கவிதை...

ஹைக்கூவின் அமைப்பைப் பற்றிச் சொல்லுமுன் இன்னமும் மூன்று ஹைக்கூ கொடுக்கிறேன். இவை எப்படி உங்களைப் பாதிக்கின்றன என்று அனுபவித்துப் பாருங்கள்.

'பார்க்கின் அமைதி...
ஒரு வெண்கல பீரங்கி
காதலர்களை நோக்கி...'

'சின்ன வெண்மையான கோயிலைச்
சுற்றிச் சுற்றி துரத்துகிறான்
பையன் தன் தங்கையை...'

'பல் வைத்தியம்
பண்ணிக் கொள்கையில்
என் நாக்கில் சூரியன்...'

கவிதையின் ஜூம் லென்ஸ் – 'ஹைக்கூ!'

இந்த ஹைக்கூ கவிதைகள் உங்களைப் பாதித்திருக்கும் என்று எண்ணுகிறேன். மூன்று வரிகளில் ஒரு சின்ன பூப்போல் கவிதைகள். உலகின் அத்தனை இலக்கியத்திலும் இந்த ஹைக்கூ வடிவம் இடம்பிடித்து எழுதப்படுகின்றன. 'ஹைக்கூ கிளப்'கள் அமைத்து அடிக்கடி வாசித்துக் காட்டுகிறார்கள். ஹைக்கூவுக்கு என்றே பத்திரிகைகள் இருக்கின்றன.

தமிழிலும் பலர் ஹைக்கூ எழுத முயற்சித்திருக்கிறார்கள். இத்தனை பிரசித்தமான இந்தக் கவிதை வடிவத்தின் அதார சங்கதியைப் பிடித்துப் பார்க்கலாம்.

ஹைக்கூ என்பது ஜப்பானியக் கவிதையின் புராதன வடிவங்களில் ஒன்று. 'ரெங்கா' என்னும் நீண்ட பாடலுக்கு முன்னுரைகளாக முதல் ஹைக்கூ மாட்ஸுவோ போஷோ என்பவரால் *(1644-1694)* எழுதப்பட்டது. அவருடைய,

'பழைய குளம்
தவளை குதிக்க
ஜலத்தில் சத்தம்.'

-என்னும் ஹைக்கூ ஜப்பானிய மொழியிலேயே ஏன், உலகிலேயே மிகப் பிரசித்தமானது. ஹைக்கூ என்ற சிறிய கவிதை சோக்கா என்னும் வடிவத்திலிருந்து பிறந்து தன்கா என்கிற வடிவத்தில் மாறி இன்னும் சின்னதாகிவிட்டது.

ஜப்பானிய மொழிக் கவிதைகள் நம் தமிழில் போல சீர் அடி அளவுகள் இல்லை. அவர்கள் ஒவ்வொரு ஒலியையும் ஓர் எழுத்தாக வடிக்கிறார்கள், பட எழுத்துகளாக. அவற்றை 'ஒன்ஜி' என்கிறார்கள். தமிழில் இதற்கு மிக அருகே ஈடாகச் சொல்லக் கூடியது அசை என்பதே. அதிலும் நேர்அசை என்கிறார்களே அது ஹைக்கூவின் ஒன்ஜிக்குப் பொருந்தி வருகிறது.

புரிந்து கொள்ள ஒரு ஹைக்கூவை ஜப்பானிய வடிவத்திலேயே பார்ப்போம்.

போஷோவின் தவளையை எடுத்துக் கொள்வோம் :-

ஃபுருஇகே யா
கவாஸு தாபிகோமு
மீஜுநோ ஓடோ'

என்பதுதான் அதன் ஒரிஜினல்.

இதன் ஓசையைப் பார்த்தால் அனைத்தும் நேர் அசை சீர்களாக இருப்பதுபுரியும்.

நேர் அசை என்பது என்ன என்று தெரியாதவர்கள் அண்மையில் உள்ள தமிழாசிரியர்களிடம் கேட்டுக் கொள்ளவும். பாடலை ஓசை வடிவப்படுத்தினால் ஐந்து ஏழு ஐந்து ஒற்றை ஒலிகளால் வடிவில் இருப்பது புரியும். இதுதான் ஹைக்கூவின் வடிவு. (ஃபு, ரு, இ, கே, யா என்று தனித்தனியாக ஒலிகளாக வரிகளைப் பிரிக்க வேண்டும்!) வரி என்பது கூடச் சரியல்ல.

ஒவ்வோர் எழுத்தையும் ஒரு கலைப் படைப்பைப் போல அழகாக எழுதுகிறார்கள். ஒவ்வொன்றும் ஒரு ஒலிக்குறிப்பு. பதினேழு ஒலி வடிவங்கள் கொண்டதை மூன்று வரிகளாகப் பிரிப்பது நம் சௌகரியத்துக்காகத்தான். ஜப்பானிய வடிவத்தில் ஒரு ஹைக்கூ கவிதை பதினேழு ஒலிகளைக் கொண்டு சுமார் பன்னிரண்டாவது ஒலிக் குறிப்பில் 'கிரேஜி' என்கிற கருத்தில் ஒரு திருப்பம் தருகிறது. மேலும் சம்பிரதாய ஹைக்கூவில் பருவ காலக்

குறிப்பு ஒன்று இருக்கும். இதை 'கிகோ' என்கிறார்கள்.

சம்பிரதாய வடிவத்திலிருந்து ஹைக்கூவில் பல மாறுதல்கள் வந்துவிட்டன. இருந்தும் அளவில் சிறியதாக இருப்பதும், சுமார் பதினேழு ஒலிக்குறிப்புகள் கொண்டதும், ஒரு கருத்தைச் சொல்லிச் சட்டென்று திருப்புவதும் ஹைக்கூவின் பொது அம்சங்கள் என்று சொல்லலாம்.

ஹைக்கூவின் கவர்ச்சிக்குக் காரணம் அதன் எளிமை, ஹைக்கூ என்பதில் உவமைகளே இருக்காது. சந்திரனைப் போல கண்கள், பவளம் போல உதடுகள் இதெல்லாம் ஹைக்கூ இல்லை! இவையெல்லாம் கவிதையின் நேரடியான அனுபவத்தைக் கலைக்கிறது.

உவமையென்றால் உவமிக்கும் பொருளைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். அதெல்லாம் கிடையாது Haiku happen என்பார்கள். நேரடியாகக் கிடைத்த ஒரு கவிதானுபவத்தை உடனே சிறைப்பிடிக்கும் தன்மை எல்லா ஹைக்கூவிலும் உண்டு. அந்த அனுபவக் கணத்தை அதிகம் வார்த்தை ஜாலமில்லாமல், உவமை ஏதும் இல்லாமல் நேராக வாசகனுக்குக் கடத்தும் முயற்சிதான் ஹைக்கூ.

நம் அன்றாட வாழ்வில் பல்வேறு அற்புதமான கணங்களைச் சந்திக்கிறோம். மிகுதியான உற்சாகம், ஆச்சரியம், சோகம் எல்லாமே சற்றும் எதிர்பாராமல் நம்மைத் தாக்குகின்றன. அந்த உன்னத கணங்களை அப்படியே மிகையின்றி எளிதாகச் சிறைப்படுத்திக் கொண்டு அதை அப்புறம் படிப்பவனுக்குப் பங்கு கொடுப்பதுதான் ஹைக்கூ!

நேரான தெளிவான வரிகள், தெளிவான பிம்பங்களை வாசகன் மனத்தில் ஏற்படுத்தும். ஓர் அனுபவம் தந்த பாதிப்பை, உணர்ச்சியை ஒரு கவிஞன் சிறைப்பிடிக்க முடிந்து... அந்தக் கவிதையை ஒரு வாசகன் படிக்கும்போது அதே அனுபவத்தை அவனால் உணர முடியும்போது ஹைக்கூ நிகழ்கிறது. பூசான் என்பவரின் மிக எளிய ஹைக்கூ

இதற்கு உதாரணம்.

'பியோனி மலர்கள்
உதிர்கின்றன
ஓரிரு இதழ்கள் ஒட்டிக்கொண்டு.'

இந்தக் கவிதையின் எளிய வடிவத்தைப் புரிந்துகொள்ள இலக்கணமோ இலக்கியமோ தேவையில்லை. நீங்கள் எல்லோரும் மலர்கள் உதிர்வதைப் பார்த்திருக்கிறீர்கள். 'பியோனி' என்பது ஜப்பானிய பிரகாசமான வர்ண மலர். கொன்றை மலர்கள், மல்லிகை மலர்கள் உதிர்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். உதிரும்போது ஓரிரு இதழ்கள் ஒட்டிக் கொண்டு உதிர்வதையும் கவனித்திருக்கலாம். அந்த ஞாபகத்தை நேரடியாக உங்கள் மனத்தின் மேல் தளத்துக்குக் கொண்டுவந்து அந்தக் கணத்தின் சத்தியத்தை மறுபடி நிகழ்த்துகிறது இந்தக் கவிதை. அந்தக் கணத்துடன் உங்கள் வாழ்வில் எத்தனையோ சம்பவங்கள் தொடர்ந்து சம்பந்தப் பட்டிருக்கலாம். அவை எல்லாவற்றையும் ஒரு வெள்ளம் போல திரட்டிக் கொண்டு வரும் மூன்று வரிகள்! விஸ்தாரமான உவமை இல்லை; பெரிய பாடலும் இல்லை. கவிதையின் 'ஜூம்லென்ஸ்' என்று ஹைக்கூவைச் சொல்லலாம்.

'சமவெளியில்
பசுவின் உதடுகளில்
புல்லின் ஈரம்'

- இந்தக் கவிதை ஒரு காமிராவின் 'ஜூம்லென்ஸ்' போல புல்வெளியிலிருந்து பசுவின் உதடுகளை 'க்ளோஸப்' காட்டுகிறது.

இந்தச் சிறைப்பிடிப்பின் பின்னால் செய்திகள் இருக்கலாம். முன்பு சொன்ன மலர்க் கவிதையில் பின்புறமாக வாழ்வும் அழிவும் இருப்பதை இன்னும் யோசிப்பவர்கள் உணர்ந்து கொள்ளலாம். ஆனால் இது தேவையில்லை. ஹைக்கூவின் பிரபலத்துக்கு அதன் நேரடி

அநுபவம்தான் காரணம்.

இன்னும் ஓரிரு உதாரணங்கள்...

'வயலருகே
லாரி போக
நெல் அதிர்கிறது.

'தோட்டத்தை விற்றதும்
பறவைகள் கானம்
வேறாக ஒலிக்கிறது.'

'காலியான பீடங்கள்...
சிலைகள் சென்றுவிட்டன
மற்றொரு கண்காட்சிக்கு.'

பல உதாரணங்கள் கொடுக்கலாம். ஆதாரச் செய்தி புரிந்துவிட்டது என எண்ணுகிறேன்.

கலர் கலராக 'மாங்கா!'

''தமிழில் ஹைக்கூ உண்டா?'' என்று பலர் கேட்கிறார்கள். ஹைக்கூ வடிவத்தைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் சி.மணி, அப்துல் ரகுமான். தன் கவிதைத் தொகுப்பு ஒன்றில் ஹைக்கூவைப் பற்றி ஈரோடு தமிழன்பன் ஒரு தெளிவான முன்னுரை எழுதியிருக்கிறார். அறிவுமதி ஹைக்கூ தொகுப்பு ஒன்று வெளியிட்டிருக்கிறார்கள்.

தமிழில் இதுவரை வந்திருக்கும் ஹைக்கூ இருநூறு இருக்கும். அவற்றில் ஆறு அல்லது ஏழுதான் நிஜமான ஹைக்கூ என்று சொல்ல முடியும்.

நிஜமான ஹைக்கூவுக்கு முக்கியம் நேரடியான ஒரு கவிதானுபவத்தைச் சுருக்கமாக, அலங்காரமில்லாமல் சொல்வது சி. மணியின்,

'மூங்கில் நிழல் இரவெல்லாம்
மாடிப்படி பெருக்கிற்று
தூசுகள் அகலவில்லை'

- என்னும் மொழி பெயர்ப்பு நல்ல உதாரணம்.

ஜப்பானில் ஹைக்கூ, கடிதங்களில் எழுதிக் கொள்கிறார்கள். இந்தக் கவிதைகளுக்கென்றே பத்திரிகைகள் இருப்பதையும், சில சீட்டாட்டங்களில் ஒரு சீட்டில் பாதி ஹைக்கூவும், மற்றொரு சீட்டில் மறுபாதியும் பொருத்தும் விளையாட்டுகளும் உண்டாம்.

அழகுணர்ச்சி, கவிதை என்பதுஅவர்கள் ரத்தத்தில் இருக்கிறது. ஜப்பானிய மலர் அலங்காரங்கள், அவர்கள் போன்ஸாய் தோட்டங்கள் எல்லாவற்றிலும் உள்ளது. சம்பிரதாய ஜப்பான், நவீன ஜப்பான் - இதற்கெல்லாம் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இந்தக் காலத்து ஜப்பானிய இளைஞர்கள் கவிதை படிப்பதில்லை. கதைகள் கூடப் படிப்பதிலலை. எல்லாமே காமிக்ஸ்தான்.

'புரட் ட்ரெய்னில்' செல்லும்போது உடன் பயணம் செய்த இளைஞர்கள் அத்தனை பேரும் காமிக்ஸ்தான் வைத்திருந்தார்கள். இந்த காமிக்ஸை 'மாங்கா' என்று சொல்கிறார்கள். ரயில் நிலையங்களிலும், மற்ற பொது இடங்களிலும் அபரிமிதமான கலர் கலராக இந்த மாங்கா இருக்கிறது. எல்லாமே படக்கதைகள். கொஞ்சமே கொஞ்சம் எழுத்து எழுதிப் படம் படமாகக் கதை. எல்லாவற்றிலும் வயலன்ஸ், செக்ஸ்தான் பிரதானம் வகிக்கிறது.

ஜப்பானில் எல்லாவகை டெலிவிஷன் சானல்களும் உள்ளன. நம்மூர் தூர்தர்ஷன் போல அவர்கள் அரசு கார்ப்பரேஷன் மற்றும் பிரைவேட் சானல்கள், ஓட்டல்களில் கிடைக்கும் கேபிள் டி.வியில் 'ஸி.என்.என்' போன்ற சானல்கள். அப்புறம் ஐரோப்பிய 'ஸ்கை' எல்லாம் கிடைக்கிறது. கையில் கண்டதைக் காட்டுகிறார்கள். அதனால் அபத்தமாக அமெரிக்காவில் நார்த் கரோலைனாவில் மழை பெய்யப் போகும் வானிலை அறிக்கையை இவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே வழங்கும் சானல்களில்கூட அமெரிக்காவின் தாக்கம் இருக்கிறது. பேஸ்பால் நிறைய காட்டுகிறார்கள். மேலும் கேம்ஸ் ஷோ, ஸோப் ஆப்பரோ, சீப்பு சோப் விளம்பரம் எல்லாவற்றிலும் அமெரிக்கா சரக்குகளின் ஜாப்பானிய வடிவத்தைத்தான் டி.வி.யில் பார்க்க முடிகிறது. போதாக் குறைக்கு ஜப்பானிய பாப்! அதே வாத்தியங்கள், அதே நடனங்கள், அதே மெட்டுகள்... வார்த்தைகள் மட்டும்தான் ஜப்பான்!

நவீன ஜப்பான் தன் அடையாளத்தை இழந்து கொண்டிருக்கிறது. அவர்கள் சாட்டிலைட் நாகரிகத்துக்கும் முன்னேற்றத்துக்கும் கொடுக்கும் விலை இதுதான் என்று தோன்றுகிறது. ஒருபுறம் சம்பிரதாய ஜப்பானின் மென்மையும், அழகுணர்ச்சியும், கவிதைகளும் கரைந்து கொண்டிருக்க... உரத்த குரலில் பாப் கலாச்சார ஆக்கிரமணத்தை வரிந்து ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஜப்பான் சின்ன நாடு. அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தைவிடச் சின்னது. நம்ம ஆந்திரப் பிரதேசத்தை விடக் கொஞ்சம் பெரிய சைஸ். இருந்தும் இன்று கம்ப்யூட்டர் இயல் கம்யூனிகேஷன், கார்... கப்பல் தயாரிப்பு எல்லாவற்றிலும் அமெரிக்காவை மிஞ்சியிருக்கிறார்கள். உலகத்தின் முதன்மையான பத்து கம்பெனிகளில் ஏழு ஜப்பானிய கம்பெனிகள். அமெரிக்கா இறக்குமதி செய்யும் பல கோடி நூறாயிரம் டாலர்களில் மூன்றில் ஒரு பங்கு ஜப்பானிடமிருந்து. கம்ப்யூட்டர் பிதாமகர்களான ஐபிஎம், க்ரே எல்லாம் இருக்கும் அமெரிக்கத் தேசம் இப்போது அதிகமாக கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட சில்லுகளை - குறிப்பாக ஞாபகச் சில்லுகளை ஜப்பானிலிருந்துதான் வாங்குகிறது.

இந்த அபார வெற்றிக்குக் காரணம் பல பேர் பலது சொல்கிறார்கள்.

நாடே சின்னது. அதில் நிறைய மலை, பன்னிரண்டாயிரத்துச் சொச்சம் அடியுள்ள ப்யுஜி மலையிலிருந்து நாலில் ஒரு பங்கு சமவெளியை விட்டால் மற்றதெல்லாம் மலை. பசுமை தெளிந்த நீரோடும் ஆறுகள். ஜப்பானில் அரிசியையும் தண்ணீரையும் தவிர மற்றதெல்லாம் இறக்குமதிதான் செய்கிறார்கள். வேண்டிய பெட்ரோல் அத்தனையும் வெளிநாட்டிலிருந்துதான் வருகிறது. எல்லா கனிஜங்களும் மீனைத் தவிர, அரிசி தவிர எல்லா உணவுப் பொருட்களும் இறக்குமதி தான். இருந்தும் அவர்கள் உலகின் இரண்டாம் பணக்கார நாடாக

இருப்பதற்குக் காரணம் என்ன? அதன் தீவுத் தன்மைதான்.

விளக்குகிறேன். நிறைய பசுமை. நிறைய தண்ணீர். சின்னச் சின்ன ஆறுகள் அனைத்தையும் ஒரு துளி விரயம் பண்ணாமல் பசுமையான நெல்வயல்களும், கோடையும் மழையும் மக்களின் உழைப்பும் சேர்ந்து உலகிலேயே அதிக உற்பத்தித் திறமை மிகுந்த விவசாயிகள் ஜப்பானியர்கள். நிலத்தில் பாதிக்குமேல் இரண்டும் போகம் விளைச்சல்... அரிசி தானியங்கள், காய்கறிகள் என்று ஒரு இன்ச்சையும் விட்டு வைக்கவில்லை. தீவிர விவசாயத்தினால் அதிக ஜனத் தொகையையும் தாங்க முடிந்தது. மெஸப்பட்டோமியா, சீனா, இந்தியா போன்ற நாடுகளிலெல்லாம் விஸ்தாரமான நதி நாகரிகம் ஒருவாறான கேந்திரக் கட்டுப்பாட்டை வளர்த்தது என்று சொல்கிறார்கள். ஜப்பானின் சிறிய நதித் திட்டங்கள் சின்னச் சின்னக் குழுக்களைக் கொண்ட மாநில ஆட்சிகளாக அவர்கள் ஒன்றி வாழ, சண்டை போடாமல் ஒத்துழைப்பு நாகரிகமாக வளரப் பயன்பட்டது.

கிழக்கோ கிழக்காகத் தள்ளி தனித் தீவாக இருப்பதில் உள்ள சுகம், கஷ்டம் இரண்டும் ஜப்பானில் இருக்கிறது. கிழக்காசிய நாகரிகத்தைச் சேர்ந்ததுதான் ஜப்பான்; சீனாதான் அதன் மையம். கொரியா, வியட்நாம் இவையெல்லாம் இந்த நாகரிகத்தில் அடங்கியுள்ளது. ஆனால், ஜப்பான் கொஞ்சம் தள்ளியிருக்கும் தீவாக இருந்ததால் சீனத்து நாகரிகத்திலிருந்து சீக்கிரமே விடுபட்டுத் தனக்கென்று தனிப்பட்ட பண்பாட்டை வளர்த்துக் கொண்டிருக்கிறது. இதனால் சீன வியூகத்திலிருந்து விடுபட்ட ஜப்பான் அளவுக்கு ஒன்றிய நாகரிக தேசம் வேறு எதுவும் இல்லை என்பார். தனி உடைகள், தனிப்பட்ட உணவு, வீடு... ஏன் பாய்கள்கூட ஜப்பானிய நாகரிகத்துக்கு என்று பிரத்தியேகமானது. அதேபோல் ஜப்பானிய மொழியும் சீன மொழியிலிருந்து புறப்பட்டாலும், அதில் பல சீன மொழி வார்த்தைகள் இருந்தாலும், சீனத்திலிருந்து மிகமிக

வேறுபட்டது. தீவுத்தன்மை, தனி நாகரிகம், ஒற்றுமை, ஒரே மொழி, ஒரே மக்கள் எல்லாம் சேர்ந்த இத்தனை இசைவு, உலகில் எந்த நாட்டிலும் இல்லை.

இதனால் ஜப்பானியர்கள் மிகுந்த தயக்கமும், தன்னுணர்வும் கொண்டிருந்தாலும் 'நேஷன் ஸ்டேட்' என்ற சொல்லுக்கு ஆதர்ச உதாரணம் ஜப்பான். வேறு மொழியே, வேற்றுவகை மக்களே இல்லை. மற்றவர் பற்றி அக்கறையின்றி தம் முன்னேற்றத்திலேயே கவனம் செலுத்த முடிந்தது. இந்தத் தனிமைதான் ஜப்பானின் சிறப்புக்கும் சிறப்பின்மைக்கும் காரணம் என்கிறார்கள்.

இனி திகட்டாமல் இருக்க இரண்டு மூன்று ஹைக்கூ...

'ராஜா சிலையின்
குதிரைக் காலின் கீழ்
இருபது புறாக்கள்.'

- யுகோஸ்லாவிய ஹைக்கூ

'பிக்னிக் மேஜை விரிப்பின்
கறுப்பு சதுரத்துள்
எறும்பு மறைகிறது.'

- கனடா தேசத்துப் ப்ரெஞ்சு ஹைக்கூ

'பிற்பகல் மாடுகள்
படுத்திருக்கின்றன-
கட்-அவுட் நிழலில்.'

- அமெரிக்கா

மனதுக்குள் ஹைக்கூ தோன்றுகிறதா?

ஒரு கார்டில் அதை எழுதி அனுப்புங்கள்.

ஒரிஜினலையே மிஞ்சிவிட்டார்கள்!

வாஸுபாட் என்று ஒரு ரோபாட் இயந்திரம் அண்மையில் ஜப்பானில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் மிகப் பிரபலமாகப் பேசப்பட்டது. டோக்கியோ வஸேடா பல்கலைக்கழகம் இதை வடிவமைத்தது. அந்த ரோபாட் சில வார்த்தைகள் பேசும். தலைக்குப் பதில் ஒற்றை டெலிவிஷன் காமிரா! மிக ஒல்லியான சரீரம். பிரதானமாகப் பத்து விரல்கள் கேபிள் இணைப்புகள் கொண்ட விநோத இயந்திரம்!

இந்த இயந்திரம் என்ன செய்தது? அருகிலிருக்கும் பெண்ணிடம் நீங்கள் ஏதாவது பாட்டின் பெயரைச் சொல்ல வேண்டும். அவள் அந்தப் பாட்டின் ஸ்வரங்களை ஆங்கில ஸ்டாப் நொட்டேஷன் முறையில் எழுதிய காகிதத்தை வாஸுவிடம் காட்டுவாள். அது கொஞ்ச நேரம் தன் டெலிவிஷன் கண்ணால் உற்றுப் பார்த்துத் தன் ஞாபகத்தில் அந்த மெட்டு முழுவதையும் பதித்துக் கொண்டு 'வாசிக்கவா?' என்று கேட்கும். கேட்டு, 'சரி' என்று சொன்னால் ஒரு யமாஹா ஆர்க்கன் கீ போர்டு அருகில் உட்கார்ந்து, தன் விரல்களால் அந்தப் பாட்டு முழுவதையும் இம்மி பிசகாமல் அழகாக வாசித்துக் காட்டும். அவ்வப்போது காலில் பெடலை, மிதித்துப் பாட்டை இன்னும் கொஞ்சம் சத்தமாகவோ இல்லை லேசாகவோ வாசித்து, மெட்டுக்கு ஓர் உயிர் கொடுத்து, மெஷின்தனம் நீக்கி, தேர்ந்த பியாநோக்காரரைவிட நூதனமாக வாசித்துக் காட்டுகிறது. அந்த ரோபாட்டைப் பற்றி ஜோசப் விஸன்பாம் என்கிற கம்ப்யூட்டர் செயற்கை அறிவு நிபுணரிடம் கேட்டபோது, ''அந்த ரோபாட்டுக்கு, தான் பாட்டு

வாசிக்கிறோம் என்று தெரியாது. தெரிந்து கொள்ளும்போதுதான் ஜப்பானியர்கள் வெற்றி பெற்றதாகச் சொல்வேன்...'' என்றார். ஒருவிதத்தில் இது உண்மைதான் என்றாலும், இந்தப் பிரச்சினை பொதுவாகவே செயற்கை அறிவு சம்பந்தப்பட்ட பிரச்சினை ஜப்பானியர்களுக்கென்று தனிப்பட்டதல்ல. ஆனால், இந்தச் சாதனையில் உள்ள சாகசங்களைப் பாருங்கள்... முதலில் கம்ப்யூட்டர் விஷன் காகிதத்தில் எழுதியுள்ள சங்கீத சங்கேதங்களைத் தன் டி.வி. கண்ணால் வருடி, அதன் நோட்டுகளை அர்த்தம் பண்ணிக் கொண்டு ஞாபகத்தில் பதித்துக் கொள்ளும் சாதனை. அப்புறம், சொன்ன பேச்சுக் கேட்கும் வாய்ஸ் ரெகாக்னிஷன். அந்த மெட்டுக்குத் தகுந்தாற்போல் விரல்களை எங்கே பதிக்க வேண்டும், எத்தனை வேகத்தில் பதிக்க வேண்டும், எத்தனை நேரம் பதிக்க வேண்டும் என் ஆணைகளாக மொழி பெயர்த்து வாசிக்கும் திறமை. இதில் கம்ப்யூட்டர், காரெக்டர் ரெகாக்னிஷன், வாய்ஸ் ரெகாக்னிஷன், ஸின்தாஸிஸ் ஹைட்ராலிக்ஸ் என்று பல இயல்கள் ஒத்துழைக்க வேண்டும்.

இந்த இயல்கள் முழுவதும் ஆரம்பித்தது அமெரிக்காவில்தான். ஒரு வார்த்தை இங்கிலீஷ் தெரியாமல், அத்தனை இயல்களையும் சித்தாந்தங்களையும் தம் மொழியில் வாங்கிக் கொண்டு அமெரிக்கர்களைவிட ஒரு படி மேலே போயிருக்கிறார்கள். இதுதான் ஜப்பானின் பிரசித்தி, 'காப்பியடிக்கிறார்கள்' என்று சொன்னது போய் ஒரிஜினலையும் மீறி விட்டார்கள். இத்தனை சுத்தமாக எலெக்ட்ரானிக் சங்கீதம், ரோபாட் இயல், டி.வி., வி.ஸி.ஆர். போன்ற வீட்டுச் சமாசாரங்கள் எல்லாவற்றிலும் குருவை மிஞ்சிய ஏகலைவர்கள் ஆகிவிட்டார்கள்.

பல நூற்றாண்டுகளுக்கு முன், ஐரோப்பியர்களுக்கு ஈடாக இருந்த ஜப்பான், வெள்ளைக்காரர்களை விரட்டி விட்டுத் தன் கதவுகளை மூடிக்கொண்டது. இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் மறுபடி கதவுகளைத் திறந்து

கிழக்கே ஒரு மாபெரும் சக்தியாகி ரஷ்யா, சீனா எல்லோருடனும் சண்டை போட்டு, இரண்டாம் உலகப் போர் காலத்தில் கிழக்கு ஆசியாவையே முழுவதும் ஆக்கிரமித்து அமெரிக்கர்களின் கோபத்துக்குள்ளாகி, உலகிலேயே மிகப் பெரிய பாதகமாகக் கருதப்படும் ஹிரோஷிமா, நாகஸாகி அணுகுண்டு வீச்சுக்குள்ளாகி, இரண்டு லட்சம் பேரை இரண்டு ஆகஸ்ட் திங்களில் பலிகொடுத்து, சரணாகதி பண்ணி யுத்த நாசங்களிலிருந்து மெள்ள எழுந்து அப்போது பட்ட அவமானத்துக்கும், துயரத்துக்கும் நாசூக்காக இப்போது வெள்ளைக் காரர்களைப் பழிவாங்கிக் கொண்டிருக்கிறது ஜப்பான்.

எப்படி...?

டெக்னாலஜி மூலம், அறிவின் மூலம்! காரிலிருந்து கம்ப்யூட்டர் வரை அமெரிக்கர்கள் ஜப்பானியர்களை உதவி கோருகிறார்கள். அடுத்த நூற்றாண்டின் அறிவியல்களான ஸூப்பர் கண்டக்ட்டிவிட்டி, ஸூப்பர் கம்ப்யூட்டர்... இவை இரண்டிலும் ஜப்பான்தான் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

ஒரு யுத்தம் போதும் என்று முடிவு கட்டி மற்றொரு மறைமுக மகா யுத்தத்தை துவங்கியிருக்கிறார்கள். பொருளாதாரச் சக்தி மூலம். கத்தியின்றி ரத்தமின்றி நிஜமாகவே ஒரு யுத்தத்தை நடத்தி வெற்றி பெற்று விட்டார்கள். ஜப்பானில் இன்றைக்கு நடந்து கொண்டிருப்பது ஜனநாயகமா சர்வாதிகாரமா என்று தெரியவில்லை. எல்லாவற்றிலும் ஒரு தன்னொழுக்கம் இருக்கிறது. 'ஸ்மைலிங் மெஷின்ஸ்' என்று அவர்கள் சொல்லிக் கொள்வதில் தயக்கமே இல்லை.

லிஃப்ட்டில் பட்டனை ஒத்தும் பெண்பிள்ளை ஒவ்வொரு மாடியிலும் புன்னகைத்துக் குழந்தைக் குரலில் சந்தோஷத்தோடு நீங்கள் இந்த லிஃப்ட்டில் வந்ததால் அவள் ஜென்மமே சாபல்யம் அடைந்து விட்டது போல் 'இந்த மாடியில் புத்தகங்கள் கிடைக்கும். இந்த மாடியில் வீட்டு

சாமான்கள், இந்த மாடியில் விளையாட்டுச் சாமான்கள்' என்று நான் பூரா சளைக்காமல் அறிவிக்கும் அவளைப் பிரித்துப் பார்த்தால் ஒரு 'சிப்' இருந்தால் ஆச்சரியமில்லை.

பொதுவாகவே எல்லோருமே உள்ளுக்குள் ரோபாட்டுக்களோ என்ற சந்தேகம் அடிக்கடி எழுந்த ஜப்பானில் நான் பார்த்த ஒரேயொரு பிச்சைக்காரர் கம்போடிய அகதி ஒருவர்தான்.

ஜப்பானில் லஞ்ச லாவண்யம் இல்லை என்று சொல்ல முடியாது. நான் போயிருந்த போது ஜப்பானில் பெண்கள் விஷயமாக, லஞ்ச விஷயமாகச் சுமார் மூன்று பிரதமர்கள் சட் சட்டென்று ராஜினாமா செய்து அரசியலில் படுகுழப்பம் இருந்தது. ஆனால், அதன் தினசரி வாழ்க்கையிலோ ஸ்டாக் எக்ஸேஞ்சுகளிலோ எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் சுறுசுறுப்பாக நாடு ஓடிக் கொண்டிருந்தது.

நம்நாட்டில் அரசியல் மற்றும் சினிமா மூலம் தினவாழ்வை மிக மிகப் பாதிக்க வைத்திருக்கிறோம். ஒரு பொதுத் தேர்தல் என்றால் அதற்கு ஒரு மாதம் முன்னரே அரசாங்கம் ஸ்தம்பித்து விடுகிறது. லவுட்ஸ்பீக்கர் அலறலுக்கும், லஞ்சத்துக்கும், காட்டுக் கத்தல்களுக்கும் எத்தனை நாட்கள்! ஜப்பானில் பொதுத் தேர்தலில் எல்லோரும் வோட்டுப் போடுகிறார்கள். போட்டுவிட்டு வீட்டுக்குப் போகாமல் வேலைக்குப் போகிறார்கள். ஒரு நாள் சாயங்காலத்துக்குள் எல்லாம் முடிவடைந்து விடுகிறது.

இங்கு தேர்தல் சின்னங்களைச் சுவர்களிலிருந்து அழிப்பதற்குள் அடுத்த தேர்தல் வந்து விடுகிறது. எல்லா ஃபைல்களும் கிடப்பில் போடப்பட்டு விடுகின்றன. ராஜீவ் காந்தி வந்தால் என்ன.. வி.பி.சிங் வந்தால் என்ன.. இல்லை வெங்கட்ராமன் யாருக்கு என்ன கொடுக்க முடியாமல் திணறினால் என்ன... நம் பள்ளிகளும், ஆலைகளும் பாதிக்கப்படாமல், நம் விமானங்களும் ரயில்களும் நேரத்திற்குப் போய் சேர்ந்து, தின வாழ்க்கை இம்மியளவும்

பாதிக்கப்படாமல் இருக்கும் நிலைமை வர முதலில் நமக்குத் தேவை வேலைகள்! எல்லோருக்கும் வேலைகள்...

ஜப்பானில் பத்து நாட்கள் தங்கிவிட்டு சென்னை வந்த போது கஸ்டம்ஸ் அதிகாரிகளையும், எண்ணெய் போடாமல் முனகும் ஏர்போர்ட் கன்வேயரையும் பார்த்தபோது 'திரும்ப ஜப்பான் போகலாமா?' என்று எனக்குத் தோன்றவில்லை. காரணம் ஜப்பானில் ஜப்பானியர்களால் தான் இருக்க முடியும். இந்திய தேசத்தில் சுபிட்சம், சந்தோஷம் இவற்றுக்கெல்லாம் அர்த்தம் வேறு.

எந்த நாட்டில் மாதம் முப்பது ரூபாய்க்கு வேலைக்காரச் சிறுவன் கிடைப்பான்?

எந்த நாட்டில் நினைத்த மாத்திரத்தில் சுவர்களில் சுதந்திரமாக எழுத முடியும், 'நம்பர் ஒன்' போக முடியும்?

எந்த நாட்டில் லஞ்சத்தால் பெருமாளையே வாங்க முடியும்?

'மேரா பாரத் மஹான்!'

'ஹைக்கூ' கவிதைப் போட்டி

○ மொட்டைமாடி
வற்றல் வடாம்
ஆன்ட்டெனா காக்கை.

- எம். காசிநாதன், தேவகோட்டை.

○ திருடன் வீட்டுக்
கதவில்...
பூட்டு.

- ஆதவன், நாட்டரசன்கோட்டை.

○ குட்டையில் சிறுநீர்
கழிக்கும் சிறுவன்
வானத்தை அசைக்கிறான்!

- வீ. இராஜசேகரன் சேலம்.

○ தொடர்ந்து வீசும்
கடலின் அறைகள்
எல்லாம் புதுசு.

- வி. அருதன்நேரு, நெய்வேலி.

○ கடைசிப் பக்கம்
கிழிந்த நாவலில்
கொலை செய்தது யார்?

- அறந்தை தனசேகரன், அறந்தாங்கி

○ கண்ணகி சிலையின்
கையில் சிலம்பில்
சிலந்தி வலை!

- எம்.கே., சென்னை.

○ புல்லை விட்டு
மரத்தைப் பிடுங்கிச்
செல்லும் புயல்!

- மனுஷ்யபுத்திரன், துவரங்குறிச்சி.

○ வெளியே குளிரில்...
புல்லுக்கு மட்டும்
வியர்த்தது எப்படி?

- டி.விஜிஹா, பழையகாயல்.

○ மண்ணில் அமைத்த
சமாதி
மழையில் கரைகிறது.

இதயகீதா, நாட்டரசன் கோட்டை.

○ பல்லிக்கும் பூச்சிக்கும்
இடையில் இருக்கும்
கண்ணாடி ஜன்னல்!

- ஜே.பி. அன்பு சிவம், அரசூர்.

○ அம்மா இறந்த
அடுத்த வருடம்...
எனக்கொரு தம்பி

எஸ். ஜானி, பொள்ளாச்சி.

○ மண்ணெண்ணெய் விளக்கில்
மாணவன் படிக்கிறான்
கம்பியூட்டர் சயின்ஸ்.

- சு. சுரேஷ், அனந்தபுரம்.

மொத்தம் வந்த நூற்றுக்கணக்கான கவிதைகளில் பத்து, நிஜ ஹைக்கூ என்று சொல்லக்கூடியவை; இரண்டு, அதில் வெளிப்படையாகத் தெரியும் சமூகச் செய்திகளினால் ஹைக்கூ ஆவதில்லை. இருப்பினும் கவிதை. சில ஹைக்கூவை சற்றே வார்த்தை அமைப்பை மாற்றியிருக்கிறேன்.

ஹைக்கூவின் மூன்று முக்கிய குணாதிசயங்களை மறுபடிநினைவுபடுத்துகிறேன்.

1. நேரடி அநுபவம்
2. உவமை உருவகம் கூடாது.
3. மூன்றாவது வரியில் ஒரு திருப்பம்.

வீடு தோறும் தமிழ் கவிதை

இன்றைய தினங்களில் தமிழ் கூறும் நல்லுலகத்தில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் தேசிய விடுமுறை நாட்களிலும் பத்தாயிரம் புதுக்கவிதைகள் எழுதப்படுகின்றன என உத்தரவாதமாகச் சொல்லலாம். ஒவ்வொரு வருஷமும் பதிவாகும் தொள்ளாயிரத்தப்பத்து புத்தகங்களில் சுமார் நூற்றுப்பத்தாவது கவிதைப் புத்தகங்கள் என்று ஒரு தஞ்சாவூர் ஆராய்ச்சியாளர் கணக்குப் போட்டிருக்கிறார். மிச்சம் எண்ணூற்று சொச்சம் புத்தகத்தில் எத்தனை சமையல் குறிப்புகள், எத்தனை பக்திப் புத்தகங்கள், எத்தனை வாழ்க்கையில் முன்னேறுவது அல்லது இங்க் செய்வது எப்படி பற்றிய புத்தகங்கள் என ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா தெரியவில்லை.

ஆனால் நாம் இப்போது பேசப் போவது கவிதை, அதுவும் புதுக்கவிதை. வாரப் பத்திரிகைகள் அனைத்தும் புதுக்கவிதை பிரசுரிக்கின்றன. வண்டிக்காரன் மாட்டை அவிழ்த்து விட்டு தூங்குகிற போட்டோபோட்டு இதற்குக் கவிதை எழுதி அனுப்புங்கள் என்று ஒரு வாரப் பத்திரிகை அறிவித்து வந்த கவிதைகளைச் சமாளிக்க ஒரு டெம்போ வாங்கினதாகச் செய்தி.

கிடைத்த கார்டில், கிடைத்த பென்சிலைக் கொண்டு கவி எழுதும் தமிழ் தேசிய உத்வேகம் உள்ள கவிஞர்கள் சென்னை இருபத்தாறிலிருந்து நாகர்கோயில் வரை பரவியுள்ளார்கள். தீபாவளிப் பட்டாசு, வாழ்வின்

நிலையாமை, ராஜீவ் காந்தி, உள்ள உளைச்சல், காதல், வேலையின்மை, வெயில் எதையும் கவிதைக் கருக்காக அமைப்பதில் விதிவிலக்கிலலை. யார்தான் கவிதை எழுதுவது என்ற விவஸ்தையும் இல்லை. பல் டாக்டர்கள், பணக்காரர்கள், டெலிவிஷன் அறிவிப்பாளர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், பாத்திர வியாபாரிகள், விவசாயிகள், போலீஸ்காரர்கள், பொட்டலம் கட்டுபவர்கள் என்று சர்வ ஜனங்களும் கவிதா தேவியை அதுவும் தீபாவளி, பொங்கல் சமயங்களில் விசேஷமாக அழைத்துப் புதுக்கவிதை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் எக்காரணம் கொண்டும் எழுத ஆயத்தமாக இருக்கிறார்கள். அவர்கள் காதலுக்கு முக்கியமான வெளிப்பாடு பு.க. காரணம். புதுக்கவிதை எழுதுவது சுலபம். மேம்போக்காகப் பார்த்தால் சுலபம். எதுகை மோனை வேண்டாம், யாப்பு வேண்டாம், வரிக் கட்டுப்பாடு வேண்டாம். ஒரு பேனா (அ) பால்பாயிண்ட், கால் காகிதம் போதும். கவிதையுள்ளம்? அது அனைவருக்குமே ஏராளம்.

தமிழர்கள் தொல்காப்பிய காலத்திலிருந்தே எல்லா வற்றையும் கவிதையில்தான் சொல்லி வந்தார்கள். ஆச்சரியமான சங்கப்பாடல்களை விட்டுவிட்டால் மருந்து, ஜோஸ்யம், மாந்திரீகம், பெண்ணுக்குப் பூப்படைந்தால் செய்ய வேண்டிய சடங்கு எல்லாவற்றையும் விருத்தங் களிலும், வெண்பாக்களிலும் தான் பொருத்திக் கொண்டிருந்தார்கள்.

''எருக்கன் இலைச்சாறும் வீழி இலைச்சாறும் இரண்டும் ஒன்றாக விட்டுப் பருப்பை அதில்போட்டு வைத்துப் பத்து நாள் ஊறியெடுத்தரைத்து கடிதாய் இரண்டும் ஒன்றாய்க் கட்டி கஞ்ச கலத்தினில் அப்பி வைத்து வெயில் முகத்திருக்க வைத்து வீழும் தைலத்தைத் தானெடுத்து பைய நிறுத்துக் கொண்டே அதில் பாதிதான் வால் உளுவை அரிசி பொடித்தே-'' இவ்வாறு நொண்டிச் சிந்து வடிவத்தில் செய்த பிழிச்சலை உண்டால் ஏதோ

உடனே எழுந்திருந்து பேசும் என்கிறது சித்தராரூட நொண்டிச்சிந்து.

காளமேகம் போன்றவர்கள்

" ஒன்றிரண்டி மூன்று நான் கைந்தா றேழெட்டு
' ஒன்பது பத்து பதினொன்று பன்னிரண்டு பதிமூன்று
பதினான்கு பதினைந்து பதினாறு பதினேழு பதினெட்டு"

என்று அந்தக் கால 'ஏக் தோ தீன்' பாடினாலும் கவிதை என்பது எழுது தமிழின் சிகர வடிவமாக இருந்தது. உரைநடை ஒருவருக்கொருவர் பேச்சில்தான் இருந்ததே தவிர, இலக்கியத்தில் வளர அச்சியந்திரமும் ஆங்கிலேயர்களும் வரவேண்டியிருந்தது. அதுவரை பிரம்மிக் கல்வெட்டுகளில் ஓரிரு வரிகளும் சங்க இலக்கியங்களில் அடிக் குறிப்புகளிலும் உத்திரமேரூர் போன்ற சோழர் காலக் கல்வெட்டுகளிலும் சிலப்பதிகாரத்திய பாட்டிடையிட்ட உரைநடை, சமய நூல் உரைகாரர்கள் என்று அவ்வப்போதுதான் உரைநடை எழுதப்பட்டது. பதினாறாம் நூற்றாண்டில் ஆண்ட்ரூஸ் என்னும் கத்தோலிக்க சாமியார் அச்சு யந்திரம் கொண்டு வந்த பின்தான் உண்மை உரைநடை பிறந்தது.

ஆனால், கவிதை ஏறக்குறைய இரண்டாயிர வருஷ சரித்திரம் பெற்று எண்ணற்ற கவிதைகளும் வடிவங்களும் கொண்டு துள்ளலும் பழுப்பும் தாமரைகளும் சருகுகளும் கொண்ட ஆற்று வெள்ளம் போல இத்தனை நூற்றாண்டுகள் புரண்டு வந்திருக்கிறது. தமிழரின் மூச்சுக்கு அடுத்தபடியாக கவி எழுதும் பழக்கம் ஏற்பட்டிருந்தாலும் சென்ற நூற்றாண்டின் இறுதி வரை மரபுடன் ஒட்டியிருந்ததால் ஒருவாறு கவி எழுதுபவர்கள் எண்ணிக்கை கட்டுப் பாடாகவே இருந்தது. பாரதி சற்றே அதை எளிமைப் படுத்தினாலும் மரபிலிருந்து அதிகம் விலகவில்லை. தேசிய விஷயங்களைப் பற்றி நேரிசை வெண்பாக்களும் ஜார்

மன்னன் வீழ்ச்சி பற்றி விருத்தங்களும் எழுதினார்.

பாரதியைப் புதுக்கவிதையின் முன்னோடி என்று சொல்ல முடியாது. முப்பது - நாற்பதுகளில் பிச்சமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன் போன்ற ஆதாரமான சிறுகதை எழுத்தாளர்கள் சிறுகதையளவுக்கு நீட்டிச் சொல்ல முடியாத விஷயங்களை, யாப்பைப் பற்றிக் கவலைப்படாமல் நேரடியாக எழுதிப் பார்த்தார்கள். புதுமைப்பித்தன் லேசான தளை மீறிய வெண்பாக்களில்

"அல்வா எனச் சொல்ல
அங்கோடி விட்டாலும்
செல்வாநீ தப்பமுடியாதே - அல்வா
விருது நகர்க்கெடியில்
உன்னுடனே கட்டாயம்
வருதுஎனக் காத்திருப்பேன் நான்!"

என்கிற புதுமைப்பித்தனின் நேரிசை வெண்பா ஒரே ஒரு இடத்தில்தான் தளை தட்டுகிறது. திருநெல்வேலி அல்வா, பப்படத்துக்காரி பார்வதி போன்ற விஷயங்களை எழுதினார்.

இந்த முயற்சிகள் எல்லாம் அன்று அவர்களுக்குள்ளேயே புழங்கிக் கொண்டதால் பண்டிதர்களின் ஆதிக்கத்திலிருந்து கவிதை நாற்பதுகளில் கூட விடுபட்டுவிட்டது என்று சொல்ல முடியாது. ஐம்பதுகளில் பிறந்த 'எழுத்து' பத்திரிகை தான் இந்தப் புதிய சுதந்திரத்தைத் தந்தது என்று அழுத்தமாகச் சொல்லலாம்.

ஆசிரியர் சி.சு.செல்லப்பா, இத்தனை நூற்றாண்டுகளாக யாப்பில் எழுதிக் களைத்துப் போன கவிதை புத்துயிர் பெற யாப்பை உடைத்ததை சி.மணி முதலான இளம் கவிஞர்கள் ஏதோ ஒரு கற்பழிப்பு போல அல்லது புரட்சிகரமான செயல்போல மதித்து தீவிரமாகச் செயல்பட்டார்கள்.

'யாப்புடைத்த கவிதை
அணையுடைத்த காவேரி
யாப்பற்ற கவிதை
இயற்கையெழில் இருக்க
செயற்கையணி எதற்கென்று

உடையுடன் ஒப்பனையும்
நீக்கிவிட்ட கன்னி
கார்குழ லாக மெல்லாம்
கவர்ந்தெழில் கனிய வீங்கி
ஈர்க்கிடை போகலாக
வெதிரெதிர் பனைத்து வீங்கும்
வார்குல மறுத்த
கொம்மை வரிமுலை
ஐயா இது.''

என்று சி.மணி தமிழ் கன்னியை முதலில் துகிலுரிந்து புதிய கதவுகளை ''புலவர் அடைப்ப கவிஞர் திறப்பார்'' என்றார்.

அதன் பின் வெள்ளக் கதவுகள் திறக்கப்பட்டன. சைஸ் சரிப்பட்டு வந்ததால் சின்ன சின்னதாக கையகலத்துக்கு கவிதைத் தொகுப்புகள் போட ஆரம்பித்தார்கள். (அக்காலத்தில் வந்த) 'புள்ளி' என்கிற புத்தகம் கிடைத்தால் 'கலெக்டர்ஸ் ஐட்டம்' கவிதைக்கென்றே பத்திரிகைகள் புறப்பட்டன. கவிஞர்கள் கன்றுக்குட்டிகளையும் பெண்டாட்டி நகைகளையும் விற்று சொந்தச் செலவில் தொகுப்புகள் வெளியிட்டார்கள். முதன் முறையாக வெளிவந்த மேத்தாவின் கண்ணீர்ப்பூக்கள், மீராவின் ஊசிகள், கனவுகள் கற்பனைகள், காகிதங்கள்; அப்துல்ரகுமானின் 'பால் வீதி' போன்ற கவிதைத் தொகுப்புகள் வியாபார ரீதியில் எல்லா காப்பியும் விற்றுப் போய் பல பதிப்புகள் கண்டன. கல்லூரிகளில் மேத்தாவின் சோகப் பெருமூச்சுகள்

பிரபலமாயின. மீராவின் 'ஊசிகள்' மாணவரிடையே நையாண்டி என்னும் ஒரு புதிய ஆயுதத்தைத் தர, கவியரங் கங்களில் உடனே அவை பிரபலமாயின. சமகாலத்தில் வாணியம்பாடியில் அப்துல்ரகுமான் மாணவர்களை காலிப் வகை உருவகக் கவிதைகளிலும் ரிவர்ஸ் மெட்டஃபரிலும் பழக்கினார். கோவையில் புவியரசு, சிற்பி, சக்திக்கனல் போன்றோர் கவிதையை சிவப்பு சிந்தனையில் பாட்டாளிகளின் கேள்விகளுக்குப் பயன்படுத்த, திருநெல்வேலி ஜில்லாக்காரர்கள் கலாப்ரியா, வண்ணதாசன் போன்றோர் புதுக்கவிதையில் காட்சிகளையும் சிறைப்படுத்த முற்பட்டு, விட்டுப்போன சிந்தனைகளை வாசகர்களை நிரப்பச் செய்தார்கள். ஹைக்கூ பாணியை அப்துல் ரகுமான் தான் அறிமுகப்படுத்தினார். 'ழ.' 'கசடதபற' போன்ற இதழ்களில் சென்னை கோஷ்டி சென்டிமென்டை விட்டு சிந்தனை பூர்வமான அழுத்தமான விஷயங்களைச் சொல்ல முற்பட, புதுக்கவிதை உடனே புரியாமல் ஆழ்ந்து சிந்திக்க வைக்கவும், சில சமயம் முற்றிலும் புரியாமல் நழுவவும் ஆரம்பித்தது. தி. கோ. வேணுகோபாலன், ஞானகூத்தன், ஆத்மநாம், விக்கிரமாதித்தன் போன்றோர் இந்த கோஷ்டியில் சேர்ந்தாலும் ஞானக்கூத்தன் இதில் தனிப்பட்டுத் துலங்கினார்.

இப்போது புதுக்கவிதையை சிக்கெனப் பிடித்துக் கொண்டு மரபு எழுதுபவர்கள் அனைவரும் சினிமாவில் ஒதுங்கிவிட, வேலையில்லாத பிராமண இளைஞர்களும் கஞ்சா அடிக்கும் தலைகலைந்த இண்டலெக்சுவல்களும் கோஷ்டி சேர்ந்து வாழ்வின் இருளையும் மருளையும் சிந்திக்கத் தலைப்பட்டார்கள்.

விளைவு - எது கவிதை, எது கவிதையல்ல என்று இனம் பிரிக்க முடியாமல் மூச்சுத் திணறுகிற அளவுக்குச்

கவிதையும், கழிசடைகளும் கலந்து கட்டியாக ஆகஸ்டு மாத காவிரி போல சருகு பூவும் மலரும் மணமும் ஆங்காங்கே தத்தளிக்கும் தாமரையுமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இன்றைக்குப் புதுக்கவிதை சோப்பு விளம்பரத்துக்கும் ஹாஸ்ய துணுக்குக்கும் மிக அருகில் வந்து விட்டது. ''மார்வாடியிடம் நகையை அடகு வைத்தேன். திருப்பிக் கொள்ள முடிந்தது. மார்வாடி மகளிடம் மனதை அடகு வைத்தேன். மூழ்கிப் போய்விட்டது'' என்று மொத்தத்தில் கவிதையை அடகு வைத்தார்கள்.

எஞ்சியிருந்த மரபுக்காரர்களும், ''இலட்சத்தில் ஒருவன் நீ! தமிழில் வல்லான்! நாமகளின் வரம் பெற்றோன்! நடையில் நீயே! கர்ச்சிக்கும் சிம்மம் நீ! காளமேகம் கம்பனும் நீ! கர்ணனும் நீ! காண்போர் உள்ளம் மெச்சுகின்ற பேரறிஞன்!'' என்று சில்லறை மனிதர்களுக்கெல்லாம் சோப்பு சொருகினார்கள். இத்தனைக்கும் நடுவே நல்ல கவிதையை அடையாளம் கண்டுபிடிக்க உத்தரவாதமான வழிகள் பத்து.

1. மரபில் எழுதியிருந்தால் பெரும்பாலும் நீக்கிவிடலாம். சீர், தளை என்று கட்டாயப்படுத்தும் போது கவிதானுபவம் பாதிக்கப்படுகிறது. பாசாங்கு வந்து விடும். விதி விலக்காக மிக மிகச் சில கவிதைகள் மரபில் வரலாம். ஞானகூத்தனின் 'அம்மாவின் பொய்கள்' விருத்த வடிவுள்ளது தற்செயலே. மரபின் நல்ல கவிதைகள் அனைத்தும் எழுதப்பட்டு விட்டன. நற்றிணை (உரையுடன் படிக்கவும்). கம்பராமாயணம், ஆழ்வார் பாடல்கள் (சில நூறு பாடல்கள்), சித்தர் பாடல்கள் (சிவவாக்கியர், பட்டினத்தார், பத்திரகிரியார்) உதாரணம். தற்காலத்தில் மரபு எழுதினால் அது அனக்ரரனிஸம், பாசாங்கு.
2. 'ஓ,' 'அட,' 'என்னே' போன்ற வார்த்தைகள் இருப்பின்

தூக்கி எறியவும். கவிதைக்கு இந்த 'அட,' 'ஓ' வெல்லாம் கிடையாது. வெளிப்படையாகத் தேவையில்லை.

3. இயற்கை வர்ணனை, நிலா, சூரியோதயம், வானத்தின் வர்ணஜாலங்கள் இவைகளை வர்ணித்தால் கவிதைகள் அல்ல. அதுவும் நட்சத்திர இரவை பாட்டாளி வேர்வை, பொத்தல் சட்டை என்றெல்லாம் பாடும் கவிதைகளைத் தடை செய்ய மனுப்போட்டிருக்கிறேன். இந்தப் பாட்டாளி பிஸினஸும் இயற்கை காட்சிகளும் திகட்டத் திகட்ட எழுதியாகி விட்டது.

4. நல்ல கவிதை என்பது குறிஞ்சி மலர் போல ரொம்ப அரிதான விஷயம். நூறு கவிதை படித்தால் நாலு தேறினால் அதிர்ஷ்ட நாள். கடவுள் உலகில் ஒட்டுமொத்தமாக கவிதைக் கணங்களைத் தணிக்கை செய்து வைத்திருக்கிறார் என்கிற ஒரு சித்தாந்தம் உண்டு. அதனால் நல்ல கவிதையை ஒப்புக் கொள்வதில் அவசரப்படாதீர்கள். கவிதை உங்களைப் பாதிக்க வேண்டும். படித்து முடித்தபின் வயிற்றில் ஒரு மாதிரி ஜும்ஜும என்று பண்ணும். அல்லது உங்கள் இதயத்துடிப்பு ஒன்றாவது மிஸ்ஸாகும். அல்லது கவிஞனை நான் நினைச்சதை சொல்லிட்டான்யா என்று வியக்க வைக்கும். ஏதோ ஒரு விதத்தில் முந்தின கணத்திலிருந்து உங்கள் ஜீவிதத்தை மாற்றும். நல்ல கவிதை என்பது ஒருவிதமான சொந்த உன்னதம்.

5. பொங்கல் வாழ்த்து, தேவி மகாத்மியம், நையாண்டி, மியான்தாத் சிக்ஸர் அடித்தது போன்ற தினப்படி விஷயங்களைச் சொல்லுவதெல்லாம் கவிதையல்ல. அரசியல் தலைவர்களுக்கு எழுதப்படும் வாழ்த்தும் இரங்கற்பாக்களும் கியாரண்டியாக கவிதையல்ல. சினிமாப் பாட்டுகளை ஜன்மத்திலும் சேர்க்கக் கூடாது.

அனைத்தும் ராஜவேர்வை.

6. நல்ல கவிதைக்கு பாஷை கிடையாது. காலம் கிடையாது. ஆத்மநாம் என்பவர் சட்டென்று செத்துப் போய்விட்டார். ஆனால், இவர் கவிதைகள் இன்னமும் என்னைப் பாதிக்கின்றன. அவரைச் சந்தித்த ஒரே சந்தர்ப்பத்தை தவற விட்டு விட்டோமே என்று வருத்தமில்லை. அதேபோல் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்று சுருக்கமாகச் சொன்ன கணியன் பூங்குன்றனார் குடுமி வைத்திருந்தாலோ, கடுக்கன் போட்டிருந்தாலோ எனக்குக் கவலையில்லை. 'Our words knew each other. That was enough" என எரிக்கா ஜாங் என்கிற அமெரிக்கா கவிதாயினி, பாப்லோ நெருடாவைப் பற்றிச் சொல்கிறார். ஆத்மநாமோ பூங்குன்றனாரோ... அவர்கள் கவிதைகளுடன் நான் பேச முடிகிறது. அது நல்ல கவிதைக்கு முக்கியம்.

கவிஞன் தனக்குக் கிடைத்த உன்னத கணத்தை உங்களுக்கும் வார்த்தைகளால் அளிக்கிறான். "Since flesh can't stay we pass the words along" பாசாங்கு என்பதே இருக்காது.

7. தமிழில் பசுவய்யா, கலாப்ரியா, வண்ணதாசன், ஞானக்கூத்தன் என்று பல பேர் நல்ல கவிதை எழுதுகிறார்கள் என்று நான் சொன்னதை நம்பாதீர்கள். உங்களுக்கே பிடிப்பான கவிதைகளை நீங்கள்தான் இனம் பிரிக்க வேண்டும். கவிதை என்பது உங்கள் தனிப்பட்ட அனுபவம். எல்லா நல்ல கவிதைகளும் பொதுவான அம்சம் உண்மை. "What the imagination seizes as beauty must be truth" என்று கீட்ஸ் சொல்லும் உண்மை.

8. நாட்டுப் பாடல்கள் பலவற்றில் கவிதை உண்டு. ஆனால், நாட்டுப் பாடல்களில் ரொம்ப போலி உண்டு.

காரணம் சினிமா. 'தண்ணி கருத்திருச்சு' என்கிற ஒரு வரி தான் நாட்டுப்பாடல். மற்றதெல்லாம் நோட்டுப் பாடல். கலப்படமில்லாத நாட்டுப் பாடல்களை அன்னகாமு, வானமாமலை, ஆறு. அழகப்பனின் தாலாட்டுகள், சில ஒப்பாரிகள், மார்கழி மாசம் திருவிழாக்களில் கொக்கோக புஸ்தகங்களுக்கு இடையில் வைத்திருக்கும் லாவணிப் பாட்டுகள் என்று தேடிப் பிடித்துப் படிக்க வேண்டும். நல்ல கவிதையை நீங்கள் தேட வேண்டும். அது உங்களைத் தேடி வருவது அரிது.

9. புத்திசாலித்தனமான வரிகளைக் கவிதை என்று குழப்பாதீர்கள். 'நள்ளிரவில் வாங்கினோம் இன்னும் விடியவில்லை' என்பதெல்லாம் புத்திசாலித்தனமான வரிகள்.

10. நல்ல கவிதை எழுத உங்களுக்கு உத்தேசமிருந்தால் முதலில் நல்ல கவிதையைப் படித்துப் பாருங்கள். நீங்கள் சொல்ல வந்ததை மற்றொரு பட்சி சிறப்பாகவே சொல்லியிருக்க சந்தர்ப்பம் உள்ளது. ஆகவே யோசனையைக் கைவிடுவது பெரும்பாலும் உத்தமம்.

கீழ்க்காணும் கவிதை என்னைக் கவர்ந்தது.உங்களை?

"வேட்டையாடத்தான் வந்தேன்
வேட்டைக்கலையின் சாகச நுட்பங்களை
தாய்ப்பாலில் உறிஞ்சத் தொடங்கினேன்
பின் வில் வித்தை
பின் வாள் வீச்சு
பின் குதிரை ஏற்றம்
பின் மற்போர்

நாளை நாளை என வேட்டை பின்னகர
ஆயத்தங்களில் கழிந்தது என் காலம்...
திறந்த வைத்த கற்பூரம் போல
ஆயுளின் கடைசித் தேசல் இப்போது...
இனி ஆயத்தங்களைத் தின்று சாகும் என்
முதுமை...
பின்னும் உயிர் வாழும் கானல்..."

'காலச்சுவடு' ஜூலை 1989 இதழில் பசுவய்யாவின் இந்தக் கவிதையில் சொல்லப்படும் வேட்டையும் வித்தைகளும் என்ன என்று யோசித்துப் பாருங்கள். குட்லக்.

பாரதியின் சுயசரிதை

பாரதியைப் பற்றிய நூல்கள் 1980 வரை கணக்கிட்டபடி முன்னூற்று எழுபது இருக்கின்றன. இவைகளில் யாராவது அவருடைய சுய சரிதையை சற்று ஆழமாகப் பார்த்திருக்கிறார்களா? சுயசரிதை என்று கவிதையில் எழுதப் போந்ததே ரொம்ப தைரியமான காரியம். அதுவே தமிழுக்கு மிகப்புதுசு. பாரதியாரின் சுயசரிதை கவிதை வெளிவந்த வருஷம் 1910. 'மாதா வாசகம்' என்ற புத்தகத்தில் முதன் முதல் வெளியாகியிருக்கிறது. 'ஸ்வசரிதை-கனவு.' என்கிற தலைப்பில். எனவே சுயசரிதையை 1910க்கு முன்தான் எழுதியிருக்கிறார். அந்தக்கவிதையில் சொல்லும் சொந்த விஷயங்கள் பிள்ளைக் காதல், ஆங்கிலப் பயிற்சி, திருமணம், தந்தையின் வறுமை, தந்தையின் மரணம். தந்தையின் மரணத்தைப்பற்றிப் பேசும்போது :-

"தந்தை போயினன் பாழ்மிடி சூழ்ந்தது
தரணி மீதில் அஞ்சலென் பாரிலர்
சிந்தையில் தெளிவில்லை உடலினில்
திறனுமில்லை உரனுளத்தில்லையால்
மந்தர்பாற் பொருள் போக்கிப் பயின்றதாம்
மடமைக் கல்வியால் மண்ணும் பயனிலை
எந்த மார்க்கமும் தோற்றிலதென் செய்கேன்
ஏன் பிறந்தனன் இத்துயர் நாட்டினில்?"

இவ்வாறு வேகமும் சோகமும் பொங்க எழுதியிருக்கும் வரிகளைப் படிக்கையில் பாரதி சுயசரிதையை அவர் தந்தை இறந்து போன 1898ஆம் ஆண்டிலேயே எழுதியிருப்பாரோ என்று தோன்றுகிறது. துக்கத்தின் அவசரம் ஆவேசம் வரிகளில் தெரிகிறது. 1898ல் அவருக்கு வயது பதினாறு. சுயசரிதையின் மற்றப் பகுதிகளைப் படிக்கும்போது தென்படும் முதிர்ச்சியும் காளிதாஸன் பாஸ்கரன் போன்ற சம்ஸ்கிருத ஆசிரியர்களின் நூல்களைப் பற்றி குறிப்பிடுவதாலும் 'ஸ்வசரிதை'யை அவர் காசிக்குச் சென்று கற்றுவந்த பின்னே எழுதியிருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. எப்படியும் அதுமுதலில் பிரசுரமானது 1910ல் தான்.

பாரதி கவிதைகளின் தொகுப்புகளில் சுயசரிதை என்கிற பொதுத் தலைப்பின் கீழ் 'கனவு' என்கிற கவிதையும், அதைத் தொடர்ந்து 'பாரதி அறுபத்தாறு' என்ற பகுதியில் பொது விஷயங்களைப் பற்றிச் சொல்லும் பாடல்களும் இடம் பெற்றிருக்கின்றன. இதன் காரணம் புரியவில்லை. 'பாரதிஅறுபத்தா'றில் மரணத்தை வெல்லும் வழி, (அச்சத்தை வேட்கைதனை அழித்துவிட்டால் அப்போது சாவுமங்கே அழிந்து போகும்) கடவுள் எங்கே இருக்கிறார்? (கூளத்தை மலத்தினையும் வணங்கல் வேண்டும் கூடி நின்ற பொருளனைத்தின் கூட்டம் தெய்வம்) மற்றும் குள்ளச்சாமி, கோவிந்த சுவாமி, மாங்கொட்டை சுவாமி, யாழ்ப்பாணத்துச் சாமி என்று பலவிதமான குருக்களை சிலாகித்துப் பேசும் பாடல்கள், பெண்விடுதலை, தாய்மாண்பு, காதலின் புகழ் (ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே) விடுதலைக் காதல் (ஆண்களைச் சாடும் 'உமன்ஸ் லிப்' வரிகள்) இப்படிக் கலந்து கட்டியாக இருக்கிறது. இது எப்படி சுயசரிதை என்பது புரியவில்லை. 1910ஆம் வருஷப் பதிப்பில் இந்தப் பாடல்கள் அனைத்தும் வெளியாயினவா என்று சந்தேகமாக இருக்கிறது. சுயசரிதை - கனவுடன் அந்தப் புத்தகத்தில் பதினொரு பாடல்கள் இருந்ததாகத் தெரிகிறது. இந்தப்

புத்தகம் பாரதியின் மூன்றாம் கீத நூல் என்று குறிப்பிடப்பட்டு தென்னாப்பிரிக்காவில் அச்சிடப் பட்டதாகவும் ஒரு செய்தி இருக்கிறது. (கீதம்)'கனவு' என்கிற கவிதை மட்டும் ஒரு தனி நூலாக வெளியிடப்பட்டதாகவும் அதனுடன் 'ஆறில் ஒரு பங்கு' என்கிற சிறுகதையும் வெளிவந்ததாகவும் 1911ஆம் ஆண்டு சர்க்கார் குறிப்பு ஒன்று கூறுகிறது. இந்த இரண்டு நூல்களையும் பிரிட்டிஷ் அரசு தடை செய்து விட்டது. 1912ஆம் வருஷம் அக்டோபர் எட்டாம் தேதி பாரதி இது குறித்து ஹிந்துவுக்கு ஆசிரியர் கடிதம் எழுதியிருக்கிறார்:

I demand justice not in my own interest so much for these books mean nothing to me from the point of view of money and fame - as in the interest of what little of freedom of the pen is left to us in British India. If you proscrible love poems and social interest stories on the ground that they issue from the pen of a suspected person you greatly exceed your limits.

1913 ஆம் வருஷம் வரை தடை நீக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 1913 ஆம் வருஷம் பாரதியின் டயரி குறிப்பொன்று தடை இன்னும் நீக்கப்படாததைப்பற்றி பேசுகிறது. (ஏதாவது செய்ய வேண்டும்.)

சுயசரிதை என்று பாரதி ஒரிஜினலாக குறிப்பிட்டது அவரது 'கனவு' என்கிற கவிதையைத்தான் என்று தோன்றுகிறது. இதை சர்க்கார் தடை செய்த காரணம் புரியவில்லை. ஒரு வேளை ஆங்கிலக் கல்வியை ஒரு பகுதியில் காட்டமாகச் சாடுவது காரணமாக இருக்கலாம்.

இப்போது 'கனவு' என்கிற கவிதையைப் பார்ப்போம். 'பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்லப் போனதுவே' என்ற பட்டினத்தார் வரியின் முன்னுரையே கவிதையின் ஏக்கத்தையும், சோகத்தையும் நோக்கமாக நிலை நாட்டி விடுகிறது. வாழ்வு 'முற்றும் கனவு' என்றுதான் தொடங்குகிறார். (தலைப்பின் காரணம்?)

சின்ன வயசில் அப்பாவுக்கு ரொம்ப பயந்திருக்கிறார். ரொம்ப தனியாக இருந்திருக்கிறார்.

"தந்தை விதிப்பினும் கஞ்சியான்
வீதியாட்டங்கள் எதிலும் கூடிலன்
தனியனாய் தோழமை பிறிதின்றி வருந்தினேன்"

அப்போது உற்ற பிள்ளைக் காதலைப்பற்றி பேசும்போது கொஞ்சம் நெகிழ்கிறார். அதையும் கனவு என்றுதான் சொன்னாலும் சின்னவயதில் காதலித்த பெண்ணை வருணிக்கும்போது கனவு என்று நினைக்கத் தோன்றவில்லை.

அவளுக்கு ஒன்பது வயசு. அவர் கண்ணுக்கு சகுந்தலை போல இருந்தாளாம். "ஒன்பதுவயசு என்பது எவர்க்கும் வியப்பாக இருக்கும். என்ன செய்வது? என் மேல் தப்பு. அன்பெனும் பெருவெள்ளம் என்னை இழுத்தால் பிழைக்க முடியுமா? ஆனானப்பட்ட முனிவர்களையே வென்ற வில்லுக்கு முன் ஏழைக் குழந்தை என்ன செய்வேன்?"

"சின்ன மான்போல இருந்தாள். காமன் அம்புகள் என் உயிரைக் கண்டன. குமரகுருபரன், ஞானசம்பந்தன், துருவன் போன்ற பாலகர்கள் கடவுளர் மீதுதான் பக்தி கொண்டனர். நானோ சின்னவனாக இருக்கும் போது 'மதன தேவனுக்கு என்னுயிர் நல்கினன்.' அவர்கள் தான் புகழ் பெற்றனர். நான் பெற்றதை அப்புறம் சொல்கிறேன். அவள் தண்ணீர் எடுத்து வருவாள். புன்னகை சுடர் வீசிச் செல்லும் வேளை தினந்தோறும் காத்திருந்து அவள் போகிற வழி முற்றிலும் கண்களால் பின்னழகைக் கவனித்து அதிலேயே நாட்களைக் கழித்தேன். எப்போதாவது வதனம் திரும்பினால் 'புலனழிந்து புத்துயிர்' எய்துவேன். இப்படிப் பார்ப்பது விலங்கியற்கை. என்ன செய்வது? 'விலங்கியற்கை இலையெனில் யாமெலாம் விரும்பு மட்டில் விண்ணுறலாகுமே.' கானகத்துப் பறவைகள் போலவும் வானகத்து இயக்கர் இயங்கிகள் போலவும் அந்தப்

பெண்ணுடன் 'தெய்வ நாட்கள் சில கழித்தேன்.'' ஒரு நாள் அவளைச் சந்தித்ததை மிக அழகாகச் சொல்கிறார்-

''ஆதிரைத் திருநாள் ஒன்றில் சங்கரன்
ஆலயத்து ஒரு மண்டபந் தன்னில்யான்
சோதி மானொடு தன்னந் தனியாய்ச்
சொற்கள் ஆடி யிருப்ப,மற் றாங்கவள்
பாதி பேசி மறைந்துபின் தோன்றித்தன்
பங்கயக் கையில் கைகொணர்ந்தே, 'ஒரு
சேதி! நெற்றியில் பொட்டுவைப் பேன்' என்றனள்;
திலக மிட்டனள்; செய்கை அழிந்தனன்!''

இவ்வளவு விவரமாக வர்ணிக்கப்படும் காதல், கனவு என்றோ கற்பனை என்றோ கூற முடியவில்லை. இந்தக் காதல் என்ன ஆயிற்று?

தந்தையார் நெல்லைக்குச் சென்று கல்வி பயில் என்று அனுப்பி விட்டார். அந்தக் கல்வி அவருக்குப் பிடிக்கவே இல்லை. 'சிங்கக்குட்டியைப் புல் தின்னச் சொன்னது போலவும், பார்ப்பானை வாணிகம் செய்யச் சொன்னது போலவும் அருவருப்பாக இருந்தது.' ஆங்கிலக் கல்வியில் அவருக்கு ஈடுபாடே இல்லை. இவர்கள் எல்லாம் பன்னிரண்டாண்டு கணிதம் பயில்வார்கள். வானத்தில் ஒரு நட்சத்திரத்தின் நிலை தெரியாது. ஆயிரம் காவியங்கள் கற்பார்கள். ஆனால் கவியுள்ளம் என்பதைத் தெரியாதவர்.

'கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும், காளிதாசன் கவிதை புனைந்ததும் உம்பர் வானத்துக் கோளையும் மீனையும் ஓர்ந்து அளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்... சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும், தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும், - இந்த ஆங்கிலம் படிப்பவர்களுக்கு என்ன தெரியும்? என் தந்தை, எனக்கு நல்லது செய்யத் தான் அனுப்பி வைத்தார். ஆனால் அது 'ஏதிலார் தரும் கல்விப் படுகுழி.' இதனால் அப்பாவுக்குச் செலவு ஆயிரம். எனக்கு தீது பல்லாயிரம். எந்தவித நலமும் ஏற்படவில்லை என்பதை

நாற்பதாயிரம் கோவிலில் சொல்வேன். ஏதோ பூர்வ சன்ம புண்ணியத்தாலும் பாரத அன்னையின் அருளாலும் அந்த இருட்டில் ஆழ்ந்திடாமல் திரும்பி ஒருவாறு பிழைத்து வந்தேன்.' அத்தனை கோபம் ஆங்கிலக்கல்வி மேல்.

அடுத்தது அவருடைய திருமணத்தைப் பற்றி அதிக உற்சாகமில்லாமல்தான் பேசுகிறார். 'நினைக்க நெஞ்சுருகும் பிறர்க்கு இதை விவரிக்க நாக்கூசும்' என்கிறார். திருமணத்தில் அவருக்கு இஷ்டமில்லை என்று தெரிகிறது.

"நாடுங்கால் ஓர் மணமற்ற செய்கையை
நல்லதோர் மணமாம் என நாட்டுவார்
கூடுமாயில் பிரமசரியம் கொள்.
கூடுகின்றிலதெனில் பிழைகள் செய்து
ஈடழிந்து நரக வழிச் செல்வாய்.
யாது செய்யினும் இம்மணம் செய்யல்காண்"

- எதனால் திருமணத்தின் மேல் இந்த வெறுப்பு?

"ஆங்கோர் கன்னியை பத்துப் பிராயத்தில் நெஞ்சிடை
ஆழ ஊன்றி வணங்கினன்;
ஈங்கோர் கன்னியை பன்னிரண்டாண்டனுள்
எந்தை வந்து மணம்புரிவித்தனன்; தீங்கு மற்றிதில்
உண்டென்றறிந்தவன்
செயல் எதிர்க்கும் திறன் இவன் ஆயினன்;
ஓங்கு காதல் தழல் எவ்வளவு என்றன்
உளம் எரித்துடது என்பதும் கண்டிலேன்."

பாரதியின் வருத்தமும் ஏக்கமும் நிசமானது என்பதை,

"மதனன் செய்யும் மயக்கம் ஒருவயின், மாக்கள் செய்யும் பிணிப்பு மற்றோர் வயின், இதனில் பன்னிரண்டாண்டை இளைஞனுக்கும் என்னை வேண்டும்"- என்று புறப்படும் கோபம்,

''சாத்திரங்கள் கிரியைகள் பூசைகள் சகுனம் மந்திரம் தாலி, மணியெலாம் யாத்து எனைக் கொலை செய்தனர்'' - என்னும்போது வெடிக்கிறது.

பாரதி சுயசரிதையை முடிக்கும்போதுகூட,

''உலகெலாம்பெருங்கனவு அஃதுளே
உண்டு உறங்கி இடர்செய்து செத்திடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர்

கனவிலும் கனவாகும் - என்று சொல்லிவிட்டு கடைசியில் பரம்பொருளிடம், அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்தில் அன்பின் வெள்ளம், பொறிகள் மீது தனியரசாணை பொழுதெலாம் கருமயோகத்தில் நிலைத்திடல் வேண்டும்''- என்று முடிக்கிறார்.

பாரதியின் சுயசரிதையைப் படித்ததும் என் நெஞ்சில் எழுந்த கேள்விகள், யார் அந்தப் பெண்? சுயசரிதையை எப்போது எழுதினார்?

சுயசரிதையில் வெளிப்படும் பாரதி ஆசாபாசங்கள் மிக்க மனிதராக, தந்தைக்குப் பயந்தவராக, அவர் கட்டாயப்படி காதலை மறந்து கல்யாணம் செய்து கொண்டவராக வெளிப்படுகிறார். முழுவதும் படித்துப் பாருங்கள்.

(பாரதியம் கட்டுரைகள் - 1983, தொகுப்பு : மீரா. அன்னம் வெளியீடு, சிவகங்கை.)

பிளைட் நம்பர் 605

புதன் கிழமை, பிப்ரவரி பதினைந்தாம் தேதி, (1990). பம்பாயிலிருந்து பெங்களூருக்கு ஏறக்குறைய வந்து சேர்ந்து விட்ட ஏர்பஸ் விமானம் ஃப்ளைட் நம்பர் 605. மத்தியானம் நீல வான வெய்யிலில் புத்தம் புது விமானம் இதோ ரன்வேயைத் தொடப் போகும் போது, ரன்வே விளிம்பு அருகில் ஏர்போர்ட்டுக்கு வெளியே விழுந்து, செல்லகட்டா என்ற ஒரு வறண்ட குளத்தின் வரப்பின் மேல் பட்டு ஒரு முறை எம்பிக் குதித்து, இரண்டு இஞ்சின்களும் கிழிந்து தீப்பந்தம்போல உருள, ப்ளாஸ்டிக்கும் வயிற்றில் இறக்கையில் இருந்து எரிபொருளும் கோஷ்டியாக எரிந்து அழிந்தது. அதனுள் 139 பிரயாணிகள், நான்கு கைக் குழந்தைகள், பைலட், கோபைலட், ஹோஸ்டஸ் பெண்கள் ஐந்துபேர்.

எண்பத்தாறு பேர் க்ஷண காலத்தில் மரணம். பைலட், காப்டன் கோபுஜ்கர் இரண்டாகத் துண்டிக்கப்பட்டு உட்கார்ந்த இடத்திலேயே இறந்து போனார். கோ-பைலட் ஸிரில் ஃபெர்னாண்டஸ்ஸும் அப்படியே. விமானத்தில் முன்பக்கத்தில் இருந்து ஏர்ஹோஸ்டஸ் இரண்டும் பேரும் இறந்தனர்.

பின்பகுதியில் இருந்த பிரயாணிகளும் சிப்பந்திகளும் தான் பிழைத்துக் கொண்டனர். பிழைத்தவர்களில் சிலர்

காயம் பட்டனர். சிலர் விசில் அடித்துக் கொண்டு ஸ்தலத்திலிருந்து நடந்து சென்று ஆட்டோ பிடித்து வீட்டுக்குப் போய் விட்டனர்.

முன்பகுதி துரதிருஷ்டர்கள் வெந்து செத்தனர். நாட்டின் மிகப் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த அசோக் பிர்லாவும் மனைவியும் த்ரீ எம்.கம்பெனியுடன் தொழிற்சாலை துவக்க விழாவுக்கு வந்து கொண்டிருந்தனர். இருவரும் இறந்து போனார்கள். செமினாருக்கு வந்திருந்த ஜப்பானியர்களில் நால்வரில் மூன்று பேர் சிகரெட் பிடிப்பவர்களாக இருந்ததால் பின் இருக்கைகள் 'நான் ஸ்மோக்கிங்' கொடுக்கப்பட்டுப் பிழைத்தார்கள். இனிமேல் சிகரெட் குடிப்பதைச் செத்தாலும் - ஸாரி - உயிருள்ளவரை நிறுத்த மாட்டேன் என ஒரு ஜப்பானிய சபதம்.

மரணம் யாரைத் தொட்டது, யாரை விட்டது என்று வரையறை யில்லாமல் ஒரு அபத்தமான தேர்வு. ஒரு குழந்தை பிழைத்தது. ஒரு குழந்தை வெந்தது. ஒரு தாய் பிழைத்தாள், ஒரு தாய் மார்புடன் அணைத்த குழந்தையுடன் ஸீட்டிலேயே மரணம்.

பங்களூர் விமான நிலையமோ, பங்களூர் போலீஸோ, தீயணைப்புப் படையினரோ, நகராட்சியோ இந்த மகா விபத்துக்குத் தயாராயில்லை. பேருக்குப் பேர் நாட்டாண்மை பண்ணிக் கொண்டிருந்தார்கள். அருகாமை எச்.ஏ.எல். தொழிற்சாலையிலிருந்து ஆயிரம் பேர் வேடிக்கை பார்க்க ஓடி வந்தனர். கிராமத்தார்கள் சுய இச்சையுடன் பிரயாணிகளை இழுத்துப் போட, தீப்படைக்காரர்களும், போலீசாரும் கட்டுப்படுத்தக் கஷ்டப்பட்டார்கள்.

சாயிபாபா தரிசனத்துக்கு வந்திருந்த இரு வெளிநாட்டுப் பயணிகள் விபத்தில் பிழைத்தது அவர் மகிமையால் என்று (எல்லோரையுமே பிழைக்க

வைத்திருக்கலாமே) உடனே ஒய்ட் ஃபீல்டு போக அவசரப்பட்டார்கள். கனடா தேசத்து இந்தியத் தம்பதிகள் விபத்திலிருந்து தப்பித்து அவசர போட்டோ எடுத்தார்கள். (டைம் பத்திரிகையில் வரலாம்.) தீயணைப்பு வண்டிகள் ஜரூராகப் புறப்பட்டு மூன்றே நிமிடத்தில் போனபோது, விபத்து ரன்வேக்கு அந்தண்டைப் பக்கம் என்று தெரிந்து சுற்று வழியில் வரக் கால்மணி நேரமாயிற்று.

அதற்குள் விமானத்தின் உள்ளே பற்றிக் கொண்டு கூண்டுக்குள் ஓலங்கள்... ஃபயர் இஞ்சின்கள் விமானத்தின் உடலை ஃபோம் வைத்துக் குளிப்பாட்டி அணைக்க முற்பட, யாருக்கும் சன்னல்களை உடைக்க வேண்டும், என்று தோன்றவில்லை. உள்ளே ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் வெடித்தன. சிலர் இருக்கையிலேயே வெந்தனர். ஒருவர் மேல் ஒருவர் குதித்து மாண்டனர். உள்ளே பரவிய விஷ வாயுக்கள் மூச்சுக்குள் கலந்து மயக்கமாகி இறந்தவரும் உண்டு.

ச்ரீதரன், அவர் மனைவி பிரபா, மக்கள் விலாஸ், விக்ரம் மொத்தக் குடும்பமே லக்கி, லக்கி. அவசரக் கதவுக்கு அருகில் இடம் கிடைக்க விபத்து நடந்த கையோடு அது திறந்து கொண்டு குதித்துத் தப்பி விட்டார்கள். பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த சீனிவாஸ் அவர் தாயை பம்பாயிலிருந்து அழைத்து வரச் சென்றவர், தாயையும் மகளையும் இழந்தார்.

வேறு சீட்டில் இருந்ததால் குதித்தவர்கள், தப்பித்தவர்கள் எல்லோரையும் சேர்க்க ஆம்புலன்ஸ் வந்துவிட, டெலிவிஷன்காரர்கள் சகட்டு மேனிக்கு வீடியோ எடுத்து விசுவாசமாக ராத்திரி லோக்கல் நியூஸில் காட்டினார்கள். இந்திய டெலிவிஷன் சரித்திரத்தில் அத்தகைய கோரக் காட்சிகளை இதுவரை பார்த்திருக்க முடியாது. ஒரு போலீஸ்காரர் கருகிய கைக்குழந்தையைப்

பொம்மை போல ஒரு கையால் தூக்கிக் காட்ட ஸ்ட்ரெக்கரில் பிணத்தைக் கசிவுகளுடன் 'டைட்க்ளோஸ் அப்' காட்டிவிட்டு பல்வேறு நிலையில் மடக்கியும் மடிந்தும் இறந்த நிலையில் உறைந்த கருகல்களைக் கடை பொம்மைகள்போல் அவர்கள் எடுத்து வருவதைச் செய்தி ஆரம்பத்திலும் இறுதியிலும் சந்தேகத்துக்கு இரண்டு முறை காட்டினார்கள். ஆட்டானமி என்றால் இப்படியா! அதுவும் ராத்திரி சாப்பாட்டு வேளையில்!

விபத்துக்களைக் காட்டுவதில் நளின நாசூக்கு வேண்டும் என்பதை தூதர் கற்றுக் கொள்ள வேண்டும். ஏர்இண்டியா 'கனிஷ்கா' ஜம்போ அயர்லாந்து விபத்தைக் காட்டியபோது பி.பி.ஸி. கடலில் மிதந்த ஒரு விளையாட்டுப் பொம்மையை மட்டும் காட்டியது. ஆயிரம் சோக வார்த்தைகள் பேசியது.

உடல்களில் அறுபத்தைந்தைத்தான் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. எப்படி? ஸீட்டில் உட்கார்ந்து இறந்தவர்களை ஸீட் நம்பர்படி, முன்பக்கம் மட்டுமே வெந்தவர்கள் ஹிப் பாக்கெட்டில் இருந்த க்ரெடிட் கார்டு, டைனர்ஸ் கிளப் கார்டு போன்ற பணக்கார அடையாளங்களிலிருந்து. அப்புறம் சிலரை பற்களிலிருந்து. ஆம், விரல் ரேகைகள் போல பல் வரிசைகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாம்.

அடையாளம் கண்டுபிடிக்க முடியாத உடல்களை விக்டோரியா ஆஸ்பத்திரியில் வேதம், குரான், குர்பானி, பைபிள் படித்துவிட்டு வில்சன் கார்டன் மின் சுடுகாட்டில் மந்திரிகள் மலர் வளையங்களுக்குப் பின் எரித்தார்கள். உறவுகாரர்களைப் பம்பாயிலிருந்து இலவச டிக்கெட் கொடுத்து ஏர்லைன்ஸ் வரவழைத்திருந்தது. (சில உறவுகாரர்கள் விமானத்தில் வர மறுத்தனர்.)

விபத்துக்குக் காரணம் பற்றிப் பலதும் பேசிக் கொள்கிறார்கள். பத்து கிலோ மீட்டர் தூரத்திலிருந்தே இஞ்சின் பற்றிக் கொண்டு பைலட் 'மேடே, எஸ்.ஓ.எஸ்.' கொடுத்தார் என்று 'எக்ஸ்பிரஸ்' ரீல் விட்டிருக்கிறது.

கடைசி நிமிடம் வரை எல்லாமே நார்மலாகத்தான் இருந்தது என்று பிழைத்தவர்கள் பலர் சொல்லி யிருக்கிறார்கள். காப்டனும் உதவி காப்டனும் ரொம்ப அனுபவஸ்தர்கள். தப்பாக ஏதும் பண்ணியிருக்கச் சான்ஸே இல்லை, வானிலையைக் குறை கூற முடியாது.

என்ன தான் ஆச்சு?

சிலவேளை உஷ்ண வித்தியாசங்களால் காற்றின் படிமங்களில் ஒரு சீவல் இருக்கும். மாட்டிக் கொண்டால் விமானம் தொப்பென்று விழலாம் என்று ஒரு சித்தாந்தம்.

பயணம் செய்த பணக்காரர்களில் வேண்டப்படாதவர் களைக் கொல்லச் சதி என்று கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மென்' பத்திரிகைக்கு போன் கால் வந்ததாம். பெங்காலி கற்பனை!

மூன்றாவது காரணம் ஏர்பஸ் லேட்டஸ்ட் விமானம் கம்ப்யூட்டரால் 'ஃப்ளை பை வயர்' முறையில் இயங்குவது. கம்ப்யூட்டர் ஏதாவது தப்பு செய்திருக்கலாம் என்று சொல்கிறார்கள்.

ஏர் பஸ்ஸில் இரண்டு வகை உண்டு. ஏ 300, ஏ 320. பத்து வருடங்களாக இண்டியன் ஏர்லைன்ஸ் பறக்கும் ஏ 300 ஒரு வெற்றி விமானம். நூற்றுக் கணக்கில் உலகெங்கும் பறக்கிறது. பெரிசு. 250 பயணிகள்.

சின்னச் சின்ன ஷட்டில் அடிக்க ஏர் பஸ்காரர்கள் பிரெஞ்சு ஆங்கிலேய கூட்டுறவு ஏரோ ஸ்பெஷியால் கம்பெனி புதுசாக ஒரு விமானத்தை அறிவித்தார்கள். ஏ 320. நூற்றைம்பது பயணிகளுக்கான அடுத்த சைஸ் சிக்கன

விமானம். அறிவித்த உடன் பல நாடுகளின் ஏர்லைன் காரர்கள் ரிஸர்வ் செய்து கொண்டார்கள். மொத்தம் வெயிட் லிஸ்ட் 500. ஒரு விமானம் விலை 50 கோடி.

ஏ 320, விமான இயலில் லேட்டஸ்ட்டான 'ஃப்ளை பை ஒயர்' சித்தாந்தத்தில் இயங்குவது.

அது எப்படி?

ஒரு விமானம் ஏறி இறங்க வேண்டும், வலம் இடம் திரும்ப வேண்டும், சாயவேண்டும், இந்த அசைவுகளைக் கட்டுப்படுத்தக் கைக்கு ஜாய்ஸ்டிக் என்னும் கண்ட்ரோல் காலமும் காலில் ரட்டர் பெடல்களும் வைத்திருப்பார்கள். இஞ்சின் சக்தியைக் கட்டுப்படுத்த லீவர்களும் குமிழ்களும் பைலட்டின் கைக்கருகே இருக்கும். விமானத்தில் பைலட்டின் முழுத் திறமை, ஏறும் போதும் இறங்கும்போது தான் தேவைப்படும். மற்றப்படி விமானம் தன்னையே செலுத்திக் கொள்ளும்.

ஆரம்ப காலத்தில் விமானங்கள் இறக்கையை வாலையெல்லாம் அசைக்க பைலட்டிடமிருந்து இரும்புக் கம்பி மூலம் இழுத்துத் திருப்பினார்கள். அதன்பின் ஹைட்ராலிக்ஸ் வந்தது. நிரம்பிய குழாய்களின் திரவ அழுத்தம் மூலமாக கட்டுப்படுத்தினார்கள். ஏர்பஸ் 320 விமானத்தில் கம்ப்யூட்டர்; பைலட்டின் உத்தேசங்களை மின்சார கம்பிகள் மூலம் கம்ப்யூட்டருக்குக் கொடுத்து, கம்ப்யூட்டர் அந்த ஆணையை ஆராய்ந்து அதற்குக் கிடைக்கும் பிளேனின் ஆரோக்கியம் பற்றிய மற்ற செய்திகளுடன் சோதித்துப் பார்த்து ஆணையை நிறைவேற்றலாம். அபாயமில்லை என்று தீர்மானித்து அதன் பின் 'ஆக்ச்சுவேட்டர்ஸ்' என்று விமானத்தின் 'இரட்டா, எய்லிரான் எலிவேட்டர் ஃப்ளாப்' போன்ற சாதனங்களை இயக்கும். இதனால் விமான வடிவமைப்பு எளிதாகிறது.

ஆனால் கம்ப்யூட்டர் தப்பு செய்யாதா? ஒரு கம்ப்யூட்டருக்கு மூன்று கம்ப்யூட்டர்கள் வைத்திருப்பார்கள். மூன்றுக்கும் ஆணை போய் அவை சுதந்திரத் தீர்மானத்துக்கு வந்து மூன்றும் ஒத்துப் போனால்தான் பைலட்டின் ஆணையை செயல்படுத்தும். தப்பித் தவறி மூன்றில் ஒன்று பழுதாகியிருந்தாலும் மற்ற இரண்டும் ஒத்துப் போனால் மெஜாரிட்டி டிஸிஷன் எடுக்கும். மூன்றுமே ஒத்துப் போகவில்லையென்றால் பைலட்டுக்கு. 'பாருப்பா, எங்களுக்குள் ஒற்றுமையில்லை. நீயே பார்த்துக் கொள்' என்று பதவியை அவனிடம் கொடுத்து விடும். இத்தனை ஜாக்கிரதை அம்சங்கள் வைத்திருக்கிறார்கள். பைலட் தப்பாக ஆணை கொடுத்திருந்தால் கூட கம்ப்யூட்டர் அதைச் செயல்படுத்தியிருக்காது.

கம்ப்யூட்டருக்கு ஏதாவது ஒரு திடீர்க் கிறுக்கு வந்ததா?

அல்லது 'லேட்டஸ்ட் இஸ் நாட் த பெஸ்ட்' என்பது போல் இத்தனை நவீனமான விமானத்தை நம்மால் பராமரிக்க முடியவில்லையா? அண்மையில் ஏர்லைன்ஸ் இஞ்சினியர்கள் அதிகப்படியாக ஃப்ரான்ஸில் பயிற்சி கேட்டது நினைவிருக்கலாம்.

என்னதான் ஆச்சு?

விமானத்தின் வால் பகுதியில் பத்திரமாக வைத்திருந்து நீக்கப்பட்ட 'காக்பிட் வாய்ஸ் ரிக்கார்டர்' பைலட் பேசியதை யெல்லாம் பதிவு பண்ணியிருக்கிறது. டிஜிட்டல் ஃப்ளைட் டேட்டா ரெக்கார்டர் பிரயாணத்தின் முழு ஜாதகத்தைப் பதிவு பண்ணியிருக்கிறது. இரண்டிலும் பொதிந்திருக்கும் ரகசியங்களை வெளிநாட்டுக்குக் (கனடா) அனுப்பி வாசித்து அர்த்தம் பண்ணிக் கொள்ளும் வரை 'எக்ஸ்பிரஸ்' போன்ற பத்திரிகைகள் தினம் தினம் காரணத்தை மாற்றிக் கொண்டே

வரும். (லேட்டஸ்ட் ; ராஜீவ் தான் எல்லாவற்றிற்கும் காரணமாம். அவர் காலத்தில் தானே விமானம் வாங்கினார்கள்?) பிரஞ்சுக்காரர்கள் வந்து அது மனிதத் தப்பு என்று நிரூபிக்க முயற்சிப்பார்கள். வியாபாரம் படுத்து விடுமே!

என்னதான் காரணம் என்பதை அறியும் வரை நாம் வாங்கின பன்னிரண்டு விமானங்களும் பம்பாயிலும் டில்லியிலும் தடையுத்தரவினால் மூக்கோட்டைகளில் சிவப்புப் பிளாஸ்டிக் பொருத்திக் காத்திருக்கின்றன. புதிய பறவைகள்!

பி.கு. 1. போன ஞாயிற்றுக்கிழமை நான் பம்பாய்க்கு விமானத்தில் போய்த் திரும்ப வேண்டியிருந்தது. பங்களூரில் வந்து விமானம் தரை தொட்டதும் விமானத்தின் உள்ளே வெள்ளைக்காரர்கள் அனைவரும் கைதட்டினார்கள்!

பி.கு. 2. பன்னிரண்டாம் தேதி பங்களூருக்கு அருகே ஒரு கோரமான பஸ் விபத்து நிகழ்ந்தது. அதில் அடிபட்டவர்களுக்குக் கைச் செலவுக்கு ரூபாய் 500ம், செத்துப் போனவர்கள் குடும்பத்துக்குத் தாராளமாக தலா ரூ.2500ம் கொடுக்கப்பட்டது.

ஏர் பஸ் பயணிகளுக்கு ஆளுக்கு ஐந்து லட்சம். இறந்தாலும் மேன்மக்கள் மேன்மக்களே!

-குமுதம்



அறுபதுக்களில் 'கணையாழி' இலக்கிய மாத இதழின் ஆரம்ப காலத்திலிருந்தே, சுஜாதா 'கடைசிப் பக்கம்' என்ற தலைப்பில் விட்டு விட்டு எழுதி வந்திருக்கிறார். அவருடைய சோர்வில்லாத இலக்கிய ஆர்வத்தையும், பல்வேறு விஷயங்களில் உள்ள ஈடுபாட்டையும் பிரதிபலிக்கும் வகையில் இந்தப் பக்கங்கள் அமைந்திருக்கின்றன. சங்க காலத்திலிருந்து சமகாலம் வரை எந்த இலக்கியமும் இவருக்குத் தடையல்ல. உடன் அறிவியல். சமயம். நகைச்சுவை, தன்னுடைய சொந்த எழுத்து அனுபவங்கள், சந்தித்த மனிதர்கள், பேசியபேச்சுக்கள், சென்ற கூட்டங்கள்.... இவை பற்றி சுவையான சிறிய கட்டுரைகளாக எழுதியதைத் தொகுத்து வெளியிட்ட புத்தகம் இது.

சுஜாதா அண்மையில் தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றார். முன்னர் மத்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பத் தகவல் தொடர்புக்கான தேசியவிருதும் பெற்றிருக்கிறார்.

மின்அஞ்சல்: writersujatha@hotmail.com

அட்டை வடிவமைப்பு: nanavr@eth.net